KALKI 13.1.2002

ரூ. 6.00

கல்கி

வைரவிழா ஆண்டு



குடும்பத்தின் ஆரோக்கியத்தை சிறப்பாகப் பாதுகாக்கும் முதல் டிஷ்வாஷ் பார்.



பாக்டோகார்டு அடங்கிய ஒரே ஆன்ட்டி பாக்டீரியல் டிஷ்வாஷ் பார் "எக்ஸோ"

கூடுதல் சுகாதாரம், கூடுதல் பளபளப்பு

நீங்கள் தற்போது கிடைக்கும் டிஷ்வாஷ் பார்கள் அல்லது பவுடர்கள் பயன்படுத்தும்போது:

- இவைகளில் பாக்டீரியாக்களை எதிர்க்கும் மூலப்பொருட்கள் ஏதும் இல்லை என்பதை அறிவீர்களா?
- உங்கள் கையில் சொரசொரப்பையும், வறட்சியையும் நீங்கள் உணரவில்லையா?
- இவைகளை தொடர்ந்து பயன்படுத்துவதால் உங்கள் கைகள் சொரசொரப்பாகவும், வறட்சியாகவும் ஆகிவிடுகின்றன என்பதை நீங்கள் உணரவில்லையா?
- உங்கள் நகத்தைச் சுற்றி வலியை நீங்கள் உணரவில்லையா?
- மண் போன்ற இவைகளில் உள்ள சிறுசிறு கற்கள் போன்ற குருணைகளால் உங்கள் பாத்திரங்களில் கீறல்கள் ஏற்பட்டு அவை நீடித்து உழைப்பதில்லை அல்லவா?
- நீங்கள் மேலும் அதிக சோப் பயன்படுத்த வேண்டி வருகிறது அல்லவா

எக்ஸோ ஆன்ட்டி-பாக்டீரியல் டிஷ்வாஷ் பாரின் சிறப்பம்சங்கள்:

- எக்ஸோ எந்த விதமான கடினமான எண்ணெய் பிசுக்குகள் அல்லது அழுக்கான பகுதிகளையும் பாத்திரங்களில் சுத்தம் செய்வதுடன் கிருமிகளையும் அழிக்கிறது.
- எக்ஸோ பயன்படுத்தும்போது நீங்கள் அதிகமாக சிரமப்பட வேண்டியதில்லை. மேலும் பாத்திரங்களை மிக நன்றாக சுத்தப்படுத்துவதுடன் பளிச்சிடச் செய்கிறது.
- எக்ஸோ இனிய நறுமணம் கொண்டது
- எக்ஸோ உங்கள் கைகளின் சருமத்தை பாதுகாக்கிறது. மென்மையாக விளங்கச் செய்கிறது.
- எக்ஸோ மிக சிறிதளவே பயன்படுத்த வேண்டும். ஒரே ஒரு எக்ஸோ டிஷ்வாஷ் பார் மூலம் நீங்கள் ஏராளமான பாத்திரங்களை சுத்தம் செய்யலாம். அவைகள் பளிச்சிடுவதுடன், கிருமிகள் அற்றதாகவும் இருக்கும். சாதாரணமான இதர தயாரிப்புகளை விட தரமானதாக லாபகரமானதாக விளங்கும். இது இதற்காகக் கொடுக்கப்படும் விலையைக் காட்டிலும் மதிப்பு மிக்கது.



எக்ஸோ
ஆன்ட்டிபாக்டீரியல் டிஷ்வாஷ் பார்



இப்போது **இலவசம்** **Exo Safai** ரூ. 6.00 மதிப்புள்ளது

A product of Jyothy Laboratories Ltd.

EXO/11/2001/Tam

பிரவாகமென சினம் பொங்குகையில் நில்!
சினத்தினால் மிஞ்சுவது வெறுப்பேயென்பதைக் கவனி!
தேனன்பு வார்த்தை சிந்தி வெற்றிகொள்!

செய்த தவறுக்குத் தண்டிக்கையில் நில்!
தண்டனை மேலும் தவறுக்கு வழிவகுக்கு மென்பதைக் கவனி!
தவறே வருந்தும்படி மன்னித்து வெற்றிகொள்!

வேகத்தில் திட்டிட்ட செய்கைக்கு வருந்துகையில் நில்!
வருந்தி எப்பயனுமில்லை என்பதைக் கவனி!
ஆறுதல் கூறி அரவணைத்து வெற்றிகொள்!

படாடோப எண்ணங்கள் மிகுகையில் நில்!
பேராசையின் பாதை அழிவில் முடிவதை கவனி!
எளிய வாழ்வினைக் கடைபிடித்து வெற்றிகொள்!

வெற்றியின் களிப்புக்கடலில் மிதக்கையில் நில்!
அதீத ஆட்டம் செருக்கைத் தருமென்பதைக் கவனி!
அடக்கம் பெருக்கி அமரருலகையும் வெற்றிகொள்!

தோல்வியின் தொடரடியில் துவள்கையில் நில்!
மனத்தின் தீவிரம் எச்சாதனையும் புரியுமென்பதைக் கவனி!
உறுதியுடன் முயன்று லோகமூன்றையும் வெற்றிகொள்!

காஞ்சி ரகுராம்



கல்கி இண்டர்நெட் முகவரி : www.kalkiweekly.com ஈ மெயில் : kalkiweekly@vsnl.com

குடும்ப ஆரோக்கியத்தை அலட்சியம் செய்யலாமா?

குடும்ப டாக்டர் என்ற முறை மெல்ல மறைந்து கொண்டு வருகிறது. எடுத்த உடனே ஸ்பெஷலிஸ்டிடம் போய் விடுகிறார்கள்.

கலைஞர் முதல் பல குடும்பங்களுக்கு, மருத்துவராக இருந்துவரும் டாக்டர் கோபாலிடம் இந்தப் போக்கு குறித்துக் கேட்டோம்:

குடும்ப டாக்டர் அவசியம் தேவை. அவருக்குத்தான் அங்கத்தினர்களின் பின்னணி நன்றாகத் தெரியும். முதுகுவலி, தலைவலி என்றால் ஸ்பெஷலிஸ்டிடம் போய் விடுகிறார்கள். அவரும் நியூரோ கோணத்தில் மட்டுமே நோயாளியைப் பார்ப்பார். அவருடைய பொதுவான உடல்நிலை பற்றி குடும்ப டாக்டர் மட்டும்தான் அறிந்திருப்பார். சொந்த பிரச்னைகள், குடும்ப பிரச்னைகள் எத்தனையோ கூட நோய்க்குக் காரணமாய் இருக்கும். ஸ்பெஷலிஸ்டால் இதற்கெல்லாம் உதவ முடியாது. குடும்ப டாக்டராக இருந்தால் மனம்விட்டுப் பேச முடியும்.

60 முதல் 65 சதவிகித பிரச்னைகளுக்கு அடிப்படையான காரணம் மனம் சார்ந்ததாக இருக்கிறது. டிப்ரஷன் எனப்படும் மன அழுத்தம், வேறு பல நோய்கள் வரக் காரணமாய் இருக்கிறது. புது டாக்டரிடம் இவற்றை எல்லாம் எடுத்துச் சொல்லவே தயங்குவார்கள்.

வீட்டில் ஒரு குழந்தை பிறந்ததிலிருந்து, எந்த எந்த மருந்துகள் எப்போது கொடுக்கப்பட வேண்டும் என்பதைக் குடும்ப டாக்டர் சொல்லுவார். ஸ்பெஷலிஸ்ட்டின் ஆலோசனை தேவைப்படும் பட்சத்தில் அவரே நிபுணரை அணுகி ஆலோசனை பெற்று நோயாளியின் சிக்கலைத் தீர்த்து வைப்பார்.

குழந்தைகளைப் போலவே, வீட்டில் உள்ள பெரியவர்களை, குடும்ப டாக்டர் நெடுங்காலமாக அறிந்திருப்பதால்,




எந்த மருந்து அவருக்கு ஏற்கும், டோஸ் எந்த அளவு கொடுக்கலாம் என்று அறிந்து சரியானபடி வழிகாட்டுவார். முதியோரும் ஒரு வகையில் குழந்தைகள் போலத்தான். ரொம்பவும் ஸ்ட்ராங் டோஸ் கொடுக்கக் கூடாது. சில மருந்துகளைப் பாதி அளவுதான் கொடுக்க வேண்டியிருக்கும். வயது ஆக ஆக, உடம்பில் சில சிஸ்டம்களில் மாறுதல்கள் ஏற்படும். இதை எல்லாம் ஒரு ஸ்பெஷலிஸ்ட்டைவிட, ஒரு குடும்ப டாக்டர் நன்றாக அறிந்திருப்பார். அவர் சிகிச்சை அளிப்பது எளிது; பாதுகாப்பானது.

ஆனால் இது ஹைடெக் யுகம். சூப்பர் ஸ்பெஷாலிடி யுகம். எனவே 'ஒரு ஸ்பெஷலிஸ்ட்டிடம் காட்டினேன்' என்று

சொல்லிக் கொள்ளுவது பாஷன் ஆகி வருகிறது!

மேற்கத்திய நாடுகள் பலவற்றில் 'குடும்ப டாக்டர்' முறை இன்னும் வழக்கத்தில் இருக்கிறது. நல்ல வேளையாக, இன்னும் இங்கே சில குடும்பங்களில் விழிப்புணர்ச்சி இருக்கிறது. அதனால் மருந்துகள் – அலர்ஜி இருந்தால் கூட குடும்ப டாக்டரிடம் உடனே போய் விடுகிறார்கள். அவருக்



குத்தான் அதன் காரணம் தெரியும். அதற்கான நிவாரணமும் அவருக்குத்தான் தெரியும்.

அந்தந்தப் பகுதியில் இருக்கிற வைத்தியரிடம் தொடர்பு வைத்துக் கொள்ளுவது எப்போதும் நல்லது. அவருக்கு உங்கள் குடும்ப அங்கத்தினர்களின் மருத்துவப் பின்னணி அல்லது சரித்திரம் தெரிந்திருக்கும். எந்தச் சமயத்திலும் அவருடைய உதவி, ஆபத்தைத் தவிர்க்கும். அவருடைய ஆலோசனை மன ஆறுதலைத் தருவதோடு, அநாவசியமாக அங்கே இங்கே என்று ஸ்பெஷலிஸ்டைத் தேடி ஓடும் கண்மூடித்தனமான ஓட்டத்தையும் தவிர்க்கும். தோள் பட்டையில் வலி என்று தன் தகப்பனாரைக் கூட்டிக் கொண்டு நேரே ஆர்த்தோபீடீஸ்ட்டிடம் போவார் பிள்ளை. 'ஆபரேஷன் செய்ய வேண்டும்' என்று ஆர்த்தோ சொல்லுவார். செய்ய வேண்டுமா, வேண்டாமா, தேவையா- தேவையில்லையா என்பது புரியாமல், முடிவெடுக்க இயலாமல் குழம்புவார்கள். குடும்ப டாக்டர் என்று ஒருவர் இருந்து விட்டால் அவர் சொல்லும் வழியில் சென்று விடலாம்.

எல்லாவற்றுக்கும் மேலாக, குடும்ப டாக்டருக்கு, ஒரு தனிப்பட்ட மனிதாபிமான உணர்வு நோயாளியிடம் இருக்கும் தொடர்ந்த பழக்கம் காரணமாக. இது மிகவும் முக்கியம்.

சந்திப்பு : **சாருகேசி**

புகைப்படம் : **வெங்கடேஷ்**

த.மா.கா:

இரண்டு த.மா.கா. பிரமுகர்கள் சந்தித்தால் உடனே அவர்கள் பேசுவது இளங்கோவனின் கடிதத்தைப் பற்றித்தான். "புத்தாண்டை ஒரு வாய்ப்பாக எடுத்துக் கொண்டு, வாழ்த்து தெரிவித்து, 'ஏன் காங்கிரஸில் இணைந்து விட வேண்டும்' என்பதை மிகவும் திருப்திகரமான வாதங்களோடு எடுத்து வைத்திருக்கிறார் இளங்கோவன்" என்று நம்மிடம் சொன்னார் மூத்த த.மா.கா. தலைவர் ஒருவர். சரியான சமயத்தில் மூவாயிரம் த.மா.கா. பிரமுகர்களுக்கு அந்தக் கடிதத்தைப் போட்டிருக்கிறார் இளங்கோவன்.

"மூப்பனார் மறைவால் காலியான ராஜ்யசபா இடத்தை த.மா.காவுக்குக் கொடுப்பதுதான் கூட்டணிக் கட்சி என்ற முறையில் மரியாதை. ஆனால், குறைந்தபட்சம் எங்களுக்குத் தகவல் கூடச் சொல்லாமல் அ.இ.அ.தி.மு.க. வேட்பாளரைப் போட்டது பெரிய அதிர்ச்சிதான்" என்கிறார் சட்டமன்ற த.மா.கா. தலைவர் எஸ்.ஆர்.பி.

1996ல் காங்கிரஸை விட்டு த.மா.கா. பிரிந்த சமயத்தில், மூன்று ராஜ்யசபா உறுப்பினர்களும் த.மா.கா.வுக்கு வந்து விட்டனர். அப்போது காங்கிரஸ், கட்சித் தாவல் தடைச் சட்டத்தின் அடிப்படையில் அவர்களின் பதவியைப் பறிக்க தீர்மானித்தது. உடனே கலைஞர், மூப்பனாரிடம், "நீங்கள் அவமானப்பட வேண்டாம்; ராஜினாமா செய்யுங்கள். எங்கள் பலத்தில் அதே மூன்று பேரைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்" என்று சொல்லி, அதன்படியே நடந்தும் காட்டினார்.



• வாசன்

அச்சிழந்த ஐந்தாவது சக்கரம்!

"அப்படி ஒரு நாகரிகமான அரசியலை அ.இ.அ.தி.மு.க.விடம் எதிர்பார்ப்பது தவறுதான்" என்கிறார் த.மா.கா. பிரமுகர் ஒருவர்.

காங்கிரஸுடன் இணைப்பை எதிர்க்கும் த.மா.கா. பிரமுகர்கள், சுத்த சுயநலத்துடன்தான் அந்த நிலையை எடுத்திருக்கிறார்கள் என்பது அப்பட்டமான உண்மை. "இப்போது த.மா.கா.வில் வகிக்கும் அதே கட்சிப் பொறுப்பு மீண்டும் காங்கிரஸில் கிடைக்காது. அங்கே போனால் தங்களை தனிக் கோஷ்டியாக ஒதுக்கி விடுவார்கள் என்பது ஒரு காரணம். அ.இ.அ.தி.மு.க.வுடன், தொடர்ந்து உறவு வைத்துக் கொண்டால், அரசாங்கத்தில் காரியங்கள் சாதித்துக் கொள்ளலாம் என்று நினைக்கும் (ஏங்கும்!) ஒரு கோஷ்டியும் தற்சமயம் இணைப்புக்கு எதிர்ப்பாக இருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்கள் விநாயகமூர்த்தி, ஹக்கீம் போன்றவர்கள் இதுபோன்ற கருத்துக்களைக் கொண்டிருப்பதாக த.மா.கா.வினர் சொல்கிறார்கள்.

"த.மா.காவும், காங்கிரஸும் இணைந்தால்தான் இரு திராவிட இயக்கங்களும் அவர்களை மதிக்கும். இப்படித் தனித்திருந்தால் காலப்போக்கில் தானாகவே த.மா.கா. அழிந்து விடும். எனவே உடனடியாக இணைப்பு பற்றிய முடிவை வாசன் எடுக்க வேண்டும்" என்கிறார் மற்றொரு த.மா.கா. பிரமுகர். த.மா.கா.வின் தற்போதைய நிலையை fifth wheel of the coach என்று வர்ணிக்கிறார் அவர். 'ஒரு வண்டியின் ஐந்தாவது சக்கரத்துக்கு என்ன மதிப்பு இருக்கும்!' என்று கேட்கிறார்.

த.மா.கா. பிரமுகர்கள், இணைப்பு பற்றியோ அ.இ.அ.தி.மு.க. எதிர்ப்பு நிலை பற்றியோ வெளிப்படையாகப் பேச மிகவும் தயங்குகிறார்கள். "காங்கிரஸுடன் நல்லுறவு தொடர்கிறது; ஒருங்கிணைப்பும் உண்டு. இதுதான் தற்போதைய நிலை" என்றார் எஸ்.ஆர்.பி. நம்மிடம்.



• எஸ்.ஆர்.பி.



• இளங்கோவன்

காங்கிரஸுடன் இணைந்தால், கோடிக்கணக்கான சொத்துக்களைக் கொண்ட தமிழ்நாடு காங்கிரஸ் அறக்கட்டளையின் நிர்வாகம் கையை விட்டுப் போய் விடுமே என்ற தயக்கத்தில் இணைப்பை எதிர்க்கும் த.மா.கா. மேல்மட்ட பிரமுகர்களும் உண்டு.

"த.மா.கா. தனியாகவே இயங்கினால் ஒரு கட்டத்தில் காங்கிரஸ் எதிர்ப்பு நிலை எடுக்க வேண்டும். அது எங்களால் முடியுமா? அவமானங்களைத் தாங்கிக் கொண்டு அ.இ.அ.தி.மு.க. கூட்டணியில் இருப்பதை விட, தாய் அமைப்புடன் போய்ச் சேரலாம்" என்கிறார் த.மா.கா. சட்டமன்ற உறுப்பினர் ஒருவர். "சில த.மா.கா. எம்.எல்.ஏக்கள் ஆளுங்கட்சிக்கு விலை போய் விடுவார்கள் என்ற பயமும் த.மா.கா.வில் இருக்கிறது. இதுபோன்ற முக்கியமான முடிவுகளை மேற்கொள்ளும் போது சில பாதிப்புகள் வரத்தான் செய்யும். போகிறவர்கள் போகட்டும். எதிர்காலத்தை மனத்தில் இருத்தி, சீக்கிரம் முடிவு எடுக்க வேண்டும்" என்கிறார் அவர்.

"இப்போதே பலர் தனித்தனியாக காங்கிரஸுக்குப் போகத் தயாராக இருக்கிறார்கள். ஆனால் நாங்கள் வாசனையும் சேர்த்து கூட்டிப் போக நினைக்கிறோம்" என்கிறார் அந்த த.மா.கா. முக்கியப் பிரமுகர். காங்கிரஸுடன் இணைந்து, தமிழகத்தின் இரு திராவிட இயக்கங்களுக்கு மாற்றாக மூன்றாவது அமைத்தால், கொஞ்சம் தாமதமானாலும், காலப்போக்கில் மக்கள் ஆதரவைப் பெற்று விட முடியும் என்று உறுதியாகச் சொல்கிறார்கள் த.மா.கா. பிரமுகர்கள்.

"கூடிய விரைவில் நல்ல முடிவாக எடுப்போம்" என்கிறார் எஸ்.ஆர்.பி. ஏப்ரல் மாதத்தில் ஆறு ராஜ்ய சபா இடங்கள் காலியாகின்றன. காங்கிரஸ், கம்யூனிஸ்ட் ஆதரவோடு அதில் ஓர் இடத்தில் வாசன் போட்டியிட்டு வெற்றி பெறும் வாய்ப்பு இருக்கிறது. அந்த நோக்கில் அ.இ.அ.தி.மு.க. தயவு அவர்களுக்குத் தேவையில்லை.

"வாசனுக்கு காங்கிரஸில் நல்ல எதிர்காலம் இருக்கிறது" என்று இளங்கோவன் குறிப்பிட்டதை முக்கியமான சிக்னலாக எடுத்துக் கொள்ள வேண்டும். அதை மனத்தில் கொண்டு முன்னதாகவே இடைத் தேர்தல்களில் நல்ல முடிவாக வாசன் எடுப்பார் என்று த.மா.கா.வினர் நம்புகிறார்கள்.


— ப்ரியன்

படங்கள்: சௌரா

உ

ஜய ஜய சங்கர | ஸ்ரீ குருப்யோ நம | ஹர ஹர சங்கர






ஸ்ரீ சங்கர ஜயந்தி டிரஸ்டு

3, ஆறாவது வீதி, சுப்ரமண்யபுரம், காரைக்குடி - 630 002.
போன் : 04565 - 425381.

அன்பார்ந்த ஆஸ்திக பிரமுகர்களே!

சென்ற 27 ஆண்டுகளாக காரைக்குடியில் ஸ்ரீ சங்கர ஜயந்தி மஹோத்ஸவம் கொண்டாடப்பட்டு வருகிறது. நிரந்தரமாக இந்த உத்ஸவம் நல்லமுறையில் நடைபெறுவதற்கு, 11 ஆண்டுகளுக்கு முன்பு, ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி மஹா ஸ்வாமிகளுடைய பரிபூர்ண அனுக்ரகத்துடன் **ஸ்ரீ சங்கர ஜயந்தி டிரஸ்ட்** என்ற **அறக்கட்டளை** ஏற்படுத்தப்பட்டு நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. ஆண்டுதோறும், ஸ்ரீ ஆசார்யார்களுடைய ஜயந்திகளை கொண்டாடுவதுடன், ஜாதி மத பேதமின்றி அனைத்து ஏழைகளுக்கும் கல்வி, கல்யாண கார்யங்கள், மருத்துவ தேவைகள் முதலியவற்றிற்கு உதவுதல் என்ற பணிகளிலும் இந்த நிறுவனம் செயல்பட்டு வருகிறது.

"நடமாடும் தெய்வம்", "ஆதி சங்கரரின் மறு அவதாரம்" என்று போற்றப்படும் **ஸ்ரீ சங்கர சேகரேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகளின்** நூற்றாண்டு விழா ஞாபகார்த்தமாக, காரைக்குடியில் ஏழை, நடுத்தர மக்களுக்குப் பயனளிக்கும் வகையில் ஒரு சமுதாயக் கூடம் (Community Hall) அமைக்க மேற்படி டிரஸ்டு தீர்மானித்து, இந்தத் தெய்வப்பணி நிறைவேற, ஸ்ரீ காமகோடி பீடாதீஸ்வரர் ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகளும் பாலப்பெரியவாள் ஜகத்குரு ஸ்ரீ சங்கர விஜயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகளும் பரிபூர்ண அனுக்ரகத்துடன் அருளாசி வழங்கியுள்ளார்கள்.

தற்சமயம் காரைக்குடி செக்காலை நடேசன் செட்டியார் தெருவில் 3 கிரவுண்ட் காலியிடத்தில் மணி மண்டபம் கட்டிட வேலைகள் நடைபெற்று வருகின்றன. இதுவரை ரூ. 25 லட்சம் செலவழிக்கப்பட்டிருக்கிறது. இன்னும் சுமார் ரூ. 5 லட்சம் தேவைப்படுகிறது.

இதற்கு தாங்கள், தங்களால் ஆன பொருளுதவி செய்யும்படி கேட்டுக் கொள்கிறோம்.

மேலும் தங்கள் உறவினர்கள், நண்பர்கள் எல்லோருக்கும் தெரிவித்து இந்த நற்பணிகள் முழு அளவில் நிறைவேற தாராளமாக பொருளுதவி செய்து ஸ்ரீ மஹாஸ்வாமிகள், ஸ்ரீ ஸ்ரீ ஆசார்யர்களுடைய பரிபூர்ண அனுக்ரகம் பெறவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம்.

"ஸ்ரீ சங்கர ஜயந்தி ட்ரஸ்ட்" என்ற இந்த அறக்கட்டளைக்கு அளிக்கப்படும் நன்கொடைகளுக்கு 80G பிரிவின் கீழ் வருமானவரி விலக்கு உண்டு.

நன்கொடைகள் "ஸ்ரீ சங்கர ஜயந்தி டிரஸ்ட்" என்ற பெயருக்கு காசோலைகள் (Cheques), கேட்பு ஓலைகள் (Demand Drafts) மூலம் Dr. M.K. வெங்கட்டராமன், மானேஜிங் டிரஸ்டி, ஸ்ரீ சங்கர ஜயந்தி டிரஸ்ட், 3, ஆறாவது வீதி, சுப்ரமண்யபுரம், காரைக்குடி - 630 002 என்ற விலாசத்துக்கு அனுப்பட வேண்டும்.

காரைக்குடி.
6.12.2001

ஸ்ரீ சங்கர ஜயந்தி டிரஸ்ட்
காரைக்குடி.

ஸ்ரீ சங்கர ஜயந்தி டிரஸ்டின் மெம்பர்கள்

1. **ஸ்ரீ P. நீலகண்ட அய்யர்.**
   ஸ்ரீ கார்யம் - ஏஜெண்டு
   ஸ்ரீ காஞ்சி காமகோடி மடம்
   காஞ்சிபுரம் - 631 502

2. **ஸ்ரீ முத்துச்சாமி அய்யர்**
   2, மூன்றாம் தெரு,
   சுப்ரமண்யபுரம்,
   காரைக்குடி - 630 002.

3. **ஸ்ரீ S. கிருஷ்ண அய்யர்.**
   தலைமை ஆசிரியர் (ரிடயர்ட்)
   21, தெப்பக்குளம் வடக்கு
   செக்காலை, காரைக்குடி - 630 002

4. **Dr.T.M. பாலசுப்ரமண்யன்.**
   (அஸிஸ்டெண்டு டைரக்டர், CECRI)
   4, பிள்ளையார் கோவில் தெரு,
   செக்காலை, காரைக்குடி - 630 002.

5. **ஸ்ரீ K. ராம்மோஹன்** பி.காம், எ.ஸி.எ.
   சார்ட்டர்ட் அக்கௌண்டெண்ட்
   1, முதல்வீதி, சுப்ரமண்யபுரம்
   காரைக்குடி - 630 002.

6. **Dr. M.K. வெங்கட்ராமன்**
   பேராசிரியர் (கணிதம்)
   2, ஆறாம் வீதி, சுப்ரமண்யபுரம்
   காரைக்குடி - 630 002. (மானேஜிங் டிரஸ்டி)


'கஜானா காலியானபோது...'

'கஜானா காலியானபோது' — போட்டிக்கு எழுதிக் குவித்த வாசக பெருமக்களுக்கு நன்றி நவில்கிறோம். சுவையான நான்கு அனுபவங்கள் பரிசு பெறுகின்றன. அன்பளிப்பாக ரூ.100/- அனுப்பி உங்கள் கஜானாவைக் கலகலக்கச் செய்கிறோம்!

குஷி!

மாதக் கடைசியில் ஒரு முறை பால் வாங்க, மளிகை வாங்ககூட முடியாத சிரமம். என்ன செய்வதென அறியாது திகைத்தேன். எனக்கு ஒரு பழக்கம். எல்லா பிரபல வார, மாத இதழ்களை வாங்கும் நான், படித்து முடித்ததும் சிறுகதைகள், ஜோக்ஸ் என்று பிரித்து பைண்ட் செய்து வைத்திருப்பேன். அது போன்று பல புத்தகங்களை ஒரு தனியார் நூலகத்தில் விற்றதில் கணிசமான தொகை கிடைத்தது. அதன் மூலம் நிதி நெருக்கடியைச் சமாளித்தேன்.

- பா. ஜெயக்குமார்,
வந்தவாசி



நண்பர்கள்

கல்லூரியில் கேண்டீன் எடுத்து நடத்த பதினைந்தாயிரம் ரூபாய் தேவைப்பட்டது. என்ன செய்வது என யோசித்துக் கொண்டிருந்த வேளையில் வங்கியில் வைத்திருந்த நகைக் கடனுக்குத் தவணை தீர்ந்துவிட்டது.

குறிப்பிட்ட தேதிக்குள் அசலும் வட்டியும் சேர்த்து ஆறாயிரம் செலுத்தாவிட்டால் நகை ஏலத்தில் விடப் படும் என பதிவுத் தபால் வந்தது.



திடீரென புது எண்ணம் உதித்தது. வங்கியிலிருந்து வந்த பதிவுத் தபாலை எடுத்துக் கொண்டு நண்பர்கள் நால்வரை அணுகினேன். ''வங்கிக் கடன் அடைக்க பணம் தேவைப்படுகிறது. தொகை கொடுத்தால் பழைய நகைக் கடனை அடைத்து, புதிய நகைக் கடன் பெற்று உங்களுக்குப் பணத்தைத் திருப்பித் தந்து விடுகிறேன்'' என்று கூறி பணம் பெற்று, பிரச்னையைச் சமாளித்தேன்.

- சுந்தர் சுந்தரி,
கோவை.



வீட்டுல விசேஷம்!


அழைப்பிதழ் அச்சடித்து அழைக்க வேண்டியவர்களுக்குக் கொடுத்தாகி விட்டது. புதுமனை புகுவிழாவுக்கு நான்கு நாட்களே இருந்தன. வங்கிக் கடன் தாமதமாகக் கிடைக்கும் நிலை. இருந்த நகைகளை அடகு வைத்தாகி விட்டது. விழாவை நடத்திட குறைந்தது பத்தாயிரம் ரூபாய் தேவை, கஜானா காலி! - எல்லாக் கதவுகளும் மூடப்பட்ட நிலை. மனைவியின் அறிவுரையின் பேரில், பத்து வருட பகைமையால் அழைப்பிதழ் கொடுத்து அழைக்கக் கூடாது என்று முடிவு செய்திருந்த தாய் மாமனிடம் சரணடைந்தேன். பழைய பகையை மறந்து பத்தாயிரம் ரூபாய் கொடுத்து உதவினார். நிகழ்ச்சிக்கு வந்திருந்து வாழ்த்தியதோடு கணிசமான தொகையை அன்பளிப்பாகவும் கொடுத்து விட்டுப் போனார் தாய் மாமன். கஜானா நிரம்பியது. உறவு தொடர்ந்தது. மனதும் நிறைந்தது.



- ப. மூர்த்தி, பெங்களூர்

கஜானா காலியானபோது...

வள்ளல்!



எங்கள் வீட்டில் கஜானா என்று ஒன்றுமில்லை. குறைந்த வருமானத்தில் வாழ்க்கையை ஓட்டிக் கொண்டிருந்தோம்.

1947 ஜனவரி. பி.ஏ. ஆனர்ஸ் பரீட்சைக்குப் பணம் கட்ட வேண்டும்.

அப்பாவும், அண்ணாவும் பல பேரைக் கண்டும் பலனில்லை. 'ஐந்து, பத்து என்றால் பரவாயில்லை. எண்பதுக்கு நாங்கள் எங்கே போவோம்' என்று கைவிரித்து விட்டார்கள். பரீட்சை 'அம்போ'தானா?

திடீரென நினைவு வந்தது. 'தெய்வ சங்கல்பம்' என்ற நாவலை எழுதி வைத்திருந்தேன். எந்தப் பத்திரிகைக்கு அனுப்பலாம் என்று யோசித்துக் கொண்டிருந்தேன்.


கையெழுத்துப் பிரதியை எடுத்துக் கொண்டு புரசு பாலகிருஷ்ணனிடம் போனேன். அவர் என்னை அழைத்துக் கொண்டு, 'தமிழ்ப் புத்தகாலயம்' கண. முத்தையாவிடம் போனார்.

"இவர் எழுதிய நாவல் இது. உடனடியாக பரீட்சைப் பணம் கட்ட நூறு ரூபாய் வேண்டும். நாவலைப் பிரசுரிக்கலாம். நன்றாக உள்ளது. முன் பணமாகத் தர வேண்டும்" என்று கோரி, கைப் பிரதியைத் தந்தார்.

"படிப்பு விஷயமாகக் கேட்டுள்ளீர்கள். ஆகவே 'இல்லை' என்று சொல்ல மாட்டேன். ஆனால் கதையைப் படித்து விட்டு, அதைப் பிரசுரிப்பது பற்றி முடிவு செய்கிறேன். அவகாசம் தாருங்கள்'' என்று கூறி மேஜை டிராயரைத் திறந்து, நூறு ரூபாயை எடுத்துத் தந்தார் முத்தையா.

பிறகு நாவல் பிரசுரமாயிற்று 'காதலா:' என்ற தலைப்புடன். ஆனால் கொடுத்த நூறு ரூபாயைத் திரும்பப் பெற மறுத்துவிட்டார் வள்ளல் முத்தையா.

- **வி.எஸ்.சுந்தரராஜன்,** பெங்களூர்





2002 ஜனவரி 13
விஷு மார்கழி 29
மலர் : 60
இதழ் : 24

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.

இளங்கோவன் அழைக்கிறார்; வாசன் திகைக்கிறார்!

தமிழ்நாட்டு அரசியல் நிகழ்வுகளிலேயே மிக உருப்படியான ஒன்று புத்தாண்டை யொட்டி நடந்திருக்கிறது. காங்கிரசுடன் இணைந்துவிடுமாறு த.மா.கா. தலைவர் ஜி.கே.வாசனுக்கு அழைப்பு விடுத்துக் கடிதம் எழுதியுள்ளார் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன்.

'வாசனைப் போன்ற இளமைத் துடிப்புள்ள ஒரு தலைவருக்கு காங்கிரஸில் நல்ல எதிர்காலம் இருக்கிறது' என்று இளங்கோவன் சொல்லியிருப்பது பெருந்தன்மைமிக்க, ஆரோக்கியமான அரசியல் போக்கு. இதற்கு நேர் மாறாக, அமைந்திருக்கிறது வாசனின் பதில் அறிக்கை! காங்கிரஸுடன் இணைய அழைப்பு விடுத்த கடித நகல்களை த.மா.கா. பிரமுகர்கள் அனைவருக்கும் அனுப்பியது தவறு என்று வாசன் விமர்சிப்பதில் சாரமில்லை.

கோஷ்டிப் பூசலுக்குப் பெயர்போன தமிழக காங்கிரஸின் தலைமையை ஏற்பது ஒன்றும் மகிழ்ச்சியான விஷயமல்ல. இளங்கோவன் அந்தப் பொறுப்பை இதுவரை கண்ணியமாக வகித்து வந்துள்ளார். அவரைச் சுற்றியுள்ள பிற தலைவர்கள் அவரை ஏற்று ஒத்துழைக்கத் தயாராயில்லை என்றபோதும் கொண்ட கொள்கையில் உறுதியோடு இருந்து வருகிறார்.

தமிழக காங்கிரஸ் தலைமையின் தற்போதைய அ.தி.மு.க. எதிர்ப்பு நிலை, தர்மத்தின் அடிப்படையிலும் உயர்ந்தது; அரசியல் நோக்கிலும் சிறந்தது.



அ.தி.மு.க.வினர்மீது போடப்பட்ட வழக்குகள் பிசுபிசுத்து வருகின்றன. சாட்சிகள் பல்டி அடிக்க, சாட்சியங்கள் கண்ணாமூச்சி விளையாடுகின்றன. இந்நிலையில், மக்கள் மத்தியில் ஜெயலலிதாவின் இமேஜ் உயரும் என்பது எதிர்பார்ப்பு. இத்தகைய சமயத்தில் அ.தி.மு.க.வுக்கு எதிரான அணியில் உள்ள கட்சிகள் ஒருங்கிணைவதுதான் புத்திசாலித் தனம். அதற்கான முதல் அடியை எடுத்து வைத்துள்ளார் இளங்கோவன்.

வரவிருக்கும் இடைத் தேர்தல்களில் ஆளுங்கட்சி அதிக இடங்களில் ஜெயித்து விடக்கூடும். ஆனால் அடுத்து வரும் சட்டமன்றத் தேர்தலில் இரு திராவிட கட்சிகளும் மக்களின் ஆதரவைப் பெற பெரும்பாடுபட வேண்டியிருக்கும்.


அ.தி.மு.க. இதுவரையிலான ஆட்சிக் காலத்தில் ஏகப்பட்ட மக்கள் விரோத நடவடிக்கை களைத்தான் எடுத்துள்ளதேயொழிய, நினைவில் வைத்துக் கொள்ளும்படியான நிர்வாகத் திறமையைக் காட்டவில்லை.

தி.மு.க.விலோ கலைஞர் இனி தேர்தலில் போட்டி போடப்போவதில்லை என்று அறிவித்துவிட்டார். கட்சித் தலைமை ஸ்டாலினுக்கே என்ற அறிவிப்பும் வந்தாயிற்று. கட்சியின் கட்டுக்கோப்பும் வலிமையும் நீடிக்குமா என்பது கேள்விக்குறிதான். வேறுபாடுகள் தலைதூக்காதிருந்தால் ஆச்சர்யம்தான்.

திராவிட கட்சிகளின் போக்கைக் கண்டு வாக்காளர்கள் சலித்துப் போயிருக்கிறார்கள் என்பதற்கு, கடந்த தேர்தலில் மிகக் குறைவான வாக்குப் பதிவு நடந்தது ஒரு சான்று.

தி.மு.க. - அ.தி.மு.க. அல்லாத ஒரு தேசிய கட்சியை ஏற்கும் மனநிலையில் தமிழக மக்கள் இன்று இருக்கிறார்கள்.

காங்கிரஸ் மட்டும் ஒற்றுமை என்கிற பலமான ஆயுதத்துடன் தேர்தல் களத்தில் இறங்குமானால், என்றுமுள்ள காங்கிரஸ் வோட்டுகள் தவிர, மாற்றத்தை விழைகிற தமிழர்களின் ஆதரவு நிச்சயம் கிடைக்கும்.



இளங்கோவனின் ஜெ எதிர்ப்பு நிலை, த.மா.கா. தலைவர் மூப்பனாரின் ஆரம்ப கால அரசியல் நிலைப்பாடுக்கு மாறானது அல்ல. ஆகவே, வாசன் காங்கிரசின் அழைப்பை ஏற்பது, மூப்பனாரின் நினைவுக்குத் துரோகம் செய்ததாகாது. காங்கிரசுடன் இணையும் நோக்கில்தான் மூப்பனார் இறுதி நாட்களில் இருந்து வந்தார். காங்கிரஸ் கட்சியேகூட அ.தி.மு.க.வை ஆதரித்துவிட்டு, பல ஏமாற்றங்களுக்குப் பிறகு அவ்வாதரவைத் திரும்பப் பெற்றுள்ளது. எனவே ஒரு நோக்குடைய த.மா.கா.வும், காங்கிரசும் வாக்குகளைப் பிரிக்காமல் இப்போதே இணைந்துவிடுவது நல்லது.

தமது தமிழர் ஜனநாயகப் பேரவைக்கென தனிக்கொடி பெற்று அதனையும் ஒரு கட்சியாக அறிவித்துள்ள ப.சிதம்பரம்கூட, தனித்துப் போட்டியிடுவதால் வாக்குகளைப் பிரிப்பதற்கு மேலாக எதையும் சாதிக்க முடியாது. ஆனால் அதே ப.சிதம்பரம் தாய்க் கட்சியுடன் இணைந்துவிடுவாரேயானால், தமிழ்நாடு காங்கிரஸின் அந்தஸ்து கிடுகிடுவென்று உயர்ந்துபோகும். கட்சியின் எதிர்காலமும் மாநிலத்தின் எதிர்காலமும் ஒரு திருப்புமுனை காண வாய்ப்பு பிறக்கும்.

இந்தத் திருப்பங்கள் நிகழ வேண்டுமானால், சம்பந்தப்பட்ட தலைவர்கள் போலிக் கௌரவம் பாராமல் காங்கிரஸில் சேர்ந்துவிட வேண்டும். தமிழக நலன் கருதி, தாய் கட்சியைப் பலப்படுத்த பாடுபடவேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக, காங்கிரஸின் தேசிய தலைமை, தமிழக காங்கிரஸின் இயல்பான, ஜனநாயக ரீதியிலான வளர்ச்சியில் குறுக்கிட்டு காரியத்தைக் கெடுக்காமல் இருக்க வேண்டும்.

ஏற்கெனவே கோஷ்டிகள் நிறைந்துள்ள காங்கிரஸில் த.மா.கா. இணைவதாலும் சிதம்பரம் சேர்வதாலும் பூசல்கள்தானே அதிகரிக்கும் என்று கேட்கலாம். வாசன், சிதம்பரம் போன்ற பலம் வாய்ந்த தலைவர்களின் வரவு, சில்லறை சண்டைகள் கிளப்பும் சின்ன தலைவர்களின் சகாப்தத்தை முடிவுக்குக் கொண்டுவரும்! ○





காதில் விழுந்தவை :

கடன் வாங்கி மரம் நடும் அதிகாரிகள்!

● மத்திய அரசின் சுற்றுச்சூழல் இலாகாவும், தமிழக அரசும் இணைந்து வனத்துறையில் பசுமை வளையத் திட்டம் என்ற திட்டத்தைச் செயல்படுத்தி வருகின்றன. மத்திய அரசு நான்கு கோடி நிதியுதவி செய்திருக்கிறது. தமிழக அரசு தன் பங்குக்கு 57 லட்சம் போட வேண்டும். இந்தத் திட்டத்தின்படி ஒரு லட்சத்து முப்பத்தையாயிரம் மரக்கன்றுகள் நடப்பட்டிருக்கின்றன. மத்திய அரசு கொடுத்தநான்கு கோடி ரூபாயை முழுவதுமாக இந்தத் திட்டத்துக்கு செலவழிக்காமல் மாநில அரசு திசை திருப்பிவிட்டது. இத்திட்டத்தில் தமிழகம் முழுக்க, வனத்துறை நர்சரிகளில் ஆயிரம் தொழிலாளர்கள் தினக்கூலியில் வேலை செய்து வருகிறார்கள். நிதி ஒதுக்கீடு இல்லாததால் இவர்களுக்குப் பல மாதங்களாக சம்பளம் கொடுக்கப்படவில்லையாம். அதேபோல் நிதி வரும் என்று எதிர்பார்த்து, வனத்துறை நர்சரி இல்லாத இடங்களில் தனியாரிடம் கடன் வாங்கி மரக்கன்று நட்ட அதிகாரிகளும் விழித்துக் கொண்டிருக்கிறார்கள்.

● இளங்கோவனை எதிர்த்து பாலிடிக்ஸ் பண்ணும் தமிழக காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர் யசோதா, ஆளுங் கட்சிக்காரர்களுடன் நல்ல 'ரேப்போ' வைத்துக்கொண்டு, செல்வாக்குடன் இயங்கி வருகிறார். அதேபோல் தங்கபாலுவும் ஆளுங்கட்சியை அனுசரித்துப் போய்க் கொண்டிருக்கிறார். இதற்கிடையில் வெளிநாடு சென்றிருந்த தமிழக காங்கிரஸ் பொறுப்பாளர் ரமேஷ் சென்னிதாலா இந்தியா திரும்பி விட்டார். கூடிய விரைவில் தங்கபாலு, யசோதா ஆகியோருக்கு மேலிடத்திலிருந்து 'ஷோகாஸ்' நோட்டீஸ் வர இருக்கிறதாம். அதேசமயம் 'தி.மு.க.வுடன் இளங்கோவனுக்கு ரகசியத் தொடர்பு, புலிகள் ஆதரவு காட்டும் பா.ம.க.வுடன் தோழமை' என்று இளங்கோவன் மீதும் புகார் பட்டியல் தயாராகிறதாம்.

● ஆந்திராவில் சந்திரபாபு நாயுடுவுக்கு உதவியாக சில நிர்வாகப் பணிகளையும் செய்து வரும் கவர்னர் ரங்கராஜன், தமிழகத்தின் கூடுதல் பொறுப்பை கவனிக்க மிகவும் சிரமப்படுகிறார் என்கிறார்கள். "காலமின்மை காரணமாக என்னால் தமிழக பணிகளை முழுமையாக நிறைவேற்ற முடியவில்லை. எனவே புதிய கவர்னரை சீக்கிரம் நியமியுங்கள் என்று பிரதமரைப் போன மாதமே அவர் கேட்டுக் கொண்டிருக்கிறார். பைரோன் சிங் ஷெகாவத், சிக்கந்தர் பக்த், வி.ஆர். கிருஷ்ணய்யர், சியாம்லால் ஆகியோரது பெயர்கள் பரிசீலிக்கப்பட்டன. இதில் கிருஷ்ணய்யருக்கு தி.மு.க ஓ.கே சொல்லிவிட்டது. ஆனால் ஆளுங்கட்சி நிராகரித்து விட்டது. "எங்கள் அம்மா சொல்பவர்தான் கவர்னர். பா.ஜ.க.வுடன் நல்லுறவுக்கான முதல்படியாக கவர்னர் நியமனம் அமையும்" என்கிறார்கள் ஆளுங்கட்சிப் பிரமுகர்கள்.

– சஞ்சயன்



புடைவைக்கு மரியாதை

பட்டுப் புடைவை, முழுக்கை ரவிக்கை, கண்ணாடி வளையல், மெகா சைஸ் பொட்டு, தலை நிறைய மல்லிகைப் பூ. இதுதான் உஷா உதுப்! கன்ட்ரி கிளப் அங்கத்தினர்களின் சிறப்பு நிகழ்ச்சிக்காக வந்திருந்தார்.

"எனக்கு இப்போது வயது ஐம்பத்து நான்கு. முப்பத்து இரண்டு வருடங்களுக்கு முன்னால், இதே சென்னையில், ஹோட்டல் சவேராவின் நைட் கிளப்பில் பாப் பாடகியாக மைக் பிடித்தேன். அன்றிலிருந்து இன்று வரை புடைவை, வளையல், பொட்டு, மல்லிகைப்பூதான்.

"பாப் மியூஸிக் – புடைவை. இதென்ன காம்பினேஷன்?"

மேற்கத்திய இசை மீது எனக்கு ஏற்பட்ட ஆர்வம் காரணமாக பாப் மியூஸிக் பாட ஆரம்பித்தேன். அதற்காக பாரம்பரிய புடைவையை விடத் தயாராக இல்லை.

"அதேபோல, விதம் விதமாய் வளையல் அணிய எனக்குப் பிடிக்கும். முன்பெல்லாம் மை அல்லது சாந்து கொண்டு நிகழ்ச்சிக்கு ஏற்ப விதம்விதமான டிசைனில், நானே நெற்றியில் பொட்டு வரைந்து கொள்ளுவேன். இப்போது ஒரு ஸ்டிக்கர் பொட்டு தயாரிப்பவரிடம், பிரத்யேகமாக பொட்டு டிசைன் செய்து கொடுத்து, அதுபோல தயாரித்துக் கொடுக்கச் சொல்லுகிறேன்."

"பொட்டு, வளையல் எல்லாம் போகிற போது கையோடு எடுத்துக் கொண்டு போய் விடலாம். மல்லிகை பூ எல்லா ஊரிலும் சுலபத்தில் கிடைக்காதே!"

"முன்பெல்லாம் இது ஒரு பிரச்னையாகத்தான் இருக்கும். ஒரு தடவை ராஜஸ்தானில் ஒரு நிகழ்ச்சிக்குப் போயிருந்த போது, போய் இறங்கிய நிமிடமே ஏற்பாடுகளை கவனித்துக் கொண்டவர், "மேடம்! மல்லிகைப் பூதான் இங்கே இலேசில் கிடைக்காது; மாலை நிகழ்ச்சி ஆரம்பிப்பதற்குள் எப்படியாவது ஏற்பாடு செய்து விடுகிறோம்" என்றார்.

"எனக்கு செயற்கை மல்லிகை பிடிப்பதில்லை. கல்கத்தாவில் எனக்குத் தெரிந்த ஒரு பெண்மணி, மிக மிருதுவான துணியில் மல்லிகைச் சரம் உருவாக்கி தருகிறார்" என்று சொன்ன படியே, தம் தலையில் வைத்திருந்த அடர்த்தியான மல்லிகைப் பூவை எடுத்து, "தொட்டுப் பாருங்கள்! இது துணியில் செய்த மல்லிகைச் சரம் தான்!" என்றார்.

மிக தத்ரூபமாக மல்லிகை போலவே இருந்தது அந்தச் சரம்.

"ஆயிரக்கணக்கில் உலகம் முழுக்க மேடை நிகழ்ச்சிகளில் பாடி இருக்கும் நீங்கள், ஏன் சினிமாவில் அதிகம் பாடவில்லை?"

"சினிமாக்களில் வில்லிகள் டான்ஸ் ஆடும் பாடல்களுக்குத்தான் என் குரல் பொருந்தும் என்று ஒரு தவறான அபிப்ராயம் ஏற்பட்டு விட்டது. அதனால்தான் அதிக அளவில் சினிமாவில் பாட முடியாமல் போய்விட்டது. இன்னொரு முக்கியமான காரணம், என்னுடன் இணைந்து பல பாடகர்கள் பாட விரும்புவதில்லை. ஒரு தடவை ஒரு இந்தி இசையமைப்பாளரும் நானும் இணைந்து ஓர் டூயட் பாடினோம். பாடலைக் கேட்டவர்கள், என் குரலில் ஆண்மையும், அவரது குரலில் பெண்மையும் ஓங்கியிருந்ததாகச் சொல்லவும், அந்த இசையமைப்பாளர் அதை அவமானமாக நினைத்தார். ஆனால் நான் அதைப் பெருமையாகவும் கருதவில்லை; இழிவாகவும் கருதவில்லை!"

சந்திப்பு: **மானஸா**
படம்: **ஸ்ரீஹரி**

P.R. ஜுவல்லரியின் புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துக்கள்

எங்கு ஜோதிடம் பார்த்தாலும் P.R. ஜுவல்லரிக்கு வந்து ரூ. 400/-க்கு ராசிக்கல் மோதிரம் வாங்கி பயன்பெறுங்கள். கல் ஒரிஜினல் என முழு உத்திரவாதம் தருகிறோம்.


P.R. JEWELLERY

GOLD, SILVER, DIAMOND BIRTH STONES

Old No. 102, New No. 138, USMAN ROAD,
T. NAGAR, CHENNAI - 600 017.

PH : 434 4442 432 7764 - TUESDAY HOLIDAY
(10.00 AM to 1.30 — 3.30 PM to 8.00 PM)

PROPRIETOR : P. RAVINDHIRAN



ராசி		ராசிக்கல்
மேஷம், விருச்சிகம்	*	பவழம்
ரிஷபம், துலாம்	*	வைரம்
மிதுனம், கன்னி	*	மரகதபச்சை
கடகம்	*	முத்து
சிம்மம்	*	மாணிக்கம்
தனுசு, மீனம்	*	புஷ்பராகம்
மகரம், கும்பம்	*	நீலம்

திருஷ்டியைப் போக்கி, சகல செல்வங்களையும் தரும் அதிர்ஷ்ட வினாயகர்ரூ. 50/-க்குக் கிடைக்கும்.

நகைக் கடைக்கு நிறைய அனுபவம் தேவை. 1986ல் ஆரம்பிக்கப்பட்ட எங்கள் கடைக்கு நிறைய வாடிக்கையாளர் கள் உள்ளனர். 20 வருடங்களுக்கு மேலாக நகைக் கடைத் துறையில் அனுபவம் உள்ளதால் வாடிக்கையாளர்களுக்கு குறித்த நேரத்தில் சிறந்த முறையில் வைர நகைகள் தங்க நகைகள், வெள்ளிப் பாத்திரங்கள், கவச வேலைகள், ராசிக்கல் மோதிரங்கள் குறைந்த விலையில் உத்திரவாதத்துடன் செய்து தருகிறோம்.

ராஜாக்கள் காலத்தில் இருந்தே வைரங்கள், வைடூரியங்கள், நவரத்தினங்கள் உபயோகத்தில் உள்ளன. தற்போது 7 வருடமாக அனைவரும் ராசிக் கற்களை விரும்பி வாங்குகிறார்கள். எந்த ஜோதிடராக இருந்தாலும் ஒருவருக்கு இராசிக்கல் தேர்ந்தெடுக்க அவரது ராசிப்படியும், நடப்பு திசைப்படியும், எண் படியும்தான் எழுதித் தருகிறார்கள். இதில் ராசிப்படி அணிவதுதான் மிகச் சிறந்தது. உதாரணமாக நாம் கோவிலுக்குச் சென்று அர்ச்சனை செய்யும் பொழுதும், வீட்டில் நடைபெறும் திருமணம், பெயர் வைப்பது, பூஜைகள், ஹோமங்கள் அனைத்திற்குமே ஜென்ம நட்சத்திரம் ராசி சொல்லித்தான் அர்ச்சனை செய்கிறோம். அதனால் அதன்படி அணிவதுதான் மிகச் சிறந்தது. அனைவரும் நவரத்தின மோதிரம் அணியலாம். மிகவும் நல்லது. 9 கிரகங்கள் பலனைத் தரும். **5 CENT** வைரம் வைத்து 8 கிராம் தங்கத்தில் விலை **8,000/-.**

நவரத்தினக் கற்களில் வைரம் மட்டுமே விலை 1 காரட் 35,000/-. 5 CENT வைரம் வைத்து வெள்ளி மோதிரம் விலை ரூ. 2250/-. 5 CENT வைரம் வைத்து 4 கிராம் தங்கத்தில் விலை ரூ. 4500/-.

எல்லா ராசி மோதிரமும், நியூமராலஜி மோதிரமும் எங்களிடம் வெள்ளியில் ரூ. 400/-க்கு உடனே கிடைக்கும். கல் ஒரிஜினல் என முழு உத்திரவாதம் தருகிறோம்.

விபரம் : வைடூரியம், கோமேதகம், மாணிக்கம், மரகத பச்சை, பவழம், முத்து, நீலம், புஷ்பராகம், **TOPAZ, MOONSTONE, AMETHYST, TARQUISE, TIGEREYE, BLOOD STONE,** எல்லா மோதிரங்களும் வெள்ளியில் ரூ. 400/-க்கு உடனே கிடைக்கும்.

(தங்கத்தில் எல்லா ராசிக்கும் மோதிரம் 2 கிராம் முதல் 8 கிராம் வரை ரூ. 1800/-/- முதல் 5000/-/-ம் வரை உடனே கிடைக்கும்.)

அனைவரும் அணியக்கூடியது கார்னெட் வெள்ளி மோதிரம் விலை ரூ. **400/-**

இதை அணிவதால் படிப்பு, ஞாபகசக்தி, வேலை வாய்ப்பு, வியாபாரம் செல்வ வளம் பெருகும். நம்பிக்கை, உழைப்பு, முயற்சி செய்தால் ராசிக்கல் மோதிரம் அணிந்து 100 சதவீத வெற்றிபெறலாம். எங்களிடம் ஜாதகம் கொண்டு வந்தால் என்ன கல் போட வேண்டும் எனச் சொல்கிறோம். கட்டணம் கிடையாது. ஜாதகம் இல்லாதவர்கள் பிறந்த தேதி, ஊர் கொண்டு வந்தால் ஜாதகம் கணித்து தருகிறோம். ரூ. 50/- பதிவுத் தபால் மூலம் ஜாதகம் பெற ரூ. 80/- அனுப்பவும். தபால் எழுதினால் முழு விவர பாம்லட் இலவசமாக அனுப்புகிறோம்.

மேஷ ராசி, விருச்சிக ராசி - பவழம் * ரிஷப ராசி, துலாம் ராசி - வைரம் * மிதுன ராசி, கன்னி ராசி - மரகத பச்சை

குறிப்பு : ஜெயா டீ.வி.யில் வியாழன்தோறும் மாலை 5.30 மணிக்கு சிறப்பு பேட்டியை பார்க்கவும்.



• விசாலி

'இரண்டாயிரமாவது ஆண்டு எப்படி இருக்க வேண்டுமென்று நினைக்கிறீர்கள்?' என்று விஜய்யில் கேட்டார் (டீவி செய்தி புகழ்) வரதராசன். எதிரே அமர்ந்திருந்தவர் ராஜ்ய சபா உறுப்பினர் ஜெயந்தி நடராஜன். பெண்களை மையமாக வைத்து நடத்தப்பட்ட இந்தப் பேட்டியில் சூடும் சுவையும் இருந்தன.

'இரண்டாயிரத்து இரண்டில் போர் இருக்கக்கூடாது. போரே வரக்கூடாது' என்று வரதராசனுக்குப் பதில் சொன்னார் எம்.பி. In war there are no winners, But all are losers என்பது ஒரு பொன்மொழி. தொடர்ந்து பேசிய ஜெயந்தி நடராஜன், 'போர் வர வேண்டுமென்று எந்தப் பெண்ணும் எண்ண மாட்டாள். யுத்தம், யுத்தம் என்று அலைபவர்கள் ஆண்கள்தான்' என்று ஒரு குற்றச்சாட்டையும் எடுத்து வீசினார். ஆண்கள் சார்பில் சொல்வதென்றால், அக்கிரமம் அம்மணி!

"போருக்கு அலைகிறவர்கள் ஆண்கள்தான்!"

வினோத்

அடுத்தபடி இவருடைய கோபத்துக்கு ஆளானவர் கண்ணகி - ஆம், சிலப்பதிகாரக் கண்ணகிதான். 'பெண்களுக்குக் கண்ணகி ரோல்மாடலாக இருக்கமுடியாது. ஒரு நகரத்தையே கொளுத்தி, நிரபராதிகளைச் சாகடித்தவள் அவள். The first woman terrorist என்றார்.

யாரோ கட்டெரிக்கிற மாதிரி பார்ப்பதால் இதற்கு மேல் எழுதக் கூடாது.

'இது இருபது வருஷத்துக்கு முன்னால் ஆர்.டி. பர்மன் இசையமைத்தது... இது நாற்பது வருஷத்துக்கு முன் நௌஷத் இயற்றியது... அற்புதமான பாட்டு... அபாரமாகப் பாடியிருக்கிறார்கள். இதையெல்லாம் நான் எப்படி என் குரலில் கொண்டு வரப் போகிறேனோ?' என்று புலம்பிக் கொண்டே (அல்லது புலம்புவதாகப் பாசாங்கு பண்ணிக் கொண்டே) தத்ரூபமாக அந்தந்த பின்னணிப் பாடகிகளின் குரல்களிலேயே பாடினார் உஷா - உதுப். They conquer who believe they can.

மேக்ஸ் டீவியில் அலை மோதும் கூட்டம். உஷாவோ உற்சாக மூட்டை ஆகவே புத்தாண்டுக் கொண்டாட்டத்தில் அரங்கமே ஆடியது. 'Thank you! Thank you so much! என்று உரத்த குரலில் உஷா கூவியபோதெல்லாம் கூரை இடிந்து விழப் போகிறது என்ற அச்சம் உதித்தது.

'அப்பா வருகிற சத்தம் கேட்கிறதுடா. கதவைத் திற' என்று மகனிடம் சொல்கிறாள் ஒரு அம்மா. பிள்ளை ஆச்சரியத்துடன் 'அப்பா மேல் உனக்கு எத்தனை பிரியம். காலடி ஓசையை வைத்தே அப்பா வருகிறார் என்று சொல்கிறாயே!' என்கிறான். 'அட போடா! உன் அப்பாவைத் தவிர எந்த மனுஷன் இப்படித் தேய்த்து தேய்த்து நடந்

செருப்பைக் குட்டிச் சுவராக்குவான்?'

'இன்றைய குடும்பங்களில் பண்பாடு எப்படி இருக்கிறது?' என்ற தலைப்பின் கீழ் ஒருவர் பேசியது இது. இத்தகைய கேலிகள் வழக்காடு மன்றங்களில் வழக்கமாகிவிட்டன. After the first few moments they begin to pale.

தலைமை தாங்கிய விசாலி கண்ணதாசன் விவாதங்களின் தரத்தை உயர்த்த முயன்றார். (ஜெயா) அறிவாளிக்கு அறிவாளி உலகத்தில் உண்டு என்றவர், ஒரு குட்டிக் கதை சொன்னார். ஒரு குத்துச்சண்டை வீரர், பாத்ரூமுக்குப் போகுமுன் தன் கோட்டைக் கழற்றி வெளியே வைத்துவிட்டு, அதை யாரும் திருடிக் கொண்டு போய் விடக் கூடாது என்பதற்காக அதன்மீது ஒரு சீட்டு எழுதி வைத்தாராம். 'உலகத்திலேயே பெரிய குத்துச்சண்டை வீரரின் கோட் இது. சற்று நேரத்தில் அவர் வருவார்' என்று. திரும்பி வந்து பார்த்தால் கோட்டைக் காணோம். பதிலுக்கு ஒரு சீட்டு இருந்தது. 'உலகத்திலேயே பெரிய ஓட்டப் பந்தய வீரர் கோட்டை எடுத்துக் கொண்டு போய்விட்டார். அவர் திரும்பி வர மாட்டார்' என்று அதில் இருந்ததாம்.



• ஜெயந்தி நடராஜன்



• கு. ஞானசம்பந்தம்

பழைய துணுக்குகளானாலும் பாலிஷ் போட்டுப் பளபளக்கப் பண்ணி, அழுத்தமாகவும், அழகாகவும் பேசுவதில் அதிரடி முன்னேற்றம் கண்டு வருகிறார் கவியரசின் புத்திரி. முன்பிருந்த குழந்தைத்தனமான குரல் மாறி விட்டது. பட்டி மன்றங்களால் கிடைத்துள்ள (ஒரே) ஒரு பயன்.

தட்டக் கட்டக் மட்டக் பட்டக் தப்பத் திட்ப - ஜார்ஜ் மைக்கேலின் Rock Me Adious என்ற பாட்டு ஏறத்தாழ இது மாதிரி ஒலிக்கும் அசுர மெட்டில் தூள் பறந்தது. (எம்.டீ.வி) ஆட்டக்காரர்களின் சுழற்சிகளுக்குள் நாமும் சிக்கிக்கொண்டு விட்ட மாதிரி ஒரு புயலான உணர்வு நம்மைப் போர்த்திக் கொள்கிறது.

அடுத்து வந்த Freedom 90 என்ற பாட்டும் அப்படித்தான். ட்ரம்ஸ் தோட்டத்தில் தாளக் கொள்ளை. இந்தப் பாட்டின் நடுவே, ஒரு பெண் தன் ஈர உதடுகளைப் புறங்கையால் ஒரு இழுப்பு இழுத்துத் துடைத்துக் கொள்கிறாளே, அந்த மின்னல் நேரத்தில் ஒரு கவிதை தெரிந்து மறைந்தது.

இன்னேரம் இந்த ட்யூன்கள் நம்ம படங்களில் திருடப்பட்டிருக்கும். (அல்லது இனிமேல்) Music is the arithmetic of sounds என்றார் ஒரு பிரெஞ்சு இசையமைப்பாளர். அவ்வளவுதானே? அப்புறம் என்ன?

திருவண்ணாமலையில், ஓர் இருட்டுக் குகையில், பூச்சி புழுக்களின் நடுவே, குரங்கும் அணிலும் காக்கையும் ஓடும் சூழ்நிலையில், உண்ணாமல் உறங்காமல் நெடுந்தவம் இருந்தார் என்று ரமண மகானின் பெருமையைக் கூறினார் பேராசிரியர் கு. ஞானசம்பந்தம். 'இப்போதெல்லாம் எட்டு மணியிலிருந்து ஒன்பது மணி வரை ஒருவர், ஒன்பதிலிருந்து பத்து வரை அடுத்தவர் என்று தொடர் உண்ணாவிரதம் இருக்கிறார்களே, அது போல அல்ல' என்று ஒரு குத்தலும் சேர்த்துக் கொண்டார்.


புற்று நோய்க்கு ஆபரேஷன் நடந்தபோது, மயக்க மருந்து வேண்டாமென்று கூறி, தமக்குச் செய்யப்படும் அறுவைச் சிகிச்சையைத் தாமே தம் கண்ணால் பார்த்துக் கொண்டிருந்தார் என்று மகரிஷியின் இன்னொரு மகிமையை விவரித்தவர், கூடவே 'ஒரு ஊசி போடறது என்றால்கூடச் சில பேருக்கு ஐந்து ஆள் பிடிச்சுக்க வேண்டியிருக்குது' என்று முத்தாய்ப்பு வைத்தார்.

காலை நேரச் சொற்பொழிவாளர்களுள் இவரைத் தனித்து அடையாளம் காட்டுகிறது இந்த நையாண்டி மிக்ஸர். Sarcasm seems to be his forte.

திகைக்க வைக்கும் டீன் ஏஜ்

இன்று டீன் ஏஜ் பையனோ, பெண்ணோ இருக்கும் குடும்பத்தில் எப்போதும் பரபரப்பு, வாக்குவாதங்கள்தான். எதிர்காலத்தை நிர்ணயிக்க வேண்டிய கால கட்டமாதலால், வாரிசுகளைப் பற்றி பெற்றோர்களுக்கு ஏக கவலை... எந்த பாதிப்புக்கும் உள்ளாகாமல் அவர்கள் கரை சேர வேண்டுமே என்ற அக்கறையில் கூடுதல் கவனிப்பு அல்லது கண்காணிப்பு உரசல்களை உண்டாக்குகிறது.

“இந்தப் பெற்றோர்களுக்கு எங்களை எப்படி நடத்த வேண்டும் என்பதே தெரியவில்லை” என்று டீன் ஏஜர்களும், “இவர்களோடு எங்களுக்குப் பெரிய ராவுடியாப் போச்சே” என்று பெற்றோர்களும் தலையைப் பிய்த்துக் கொண்டிருக்கிறார்கள். “நாங்கள் எப்போதும் புத்தகமும் கையுமா இருக்கணும்னு எதிர்பார்க்கிறார்கள். சிறிது நேரம் தொலைக்காட்சி பார்த்து ரிலாக்ஸ் செய்து கொள்ள முடியவில்லை. கொஞ்ச நேரம் பார்த்துக் கொண்டிருந்தாலே அவர்கள் டென்ஷன் ஆகி விடுகிறார்கள். எனக்கு என் வீட்டில் சுதந்தரம் உண்டு. என்னுடன் டியூஷன் படிக்கும் பையன்கள் வீட்டுக்கு வருவார்கள். அவர்களை அம்மாவுக்கு அறிமுகப் படுத்துவேன்” என்று சொல்கிறார் ப்ளஸ் டு படிக்கும் ஜெயஸ்ரீ. அவரது அம்மா பாலாம்மான் ‘நான் என் பொண்ணை முழுமையாக நம்புகிறேன். எந்த விஷயத்திலும் நான் அவளை வற்புறுத்துவது கிடையாது. மனசாட்சிப்படி நடக்கணும். சொந்தக் காலில் நிற்கணும்; என்றுதான் அவளிடம் சொல்லுவேன். பையன்களோடு பழகுவது, தவறு என்று சொல்ல மாட்டேன். அதே சமயம் எல்லை தாண்டி பேசும், பழக முயற்சிக்கும் பையனின் நட்பைத் தயங்காமல் துண்டிக்கச் சொல்லியிருக்கிறேன்'' என்கிறார்.


• உமா சங்கர்

அண்ணா பல்கலைக் கழகத்தில் பொறியியல் படிக்கும் சாயிராம் ''எனக்கும் என் அப்பாவுக்கும் பிரச்னை வருவதே நான் எம்.டீ.வி அல்லது ஸ்டார் ப்ளஸ் போட்டுப் பார்க்கும் போதுதான். ‘சித்தி’ ஸீரியல் ஓடும்போது, விளம்பர இடைவேளையில், நான் சேனல் மாற்றினால்கூட சில சமயம் டென்ஷன் கிளம்பும். ஆனால் நான் அதிக நேரம் வாக்கு வாதம் செய்வதில்லை. ஏனென்றால் அவர்கள் எனக்கு முழு சுதந்தரம் கொடுத்து, ஒரு நண்பனைப் போல் பழகுகிறார்கள். என் பொறுப்பை முழுதாக உணர்ந்திருக்கிறேன்'' என்கிறார். “இந்தக் காலத்து பையன்களின் ஐ.க்யூ பிரமாதமாக இருக்கிறது. இருந்தாலும் தீவிர கண்காணிப்பு அவசியம். அவ்வப்போது அவர்களைத் திருத்த வேண்டும்'' என்கிறார் சாய்ராமின் அப்பா உமா சங்கர்.

• டாக்டர் சுரேஷ்



''எங்கள் வீட்டில் பெற்றோர் தவிர ஓர் அண்ணன். அவர்கள் எல்லோரையும் சமாளிக்கும் வழி எனக்குத் தெரியும். ‘சீக்கிரம் எழுந்திரு, என்பதில் துவங்கி, சாப்பிடு, படி, ஊர் சுத்தாதே, மியூஸிக் சிஸ்டத்தைச் சத்தமாக வைக்காதே, லைட்டை அனாவசியமா எரிய விடாதே'' என்று காலையிலிருந்து ஒரே


• ஸ்வேதா, ஜெயஸ்ரீ, ராஜேஷ், சாய்ராம்

துரத்தல்தான். அதனால் நான் அவ்வப்போது வீட்டிலிருந்து எஸ்கேப் ஆகி விடுவேன்'' என்கிறான் ப்ளஸ் டூ படிக்கும் ராஜேஷ். அம்மா வத்சலா டீச்சர். பையன் அப்படிச் சொன்னாலும் 'ரொம்ப பொறுப்பான பையனாத்தான் அவனை நினைக்கிறேன். டீன் ஏஜர்களை, பெற்றோர்கள் ரொம்பவும் கட்டுப்படுத்தக் கூடாது. நல்லது, கெட்டது எடுத்துச் சொல்லணும். பிரம்பை கையிலெடுத்தால், அனாவசியமாக பையன் வாயிலிருந்து பொய் தான் வரும். மற்றொரு பையனுடன் உங்கள் பையனை ஒப்பிட்டு பேசவே வேண்டாம். ஒவ்வொருவருக்கும் தனித்தன்மை இருக்கிறது.



சைக்காலஜி!

அதைக் கண்டுபிடியுங்கள். அப்பா-அம்மா வேலைக்குப் போகும் குடும்பத்தில் பெரியவர்கள் வீட்டில் இல்லாத நிலையில் பையனது செயல்பாடுகள் கவலை அளிக்கக்கூடியதாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. எனக்குத் தெரிந்து இரண்டு தாய்கள், ப்ளஸ் டூ பையனைக் கவனிக்க வேலையையே விட்டு விட்டார்கள். படிப்பு சம்பந்தமாக ஏற்கெனவே அழுத்தத்தில் இருக்கும் அவர்களை மென்மையான அணுகுமுறையினால் திருத்த முடியும். உங்கள் பெண்ணையோ, பையனையோ நண்பர்களாகப் பாருங்கள்; அவர்களுக்கு மதிப்பு கொடுங்கள்; அவர்களோடு ரகசியங்களைப் பங்கு கொள்ளுங்கள். பரஸ்பரம் இப்படி இருக்கும் பட்சத்தில் குடும்பத்தில் நல்லிணக்கம், அமைதி நிலவக் காண்பீர்கள்'' என்கிறார் வத்சலா.

''கூட்டுக் குடும்பத்திலிருந்து வரும் டீன் ஏஜர்கள், கொஞ்சம் அடக்கமாகவும், முடிவு எடுக்கத் தயங்குபவர்களாகவும் இருக்க, வேலைக்குப் போகும் பெற்றோர்களைக் கொண்ட பையன் அதிரடியாக முடிவுகள் எடுக்கும் போக்கையும் பார்க்கிறேன்'' என்கிறார் வத்சலா.


மீனாட்சியில் பி.காம் படிக்கும் ஸ்வேதா, 'வீட்டில் எப்போதும் அமைதி நிலவ வேண்டும்.'' யாராவது கொஞ்சம் சப்தமாக தொலைக்காட்சி வைத்தால்கூட எனக்குப் பிடிக்காது. 'இப்படிப்பட்ட சத்தத்திலும் நீ படித்து நல்ல மார்க் வாங்க வேண்டும்; அதில்தான் உன் திறமை இருக்கிறது' என்று சொன்னால் நான் என்ன செய்ய முடியும்?'' என்று கேட்கிறார்!

அன்றாடம் கல்லூரியில் நடக்கும், சிறு விஷயங்கள் உட்பட எதையும் மறைக்காமல் அம்மாவிடம் சொல்லி விடுவாராம் ஸ்வேதா. ''எனக்கு சி.ஏ வேண்டாம்; எம்.பி.ஏ படிக்கிறேன்'' என்று சொன்னபோது பெற்றோர்கள் ஒப்புக் கொண்டார்கள். அவர்கள் நம்மை அதிகமாக நம்பும்போது நமக்கும் பொறுப்பு அதிகமாகப் போய் விடுகிறதே?'' என்று சொல்கிறார் ஸ்வேதா.

''நாங்க நடுத்தர குடும்பம்தான். மிகக்

குறைந்த அளவு பாக்கெட்மணியே கொடுக்கிறேன். பணம் கேட்டு அவன் என்னை நச்சரிப்பதில்லை. இன்றைய சமூகச் சூழலை நாம் எடுத்துச் சொல்ல வேண்டியதில்லை. அவர்களுக்கே எல்லாம் தெரியும். ஆனால் தவறு செய்வது மனித இயல்புதானே! ரொம்பவும் தலையை நீட்டாமல், கண்காணிக்க வேண்டும். அவர்களின் மன ரீதியான சிறு மாற்றத்தைக்கூட நாம் கண்டுபிடித்து தெளிவுபடுத்த வேண்டியிருக்கிறது'' என்கிறார் அம்மா லதா.

டீன்ஏஜில் உள்ள சகோதர, சகோதரிகள் இருக்கும் குடும்பத்தில் பெற்றோர்களுக்கு வேறு பல தலைவலிகளும் உண்டு. மகன் ரிமோட்டில் சேனல்களாக மாற்றிக் கொண்டிருக்க, மகள் குறிப்பிட்ட சேனலில் ஓடும் ஸீரியலைப் பார்க்க வேண்டும் என்று அடம்பிடிக்க, ஏக ரகளையாகி டென்ஷன் எகிறும். ''அவனுக்கு ஆயிரம் ரூபாயில் ஜீன்ஸ்; எனக்கு முந்நூறு ரூபாயில் சுடிதாரா?'' என்று மகள் அம்மாவை பிலு பிலுவென்று பிடித்துக் கொள்ள, அமர்க்களம்தான். மகனுக்கும், மகளுக்கும் இடையே கம்பி மேல் நடப்பது போல் பேலன்ஸ் செய்தாக வேண்டும். சில சமயம் இருவர் செய்யும் தவறுகளையும், ஒருவருக்கொருவர் பெற்றோர்களிடம் போட்டுக் கொடுக்கும் ஆதாயமும் உண்டு.



''நீங்க எடுத்த படம் ஒரு ஏரியா கூட விக்காம கிடந்துச்சே... என்ன செஞ்சீங்க?''

''அதை நானே திருட்டு விசிடி எடுத்து வித்துட்டேன்... ஏகப்பட்ட லாபம்!''

— தஞ்சை தாமு

“ஒரு தோழியைப் போல் நடத்தினேன்; சுதந்தரம் கொடுத்தேன்; ஆனால் என்னையும் ஏமாற்றி விட்டாளே!” என்று நண்பனுடன் மகள் ஊர் சுற்றியதைக் கேள்விப்பட்ட அம்மா புலம்புவதும், “சிறு தப்பு செய்தாலும் விட மாட்டேன்; தோலை உரிச்சுப் போடுவேன்” என்று உறுமிய அப்பா, எக்ஸாம் சமயத்தில் பையன் ஊரை விட்டு எஸ்கேப் ஆனதும், வாய்விட்டு அழுவதும் பல குடும்பங்களில் நடந்திருக்கின்றன; நடக்கின்றன.

இது போன்ற கலவரமானச் சூழலில் எப்படித்தான் நடந்து கொள்வது? மனநல மருத்துவர் சுரேஷ் சொல்கிறார்!

''உங்கள் வாரிசுகள் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்களோ, அதற்கு முன் மாதிரியாக நீங்கள் நடந்து கொள்ள வேண்டும். “நான் எப்படி வேண்டுமானாலும் இருப்பேன், ஆனால் என் மகனோ, மகளோ, பர்ஃபெக்டாக இருக்க வேண்டும்' என்று எதிர்பார்ப்பது தவறு. அதேபோல தலைமுறை இடைவெளியை உணருங்கள். பெற்றோர்கள் அவர்கள் அப்பா, அம்மா எதிர்பார்த்தது போல் இருந்தார்களா என்று சிந்திக்க வேண்டும்; கால மாற்றத்தை உணர வேண்டும். வாழ்க்கையில் அடிப்படையான சில நல்ல குணங்களை ஒருவன் பெற்றிருக்க வேண்டும். அதை அவர்களுக்கு உணர்த்துங்கள். சிலசமயம் குடும்பத்தில் ஜனநாயக முறை எடுபடாது. நேரடி புத்திமதி ஓரளவுக்குத்தான் உதவும். ஒருசமயம் பாட்டி-தாத்தா சொல்படி பேரன் - பேத்திகள் கேட்கக் கூடும். கூட்டுக் குடும்ப தத்துவம் இன்றைய சூழலில் உடைபட்டுக் கொண்டிருப்பது டீன்ஏஜர்களுக்கு பெரிய இழப்பு. பெண்களுக்கு அளவுக்கு மீறி சுதந்தரம் கொடுப்பது அசட்டுத் துணிச்சலுக்கு வழி வகுக்கும். அவர்களிடம் எச்சரிக்கை தேவை. வெறும் மார்க்குகளை அள்ளிக் குவிப்பதால் மட்டுமே வெற்றிகரமான வாழ்க்கை அமையாது என்பதையும் பெற்றோர்கள் உணர வேண்டும். இளைஞர்கள் நிறைய உழைக்கணும். அனுசரித்து நடக்க வேண்டும். இந்த அனுசரித்தல் என்பது ஸ்போர்ட்ஸில் ஈடுபடுவது மூலம்தான் வரும். சின்னச் சின்ன விஷயங்களில் விட்டுக் கொடுத்து, முக்கியமான விஷயங்களில் கவனமாக இருங்கள். பெற்றோர் டீன்ஏஜர்கள் உறவு சுமுகமாக இருக்க நான் சொன்னவை எல்லாம் அடிப்படையான விஷயங்கள். நடக்கும் சம்பவங்கள், பிரச்னைகள் ஆகியவற்றை வைத்து டீன் ஏஜர்களைச் சமாளிக்கும் யுக்திகளை அவ்வப்போது வகுக்க வேண்டும். இதற்காக மனநல நிபுணர்களை நாடவும் தயங்கக் கூடாது'' என்கிறார் சுரேஷ்.

சவாலே, சமாளி!

- ஸ்ரீநிவாசன்

அட்டை, படங்கள்: ராஜன்

சிவகாமியின் சபதம்

முன்கதைச் சுருக்கம்

இன்றைக்கு ஆயிரத்து முந்நூற்றிருபது ஆண்டுகளுக்கு முன்னால் கல்வியிற் சிறந்த காஞ்சி மாநகரில் தர்ம மகாராஜாதி ராஜ மகேந்திர பல்லவ சக்கரவர்த்தி செங்கோல் செலுத்தி வந்தார். அவருடைய சாம்ராஜ்யம் தெற்கே பாண்டிய நாட்டு எல்லையிலிருந்து வடக்கே கோதாவரி நதிக்கரை வரையில் பரவியிருந்தது.

கீழைச் சோழ நாட்டிலுள்ள திருச்செங்காட்டாங்குடி என்னும் கிராமத்திலிருந்து பரஞ்சோதி என்னும் இளைஞன் காஞ்சியில் திருநாவுக்கரசர் மடத்தில் சேர்ந்து தமிழ்க் கல்வி கற்பதற்காக வந்தான். வழியிலே சந்தித்த நாகநந்தி என்னும் புத்த சந்நியாசியுடன் அவன் ஒரு நாள் இருட்டிய பின்னர் காஞ்சிக் கோட்டைக்குள் பிரவேசித்தான். அதே தினத்தில், சளுக்க மன்னனாகிய புலிகேசி பல்லவ சாம்ராஜ்யத்தின் மேல் படையெடுத்திருக்கும் செய்தி வந்ததன் காரணமாக, ஆயனச் சிற்பியின் பெண் சிவகாமியின் நடன அரங்கேற்றம் நடுவில் தடைப்பட்டது.

தறிகெட்டு ஓடி வந்த மத யானையின் மேல் வேலை எறிந்து ஆயனரையும் சிவகாமியையும் பரஞ்சோதி தப்புவித்துவிட்டு, தான் தப்புவதற்காக ஓடுகிறான். அவனை ஒற்றன் என்று சந்தேகித்துக் காவலர்கள் சிறையில் அடைக்கிறார்கள். அன்றிரவே நாகநந்தி அவனைச் சிறையிலிருந்து தப்புவித்து இரகசிய வழியின் மூலம் கோட்டைக்கு வெளியே அழைத்துச் செல்கிறார்.

திருநாவுக்கரசருக்கும் ஆயனருக்கும் பரஞ்சோதி ஓலை கொண்டு வந்திருந்தான். திருநாவுக்கரசர் காஞ்சியில் இல்லை என்று அறிந்து, அவன் புத்த பிக்ஷுவுடன் ஆயனர் வீடு செல்கிறான்.

ஆயிரம் வருஷம் ஆனாலும் அழியாத அஜந்தா வர்ணச் சேர்க்கை இரகசியத்தை அறிந்து வருவதற்காகப் பரஞ்சோதியைப்

அமரர் கல்கி

கிருஷ்ணை நதிக்கரையிலுள்ள நாகார்ஜுன மலைக்கு ஆயனரும் நாகநந்தியும் அனுப்புகிறார்கள்.

மகேந்திர சக்கரவர்த்தி, சிவகாமியிடம் காதல் கொண்ட குமார சக்கரவர்த்தி நரசிம்ம வர்மரைக் காஞ்சிக் கோட்டையை விட்டு வெளியில் போகக் கூடாதென்று திட்டம் செய்துவிட்டு, வடக்கே போர்க்களம் செல்கிறார்.

காஞ்சியில் திருநாவுக்கரசர் மடத்துக்கு ஒரு நாள் ஆயனரும் சிவகாமியும் வருகிறார்கள். நாவுக்கரசரின் திருப்பதிகங்களைச் சிவகாமி அபிநயம் பிடித்து உணர்ச்சி மிகுதியினால் மூர்ச்சையடைகிறாள்.

அச்சமயம் அங்கிருந்த நரசிம்ம வர்மரின் நடவடிக்கைகளிலிருந்து அவர் சிவகாமியிடம் கொண்டிருந்த காதலை அவருடைய ரத சாரதி கண்ணபிரான் தெரிந்து கொள்கிறான். அதைப் பற்றி அவன் தன் மனைவி கமலியிடம் அன்றிரவு பேசிக்கொண்டிருந்தைச் சிவகாமி ஒட்டுக் கேட்க நேருகிறது.

ஓலையுடன் சென்ற பரஞ்சோதிக்கு வழியில் வஜ்ரபாகு என்னும் வீரன் பழக்கமாகிறான். மகேந்திர மண்டபத்தில் அவர்கள் இரவு தூங்கியபோது பரஞ்சோதியின் ஓலை மாற்றப்படுகிறது. மறுநாள் அவனைப் புலிகேசியின் ஆட்கள் வாதாபி சைன்யத்தின் பாசறைக்குப் பிடித்துச் செல்கிறார்கள். ஓலையின் கருத்து விளங்காமல் புலிகேசி பரஞ்சோதியைக் காவலுடன் ஸ்ரீ பர்வதத்துக்கு அனுப்புகிறான்.

அன்றிரவு, மலைப் பாதையில் உள்ள பாழடைந்த வீட்டில் வீரர்களும் பரஞ்சோதியும் தங்குகிறார்கள். அவ்வீட்டு வாசலில் ஜபம் செய்து கொண்டிருந்த கிழவர் ஒருவர், நள்ளிரவில் பரஞ்சோதியை இரகசியமாக எழுப்புகிறார்.

நாற்பத்து நான்காம் அத்தியாயம்

மாயக் கிழவன்

கிழவனுடைய கையில் வேல் ஒன்று இருப்பதையும், அதைப் பெற்றுக் கொண்டு தன்னுடன் கிளம்பி வரும்படி கிழவன் சமிக்ஞை செய்வதையும், பலகணி வழியாக வந்த நிலவின் மங்கிய ஒளியில் பரஞ்சோதி உற்றுப் பார்த்துத் தெரிந்து கொண்டான். பரஞ்சோதி சிறிது தயங்கிய போது, கிழவன் அவனுடைய ஒரு கையைத் தன்னுடைய இடது கையினால் அழுத்திப் பிடித்தான். உடனே, பரஞ்சோதிக்குப் பழைய ஞாபகம் ஒன்று வரவே, அந்த மாயக் கிழவன் கொடுத்த வேலை வாங்கிக் கொண்டு துள்ளி எழுந்தான்.

இருவரும் வீட்டின் கொல்லைப்புறம் வழியாக வெளியே வந்தார்கள். பரஞ்சோதி தன்னுடைய குதிரையும் இன்னொரு குதிரையும் அங்கே சேணம் பூட்டி ஆயத்தமாக நிற்பதைக் கண்டான். இருவரும் குதிரைகள் மேல் பாய்ந்து ஏறிக் கொண்டார்கள்.

பரஞ்சோதி எதிர்பார்த்தது போல், கிழவனுடைய குதிரை உடனே பாய்ச்சலில் கிளம்பவில்லை. பரஞ்சோதிக்கு முதுகுப்புறத்தைக் காட்டிய வண்ணம் அவன் ஏதோ செய்து கொண்டிருந்தான். எனவே, பரஞ்சோதியும் தன்னுடைய குதிரையை இழுத்துப் பிடிக்க வேண்டியதாயிற்று.

தாமதம் செய்து கொண்டிருந்த கிழவன் நடுவில், "தம்பி! என்னை யார் என்று தெரிகிறதா?" என்று கேட்டான்.

"தாடியைப் பார்த்து முதலில் ஏமாந்துதான் போனேன். கையைப் பிடித்து அழுத்தியதுந்தான் தெரிந்தது. பிசாசுக்குப் பயப்படாத சூரர் வஜ்ரபாஹு தாங்கள் தானே?" என்றான் பரஞ்சோதி.

உரத்த சப்தத்துடன் சிரித்துக்கொண்டு கிழவன் திரும்பியபோது அவன் முகத்திலிருந்த நரைத்த தாடியைக் காணவில்லை. தாடி நீங்கிய முகம் வீரன் வஜ்ர

பாஹுவின் முகமாகக் காட்சியளித்தது.

"யோசித்துச் சொல்லு, அப்பனே! என்னோடு வருவதற்கு உனக்குச் சம்மதமா?" என்று வஜ்ரபாஹு கேட்க, பரஞ்சோதி, "எனக்கு வரச் சம்மதந்தான். உங்களுக்குத் தான் இங்கிருந்து போகும் உத்தேசம் இல்லை போலிருக்கிறது!" என்றான்.

"ஏன் அப்படிச் சொல்லுகிறாய்?"

"பின்னே, இப்படிச் சப்தம் போட்டுப் பேசுகிறீர்களே, அவர்கள் விழித்துக் கொள்ள மாட்டார்களா?"

"அவர்களை எழுப்புவதற்காகவேதான் இரைந்து பேசுகிறேன். தூங்குகிறவர்களை ஏமாற்றிவிட்டு ஓடித் தப்பித்துக் கொண்டான் என்ற அவப் பெயர் அச்சுத விக்கிராந்தனுடைய வம்சத்தில் உதித்த வீரன் வஜ்ரபாஹுவுக்கு வரப்படுமா?" என்று கூறி, எதையோ நினைத்துக் கொண்டவன் போல் இடி இடியென்று சிரித்தான்.

இதற்குள் வீட்டு வாசலில் காவலிருந்த வீரன் குதிரைகளின் காலடிச் சப்தத்தையும், பேச்சுக் குரலையும் கேட்டு வீட்டைச் சுற்றிக் கொல்லைப்புறம் வந்து பார்த்தான். இரண்டு பேர், குதிரை மேலேறிக் கிளம்பிக் கொண்டிருப்பதை அவன் கண்டு, "ஓ!" என்ற கூச்சலுடன் வீட்டுக்குள் ஓடினான். உடனே, அந்த வீட்டுக்குள் வீரர்கள் ஒருவரையொருவர் எழுப்பும் சப்தமும், "என்ன? என்ன?" என்று கேட்கும் சப்தமும், "மோசம்!" "தப்பி ஓடுகிறார்கள்" என்ற கூக்குரலும் ஒரே குழப்பமாக இருந்



தன.

வஜ்ரபாஹுவும் பரஞ்சோதியும் ஏறியிருந்த குதிரைகள் முதல் நாள் வந்த பாதையில் திரும்பிச் செல்லத் தொடங்கின. ஆனால், வஜ்ரபாஹு குதிரையை வேண்டுமென்றே இழுத்துப் பிடித்து அதன் வேகத்தைக் குறைத்ததுடன் ஆங்காங்கு நின்று நின்று சென்றான். பரஞ்சோதி இந்தத் தாமதத்தைப் பற்றிக் கேட்ட போது, 'சளுக்கர்கள் நம்மை வந்து பிடிப்பதற்கு அவகாசம் கொடுக்க வேண்டாமா? அவர்கள் வழி தப்பி வேறு எங்கேயாவது தொலைந்து போய்விட்டால்...? என்றான்.

"போய் விட்டால் என்ன?" என்று பரஞ்சோதி கேட்டான்.

"இவ்விடத்துக்குக் கொஞ்ச தூரத்தில் ஒரு மலைக் கணவாய் இருக்கிறதல்லவா? அந்தக் கணவாயில் துர்க்காதேவி கோயில் ஒன்று இருக்கிறது. நேற்று வரும்போது நீ கவனித்தாயா?"

"இல்லை!"

"நீ எங்கே கவனிக்கப் போகிறாய்? உன்னுடைய கவனமெல்லாம் ஒருவேளை திருவெண்காட்டுக் கிராமத்தில் இருந்திருக்கும்..."

"என்ன சொன்னீர்கள்?"

"அந்தத் துர்க்கையம்மன் கோயில் வழியாக நான் நேற்றைக்கு வந்தபோது, இன்று சூரியோதய சமயத்தில் அம்மனுக்கு ஒன்பது உயிர்களைப் பலி கொடுப்பதாக வேண்டிக் கொண்டு வந்திருக்கிறேன். இவர்கள் வேறு வழியில் போய் விட்டால், என்னுடைய வேண்டுதலை நிறைவேற்ற முடியாதல்லவா?"

ஆனால், கிழவனின் மேற்கூறிய வார்த்தைகள் பரஞ்சோதியின் செவியில் விழுந்தனவாயினும், அவன் மனத்தில் பதியவில்லை.

பெரியதொரு வியப்பு அவனுடைய உள்ளத்தில் குடிகொண்டிருந்தது. திருச்செங்காட்டாங்குடியிலிருந்து அவன் கிளம்பியதிலிருந்து, எத்தனை எத்தனையோ தூரம் பிரயாணம் செய்திருக்கிறான்; எவ்வளவோ அதிசய சம்பவங்களைப் பார்த்திருக்கிறான். இவ்வளவிலும் இடையிடையே அவனுடைய மனமானது திருவெண்காட்டுக்குப் போய் வந்து கொண்டிருந்தது. ஆனால் அந்த விஷயம் இந்த வேஷதாரி வஜ்ரபாஹுவுக்கு எப்படித் தெரிந்தது என்று நினைத்து, பரஞ்சோதி ஆச்சரியக் கடலில் மூழ்கினான்.

பலபலவென்று பொழுது விடியும் தருணத்தில் வஜ்ரபாஹுவும் பரஞ்சோதியும் ஒரு மலைக் கணவாயை அடைந்தார்கள். அவர்கள் இதுகாறும் வந்த பாதையானது அங்கே குறுகி இருபுறமும் செங்குத்தாக, ஓங்கி வளர்ந்த பாறைச் சுவர்களின் வழியாகச் சென்றது. கணவாயைத் தாண்டியதும், ஒரு பக்கம் மட்டும் பாறைச்சுவர் உயர்ந்து, இன்னொரு பக்கம் அதல பாதாளமான பள்ளத்தாக்காகத் தென்பட்டது.

இந்த இடத்துக்கு வந்ததும் வஜ்ரபாஹு தன் குதிரையை நிறுத்தினான். பரஞ்சோதியையும் நிறுத்தும்படிச் செய்தான்.

காலை நேரத்தில் குளிர்ந்த இளங்காற்று மலைக்கணவாயின் வழியாக ஜிலுஜிலுவென்று வந்தது. பட்சிகளின் மனோகரமான குரல் ஒலிகளுடன் தூரத்திலே குதிரைகள் வரும் காலடிச் சப்தம் டக், டக், டக், டக் என்று கேட்டது.

"தம்பி! உன்னை மறுபடியும் கேட்கிறேன்; அந்தச் சளுக்க வீரர்கள் வருவதற்குள்ளே தீர்மானமாகச் சொல். உனக்கு என்னோடு வருவதற்கு இஷ்டமா?" என்று வஜ்ரபாஹு கேட்டான்.

"உங்களோடுதான் வந்து விட்டேனே? இனிமேல் திரும்பிப் போக முடியுமா?"

"உனக்கு இஷ்டமில்லாவிட்டால் இப்போது கூட நீ திரும்பிப் போய் அவர்களுடன் சேர்ந்து கொள்ளலாம்."

"சேர்ந்து கொண்டு...?"

"அவர்கள் போகும் இடத்துக்கு நீயும் போகலாம்."

"அவர்கள் எங்கே போகிறார்கள்?"

"நாகார்ஜுன மலைக்குப் போவதாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். உண்மையில் அவர்கள் போகப் போவது யமலோகத்துக்கு!"

"அங்கே அவர்களை அனுப்பப் போவது யார்!"

"உனக்கு இஷ்டமிருந்தால் நீயும் நானுமாக; இல்லாவிட்டால் நான் தனியாக."

பரஞ்சோதி சிறிது யோசித்து விட்டு,

"தாங்கள் எங்கே போகிறீர்கள்?" என்று கேட்டான்.

"பல்லவ சைனியத்தின் பாசறைக்கு!"

"ஆஹா! நான் நினைத்தபடிதான்!" என்றான் பரஞ்சோதி.

"உனக்கு எப்படித் தெரிந்தது?"

"நேற்றெல்லாம் யோசனை செய்ததில் தெரிந்தது!"

"இன்னும் என்ன தெரிந்தது?"

"தாங்கள் காஞ்சிச் சக்கரவர்த்தியின் ஒற்றர் என்றும் தெரிந்தது!"

"தம்பி! உன்னை என்னவோ என்று நினைத்தேன். வெகு புத்திசாலியாக இருக்கிறாயே?"

"ஐயா! நான் தங்களுடன் வந்தால் பல்லவ சைனியத்தில் என்னைச் சேர்த்துக் கொள்வார்களா?" என்று கேட்டான் பரஞ்சோதி.

"கட்டாயம் சேர்த்துக் கொள்வார்கள். கரும்பு தின்னக் கூலியா? உன்னைப் போன்ற வீரனைப் பெறப் பல்லவ சைனியம் கொடுத்து வைத்திருக்க வேண்டுமே?" என்றான் வஜ்ரபாஹு.

பரஞ்சோதி இதற்கு மறுமொழி சொல்லவில்லை. சிறிது நேரமௌனத்துக்குப் பிறகு, "அப்பனே! என்ன யோசிக்கிறாய்?" என்று வஜ்ரபாஹு கேட்டான்.

"என்னிடமுள்ள ஓலையை என்ன செய்வது என்றுதான்!"

"அதோ தெரிகிற பள்ளத்தாக்கிலே ஓடுகிற தண்ணீரிலே போடு. அதனால் இனிமேல் பிரயோஜனம் ஒன்றுமில்லை!"

"நாகநந்தியும் ஆயனரும் எவ்வளவு ஏமாற்றமடைவார்கள்?"

"ஆம்; நாகநந்தி பெரிய ஏமாற்றந்தான் அடைவார்!" என்று கூறிவிட்டு, வஜ்ரபாஹு 'கலகல'வென்று சிரித்தான்.

"ஏன் சிரிக்கிறீர்கள்?"

"இப்படிப்பட்ட கும்பகர்ணனாகப் பார்த்து, அந்தப் புத்த பிக்ஷு ஓலையைக் கொடுத்தாரே என்றுதான்!"

"ஐயா! தயவுசெய்து என்னை மன்னியுங்கள். நான் இப்படியே நாகார்ஜுன மலைக்குப் போய் நாகநந்தியின் ஓலையைக் கொடுத்து விட்டுப் பின்னர் பல்லவ சைனியத்தின் பாசறைக்கு வருகிறேன்!"

"வீண் வேலை, அப்பனே! நாகநந்தி உன்னிடம் கொடுத்த ஓலை அக்கினிக்கு அர்ப்பணமாகி விட்டது!"

"என்ன சொன்னீர்கள்!"

"நாகநந்தியின் ஓலை தீயில் எரிந்து போய்விட்டது என்றேன்!"

"இதோ என்னிடம் இருக்கிறதே!"

"அது நான் எழுதி வைத்த ஓலை, தம்பி!"

"என்னுடைய சந்தேகம் சரிதான்" என்று பரஞ்சோதி கூறி ஓலைச் சுருளை எடுத்து வீசிப் பள்ளத்தாக்கில் எறிந்தான்.

"அன்றிரவு தீபத்தில் மயக்க மருந்து சேர்த்து என்னைத் தூங்க வைத்து விட்டுத் தானே ஓலையை எடுத்தீர்கள்?" என்று கேட்டான்.

"உன்னுடைய வேலின் முனையைப் போலவே உன் அறிவும் கூர்மையாகத்தான் இருக்கிறது!" என்றான் வஜ்ரபாஹு.

வஜ்ரபாஹுவை ஆச்சரியமும் பக்தியும் ததும்பிய கண்களினால் பரஞ்சோதி பார்த்து, "ஐயா! நாகநந்தி என்னிடம் அனுப்பிய ஓலையில் என்ன எழுதியிருந்தது?" என்று கேட்டான்.

"புலிகேசியைக் காஞ்சிமா நகருக்கு உடனே வந்து, தென்னாட்டின் ஏக சக்ராதிபதியாக முடிசூட்டிக் கொள்ளும்படி எழுதியிருந்தது!"

"அடடா! அப்படிப்பட்ட துரோகமான ஓலையையா நான் எடுத்துக் கொண்டு வந்தேன்? ஐயோ! என்ன மூடத்தனம்!" என்று புலம்பினான் பரஞ்சோதி.

"போனதைப் பற்றி அப்புறம் வருத்தப்படலாம். இதோ சளுக்க வீரர்கள் யமனுலகம் போக அதிவேகமாக வருகிறார்கள். நீ என்ன செய்யப் போகிறாய்?" என்று வஜ்ரபாஹு கேட்டான்.

"தங்கள் விருப்பம் எப்படியோ, அப்படி!"

"சரி, இந்தக் கணவாயின் இருபக்கமும் நாம் இருவரும் நிற்கலாம். முதலில் வருகிறவன் மார்பில் உன்னிடமுள்ள ஈட்டியைப் பிரயோகம் செய். அப்புறம் இந்த வாளை வைத்துக் கொண்டு உன்னால் முடிந்த வரையில் பார்!" என்று வஜ்ரபாஹு கூறி, தான் வைத்திருந்த இரண்டு வாள்களில் ஒன்றைக் கொடுத்தான்.

பரஞ்சோதி ஆர்வத்துடன் அந்த வாளை வாங்கிக் கொண்டு தன்னுடைய 'கன்னி'ப் போருக்கு ஆயத்தமாய் நின்றான்.

நாற்பத்து ஐந்தாம் அத்தியாயம்

மலைக் கணவாய்

சூரியன் உதயமாகி இரண்டு நாழிகைப் பொழுது ஆன போது, அந்த மலைக் கணவாய்ப் பிரதேசம் கோரமான ரணகளமாய்க் காட்சியளித்தது.

இளம் கதிரவனின் செங்கிரணங்கள் பாறையில் ஆங்காங்கு தோய்ந்திருந்த கரும் இரத்தத்தில் படிந்து ரணகளத்தின் கோரத்தை மிகுதிப்படுத்திக் காட்டின.

கால் கை வெட்டுண்டும், தலை பிளந்தும் தேகத்தில் பல இடங்களில் படுகாயம் பட்டும் உயிரிழந்த ஒன்பது வீரர்களின் பிரேதங்கள் அந்தக் கணவாய்ப் பாதையிலே கிடந்தன.

அப்படிக் கிடந்த உடல்களிடையே வஜ்ரபாஹு சஞ்சரித்துக் கொண்டிருந்தான். அந்த உடல்களை அவன் புரட்டிப் பார்த்ததும், அவற்றின் உடைகளைப் பரிசோதித்ததும் எதையோ பரபரப்புடன் தேடிக்கொண்டிருந்ததாகத் தோன்றியது.

சற்றுத் தூரத்தில் ஒரு பாறையின் மீது பரஞ்சோதி உட்கார்ந்திருந்தான். அவன் முகத்தில் மிகுந்த சோர்வும் அருவருப்பும் குடிகொண்டிருந்தன. கையிலே வாளைப் பிடித்து ஊன்றிக் கொண்டிருந்தான். பக்கத்திலே இரத்தம் தோய்ந்த வேல் கிடந்தது.

சற்று முன்னால் நிகழ்ந்த கொடுமையான ஒரு சம்பவம் பரஞ்சோதியின் மனக்கண் முன்னால் நின்றது. சளுக்க வீரர்களில் மூன்று பேரைப் பரஞ்சோதியும் ஐந்து பேரை வஜ்ரபாஹுவும் யமனுலகுக்கு அனுப்பினார்கள். அவர்களுக்குச் சற்றுத் தூரத்திலேயே நின்ற ஒன்பதாவது வீரன் சண்டையிடாமல் குதிரையைத் திருப்பி விட்டுக் கொண்டு ஓட பார்த்தான். அப்போது வஜ்ரபாஹு வேலை வீசி எறிய, அது ஓடுகிறவன் முதுகில் போய்ப் பாய்ந்தது. அவனும் செத்து விழுந்தான். அதுவரையில் வஜ்ரபாஹுவின் அசகாய சூரத்தனத்தைப் பார்த்துப் பார்த்து வியந்து கொண்டிருந்த பரஞ்சோதிக்கு இதைப் பார்த்ததும் பெரும் வெறுப்பு உண்டாயிற்று. ''ஓடுகிறவன் முதுகில் வேல் எறிவதும் ஒரு வீரமா?'' என்று வஜ்ரபாஹுவை அவன் மனம் இகழத் தொடங்கியது.

திடீரென்று 'ஆ!' என்ற சப்தத்தைக் கேட்டுப் பரஞ்சோதி திரும்பிப் பார்த்தபோது, வஜ்ரபாஹு ஓர் ஓலையைக் கையில் வைத்துக் கொண்டு படிப்பதைக் கண்டான்.

பிறகு, வஜ்ரபாஹு விரைந்து வந்து பரஞ்சோதி உட்கார்ந்திருந்த பாறைக்குப் பக்கத்தில் நின்ற தன் குதிரை மீது ஏறிக் கொண்டான். பரஞ்சோதி இன்னும் எழுந்திராமல் உட்கார்ந்திருப்பதைக் கண்டு, "தம்பி! நீ வரப் போவதில்லையா?" என்று கேட்டான்.

பரஞ்சோதி ஆசாபங்கமும் அருவருப்பும் நிறைந்த கண்களினால் ஒருதடவை வஜ்ரபாஹுவைப் பார்த்துவிட்டு மறுபடியும் முன்போல் தலையைக் குனிந்து கொண்டான்.

வஜ்ரபாஹு குதிரையுடன் பரஞ்சோதியின் அருகில் வந்து, ''அப்பனே! கைதேர்ந்த வீரனைப் போல் நீ சண்டையிட்டாய். அதிலாகவத்துடன் போர் புரிந்து மூன்று ராட்சஸச் சளுக்கர்களைக் கொன்றாய். உன்னைப் பல்லவ சைனியத்தின் குதிரைப் படைத் தலைவனாக ஆக்க வேண்டும் என்று பல்லவ சேனாதிபதியிடம் சொல்ல எண்ணியிருக்கிறேன். இத்தகைய சோர்வும் சோகமும் உன்னை இப்போது பிடித்ததன் காரணம் என்ன?'' என்று கேட்டான்.

பரஞ்சோதி மறுமொழி சொல்லவும் இல்லை; தலை நிமிர்ந்து பார்க்கவும் இல்லை. வஜ்ரபாஹுவின் முகத்தையே

பார்க்க விரும்பாதவன் போல் கிழக்கே மலைக்கு மேலே சூரியன் தகதகவென்று ஒளி வீசிச் சுழன்று கொண்டிருந்த திசையை நோக்கினான்.

வஜ்ரபாஹு குதிரையை இன்னும் கொஞ்சம் பரஞ்சோதியின் அருகில் செலுத்திக்கொண்டு கூறினான்:

"தம்பி! உன்னை இந்த நிலையில் பார்த்தால் எனக்கு யாருடைய ஞாபகம் வருகிறது





"யுத்தம் எப்படி நடந்தது?"

"லட்சணந்தான்; இங்கே நான் உட்கார்ந்து உனக்கு பாரத யுத்தக் கதை சொல்லிக்கொண்டிருந்தால், இப்போது நடக்க வேண்டிய யுத்தம் என்ன ஆகிறது?"



தெரியுமா? குருக்ஷேத்திரப் போர்க்களத்தில் இருதரப்பு சைனியங்களும் வந்து யுத்தத்துக்கு ஆயத்தமாக நின்றன. யுத்தம் ஆரம்பிக்க வேண்டிய சமயத்தில் அர்ச்சுனன் வில்லைத் தேர்த்தட்டில் போட்டுவிட்டு, 'எனக்கு ராஜ்யமும் வேண்டாம், ஒன்றும் வேண்டாம். என்னால் யுத்தம் செய்ய முடியாது!' என்று சோகமடைந்து விழுந்தான். உன்னை இப்போது பார்த்தால் அந்த அர்ச்சுனனைப் போலவே இருக்கிறது."

அர்ச்சுனன் என்ற பெயர் காதில் விழுந்தவுடனேயே பரஞ்சோதி வஜ்ரபாஹுவை நோக்கினான். அவனுடைய கண்களிலே சோர்வு நீங்கி, ஒரு புதிய ஒளி சுடர் விட்டது. வஜ்ரபாஹு நிறுத்தியதும், "அப்புறம் என்ன நடந்தது?" என்று ஆர்வத்துடன் கேட்டான்.

"நல்லவேளையாக அர்ச்சுனனுக்குக் கிருஷ்ண பகவான் ரத சாரதியாக அமைந்திருந்தார். பரமாத்மா அர்ச்சுனனைப் பார்த்து, 'அர்ச்சுனா! எழுந்திரு! நீ ஆண்பிள்ளை! க்ஷத்திரியன்! யுத்தம் செய்வது உன் தர்மம். கையிலே வில்லை எடு!" என்றார். இந்த மாதிரி இன்னும் பதினெட்டு அத்தியாயம் உபதேசம் செய்தார்! அதனால் அர்ச்சுனனுடைய சோர்வு நீங்கி மறுபடியும் ஊக்கம் பிறந்தது..' என்று சொல்லி வஜ்ரபாஹு நிறுத்தினான்.

"பிறகு?" என்று பரஞ்சோதி கேட்டான்.

"பிறகு என்ன! அர்ச்சுனன் காண்டீபத்தைக் கையில் எடுத்து நாணேற்றி டங்காரம் செய்தான். கிருஷ்ண பகவான் பாஞ்சஜன்யம் என்கிற சங்கை எடுத்து 'பூம் பூம்' என்று ஊதினார். உடனே மகா பாரத யுத்தம் ஆரம்பமாயிற்று."

"யுத்தம் எப்படி நடந்தது?" என்றான் பரஞ்சோதி.

"லட்சணந்தான்; இங்கே நான் உட்கார்ந்து உனக்கு பாரத யுத்தக் கதை சொல்லிக்கொண்டிருந்தால், இப்போது நடக்க வேண்டிய யுத்தம் என்ன ஆகிறது?" என்று சொல்லிவிட்டு வஜ்ரபாஹு தன்னுடைய குதிரையைத் திருப்பிக் கொண்டு அந்த மலைப்பாதையில் மேலே போகத் தொடங்கினான்.

பரஞ்சோதி துள்ளி எழுந்து வேலையும் வாளையும் எடுத்துக்கொண்டு தன் குதிரையின் மீது தாவி ஏறினான். விரைவில் அவன் வஜ்ரபாஹுவின் அருகில் போய்ச் சேர்ந்தான்.

வஜ்ரபாஹு திரும்பிப் பார்த்து, "தம்பி! வந்துவிட்டாயா? உன் முகத்தைப் பார்த்தால், என்னோடு சண்டை பிடிக்க வந்தவன் மாதிரி தோன்றுகிறது; அப்படித்தானோ?" என்றான்.

"பயப்படாதீர்கள். அப்படி நான் உங்களோடு சண்டை செய்ய வந்திருந்தாலும் பின்னாலிருந்து முதுகில் குத்திவிட மாட்டேன்! முன்னால் வந்துதான் சண்டையிடுவேன்! போர்க்களத்திலிருந்து ஓடும் எதிரியின் முதுகில் வேலை எறிந்து கொல்லும் தைரியம் எனக்குக் கிடையாது!" என்று பரஞ்சோதி கசப்பான குரலில் சொன்னான்.

வஜ்ரபாஹு சற்று மௌனமாயிருந்துவிட்டு, "அப்பனே! ஓடித் தப்ப முயன்றவனை நான் வேல் எறிந்து கொன்றிராவிட்டால் என்ன நேரும் தெரியுமா?" என்றான்.

"என்னதான் நேர்ந்துவிடும்?"

"நாம் பார்த்த மாபெரும் வாதாபி சைனியம் ஒரு மாதத்திற்குள்ளாகக் காஞ்சி நகரின் வாசலுக்கு வந்து சேர்ந்துவிடும். வைஜயந்திப் பட்டணத்துக்கு என்ன கதி நேர்ந்ததென்று சொன்னேன் அல்லவா?"

"வைஜயந்தியின் கதி காஞ்சிக்கு நேருமா? பல்லவ சைனியம் எங்கே போயிற்று? மகேந்திர சக்கரவர்த்தி எங்கே போனார்?"

"அதுதானே மர்மமாயிருக்கிறது, தம்பி! காஞ்சியிலிருந்து கிளம்பிய மகேந்திர பல்லவர் எங்கே போனார் என்பதுதான் யாருக்கும் தெரியவில்லை! அவர் இன்னும் பல்லவ சைனியத்தின் பாசறைக்கு வந்து சேரவில்லையாம்!" என்றான் வஜ்ரபாஹு.

பரஞ்சோதி சற்றுச் சும்மா இருந்துவிட்டு, "ஐயா! அப்புறம் அர்ச்சுனன் என்ன செய்தான்? சொல்லுங்கள்!" என்று கேட்டான்.

(தொடரும்)

பரபரப்பான விற்பனையில்....

தீபாவளி சிறப்பிதழில் 20 ரூபாய் மதிப்புள்ள அணையாவிளக்கு எனும் நந்தா விளக்கு அன்பளிப்பாக வழங்கினோம். பித்தளையில் வடிவமைக்கப்பட்ட நேர்த்தியான அந்த விளக்கின் வடிவம் மற்றும் அதன் தெய்வீக பலன் காரணமாக மீண்டும் அந்த விளக்கை 'ஓம்' இதழோடு வழங்க வேண்டும் என்று ஏராளமான வாசக அன்பர்கள் கேட்டுக்கொண்டதால், ஒளிதேவனாம் சூரியனைக் கொண்டாடும் பொங்கல் திருநாள் சிறப்பிதழோடு

ஆயுள் பலம் தரும்

நந்தா விளக்கு

(20 ரூபாய் மதிப்புள்ளது)

காரிய சித்தி தரும்

ட்ராகன் ஸ்டிக்கர்

செல்வம் தரும்

சீன லட்சுமி

வண்ணப் படம்

ஏராளமான ஆலய- ஆன்மிக சிறப்புக் கட்டுரைகள்- அதிக பக்கங்கள்!

ஓம்

சரவணபவ

05-01-2002
பொங்கல்
சிறப்பிதழில்....



விவரங்களுக்கு: சாருப்பிரபா பப்ளிகேஷன்ஸ், 105, ஜானி ஜான் கான் சாலை. இராயப்பேட்டை, சென்னை-600 014.

சாங்கரியின் நாட்குறிப்பு



நிரப்பவேபட்டிராத டைரியின் கடைசி பக்கங்களில் ஒன்றை எடுத்து எழுதத் துவங்குவதுகூட வேடிக்கையாகத் தானிருக்கிறது. என்றாலும் வேறொரு கோணத்தில் ஒரு வருடத்து மனநிலையைப் பதிவு செய்வது மகிழ்ச்சியாயிருக்கிறது. மகிழ்ச்சியான விஷயங்களைக் குறித்து எழுதுவது மட்டுமே மகிழ்ச்சியைத் தரக்கூடியதாக இருக்கும். மகிழ்ச்சியற்ற, அதைவிடவும் சோர்வை, வலியைத் தரக்கூடிய விஷயங்களைப் பற்றி எழுதுவது மகிழ்ச்சி என்று ஒரு வார்த்தையில் ஒட்டு மொத்தமாக சொல்லிவிட இயலாதுதான்.

இருள், புலப்படாத வாழ்க்கை போல ஜன்னலுக்கு வெளியே விரிந்து கிடக்கிறது. இன்று தெருவிளக்குகள் இல்லை. தெரு சரியாக புலப்படவில்லை எனினும் சில வீடுகளின் சுவர்கள் வழி வழிந்த வெளிச்சம் தெருவின் நீள அகலத்தை புலப்பட வைத்தது. தெரு விளக்கு

இன்று வேண்டாம் என்று கணபதி சுந்தரத்தின் ஆட்கள் சொல்லியிருக்கக் கூடும். இருட்டுக் குகைகளுள் அவர்களது குற்றங்கள் மறைக்கப்பட்டுவிடும் என்கிற தீர்மானம் அவர்களுக்கிருக்கிறது. இருட்டில் சாராயம் விற்பதற்கும் குடிப்பதற்கும் ஒரு பெண்ணை வசியப்படுத்துவதற்கும் தோதாக அவர்கள் வாழ்க்கையை வகுத்திருந்தார்கள்.


"வேணும்னா சங்கரிக்கும் ஒரு தம்ளர் கொடேன்." என்று சின்னமுத்து மாரியப்பனிடம் சொல்லிச் சிரித்தான். "குட்டி கள்ளச் சாராயத்தை எதிர்த்து கோஷம் போடுதுலே. கூட

தமயந்தி

பாஸ்கரன் வேற கத்துதான். கத்த சக்தி வேணுமில்லே? ஒரு 'பெக்' ஊத்து" என்றான். மறுபடி. ரேஷன்கடையில் நின்றிருந்தவர்கள் ஒருமுறை திரும்பிப் பார்த்து பிறகு வானத்தைப் பார்த்தார்கள். சிலர் வரிசையிலிருந்து நழுவினார்கள். கோமதி சுந்தரி என்னைப் பார்ப்பதை தவிர்த்தான்.

போனவாரம் அவனிடம் மாரியப்பன் "சங்கரியோட கத்துறத நிறுத்து. போராட்டத்துக்கு ஏன் போறே? மானங்கெட்டவ. தெருல நின்னு

மினி தொடர் ஆரம்பம்



கத்துதா. நீ குடும்பப் பொம்பள இல்லே? மனசுல ஆவுதா? அவ சிறுக்கி, பேப்பர்ல நியூஸ் வரணும்னா என்னமும் செய்வா. கெட்டிக்காரி. பாஸ்கரன் பின்னால போவுதாம்ல, அவன் பொண்டாட்டி புள்ள பின்னால போவுதானா?" என்றதைப் பார்க்கும் போதெல்லாம் கண்கள் கலங்க சொல்லியிருந்தாள். எதற்காக கண்கள் கலங்க வேண்டும் என்று புரியவில்லை. இனிமேல் போராட்டங்களுக்கு கோமதிவள்ளி வருவாளா என்று இப்போதுகூட சந்தேகமாக உள்ளது.

மாரியப்பன் போன ஆகஸ்டில் ஒருமுறை வயல் விஷயமாக அப்பாவைப் பார்க்க வந்திருந்தபோது காப்பி கொடுத்தது நான்தான். "சார் மகளா?" என்று பவ்யமாய் வணங்கினான். "கட்சியில இருக்காங்களா சார்?" என்றான். "சேச்சே" என்றார் அப்பா. "அந்தக் கழிசடை நம்மோட போட்டும்." என்றார் தொடர்ந்து. அப்பாவுக்கு அரசியலில் முப்பது வருஷங்களாய் இருந்து ஏற்பட்ட சலிப்பு அன்றும் அதற்கு பின்பும் வெளிப்படையாய்த் தெரிந்தது. மக்கள் மனசுல வச்சு பண்ணாத அரசியல் பைசாவுக்குப் பிரயோஜனமில்லை" என்பார். அவரிருக்கும் கட்சியிலுள்ள முக்கியஸ்தருக்கு, சாராயம் காய்ச்சுவதில் தொடர்பு உண்டு என்றான பிறகு "ம்... என்ன செய்ய?" என்றார்.



முதல் நாள் ஃபோனில் வந்த ஆர்ப்பாட்டந்தான். பிறகு அன்றிரவு அப்பாவிடம் ஃபோன் செய்து, "எதுக்கு சார் வேண்டாத வேலை சங்கரிக்கு? எங்க நான் மோசடி இல்லை. லஞ்சம் இல்லை. கழுதை போவுது. சங்கரிக்கு எதுக்கு? எப்படிவளர்ந்த புள்ள?" என்றார். அன்றிரவு அப்பா தூங்கவில்லை என்றுதான் நினைக்கிறேன். போர்வை, இரவு இருட்டில் பக்கவாட்டிலும் நேராகவும் புரண்டு கொண்டிருந்தது.

விடியற் காலையிலேயே அரிசி மூட்டைகளை அடுக்கத் தொடங்கியிருந்தார். காலையிலேயே குளித்திருக்க வேண்டும். 'இப்பத் தான் எழுந்தியா சங்கரி?" என்றார். "ராத்திரி தூக்கமாச்சா?" என்றேன் நான். வெறுமனே நிமிர்ந்து பார்த்து சிரித்து, "ஸ்ரீதர பாண்டியன் சொன்னான்னு தூங்கலைனு நினைக்கறியா?" என்றார்.. நெல் மூட்டைகளின் மூடைவாடை மூக்கினுள் படர்ந்து இருமலெடுத்து. "அந்தப் பயல காலங்கார்த்தால குளிச்சிட்டுப் போய் 'பச்பச்'னு அடிச்சிடலாமானு தோணுச்சிது. எவ்ளோ கரிசனம் எங்குடும்பம் மேல, எம் மக மேல" என்றார்.

"அஹிம்சைவாதி" என்று சிரித்தேன். அவர் குற்றவுணர்வுடன் கண்களைத் தாழ்த்தி, "கட்சியிலயோ அமைப்பிலேயோ இருந்து தொலைச்சுட்டா சில சமயம் சிறைக் கைதியாட்டம் இருந்து தொலைக்க வேண்டியிருக்கு. என்ன செய்ய?" என்றார்.

பாட்டரி செல், வாழைப்பழத் தோலுடன் கொதித்த சாராயக் கலவையை முதன் முதலில் பாஸ்கரன்தான் காட்டினான். அன்று மாலையில் கல்யாணத்துக்காக விருந்து சாராயம் குடித்த இரண்டு மணி நேரத்தில் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்கள். பதினெட்டு பேருக்கு கண் பார்வை போயிருந்தது. பத்து பேர் இறந்தவர்களில் மூன்று பெண்களிருந்தனர். அவர்களின் போதையும் வலியும் நிறைந்த கண்களை போலீஸ்காரர் மூடியபோது ஓலமும் கூக்குரலும் நிறைந்த ஆஸ்பத்திரி வளாகம் முழுவதும் மரணவாடை நிரம்பிக்கிடப்பது போலத் தோன்றிற்று. சின்னசின்ன சிராதியின் வெளிச்சம் நிரம்பிய ஆஸ்பத்திரி உள்வளைவினுள்

பாஸ்கரனுடன் இறங்கியபோது, "ஸ்ரீதர பாண்டியன்தான் வடிக்கிறார், என்ன செய்ய?" என்றான்.

"நமக்குத் தெரிஞ்சதை போலீஸ்ல எழுதிக் கொடுப்போம்." என்றேன்.


"அது முடியுமா? உங்கப்பா என்ன நினைப்பார்?" என்றான் பாஸ்கரன். தீயில் வெந்த ஒரு பெண்ணை ஸ்ட்ரெச்சரில் வைத்து எடுத்துப் போனார்கள். ஒரு நிமிடம் நின்று அவர்கள் கடந்து போகும் வரை பார்த்தேன். தோல் சுருங்கி முழிக்கக் கூட திராணியற்றுக் கிடந்த அவள் மேல் ஏன் தீப்பற்றியது என்று தோன்றிற்று.

"கஷ்டமாயிருக்கு பாஸ்கரன். ரொம்ப ரொம்ப கோரமெல்லாம் இங்கதான் இருக்கு" என்றேன். கீழிறங்கியபோது வாசலில் நான்கைந்து அம்பாசிடர் கார்கள் நின்றிருந்தன. ஸ்ட்ரெச்சர் தள்ளும் பையன் இவரைப் பார்த்து, "அமைச்சர் வந்திருக்கார்" என்றான்.

"ஆமா ஒரு ஆளுக்கு ஏழு எட்டு கார்" என்றார் ஓபி வரிசையில் நின்றிருந்த பெண்.

பாஸ்கரன் வெளியே வந்து அங்கு நின்றிருந்த ஓர் ஆட்டோவை அழைத்தான். "அண்ணாநகர் போகணும்." என்றான். ஆட்டோக்காரன் மீட்டர் போட்டதை நான் ஆச்சரியமாகப் பார்த்தேன். "ஏறுங்க" என்றான் பாஸ்கரன். அண்ணாநகரின் இடுக்கான தெருக்களின் வழி கடந்து முன்பக்கம் ஓலைப்பிறை போடப்பட்டிருந்த ஒரு வீட்டின் முன் ஆட்டோவை நிறுத்தச் சொன்னான் பாஸ்கரன். ரூபாயைக் கொடுத்து விட்டுத் திரும்பும் முன் அந்த வீட்டினுள்ளிருந்து ஒரு பெண் வெளியே வந்து, "சீக்கிரம் வாங்க" என்றாள்.

வீட்டினுள் இருந்த பாதி இருளை ஒரு மெல்லிய பல்ப் விலக்க முயற்சி செய்து கொண்டிருந்தது. முதுகில் ரத்தத் தடங்களோடு ஒருவன் குப்புற படுத்திருந்தான். பாஸ்கரன் குனிந்து அவனருகில் அமர்ந்து, "ரமணி" என்றான். "எப்ப அடிச்சாங்க?" என்றான். அந்தப் பெண் கைகளைப் பிசைந்தபடி, "நைட்டே ஆச்சு. ஆஸ்பத்திரிக்குப் போவக் கூடாதுன்னாங்க. ஆசிட்ட ஸ்ரீதரப் பாண்டியன் தான் இவர ஊத்த சொல்லியிருக்கார். சாராயம் காய்ச்சி முடிச்ச நிலைல இவர்கூட ரோசனைப் பண்ணிருக்கார்" என்று சிரிப்பது போல்



"மாநகராட்சி கூட்ட முடிவில் மேயர் விக்கி விக்கி அழுதுட்டாராமே! ஏன்?"

"ஒரு சின்ன ரகளைகூட இல்லாமல் இன்றைய கூட்டம் முடிந்ததில் பயங்கரமா உணர்ச்சி வசப்பட்டுட்டார்."

- உ. ராஜாஜி

அழுதாள்.

"பாவிகளா.. எஞ்சிலை இழுத்து பின்மண்டைல குத்துனானுக, கடவுளே? எங்க போயி சொல்லுவேஞ்.." என்று முகத்தை உள்ளங்கையில் வைத்துத் தேம்பினாள். அவளை அப்படி அணைத்துக் கொள்ள வேண்டும் போலிருந்தது. அவள் கைகளை இறுகப் பிடித்துக் கொண்டேன். அதற்காக காத்திருந்தவள் போல் என்னை கட்டிக் கொண்டாள்.

"எங்கானாலும் சொல்வீங்களா?" என்றேன் கிசுகிசுப்பாய். அப்படி கேட்க நேர்வதே எனக்கு வெட்கமாக இருந்தது. சாட்சி என்கிற அரசாணையின் பொருட்டும் நீதியின் செக்ஷன்கள் நிமித்தமும் பல சமயங்களில் மறக்க நினைப்பவற்றை நினைவுப்படுத்த வேண்டியிருப்பது துரதிர்ஷ்டம். இந்த நாட்குறிப்பின் பதிவுக்காக கூட அதைத்தான் செய்ய வேண்டியுள்ளது. ஆனாலும் இந்த வருடம் முடிவினுள் என் கைகளையோ, கால்களையோ யாராவது முடமாக்கக் கூடும். எனக்கு நம்பிக்கை இல்லை. என்றாலும் போராடுவதை நிறுத்த முடியாது. ஒரு வேளை ஆசிட்கூட வீசுவார்கள் என்று பயந்த குரலில் தேன்மொழி சொன்னாள். போலீஸ் ஸ்டேஷனில் புகார் கொடுத்தவுடன் பாஸ்கரனிடம் அந்த சப்-இன்ஸ்பெக்டர், "மேடம் பெயரை எடுத்துடலாமா?" என்றார். பாஸ்கரன் என்னைக் குழப்பமாகப் பார்த்தான்.

"இருக்கட்டும் சார்" என்றேன் நான்.

(தொடரும்)





தொட்டில் குழந்தைகளின் - திகில் பின்னணி

இதய பலவீனம் உள்ளவர்கள் இந்த கட்டுரையை வாசிக்காமல் தவிர்க்கவும்.

அரசே உருவாக்கும் அனாதைகள்!

மக்கள் குறை கேட்கும் நாள். மாவட்ட ஆட்சியர் அலுவலகம் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது. மனம் முழுக்க நம்பிக்கையை நிரப்பி, கோரிக்கைகளை மனுக்களில் நிரப்பி வரிசையில் நகர்ந்து கொண்டிருந்தனர் மக்கள். மனுக்களைப் பெற்றுக் கொண்டு, ஒவ்வொருவரிடமும் தனித் தனியே கனிவாகப் பேசி அனுப்பிய வண்ணம் இருந்தார் சேலம் மாவட்ட ஆட்சியர். வரிசையில் வந்து கொண்டிருந்த, வளர்மதி, செல்வி என்ற இரு இளம் தாய்மார்கள் தங்கள் தருணத்திற்காக காத்திருந்தனர். அவர்களுக்கான வாய்ப்பும் நெருங்கிவிட்டது. இப்போது ஆட்சியர் மனுவை வாங்க, அவர்களை நோக்கி அனிச்சையாய் கை நீட்டுகிறார். ஆனால் அவரது கையில் அவர்கள் தந்தது மனுக்களை அல்ல. மழலைகள்! அதுவும் பிறந்து ஐந்து நாட்களே ஆகியிருந்த பெண் குழந்தைகள். "எங்களுக்கு வேண்டாம்! வளர்க்க வசதியில்லை" என்று நெஞ்சாரத் தூக்கிக் கொடுத்தார்கள் பால் மணம் மாறாப் பிஞ்சுகளை. அந்த கணத்தில் மாவட்ட ஆட்சியருக்கு மட்டுமல்ல. அங்கே கூடியிருந்த அத்தனை இதயங்களிலும் அதிர்ச்சி இடியாய்த்தான் இறங்கியது.

பெண் சிசுக் கொலையைத் தடுக்கும் விதமாக கடந்த 1992-ல், ஜெயலலிதா அரசு கொண்டு வந்த தொட்டில் குழந்தை திட்டத்தின் கீழ், குழந்தைகளைக் கொண்டு வந்து விடவே வெட்கப்பட்ட காலம் ஒன்று உண்டு. 'குந்தைகளைக் கொன்றாலும் கொல்லுவோம்; தொட்டிலில் விடமாட்டோம்' என்ற மனப்பான்மை நிலவியது. அதுவும் மறைந்து ஒளிந்து, இரவில் யாருக்கும் தெரியாமல் தொட்டில் மையத்தின் வாசலில், திருட்டுத்தனமாய்ப் போட்டு விட்டுப் போவார்கள். குழந்தைகளை பகிரங்கமாய் அரசிடம் ஒப்படைக்கும் மாற்றம் உருவாகியிருப்பதற்காக சந்தோஷப்படுவதா? இல்லை, கர்ப்பமாவதைத் தடுக்க வழிகள் பல இருந்தும், பெண் குழந்தைகள் வளர்க்க அரசு தயாராய் இருக்கும்போது கவலை ஏதுமின்றி கணக்கில்லாமல் பெற்றுக் கொள்ளலாம்; தொப்புள் கொடி காயுமுன்பே வசதியாக தொட்டிலில் வீசிவிட்டு வரலாம் என்ற ஆபத்தான புதிய கலாசாரத்துக்கு (?) தொட்டில் குழந்தை திட்டம் வழி திறந்து விட்டிருப்பதற்காக வேதனைப்படுவதா? அரசும், அரசு சாரா தொண்டு நிறுவனங்களும், கடந்த இருபது வருடங்களாக தீவிரமாக பணியாற்றியும் கூட சேலம், தர்மபுரி, நாமக்கல், மதுரை மாவட்டங்களில் பெண் சிசுக்கொலை எனும் வெட்கக்கேடு தமிழக வரைபடத்தில் கறையாகத் தொடர்வது ஏன்? தி.மு.க. ஆட்சியில் செயலிழந்து போன தொட்டில் குழந்தை திட்டத்தை அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்தபிறகு அதற்கு - புத்துயிர் தந்து அறிவிப்பு வெளியிட்ட அடுத்த நாள் முதல், பெண் குழந்தைகள் தொட்டிலைத் தேடி வரத் தொடங்கியதால், கடந்த மூன்று மாத காலத்தில் மட்டும் இப்படி அனாதைகளாக்கப்பட்ட பெண் குழந்தைகளின் எண்ணிக்கை ஐம்பத்து இரண்டு. இந்தக் கட்டுரையை நீங்கள் வாசிக்கிறபோது அது நூறைத் தொட்டிருக்கலாம்.


* சிவா


* மஞ்சுளா


* இராதாகிருஷ்ணன்


* அய்யனார்


* இராஜேந்திரன்


* சாந்தகுமாரி


* செல்வி


* வெட்டைமணி
* சரஸ்வதி

தொட்டில் குழந்தை திட்டம்

பெண் சிசுக் கொலைகளை ஓரளவு தடுத்து நிறுத்துகிறதா? இல்லை. ஆபத்தான விளைவுகளைத் தாலாட்டி வளர்க்கும் விஷப் பரீட்சையாகத் தொட்டில் திட்டம் மாறிவிட்டதா? சேலத்துக்கு விரைந்தோம்.

சேலத்தில் இறங்கியதுமே, கண்ணில்படும் ஆட்டோக்களின் பின்புறமுள்ள வசனம் நம்மைத் துணுக்குறச் செய்கிறது. 'சிசுக் கொலைக்கு கடும் தண்டனை உண்டு!' தகவல் தெரிவிக்கும் தொலைபேசி எண் 402000'

மனுநீதி நாளில் மாவட்ட ஆட்சியரிடம் குழந்தையைக் கொடுத்துவிட்டு அதற்கு ஆதாரமாக, பற்றுச்சீட்டு வாங்கிப்போன வளர்மதியையும், செல்வியையும் சந்திக்க எடப்பாடி தாலுகாவுக்குச் சென்றோம். எடப்பாடியிலிருந்து எட்டு கிலோ மீட்டர் தொலைவிலிருக்கிறது கச்சிப்பள்ளி கிராமம். இந்த ஊரைச் சேர்ந்த ராஜேந்திரன் என்பவரின் மகள்தான் வளர்மதி. சிறு அளவிலான இரண்டு விசைத்தறிகளைக் கொண்டு நெசவு செய்து வரும் இவரைச் சந்தித்தபோது முதலில் முகம் கொடுத்துப் பேசவே மறுத்தார். வீட்டில் தொலைக்காட்சி பெட்டியிருக்கிறது. விசைத் தறிகள் இருக்கின்றன. இத்தனை வசதியோடு இருக்கும் நீங்களே உங்கள் பேத்தியை வளர்த்திருக்கலாமே என்றதும் அவருக்குக் கோபம் தலைக்கு ஏறுகிறது.

“இந்தத் தறியிலே வர்ற வருமானத்தை வைச்சு எங்க வயித்தை முழுசாக் கழுவிக்க முடியலே. எனக்குக் கல்யாணம் ஆகாத பசங்க இரண்டு பேர் இருக்காங்க. மருமகன் திறமையில்லாத ஆளு. அவருக்கும் கைத்தறி தான். மகளுக்கு ஏற்கெனவே இரண்டு பொம்பளை பிள்ளைகள். ஊருல பேசுறவன் பேசட்டும்னு நான்தான் மகளோட கொண்டு போய் கலெக்டர்கிட்டே கொடுத்துட்டு வந்தேன்” என்கிறார். உங்கள் மகள் வளர்மதி எங்கே என்றால் “உங்களை மாதிரி பத்திரிகைக்காரங்க, டி.வி.காரங்க வந்து தொந்தரவு கொடுத்ததனாலே, சொந்தக்காரங்க வீட்டுக்கு அனுப்பிட்டேன்” என்கிறார்!

அங்கிருந்து கால் நடை தூரத்தில் இருக்கிறது ஆண்டிப்பாளையம் கிராமம். வழி நெடுகிலும் வறட்சி நம்மை வரவேற்கிறது. செல்லப்பன் வீடு எது என்று விசாரித்தால் “பொட்டப்புள்ளையைத் தொட்டிலுக்குத் தூக்கிக் கொடுத்த ஆளுதானே” என்று அடையாளம் சொல்லி அனுப்புகிறார்கள். செல்லப்பனின் மனைவிதான் செல்வி. அவர்கள் வீடு பத்துக்கு பத்து என்ற அளவில் இருந்த சின்னஞ்சிறு குடிசை. அவர்களின் முகமே வறுமையின் முகவரியைக் காட்டுகிறது. செல்லப்பனுக்கு ஒரு பெண் உட்பட ஏற்கெனவே மூன்று குழந்தைகள். “என்ன செய்யறதுங்க. தினசரி நாற்பது ரூபாய் சம்பாதிக்கிற விவசாயக் கூலி நான். பச்சைக் குழந்தைக்கு திடீர்னு உடம்பு சரியில்லாம போச்சுன்னா எடப்பாடிக்குத்தான் போகணும். இருநூறு ரூபா இல்லாமல் குழந்தை டாக்டர்கிட்டே போக முடியாது. இதோ என் கடைசி மகனுக்குக் காய்ச்சல்னு அரசாங்க ஆஸ்பத்திரிக்குக் கூட்டிகிட்டுப் போனேன். ஊசி போட்ட இடம் வீங்கிப் போயிடுச்சு. அதுக்கு இப்போ ஐந்நூறு ரூபா கடன் வாங்கி செலவு பண்ணி இருக்கேன். இந்த லட்சணத்துலே அரசாங்க ஆஸ்பத்திரி இருக்கு. இப்படியொரு நிலையிலே நான் இன்னொரு பொம்பளப் பிள்ளையை வளர்த்து - எவனோ ஒரு குடிகாரனுக்குக் கட்டிக் கொடுக்கிறதுக்குப் பதிலா, அரசாங்கத்துக்கிட்டேயே வளர்ந்து ஆளாகட்டும்னு கொடுத்துட்டேன்.” என்கிற செல்லப்பனிடம், ஊர்க்காரர்கள் உங்களை எதுவும் சொல்லவில்லையா என்று கேட்டால், “சில பேர் சரியாத்தாண்டா செஞ்சேன்னு சொன்னாங்க. விவரம் புரியாத சில இளவட்டப் பசங்க, திட்டினாங்க” என்கிறார்.

இந்தக் குழந்தையைப் பெற்றுக் கொள்ளும் முன்பு நீங்களோ மனைவியோ குடும்பக் கட்டுப்பாடு செய்திருக்கலாமே என்றால்,




"என்னங்க பண்றது மனைவிக்கு உடம்புலே இரத்தம் இல்லேன்னு போன தடவை அனுப்பிட்டாங்க. இந்த முறை கட்டாயம் பண்ணிடணும்."

கொஞ்சமாய் வெட்கித் தலை குனிகிறார். ஆனால் ஆண்டிப் பாளையத்திலிருந்து அரை கிலோ மீட்டர் தூரத்திலிருக்கும் பள்ளிப்பட்டு காட்டு உழவு கிராமத்தைச் சேர்ந்த இளம் தம்பதி லட்சுமணன், சரஸ்வதியை ஊரே பாராட்டுகிறது. குடும்பச் சண்டை காரணமாக ஒரு வயது பெண் குழந்தையுடன் இரண்டாம் முறை கர்ப்பமாக இருந்த, மனைவியை விட்டு கோபித்துக்கொண்டு போய்விட்டார் லட்சுமணன்.

ஒரு வருடம் ஆகியும் திரும்பி வராததால், இரண்டாவதாகப் பிறந்த பெண் குழந்தையை அரசுத் தொட்டிலுக்குக் கொடுத்து விட்டு வந்துவிட்டார் சரஸ்வதி. அதன்பிறகு திடீரென்று கணவன் திரும்பி வந்து குழந்தை எங்கே என்று கேட்க... மனைவி விவரத்தைச் சொல்ல, உடன் மாவட்ட கலெக்டரைச் சந்தித்து கடிதம் வாங்கிக் கொண்டு சென்னை வரை வந்து, அரசால் அங்கீகரிக்கப்பட்ட தத்தெடுக்கும் மையத்திலிருந்து தங்கள் குழந்தையை மீட்டுவந்து கௌசல்யா என்று பெயர் வைத்திருக்கிறார்கள்.

கௌசல்யா மாதிரி எத்தனை குழந்தைகளுக்கு இலையுதிர் காலம் வசந்தமாய் துளிர்த்திருக்கிறது? 'மிக அபூர்வம்' என்கிறார் ஓமலூர் தாலுகாவில் உள்ள முப்பத்திரண்டு பஞ்சாயத்துகளையும் சுற்றி வரும் எய்ட் ஆல்டர்நேட்டிவ் ஃபார் இந்தியா டெவலப்மெண்ட் என்ற அரசு சாரா அமைப்பின் மேற்பார்வையாளர் மஞ்சுளா. கிராமத்துப் பெண்களையும், அவர்களின் வாழ்க்கையையும் நேரில் சந்தித்துவரும் இவர் தரும் தகவல், பெண் சிசுக் கொலையின் புதிய தோற்றத்தை நம் கண்முன்பு நிறுத்துகின்றன.

"இப்போதெல்லாம் போலீஸ் கண்ணிலிருந்து பெண் சிசுக் கொலையை எப்படியெல்லாம் மறைக்க முடியுமோ அதற்கான அத்தனை முயற்சிகளையும் செய்கிறார்கள். கள்ளிப்பால் கொடுத்தால் பிரேதப் பரிசோதனையில் தெரிந்து விடுகிறது என்பதால் கொல்லும் முறையை மாற்றியிருக்கிறார்கள். புகையிலை சாறு ஊட்டுதல், தண்ணீரில் குழந்தையை மூழ்கடித்துக் கொல்லுதல். தொட்டியில் தலையை மட்டும் தொங்க விட்டு கொல்லுதல் என்று குரூரம்



"மெகா சீரியல்களைத் தலைவர் தடை பண்ணறதா தீர்மானிச்சுட்டாரா?"

"ஏன்?"

"நாங்கள் ஆட்சிக்கு வந்தால் தாய்க் குலத்தைக் கண்கலங்க விடமாட்டோம்னு பேசுறாரே!"

- தஞ்சை தாமு

அதிகரித்துள்ளது.

"கிராமத்தில் சாலை பிரச்னை, குடி தண்ணீர்ப் பிரச்சனை, சாலை விளக்கு பிரச்னை என்று பேசுகிற பஞ்சாயத்து தலைவர்கள் பெண் சிசுக் கொலையும் ஒரு பிரச்னை என்று எடுத்துக் கொண்டு தீர்மானம் போட மாட்டேன் என்கிறார்கள். தப்பித்தவறி மாட்டிக் கொண்டாலும், கிராமத்தினர் பெயர் கெட்டுவிடக் கூடாதென்று மறைத்து விடுகிறார்கள். கள்ளச்சாராயம் ஒரு முக்கிய காரணமாய் இருக்கிறது. தொண்ணூறு சதவிகித கிராமத்து அப்பாக்கள் மது அருந்துகிறவர்கள். அவர்கள் சொல்படிதான் குடும்பம் நகர்கிறது" என்கிறார். இவர்களது 'எய்ட்' அமைப்பு மூலம், கிராமப் பெண்களை சுய உதவி குழுக்களாக உருவாக்கி, பிறகு பெண் சிசுக் கொலையைக் கண்காணிக்கும் உஷார் குழுக்களாக மாற்றியிருக்கிறார்களாம்.

"எய்ட் போன்ற பல அரசு சாரா நிறுவனங்கள் தீவிரமாகச் செயல்படாவிட்டால், நிலமை இன்னும் மோசமாக இருக்கும்" என்கிறார் இதே அமைப்பைச் சேர்ந்த சிவா இவர் தரும் தகவல் இன்னும் அதிர்ச்சியூட்டுகிறது.

"சிசுக்கொலையில் மாட்டிக் கொண்டு விட்டால் ஜாமீனில் வெளிவரவே நாற்பதாயிரம் வரை கடன் வாங்கியாவது செலவு செய்கிறார்கள். அல்லது போலீசின் வாயையும் பாக்கெட்டையும் நிரப்பி விடுகிறார்கள். கொள்ளிபோட ஆண் வாரிசு வேண்டும் என்ற வேட்கை அடுத்தடுத்து ஆண் குழந்தை நோக்கி முயற்சி செய்யத் தூண்டுகிறது. பெண்களுக்குச் சொத்துரிமை

இல்லாததும், இளவயது திருமணமும்கூட பெண் சிசுக் கொலைக்குக் குறிப்பிடத்தக்க காரணங்கள். முதல் மாப்பிள்ளையைத் தட்டிக் கழிக்கக்கூடாது என்று பதினைந்து வயதிலேயே மணம் முடித்து வைக்கிறார்கள். பதினெட்டு வயதுக்குள் பெண் மூன்று குழந்தைகளுக்குத் தாயாகி விடுகிறாள். இளவயது திருமணத்தையும், கர்ப்பமாகும் பெண்களையும் தொடர்ந்து கண்காணிக்க, அரசிடம் போதிய திட்டங்கள் இல்லை. இருந்தாலும் தீவிரமாகச் செயல்படுத்தப் படுவதில்லை" என்கிறார்.

ராதாகிருஷ்ணன், ஐ.ஏ.எஸ்., சேலம் மாவட்ட ஆட்சியராக பொறுப்பேற்ற பிறகு தொட்டில் குழந்தைகள் திட்டத்தை முடுக்கி விட்டிருக்கிறார்.

"பட்டா கேட்டு மனுகொடுக்க வருவதைப் போலத்தான் குழந்தைகளையும் பெற்றோர்கள் முன் வந்து கொடுக்கத் தொடங்கியிருக்கிறார்கள். இங்கே வரும் குழந்தைகளைப் பராமரித்து அரசால் அங்கீகரிக்கப்பட்ட தத்தெடுக்கும் மையங்களுக்கு அனுப்பி விடுகிறோம். அங்கே விதிமுறைகளின்படி குழந்தையில்லா பெற்றோர் தத்தெடுத்துச் செல்கின்றார்கள். அதேபோல கடந்த ஆண்டு நவம்பர் ஐந்தாம் தேதி முதல் பெண் சிசுக் கொலை, தொட்டில் குழந்தை திட்டம், வரதட்சணைக் கொடுமை குறித்து தகவல் கொடுத்தால் உடன் உதவியோ நடவடிக்கையோ எடுக்க 402000 என்ற எண்ணுள்ள ஹெல்ப் லைன் தொலைபேசி தொடங்கியிருக்கிறோம். பெண் சிசுக் கொலை, தொட்டில் குழந்தை திட்டம் காரணமாக கணிசமாகக் குறைந்திருக்கிறது என்பதை நிர்வாக ரீதியாகச் சொல்கிறேன். தனிப்பட்ட முறையிலும் இந்தத் திட்டம் அவசியமானது என்பதுதான் என் கருத்து" என்கிறார்.

ஆனால் எய்ட் அமைப்பின் இன்னொரு ஊழியர் அய்யனார் என்ன சொல்கிறார் பாருங்கள்... "தத்தெடுப்பு மையங்களிலிருந்து, நிறமும் தோற்றமும் உள்ள குழந்தைகளை மட்டும்தான் தத்தெடுத்துச் செல்கிறார்கள். எஞ்சிய பெண் குழந்தைகள் வளர்ந்து, தங்கள் வாழ்க்கையை நிலை நிறுத்திக் கொள்ளும் வரை அவர்களின் பாதுகாப்பும் கேள்விக் குறியாகவே இருக்கும் என்பதை யாரும் மறுக்க முடியாது. தொட்டில் குழந்தை திட்டம் பின் விளைவுகளைப் பற்றிச் சிந்திக்காமல் அறிவிக்கப்பட்ட அரசியல் உள் நோக்கம் கொண்ட திட்டம் என்பதுதான் பரவலான பொதுக் கருத்து" என்கிறார்.

இதை மறுக்கிறார் பெண் வழக்கறிஞர் சங்கத் தலைவரான சாந்தகுமாரி. "இந்தத் திட்டத்துக்கு அரசியல் சாயம் பூசுவதைவிட, மூடநம்பிக்கையும் கல்வியறிவும் இல்லாத ஜனங்களிடமிருந்து பெண் குழந்தைகளைக் காப்பாற்றும் திட்டம் என்றே பார்க்க வேண்டும். அதன்பிறகு பெண் சிசுக் கொலையின் பின்னணியில் ஒளிந்திருக்கும் ஆண்களைத் தப்பவிடாத பிரத்தியேக தண்டனைச் சட்டம் தேவை" என்கிறார்.

எத்தனை சட்டம் வந்து என்ன செய்ய?... பெண் கல்வி, பெண்களைப் பொருளாதார ரீதியில் சுதந்தரமானவர்களாக ஆக்குதல் போன்ற அடிப்படை மாற்றங்களும், அரசு சாராத் தொண்டு நிறுவனங்களோடு, அரசும் காவல் துறையும் முழு மூச்சாக இணைந்து செயல்படும் நிலையும் ஏற்பட்டால்தான் அனாதைகள் உருவாவதைத் தடுக்க முடியும்.

- ஆர்.சி. ஜெயந்தன்

படங்கள் : ஸ்ரீஹரி

"பசை வியாபாரிக்கு லோன் கொடுத்தது தப்பாயிடுச்சு!"

"ஏன்?"

"பணத்தைத் திரும்ப கட்டாமல் 'கம்'முனு இருக்காரே!"

- தஞ்சை சுபா



● தி. மகராசன் கடமலைக்குண்டு.

? மறைந்த கம்யூனிஸ்ட் தலைவர் கே.டி.கே. தங்கமணி பற்றி...?

! பணம், பதவி ஆசை பிடித்தாட்டும் இந்தக் காலத்தில், பார்-அட்-லா படித்திருந்தும் செல்வச் செழிப்பான குடும்பத்தில் பிறந்திருந்தும் கதர் சட்டை வேட்டியுடன் எளிமையின் சின்னமாக விளங்கியவர். சீனத் தலைவர் மா சே துங் வியத்னாம் அதிபர் ஹோ-ஷி-மின் போன்றவர்களுடன் நெருங்கிய தொடர்புடைய தொழிற் சங்கவாதி இவர்.

● இரா. வளையாபதி, தோட்டக்குறிச்சி.

? இந்த நேரத்தில் இந்தியா-பாகிஸ்தான் யுத்தம் இரு நாடுகளுக்கும் தேவைதானா..?

! ஏற்கெனவே கார்கில் போரால் சரிந்த பொருளாதாரத்தை இரு நாடுகளும் இப்போதுதான் நிமிர்த்தி வைத்துக் கொண்டிருக்கின்றன. இந்த நேரத்தில் மீண்டும் போர் என்பது, தேசிய உணர்வைத் தட்டி எழுப்ப உதவலாமே தவிர பொருளாதார ரீதியில் முதுகை ஒடிப்பதாக விளங்கும்.

● கே.வி. ராமன், சென்னை - 73.

? விபூதி பூசுவது மூட நம்பிக்கையா..?

! நாத்திகவாதமும் கடவுள் வழிபாடும் புறச் சின்னங்களும் அவரவர் மனப்பக்குவத்தை யொட்டியது. ஒருவர் கருத்தை மற்றவர் மீது திணிக்காதவரை ஜனநாயகத்தில் அவரவர் நம்பிக்கைக்கு மற்றவரிடம் மதிப்பு உண்டு.



• தப்பாமல்...

... அப்பாவைப் போல்...!





• தங்க குணம்



• பேசாத வார்த்தை!

மூப்பனார்-வாசகன் ஒப்பிடுக!

● இரா. சக்கரபாணி, மதுரை - 7.

? ஒரு எண் பரிசுச் சீட்டை 'சூது' எனக் கருதி தடை செய்த தமிழ்நாடு அரசு, இரண்டு எண்கள் பரிசுச் சீட்டை அறிமுகப்படுத்தியுள்ளது என்ன நியாயம்?

! பான் மசாலாவைத் தடை செய்துவிட்டு பாக்கெட் சாராயத்தை அரசே விற்கிற நியாயம் போன்றதுதான்!

● எஸ். மாலதி, முசிறி.

? இளங்கோவனை காங்கிரஸின் முள் கிரீடம் என்று வர்ணிக்கிறாரே யசோதா..?


! சின்ன திருத்தம் - இளங்கோவன் அணிந்திருப்பதுதான் காங்கிரஸ் தலைமை என்னும் முள் கிரீடம்.

● கல்லன் கிருஷ்ண ராஜ், குன்னூர் - 5.

? பாகிஸ்தானிய தீவிரவாத குழுக்கள் நம் பார்லிமெண்டில் நடத்திய தாக்குதலுக்கு, உலக அரங்கில் முஷரஃப் விளக்கம் அளிக்க வேண்டும் என்று அமெரிக்காவின் வாஷிங்டன் போஸ்ட் நியூயார்க் போஸ்ட் போன்ற பிரபல பத்திரிகைகள் கூறியுள்ளனவே...?

! பத்திரிகைகள் எவ்வளவோ எழுதுகின்றன. அவை எழுதுவதைத் தலைவர்கள் ஆழ்ந்து படித்துப் பயன்பெற்ற காலம் மலையேறிவிட்

டது. கல்கி கூடத்தான் சென்ற வாரம் ஆண்டிப்பட்டியில் ஒரு பொது வேட்பாளரை எதிர்க்கட்சிகள் அனைத்தும் இணைந்து நிறுத்த வேண்டும் என்று எழுதியிருக்கிறது...ஹூம்..!



லங்கார முள்!



• விற்றதா! பெற்றதா!



• உதவிக்கரம்

● சி. பழனிசாமி, சென்னை - 59. ✱

? 'கவர்ச்சியா? அடச் சீ!' என்று ரசிகர்கள் வெறுக்கும் அளவுக்கு தமிழ் சினிமாவின் ரசனை மாறும் வாய்ப்பு எப்போது வரும்...?

! அப்படியொரு காலம் வராது என்பதை வருத்தத்துடன் ஒப்புக்கொள்ள வேண்டும். தரம் தாழ்ந்த கேளிக்கையும் அதில் உண்டாகும் ருசியும் மேலும் மேலும் தாழுமே யொழிய உயராது.

● கே. கணேசன், சென்னை - 16.

? 'வாஜ்பாய் அரசை ஒழித்துக் கட்டுவோம்! அதற்காக இந்தியாவின் முக்கிய நகரங்களைக் குண்டு வைத்துத் தகர்ப்போம்' என்று ஜெய்ஷ் - இ - முகமது தீவிரவாத அமைப்பு தொடர்ந்து மிரட்டி வருவது பற்றி...?

! அப்படி பகிரங்கப்படுத்துவதால் பாகிஸ்தான் அவ்வமைப்பு மீது நடவடிக்கை எடுப்பது போல் நாடகமாவது ஆடுகிறது. இதற்கிடையில் காஷ்மீரில் பயங்கர வாதம் தலைவிரித்தாடுகிறது. பிரதமரோ பேச்சுவார்த்தை கிடையாது என்று முரண்டு பிடிக்கிறார். என்று விடியல்..?

● த. சத்தியநாராயணன், சென்னை - 23.

? எஸ்.டி.டி. கட்டணம் பாதியாகக் குறைக்கப்பட்டது குறித்து...?

! தனியார் நிறுவனங்கள் சந்தையில் இறங்கியதன் தவிர்க்க முடியாத விளைவு.

● ஆர்.அப்துல் சலாம், திருச்சி - 20. ❑

? வருமான வரி பாக்கிக்காக அ.தி.மு.க.வில் பெற்ற கடனை ஜெயலலிதா திருப்பி செலுத்தியிருப்பது எதைக் காட்டுகிறது...?

! சொத்தை விற்றாரா அல்லது வருவாயைப் பெருக்கிக் கொண்டாரா என்ற கேள்வியை எழுப்புகிறது.

● கே. ராஜேந்திரன், மருதாடு.

? நிலக்கரி ஊழலிலும் விடுதலை செய்துள்ள அனைவரும் குற்றமற்றவர்களா...?

! குற்றம் புரிந்ததாக சாட்சிகள் இல்லாததால் அல்லது பல்டி அடித்ததால் நிரபராதிகள் என அறிவிக்கப்பட்டவர்கள்.

● ஆர். கர்ணன், தனக்கர்குளம்.

? மூப்பனார் - வாசன் - ஒப்பிடுக...?

! பிறந்த நாளன்று தொண்டர்களின் அன்பில் சிக்காது காணாமல் போவது; அதிகம் பேசாதிருப்பது; எளிமையைக் கடைப்பிடிப்பது; ஜெயலலிதாவிடம் ஏமாந்துபோய் நிற்பது... என்று பல ஒற்றுமைகள்!

● லெ.நா. சிவகுமார், சென்னை - 33.

? சமீபத்திய சங்கீத ஸீஸனின் ஹீரோ, ஹீரோயின் யார்..?

! ஹீரோ - ஹீரோயின் அவரவர் ரசனைப்படி.. வில்லன் - வில்லி யார் என்று வேண்டுமானால் சொல்கிறேன். வில்லன் : மிஸ்டர் மோசமான ஒலிபெருக்கி; வில்லி : தகரடப்பாக்குள்ளிருந்து சீறுவது போல் ஒலியெழுப்பும் எலக்ட்ரானிக் தம்பூரா!

● எஸ். முரளி, குறிஞ்சிப்பாடி.

? தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் தலைவராக பின்னணி பாடகர் டி.எம். சௌந்தரராஜன் நியமிக்கப்பட்டுள்ளது குறித்து...?

! குரலின் கம்பீரம் நிர்வாகத்திலும் இருக்குமானால் புதுமைகள் பூக்கலாம்; நன்மைகள் மலரலாம்.

● கே. தெய்வசிகாமணி, சென்னை - 30.

? பாராளுமன்ற வளாகத்தில் நடந்த தாக்குதலில் பலியான பாதுகாப்பு படை வீரர்களின் குடும்பத்துக்குத் தம்முடைய ஒரு வருட (எம்.பிக்களான) சம்பளத்தை சோ வழங்க ஒப்புக் கொண்டிருப்பது பற்றி...?

! தேசபக்தியின் அடையாளம்; மனிதாபிமானத்தின் வெளிப்பாடு.○

❑ ரூ. 100/- பரிசு பெறுபவர்:
ஆர். அப்துல் சலாம்,
4, நாயுடு காலனி,
மன்னார்புரம்,
திருச்சி - 620 020.

✱ ரூ. 50/- பரிசு பெறுபவர்:
சி. பழனிசாமி,
100/2, குலசேகரன் தெரு,
சுந்தரம் காலனி,
கிழக்கு தாம்பரம்,
சென்னை - 600 059.

ஒரு குடும்பம் மூன்று ஹீரோக்கள்!



சினிமா பாடல் காட்சிகளுக்கு நடனம் அமைத்துக் கொடுப்பதையே குடும்பத் தொழிலாகச் செய்து வரும் டான்ஸ் மாஸ்டர் சுந்தரத்துக்கு மூன்று மகன்கள். முதலாமவர் நடனம், நடிப்பு இரண்டிலும் சோபித்து வரும் தாடியுள்ள தமிழ் ஹீரோ பிரபு தேவா. இரண்டாமவர் ராஜு சுந்தரம். இவரும் நடனப் புயல்தான்.சிம்ரன் உடனான காதல் விவகாரத்தில் இதுவரை வாய் திறக்காத கல்லுளி மங்கன் என்ற பட்டப் பெயரோடு, பத்திரிகைகளின் பார்வையைத் தன் பக்கம் திருப்பியவர். மூன்றாமவர் நாகேந்திர பிரசாத். 'ரிதம்' படத்தில் 'தனியே தன்னந்தனியே' என்று ஆட்டம் போட்டு அசத்தியவர். இவர்கள் மூன்று பேரும் 'ஒன் டு த்ரீ' என்ற படத்தில் ஹீரோக்கள்! ஜோதிகாவை யார் முதலில் மடக்குவது.. சாரி... காதல் வலையில் வீழ்த்துவது என்பதுதான் படத்தில் இவர்களின் தலையாய பணி!

- ஸ்ரீ சக்கரம்


நடக்குமென்பார்; நடக்கும்!




மேஷம் : வருமா வராதா? என்று ஏங்கிக் கொண்டிருந்த பணம் இப்ப வந்து மகிழ்ச்சியைத் தரப் போகுது. உங்கள் திட்டங்கள், எண்ணங்கள் எல்லாம் நிறைவேறும். கல்யாணம் மாதிரியான விஷேசங்கள்ல பங்கு கொள்ள சந்தர்ப்பம் கிடைக்கும். கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்குப் புகழ், பாராட்டுக் கூடும். பத்திரிகை, எழுத்து, கணிதத் துறைகள்ல இருக்கறவங்க முன்னணிக்கு உயருவாங்க. கொடுக்கல் வாங்கல் விவகாரத்துல எச்சரிக்கையா இருங்க. அரசு விவகாரங்கள்ல ஈடுபட்டிருப்பவங்களுக்கு வாரக் கடைசியில அசத்தல் பலன் உண்டு.



ரிஷபம்: 'அடிச்சாச்சி லக்கி பிரைஸ்'னு நீங்க ஜாலியா பாட்டுப் பாடலாம். பின்னே இந்த வாரம் உங்களுக்கு அல்வா மாதிரி அமைச்சிருக்கே. எந்தக் காரியத்தையும் தலைகீழா நின்னாவது வெற்றிகரமா முடிச்சிடுவீங்க. சட்டம், காவல், இராணுவம் போன்ற துறைகளைச் சேர்ந்தவங்களுக்குப் புகழ் பாராட்டுக் கூடும். சிலர் துணிச்சலான காரியங்கள்ல ஈடுபடலாம். பெண்கள் தங்கள் எண்ணத்தை ஈஸியா நிறைவேற்றிடுவீங்க. கணவரை நச்சரிச்சு ஜாலி டூர் அடிக்க வாய்ப்பிருக்கு. குடும்பத்துல சின்ன சின்னப் பிரச்னைகள் வந்து எரிச்சல்படுத்தும். இருந்தாலும் பெரிசா எதுவும் ஆகாது. பண விஷயத்துலே ரொம்பவே உஷாரா இருப்பது நல்லது.




மிதுனம்: ஸாரி... கொஞ்சம் ஜாக்கிரதையாவே இருங்க. புதுசா எந்தக் காரியத்துலயும் ஈடுபட வேண்டாம். அப்படியே ஈடுபட்டாலும் ஒருமுறைக்கு ரெண்டு முறை யோசிச்சு செயல்ல இறங்கிடுங்க. வீண் விவகாரங்கள்ல தலையிட வேண்டாம். கணவன் மனைவிக்குள்ள மனவருத்தம் வர வாய்ப்பிருக்கு. விட்டுக் கொடுத்துப் போறது நல்லது. வீண் செலவுகளைத் தவிர்ப்பது அவசியம். எதிலும் அவசரம், பதற்றம் வேண்டாம். நண்பர்கள், உறவினர்கள் தொடர்பு பயன்தரும்.




கடகம் : வானத்துக்கும் பூமிக்குமா குதிக்கப் போறீங்க இந்த வாரம். புதிய பொறுப்புகள், பதவி உயர்வு, பட்டம், புகழ் பாராட்டெல்லாம் கிடைக்கப் போகுதே. அரசியல்வாதிகளுக்கு, பாராட்டு மேடை தேடி வரும். மைக் கிடைச்ச சந்தோஷத்துல எதையாவது உளறி கொட்டிடாதீங்க. அடக்கி வாசிங்க. தந்தை மூலமா நன்மைகள் வரப் போகுது. பன்னிரண்டில் ராகு உலவுவதால் சிறு சிறு சங்கடங்கள், பிரச்னைகள் வரும். 'பொறுத்தார் பூமி ஆள்வார்'ங்கறத பிடிச்சுக்கிட்டு அமைதியா இருங்க. கலைத்துறையைச் சேர்ந்தவங்களுக்கு இது சோதனை காலம்.




சிம்மம்: நீங்களே நினைச்சுப் பார்க்காத, மனசுக்கு இனிய சம்பவங்கள் இந்த வாரம் நடக்கப் போகுது. பணத்துக்குப் பிரச்னையில்லை. சிலருக்கு பல வழிகள்ல இருந்து பணம் வரும். புதியவங்க நட்பும் தொடர்பும் ஏற்படும். அவங்களாலே ஆதாயம் இருக்கு. வெளிநாட்டுலே இருந்து நல்ல செய்தி வரும். சினிமா, கலைத் துறையைச் சேர்ந்தவங்க நினைச்சதை முடிப்பாங்க. கம்ப்யூட்டர், எலக்ட்ரானிக்ஸ் போன்ற துறைகளைச் சேர்ந்தவங்க திறமைக்குரிய வகையில் வளர்ச்சி காண்பாங்க. கணிதம், எழுத்து, பத்திரிகை துறைகளைச் சேர்ந்தவங்களுக்கு அனுகூலமான போக்குக் காணப்படும்.




கன்னி: உங்க திறமை, புத்திசாலித்தனமெல்லாம் அதிகரிக்கப் போகுது. குரு வக்கிரம் என்பதால் மதிப்பு அந்தஸ்து ஜில்லுனு ஏறப் போகுது. புதிய பதவிகள், பட்டங்கள் தேடி வரும். கூட பிறந்தவங்களாலே நன்மை இருக்கு. பெண்களுக்கு இது சந்தோஷ வாரம். நகைகள், புடவைகள் வாங்க வாய்ப்பிருக்கு (கணவர்கள் பர்ஸ் பத்திரம்). வெளிநாட்டுலே இருந்து நல்ல தகவல் வந்து சேரும். ரொம்ப நாட்களாக திட்டமிட்ட எண்ணங்கள் இப்ப நிறைவேறும். பயணம் தவிர்ப்பது நல்லது அதிர்ஷ்ட வாய்ப்புகள் இருக்கு.



துலாம்: சினிமா ஓவியம் சிற்பம் போன்ற கலைத் துறைகளைச் சேர்ந்தவங்களுக்கு புகழ் பாராட்டு அதிகரிக்கும். இதனால் ஆதாயம் கூடும். கம்ப்யூட்டர் எலக்ட்ரானிக்ஸ், தகவல் தொடர்பு துறைகளைச் சேர்ந்தவங்களுக்கு நல்ல வளர்ச்சி உண்டு. போட்டி, பந்தயங்களில் வெற்றி தேடி வரப் போகுது. சிலருக்கு முக்கியமான பதவிகள், பொறுப்புகள் தேடி வரும். பெண்கள் கேளிக்கை, உல்லாசம் என்று சுற்ற வாய்ப்பிருக்கு. சட்டம், காவல், இராணுவம் போன்ற துறைகளைச் சேர்ந்தவங்க வெற்றி நடைபோட போறாங்க.




விருச்சிகம்: இதுவரை உங்களை டென்ஷன் ஆக்கிட்டிருந்த எதிரிகள் இப்ப ஓடி ஒளிவாங்க. எதிர்ப்புகள் குறையும். பண நடமாட்டம் திருப்தியா இருக்கும். சிலருக்கு திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புகள் உண்டு. வியாபாரிகளுக்கு முன்னேற்றம் இருக்கு. விஞ்ஞானம், கம்ப்யூட்டர் துறைகளைச் சேர்ந்தவங்களுக்குப் புகழ் கிடைக்கும். பயணத்தின்போது எச்சரிக்கை அவசியம். பெட்டியை யாராவது 'சுட்டு'ட்டுப் போக வாய்ப்பிருக்கு. இயந்திரம், மின்சாரம் நெருப்பு ஆகியவற்றின் பக்கத்தில் போகும் போது ரொம்ப எச்சரிக்கையாக இருங்க.




தனுசு: உங்க புத்திசாலித்தனம் வெளிப்படப் போகுது. எந்தக் காரியத்தையும் தலைகீழா நின்னாவது வெற்றிகரமா முடிச்சிடுவீங்க. போட்டி, பந்தயங்கள்ல உங்களுக்கு வெற்றி இருக்கு. சமுதாய நலபணியாளர்களுக்கு வரவேற்பு அதிகரிக்கும். தொழிலாளர்கள் விவசாயிகள் தங்கள் நிலை உயரப் பெறுவார்கள். கறுப்பு, கருநீலப் பொருட்கள், தோல் பொருட்கள், எண்ணெய் வகையறாக்கள் உலோகங்கள் ஆதாயம் கொண்டு வரும். கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்கு பாராட்டு கூடும்.



மகரம்: மனசுல துணிச்சலும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். பயணத்தால் அனுகூலம் உண்டாகும். வேறு மொழி, மதத்தவர்கள் நட்பு கிடைக்கும். சட்டம், காவல், இராணுவம் போன்ற துறைகளைச் சேர்ந்தவங்க முன்னணிக்கு உயருவாங்க. பிற கிரக சஞ்சாரம் சரியில்லாததால் பேச்சிலும், செயலிலும் அவசரம், பதற்றம் கூடாது. சண்டை சச்சரவு பக்கம் தலைகாட்ட வேண்டாம். விளையாட்டு விநோதங்களில் ஈடுபடும்போது ரொம்ப எச்சரிக்கை வேணும். செலவு எகிறட்டுப் போகும்.



கும்பம்: நீங்களே பொறாமை படற மாதிரி உங்க முக வசீகரம் அதிகரிக்கும். அரசு விவகாரங்களில் அனுகூலமான போக்குத் தென்படும். வியாபாரிகள் வளர்ச்சி காண்பார்கள். சங்கீதம், சினிமா போன்ற துறைகளைச் சேர்ந்தவங்க பாராட்டு மழையில நனைவாங்க. உடல் நலன்ல கவனம் வையுங்க. வயிறு சம்பந்தப்பட்ட நோய்கள் வரலாமே. வீண் அலைச்சலைத் தவிர்த்திடுங்க.



மீனம்: உற்சாகமான வாரம். இதுவரை முகத்தைத் தூக்கிக்கிட்டுப் போன உறவினர்கள், நண்பர்கள் இப்ப உதவிக்கு வருவாங்க. அரசாங்க விவகாரத்துல பலன் கிடைக்கும். எதிர்ப்புகளைச் சமாளிக்கும் சக்தி பிறக்கும். எலக்ட்ரானிக்ஸ், கம்ப்யூட்டர் போன்ற துறைகளைச் சேர்ந்தவங்களுக்கு முன்னேற்றம் உண்டு. வியாபாரிகள் வளர்ச்சி அடைவாங்க. பயணத்தின்போது எச்சரிக்கை அவசியம். எந்தக் காரியத்தையும் ஒரு முறைக்கு பலமுறை யோசிச்சு செயல்படறது நல்லது. உடல் நலன்ல கவனம் வையுங்க. வீண் வம்பு தும்பு, வாக்குவாதங்களில் ஈடுபட வேண்டாம்.

ஜனவரி 9 முதல் 15 வரை



விசில் நிவேதிதாவுக்கு (மீனம்) உற்சாகமான வாரம்.



தர்மம் காப்பாற்றும்



(சென்ற இதழ் தொடர்ச்சி)

“தர்மம் எது? என்பதே இன்று ஒரே குழப்பமாக இருக்கிறது என்று சொன்னார்கள். முள்ளை, முள்ளால் எடுப்பது போல, குழப்பத்தைத் தீர்த்து வைக்க, என்னைப் பேச அழைத்திருக்கிறார்கள் போலும்'' என்று சோ தம் உரையை ஆரம்பித்தவுடன், அரங்கில் ஒரே குழப்ப அலை... மன்னிக்கவும் சிரிப்பு அலை. சிரிக்கவும் வைத்து, சிந்தனைக்கும் உரமிட்ட அவரது பேச்சு பார்வையாளர்களை மிகவும் கவர்ந்தது.

சோ பேசிய முக்கியமான கருத்துகளின் தொகுப்பு:

தர்மம் என்பதற்கு, நேர்மை, நியாயம், சட்டம், ஒழுக்கம், நீதி, மதம், நம்பிக்கை, நன்னடத்தை, பழக்க வழக்கம் என்று பலவித அர்த்தங்கள் சொல்லலாம்.

கண்ணகி சிலையை நீக்கியது நிர்வாக தர்மம். அதை எதிர்ப்பது எதிர்க்கட்சி தர்மம். இதுபோல பத்திரிகை தர்மம், தொழில் தர்மம், அரசியல் தர்மம், தேர்தல் தர்மம் (இதில் எது வேண்டுமானாலும் செய்யலாம்) என்று பல உண்டு.

நெற்றியில் விபூதி பூசிக் கொள்வது இல்லற தர்மம். ஆபீசில் யாராவது ஏதாவது நினைத்துக்கொண்டு விடுவார்களோ என்று, விபூதியை அழிப்பது ஆபீஸ் தர்மம். கருணாநிதி முன்னால்விபூதி பூசாமல் செல்வது பகுத்தறிவு தர்மம். அதேசமயம் சிலுவை, குல்லாய் எல்லாவற்றையும் ஏற்பது செக்யூலர் தர்மம். ஒவ்வொருவருக்கு ஒவ்வொன்று தர்மம். இது எல்லாவற்றையும் அனுசரித்துக்கொண்டு போவது இந்து தர்மம். காரணம், இந்து மதம் எந்த

கல்கி ஸ்ரீ கிருஷ்ண ஸ்வீட்ஸ்® இணைந்து நடத்திய இளைஞர் திருவிழா - 12

ஒரு கூட்டத்தையும் நோக்கிப் பேசுவது அல்ல; ஒவ்வொரு தனி மனிதனுக்கும் வாழ்க்கைத் தத்துவத்தை நேரிடையாக எடுத்துச் சொல்லுவது.

சரி! தர்ம சாஸ்திரங்கள் சொல்லும் தர்மம் என்ன? விருப்பு, வெறுப்பு அற்றவனாக, எல்லோரையும் நேசிப்பவனாக, ஒற்றுமையை விரும்புகிறவனாக இருக்கிற கற்றறிந்தவன், எதை ஏற்கிறானோ அது தர்மம். அவன் எதை நிராகரிக்கிறானோ அது அதர்மம்.

மகாபாரதத்தில், கர்ணன், துரியோதனின் அனைத்து செயல்களுக்கும் துணை நிற்பது - தனது செஞ்சோற்றுக்கடன் என்று நினைத்தான். அது அவனுடைய தர்மம். ராமாயணத்தில், ராவணனிடம், எவ்வளவோ விபீஷணன் எடுத்துச் சொல்லியும்,



அவன் கேட்காமல் அவமதித்ததால், அவன் ராவணனை விட்டு விலகி, ராமர் பக்கம் வந்தான். அது விபீஷணனின் தர்மம். ராவணனுடனேயே இருந்து உயிர் விட்டது கும்பகர்ணனின் தர்மம்.

ராமன், சீதையின் புனிதத் தன்மையை நிரூபிக்கச் சொன்னது தர்மமா? இல்லற தர்மப்படி பார்த்தால், ராமனின் செயல் தவறுதான். ஆனால் ராஜ தர்மத்தின்படி ராமன் செய்தது சரியே! காரணம், சீசரின் மனைவி, சந்தேகங்களுக்கு அப்பாற்பட்டவளாக இருக்க வேண்டும் என்பார்களே! அது போலத்தான்! அங்கே, இல்லற தர்மத்தை விட ராஜ தர்மம் மேலோங்கி நிற்கிறது.

எல்லா தர்மங்களிலும் சிறந்தது அஹிம்சைதான்! ஆனால் யுத்தம் என்று வந்துவிட்டால், ஆயிரக்கணக்கானவர்கள் மரணமடைகிறார்கள். அதனால் யுத்தம் அதர்மமா? இல்லை, அதுதான் யுத்த தர்மம்! வன்முறையாளர்களிடம், புத்தர் பற்றியும், ராமகிருஷ்ணர் பற்றியும் பேசிக் கொண்டிருக்க முடியுமா? அடக்குமுறையைக் கையாளுவதுதானே அங்கே தர்மம்!

மனுஸ்மிருதி, ஒரு குடும்பத்துக்காக ஒரு தனி மனிதனைத் தியாகம் செய்யலாம். ஒரு கிராமத்துக்காக, ஒரு குடும்பத்தையே தியாகம் செய்யலாம்; ஒரு நாட்டுக்காக, ஒரு கிராமத்தையே தியாகம் செய்யலாம் என்கிறது. பெரும்பாலானவர்களின் நலனுக்காக, ஒரு சிலரைத் தியாகம் செய்வது தவறு இல்லை என்பது இதன் பொருள்.

கீதையில் கிருஷ்ணரால் உபதேசிக்கப்படும் ஒரு முக்கிய விஷயம் சுதர்மம். இந்த சுதர்மம், குல தர்மமோ, வர்ணாசிரம தர்மமோ அல்ல. சுதர்மம் என்பது, ஒருவரது மனசாட்சி என்ன சொல்கிறதோ அதன்படி செயல்படுவது. நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ளாத நிலையில், ஒரு விஷயத்தை ஆராய்ந்து, எது சரி என்று படுகிறதோ, அதைச் செய்வதுதான் சுதர்மம். மெஜாரிடி மக்களுக்கு நல்லது நிகழும் என்றால் அதுதான் சுதர்மம்.

இறுதியாக நன்றியுரை கூற வந்த கல்கி ராஜேந்திரன் குறிப்பிட்ட சம்பவம், நினைவில் நிற்கும் ஒன்று. ஸ்வர்ணாலயா ஜுவல்லரி நடத்தும் சுகுமாரன் தமது தாத்தா கி.ஆ.பெ. விசுவநாதம் பற்றி கூறியது அது.

கி.ஆ.பெ. விசுவநாதம் கிழக்காசிய



'தர்மம்' தலைப்பில் கிருஷ்ணராஜ வாணவராயர், சோ இருவரும் உரையாற்றியதைத் தொடர்ந்து, நேயர்களின் கேள்விகளுக்கு பதில் அளித்தனர்.

கேள்வி: கோபம் ஒரு தீய குணம். அதர்மத்தைக் கண்டு கோபப்படுவது தவறா?

கிருஷ்ணராஜ வாணவராயர் : 'சிறுமை கண்டு பொங்குவாய்' என்றுதான் பாரதி சொல்லியிருக்கிறார். அதர்மத்தையும் பொறுத்துக் கொண்டு போவது சகிப்புத் தன்மை இல்லை. அப்படிப் பொறுத்துக் கொண்டு இருந்திருந்தால் நமக்கு சுதந்தரம் கிடைத்திருக்காது. அதர்மத்துக்கு எதிராகப் போராடுகிறபோதும், தர்மம் கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

கேள்வி: 'தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும்' என இன்று பலரும் சொல்லிக் கொண்டிருக்கிறார்களே?

சோ: தர்மத்தைக் கவ்விக் கொண்டிருப்பவர்கள், அதை விட்டாலே போதும்; தர்மம் வென்றுவிடும்.

கேள்வி: தர்ம சிந்தனைகளை வளர்க்கும் சரியான கல்வி முறை எது?

வாணவராயர் : கல்வியைப் பற்றி, வேறெந்த நாட்டையும் விட ஆழமாக சிந்தித்து கருத்துக்களைச் சொன்ன தேசம் பாரத தேசம். மனிதனுக்குள் இருக்கிற பூரணத்துவத்தை வெளிப்படுத்துவது தான் கல்வி. அப்படிப்பட்ட கல்வி, ஒரு காலத்தில் குருகுல வாசம் மூலமாக இந்த தேசத்தில் இருந்தது. இன்று கல்வி என்பது சம்பாதிப்பதற்கு ஒரு வழி என்ற முறையில்தான் உள்ளது. அதனால்தான் இன்று நாம் பலவித பிரச்னைகளைச் சந்தித்துக் கொண்டிருக்கிறோம்.

கேள்வி: வீட்டிலும், பள்ளியிலும் கற்றுத்தரப்படாத தர்மத்தை வேறு எங்கே அறிந்து கொள்ளுவது?

வாணவராயர் : அரிய கருத்துக்களை, எளிய தமிழில் விளக்கக் கூடிய நூல்கள் தமிழில் ஏராளமாக இருக்கின்றன. இன்றைய இளைஞர்கள் ஐஸ்கிரீமுக்கும், சினிமாவுக்கும் செய்கிற செலவில் நூறு நல்ல புத்தகங்கள் வாங்கலாம். குறைந்த பட்சம் வாரந்தோறும் 'கல்கி'யைப் படித்தாலே கூட போதும்.

கேள்வி : இறுதியில் தர்மம் வெல்லும் என்கிறார்கள். நம் இறுதி காலத்துக்குள் அது நடக்கும் என்று தோன்றவில்லையே?

சோ: அது உலகத்தின் இறுதியாகக் கூட இருக்கலாம். உங்கள் இறுதிக் காலத்துக்குள் வெல்ல வேண்டும் என்று அவசரப்பட்டால் எப்படி? 'உலகத்தில் அதர்மம் பெருகினால், அதை அழித்து தர்மத்தை நிலைநாட்ட நான் வருவேன்' என்கிறார் கிருஷ்ண பரமாத்மா. அவரை வரவழைக்க, இப்போது நடக்கிற அதர்மம் போதாது போல இருக்கிறது. கெட்டவர்களை அழித்து, நல்லவர்களைக் காப்பாற்ற கிருஷ்ணர் வருவாராம். அவர் அழிப்பதற்கு நிறைய கெட்டவர்கள் இருப்பார்கள். அவர் காப்பாற்ற நல்லவர்கள் இருப்பார்களா என்றுதான் சந்தேகம் வருகிறது.

கேள்வி: நிறைய பேருக்கு பொது

நாடுகளுக்கு புகையிலை ஏற்றுமதி செய்து வந்தபோது, ஒரு கஸ்டம்ஸ் அதிகாரி அவரிடம் லஞ்சம் கேட்டார். அதைப் பொறுத்துக் கொள்ள முடியாமல் கோபமடைந்த கி.ஆ.பெ. அந்த அதிகாரியை ஓங்கி அறைந்து விட்டார்.

அதிகாரி போலீசில் புகார் கொடுக்க, கி.ஆ.பெ.வுக்கு சம்மன் வந்தது. அவருடைய வக்கீல், அவரை நீங்கள் அடித்ததற்கு சாட்சி கிடையாது. எனவே, அதிகாரி லஞ்சம் கேட்டு, நீங்கள் கொடுக்க மறுத்ததால், அவர் பொய்ப் புகார் கொடுத்து விட்டதாகச் சொல்லுங்கள்' என ஆலோசனை சொன்னார்.

கோர்ட்டுக்குப்போன கி.ஆ.பெ. வக்கீல் ஆலோசனைப்படி சொல்லாமல் நடந்த உண்மையைச் சொல்லிவிட்டார். குற்றம் சாட்டப்பட்டவரே, குற்றத்தை

நன்மை, சுதர்மம் இரண்டும் ஒன்றோடு ஒன்று ஒத்துப் போகாத நிலை உள்ளதே!

சோ: அப்படி என்றால், அது சுதர்மம் இல்லை; உங்களை நீங்களே ஏமாற்றிக் கொள்கிறீர்கள் என்று பொருள்!

கேள்வி: மதத்துக்கு மதம், தர்மம் வேறுபடுகிறதே!

வாணவராயர் : தர்மம் மதத்துக்கு மதம் வேறுபடாது. ஆன்மிகம் என்பது, மதத்திலிருந்து வேறுபட்டது என்பதை முதலில் புரிந்துகொள்ளுங்கள். ஆன்மிகம் என்பது சுத்தமான மெய்ஞானம். மதம் என்பது, அதை கடைப்பிடிப்பது. தர்மம் என்பது அனைத்து மதங்களுக்கும் பொதுவானது தான் என்றாலும், அந்தந்த மதங்கள் தோன்றிய காலகட்டத்துக்கு ஏற்ப விளக்கம் தரப்பட்டுள்ளது!

கேள்வி: இன்றைய அரசியல் சூழ்நிலையில் வோட்டுப் போடுவது தர்மமா? அதர்மமா?

சோ : வோட்டுப் போடுவது போன்ற சிறந்த தர்மம் வேறு இருக்க முடியாது. மோசமானவனுக்கு வோட்டுப் போடுவதன் மூலம், மிக மோசமானவன் வருவதைத் தடுக்க முடியுமல்லவா? ஆட்சிக்கு வந்து, அவன் மிக மோசமாகப் போய்விட்டால், அடுத்த தடவை மோசமான இன்னொருவருக்கு வோட்டுப் போடலாம்.

கேள்வி: பாரதப்போர் மூலம் அதர்மம் அழிக்கப்பட்டது. இப்போது நிலவும் தீவிரவாதம் என்கிற அதர்மத்தை அழிக்க, மூன்றாவது உலகப் போர்தான் தீர்வா?

வாணவராயர் : போர் மூலம் எந்தப் பிரச்னையும் தீர்ந்ததாக வரலாறு கிடையாது. போரின் மூலம் புதுப் பிரச்னைகள்தான் தோன்றும். இன்று யுத்தம் என்பது சர்வ நாசமாகவே இருக்க முடியும். பாரதப் போர் காலத்தில் அணு ஆயுதங்கள் எல்லாம் கிடையாதே!

சோ: இது விஷயத்தில் நான் சற்று மாறுபடுகிறேன். மகாபாரத காலத்தில் அணுகுண்டு இல்லை என்பது சரியில்லை. பிரம்மாஸ்திரம் இருந்தது. அஸ்வத்தாமனுக்கு அதை ஏவத் தெரியும்; கட்டுப்படுத்தத் தெரியாது. அர்ஜுனனின் பிரம்மாஸ்திரம், அஸ்வத்தாமனின் பிரம்மாஸ்திரத்தைக் கட்டுப்படுத்தியது. அது எத்தகைய அழிவை ஏற்படுத்தும் என மகாபாரதத்தில் விவரமாகக் கூறப்பட்டுள்ளது.

கேள்வி: இரு பெரியோர்களின் தர்மம் வெவ்வேறாக இருக்கும் பட்சத்தில் ஒரு சாமானியன் யாருடைய தர்மத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும்?

சோ : தர்மம் எது என்றே இரண்டு பேர் சண்டை போட்டுக் கொண்டால், அவர்கள் இருவருமே பெரியவர்கள் இல்லை என்பதை முதலில் புரிந்து கொள்ளுங்கள். எது மனசாட்சிக்கு ஒத்ததாகவும், நிறைய மக்களுக்கு நன்மை செய்வதாகவும் உள்ளதோ அதுவே தர்மம்.

கேள்வி: பிராக்டிகலாக, தர்மத்தைக் கடைபிடித்து வாழ்க்கையில் முன்னேற முடியுமா?

வாணவராயர் : முடியும். அதற்கு உதாரணமாக பலரும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கெல்லாம் ஒரு சிலர் போல விளம்பரம் கிடைப்பதில்லை. அதனால்தான் ஏதோ இந்த அளவுக்காவது மழை பெய்து கொண்டிருக்கிறது. எனவே, அவநம்பிக்கை கொள்ளக் கூடாது.

சோ : இந்த சந்தேகம் லட்சுமணனுக்கும் வந்தது. ராமனிடம் கேட்டான். "பொறுமையுடன் தர்மத்தைக் கடைபிடிப்போம். இறுதியில் வெற்றி நமக்குக் கிடைக்கும்" என்று ராமன் கூறினான். அதுதானே நடந்தது. ராமன் காட்டுக்குப் புறப்படும்போது, கோசலை சொல்வாள். 'ராமா! தர்மத்தை எவன் ஒருவன் காப்பாற்றுகிறானோ, அவனை தர்மம் காப்பாற்றும்.

ஒப்புக் கொண்டுவிட்ட நிலையில், அரசு அதிகாரியை அடித்த குற்றத்துக்கான சிறைத் தண்டனையை, உண்மையை ஒப்புக் கொண்ட நேர்மைக்காக ஆயிரம் ரூபாய் அபராதமாகக் குறைத்து தீர்ப்பு வழங்கினார் நீதிபதி. இந்த சம்பவத்தைக் குறிப்பிட்டுவிட்டு, கி. ராஜேந்திரன் சொன்னார்: "அரசு அதிகாரியை அடிக்கக் கூடாது என்பது சட்டம். உண்மையை ஒப்புக் கொண்டதற்காக அதற்குரிய தண்டனையை, நீதிபதி குறைத்தாரே அதுதான் நியாயம். ஆனால் தண்டனை கிடைக்கும் என்று தெரிந்தும், கி.ஆ.பெ. உண்மையைத் தயங்காமல் ஒப்புக் கொண்டாரே அதுதான் தர்மம்."

தொகுப்பு: **எஸ். சந்திரமௌலி**

படங்கள்: **யோகா**



ஓர் அழகி 'மிஸ் சென்னை' என வருடந்தோறும் சிம்மா சனம் ஏறுவதும், மீடியா மொய்த்துக் கொள்வதும் புதிய கலா சாரமாகிவிட்டது.

இம்முறை அந்தக் கிரீடம் சூட்டிக் கொண்டவர் பெங்களூரைச் சேர்ந்த அனுரிதி. அப்பா போலீஸ் உயர் அதிகாரி. அம்மா வழக்கறிஞர்.

"அப்பா எனக்குத் தன்னம்பிக்கையையும், தைரியத்தையும் கற்றுக் கொடுத்தார் என்றால் அம்மாவிடமிருந்து எந்த ஒரு விஷயத்தையும் வெவ்வேறு கோணங்களில் ஆராய்ந்து பார்க்கவும், என் கருத்து என்னவோ, அதைத் தயங்காமல் தெளிவாக எடுத்துச் சொல்வது எப்படி என்றும் நான் கற்றுக் கொண்டேன்" என்கிறார் இவர்.

இரண்டு வருடங்களுக்கு முன்னால் மிஸ். கர்நாடகா அழகியாக தேர்ந்தெடுக்கப்பட்டார் அனுரிதி. அதிலிருந்து இவருக்கு மாடலிங்கில் ஆர்வம்

அழகி!



அதிகரித்தது. "மாடலிங் என்பது குறைந்த காலமே கொடிகட்டிப் பறக்கிற வாய்ப்பு கொண்ட ஒரு துறை. அது ஒன்றே வாழ்க்கைக்குப் போதுமானது இல்லை. படிப்புதான் முக்கியம். ஒரு டிகிரி முடித்துவிட்டு, மாடலிங்குக்குப் போ'' என்று அட்வைஸ் வந்தவுடன், இவரும் ஒப்புக் கொண்டாராம். 'பெங்களூரைவிட, மும்பை, டெல்லி, சென்னை என்று வேறு நகரங்களுக்குப் போனால் நிறைய மாடலிங் வாய்ப்புக்கள் வரும்' என்றதும் மகளுக்கு ஆல் தி பெஸ்ட் சொல்லி, ரயிலேற்றி விட்டு விட்டார்கள் அனுரிதியின் பெற்றோர்கள். ஆறு மாதங்களுக்குமுன் சென்னை வந்து, அத்தை வீட்டில் வாசம்.

அத்தையின் ஊக்கம்



பாரிஸில் காந்தி!

பிரான்ஸில் இந்த ஜனவரி முதல் தேதியிலிருந்து 'யூரோ' நாணய முறை நடைமுறைக்கு வந்து விட்டது. € இப்படி அடையாளக் குறி இதற்கு. ஐரோப்பா முழுவதும் இனி இதுதான் செல்லுபடியாகும். சென்ற ஆண்டே விற்பனைப் பொருட்களில் எல்லாம் பழைய பிராங்க் மதிப்போடு யூரோ நாணய மதிப்பிலும் விலை குறிப்பிட்டிருந்தார்கள்.

படத்தில் உள்ளது தொலைபேசிச் சுட்டண அட்டை. இலங்கை, இந்தியாவில் பேசக் கூடிய இந்த அட்டையில் நம் பாபுஜி படம் இருப்பதைப் பார்க்கலாம்.

150 யூனிட் அட்டையின் விலை 100 பிராங்க். யூரோவில் 15.24 மதிப்பு.

— யெஸ்பால்

கொஞ்சநஞ்சமில்லை. 'மிஸ் சென்னை போட்டி நீ கண்டிப்பாக கலந்து கொள்' என்றாராம் அவர்.

"மிஸ் சென்னை போட்டியில் தேர்வுச் சுற்றுகளில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு, போட்டியைக் கடந்த சில ஆண்டுகளாக நடத்திவரும் 'விபா' நிறுவனத்தின் வித்யாவும், ஷோபாவும் அளித்த பலவிதமான பயிற்சிகளைப் பார்த்தபோது, மாடலிங்கில் இத்தனை விஷயங்கள் உண்டா என்று ஆச்சரியப்பட்டுப் போனேன்!" என்கிறார் அனு.

"போட்டி முடிவு அறிவிக்கப்பட்டபோது ரொம்ப டென்ஷனாக இருந்ததா?"

"ஐயோ! அதை ஏன் கேட்கிறீர்கள். முதலாவது, இரண்டாவது ரன்னர் அப் பெயர்கள் அறிவிக்கப்பட்ட பின், மிஸ், சென்னை பெயர்தான் பாக்கி. அந்தக் கணத்தில் அடுத்து அறிவிக்கப்படவிருப்பது நம் பெயரா? இல்லை வேறு யாராவதா? என்று டென்ஷன் ஆனேன். என் பெயரைச் சொன்னவுடன் வாவ்! என்னால் அதை வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது. உடனே அந்த சந்தோஷத்தைப் பகிர்ந்து கொள்ள என் பெற்றோர்களும், தங்கைகளும் இல்லையே என்று வருந்தினேன். நள்ளிரவு அவர்களைத் தொந்தரவு செய்யாமல், மறு நாள் காலை டெலிபோன் செய்தபோது, "எனக்கு என்னவோ, நீதான் மிஸ் சென்னையாக தேர்வு செய்யப்படுவாய் என்று தோன்றிக் கொண்டே இருந்தது" என்றார் என் அம்மா.

ரன்னர் அப்பில் முதல் இடம் பிடித்தவர் ராதிகா. அப்பாவுக்கு பெங்களூரில் வங்கி வேலை. இவரோ அமெரிக்கப் பல்கலைக் கழகத்தில் இறுதி வருட எம்.பி.ஏ. மாணவி. இப்போது களப் பயிற்சிக்காக இந்தியாவில் இருக்கிறார். மாடலிங் இரவது ஹாபி. ஏற்கெனவே, இவர் மிஸ்.அடையாறு அழகிப் போட்டியில் ஜெயித்திருக்கிறார். அம்மா இந்திரா வேணுகோபாலுக்கு பரத நாட்டியம் தெரியும்.

"அவரது ஊக்கம்தான் மாடலிங்கில் ஆர்வத்தை ஏற்படுத்தியது. பள்ளி, கல்லூரி நாட்களில், நான் எங்கள் கல்ச்ரல் டீம் கேப்டனாக இருந்திருக்கிறேன்!" என்கிறார் ராதிகா.

அடுத்த இடத்தைப் பிடித்த திவ்யாவுக்கு படிப்புதான் மிக முக்கியம். அப்புறம்தான் மாடலிங். இவர் பிலானி இஞ்சினியரிங் மாணவி. அப்பா மதுரையில் டீ.வி.எஸ். ஸில் ஜெனரல் மேனேஜர். போட்டியின் போது, மகளுக்குத் துணையாக அம்மாவும் வந்திருந்தார். திவ்யாவுக்கு பாப் மியூஸிக்கில் விருப்பம்.

அழகிப் போட்டிகளில் வெல்லும் அழகிகள் வழக்கமாக, 'சினிமா வாய்ப்பு வந்தால் நடிப்பீர்களா?' என்று கேட்டால், 'சினிமாவில் ஆர்வம் இல்லை!' என்று சொல்லிவிட்டு, அப்புறம் சில காலம் கழித்து, நடிக்க வருவார்கள். ஆனால், இந்தக் கேள்வியை அனுரிதி, ராதிகா, திவ்யாவிடம் கேட்டபோது, சொல்லி வைத்தது போல பதில் வந்தது.

"நல்ல கம்பெனி, நல்ல இயக்குனர் என்றால் தாராளமாய் ஓ.கே.!"

சந்திப்பு : எஸ்.சந்திரமௌலி
வண்ணப்படங்கள் : யோகா

பட்டதாரிகளுக்கு அரசு வேலை வாய்ப்பை நிறுத்தியதைக் கண்டித்து, சமீபத்தில் பா.ம.க. தலைவர், தூக்குக் கயிறு மாட்டும் போராட்டம் நடத்தினார். அக்கட்சியின் மகளிர் பிரிவினர் பாக்கெட் சாராயத்தை எதிர்த்து ஒப்பாரி போராட்டம் நடத்தினர்! அதே ஸ்டைலில் சில வித்தியாசமான போராட்டங்களுக்கான பயனுள்ள டிப்ஸ்!

பொங்கலுக்குப் புடைவை எடுக்க ஜவுளிக்கடைக்குள் போன மனைவியைத் திரும்ப அழைக்க... தாடி, மீசை வளர்க்கும் பேராட்டம் நடத்தலாம். ஷேவிங் செலவு மிச்சமாகும். அதில் டீ குடிச்சுக்கலாம்!





காதலிக்க மறுக்கும் பெண்ணின் கண் எதிரே... எரு, உரம், தழை தின்னும் போராட்டம் நடத்தலாம்... அப்பதானே காதல் பூத்து மலரும்?




அடாவடியாய் ஃபீஸ் கறக்கும் டாக்டர்களின் ஆஸ்பத்திரிகளில் வேப்பிலை, உடுக்கு அடிக்கும் போராட்டம் நடத்தலாம். பழைய ஆவி தொல்லை போகும்!

மெகா சீரியல்களின் முன் வாயைப் பிளந்து கொண்டு உட்கார்ந்திருக்கும் மனைவிக்கு எதிராக, அவளது கண்ணீரில் காகிதக் கப்பல் விடும் போராட்டம் நடத்தலாம்!

டிப்ஸ் : அனு
படங்கள் : கதிரவன்





சாப்பிட மறுக்கும் நண்டு, சிண்டு பொடிசுகளுக்கு எதிரே, 'எஃப்' டீ.வி. ஃபேஷன் ஷோக்களையும், ஜாக்கியின் அலறல்களையும் போட்டுக் காட்டி போராட்டம் நடத்தலாம். ஆனால், சில குழந்தைகள் விரும்பிப் பார்ப்பதே, 'எஃப்' டீ.வி.யாக இருப்பதால், போராட்டம் ஃபிளாப் ஆகும் வாய்ப்பு எக்கச்சக்கம்!

• பிரபாகர்

சத்துக்கு டோஃபூ கியாரண்டி!

ஆரோக்கியம் விரும்பும் அத்தனை வீட்டு மளிகைப் பட்டியலிலும் முதலிடம் வகிக்க வேண்டியது எது தெரியுமா? சோயாபீன்ஸ்! தினமும் ஜஸ்ட் ஒரு கைப்பிடியளவு சோயாமொச்சை சுண்டல் சாப்பிட்டால், நம் உடலுக்குத் தேவையான அத்தனை புரதச்சத்தும் கிடைத்து விடுகிறது. ஆனால் சோயாமொச்சைக்கு நம்மிடையே அவ்வளவு பிரமாதமான பெயர் வாங்க முடிவதில்லை. காரணம் அதிலிருந்து உண்டாகும் ஒரு வித வாடை!



கனடா நாட்டின் 'ப்ரோசோயா' என்ற நிறுவனம், சோயாவின் விரும்பத்தக்க குணங்களை மட்டும் பயன்படுத்திக் கொள்ளும் முறையை உருவாக்கியுள்ளது. ஸ்டெர்லிங் தொழில் குழுமத்தின் அங்கமான 'ஃபிரஷ் அண்ட் ஆனஸ்ட்' நிறுவனம், இந்தத் தொழில் நுட்பத்தைக் கொண்டு, சோயா பால் மற்றும் டோஃபூவைத் தயாரித்து வழங்குகிறது.

"சோயாபாலில் மற்ற எந்த பண்ணைப் பாலையும்விட அதிக புரதச்சத்து கிடைக்கிறது. சோயாபால், தயிர் கொண்டு, பல இந்திய உணவுகளைத் தயாரிக்கலாம். பாலிலிருந்து பாலாடைக்கட்டி (சீஸ், பனீர்) போலத்தான் சோயா பாலிலிருந்து டோஃபூ. டோஃபூவை, உருளைக் கிழங்கு போல, பனீர் போல, வறுத்து, வேக வைத்து சமையலில் பயன்படுத்தலாம். இதனால் வித்தியாசமான ருசி மட்டுமல்ல, எக்கச்சக்கமான ஊட்டச்சத்தும் எளிதாக கிடைக்கிறது" என்கிறார் வணிக வளர்ச்சி மேலாளர் பிரபாகர்.

இன்று பரவலாகிப் பெருகி வரும் கான்ஸர் நோய்க்கு சோயா பொருட்கள் தீர்வாக அமையக்கூடும். நேஷனல் கான்ஸர் இன்ஸ்டிடியூட்டின் ஆராய்ச்சியாளர்கள் சோயாப் பொருட்களில் இருக்கும் 'ஐஸோ ஃபிளோ வின்' என்ற பொருள் கான்ஸர் நோய்க்கு எதிராகச் செயல்படுகிறது என்று கண்டுபிடித்துள்ளனர். ஆனால் துரதிருஷ்டவசமாக நம் உணவு வகைகளில் சோயாவில் மட்டுமே ஐசோஃபிளோவின் உள்ளது. தினமும் 240 மில்லி சோயாபால் உட்கொண்டால், நம் உடலுக்குத் தேவையான ஐசோஃபிளோவின் கிடைத்து, நல்லன எல்லாம் சேருகிறது.

அதுமட்டுமல்ல... சோயா உணவினால் ரத்தத்தில் உள்ள எல்டிஎல் கொலஸ்ட்ரால் அளவு குறைக்கப்படுவதாகவும், எச்.டி.எல். கொலஸ்ட்ரால் அளவு அதிகரிக்கப்படுவதாகவும் தெரியவந்துள்ளது. இதனால் லட்டப் வீக் ஆசாமிகள் சோயா புரதத்தைச் சேர்த்துக் கொள்வது நல்லது என்று அமெ







துணர்வும் தெம்பும் கிடைக்கிறது. இதில் கொழுப்புச் சத்து குறைவாக உள்ளதால், தேங்காய்க்கு மாற்றாகப் பயன்படுத்தலாம். பாலில் உள்ள கேஸின் என்ற பொருளும் இதில் அறவே இல்லை. அதனால் எளிதில் ஜீரணமாகிறது. நூறு சதவிகித சைவ உணவு என்பதால்,



ரிக்காவின் எஃப்டிஏ (US FDA- Food and Drugs Administration) சான்றளித்துள்ளது.

பெண்களுக்கு ஏற்படும் மாதவிடாய்க் கோளாறுகளுக்கும், எலும்பு பாதிப்புகளுக்கும் தினமும் இருமுறை சோயாபால் உட்கொள்வது நல்லது. அதே போல குழந்தைகளுக்கும், சோயாபால் பரிபூரண உணவாக இருக்கிறது.

மௌரியா ஷெரட்டான் ஹோட்டலில் தலைமை செஃப்பாக பணிபுரிந்து, தற்போது ஸ்டெர்லிங் குழுமத்துக்கு உணவு மற்றும் ஆரோக்கிய ஆலோசகராக விளங்கும் எஸ். ராஜன், சோயா பால், டோஃபூ பற்றி என்ன சொல்கிறார்?

சோயாஃப்ரஷ் பாலில் புரதச் சத்தும், உயிர்ச்சத்தும் அதிக அளவு உள்ளதால், நாள் முழுக்க புத் அசைவ உணவில் ஏற்படும் ஹார்மோன் கலப்பு ஆபத்துமில்லை. ருசிக்கு ருசி.. சத்துக்கு சத்து!

சோயா ருசிக்குக் கட்டியம் கூற இதோ சில சமையல் குறிப்புகள்:

டோஃபூ பஜியா

தேவையான பொருட்கள்:

டோஃபூ (சோயா பன்னீர்) - 200 கிராம்
வெங்காயம் - 1
தக்காளி - 2
குடைமிளகாய் - 1
இஞ்சி - சிறுதுண்டு
மஞ்சள் பொடி - 1 ஸ்பூன்
பச்சை மிளகாய் - 2
கரம்மசாலாப்பொடி - 2 ஸ்பூன்
உப்பு - ருசிக்கு

செய்முறை:

சிறிதளவு சமையல் எண்ணெயில், நறுக்கிய வெங்காயத்தை வதக்கவும். பின்னர் நறுக்கிய குடைமிளகாய், தக்காளி சேர்த்து வதக்கவும். இஞ்சி, பச்சை மிளகாயைச் சேர்த்து கிளறவும். மஞ்சள் பொடி கலந்து, பொடியாக நறுக்கப்பட்ட டோஃபூவைக் கொட்டிக் கிளறி, தேவையான உப்பு சேர்த்துக் கிளறவும். கரம்மசாலா பொடி தூவி இறக்கவும்.



''மாப்பிள்ளைப் பையன் கார் மெக்கானிக்கா?''

''ஏன் கேட்கறீங்க?''

''பொண்ணு எந்த வருஷ மாடல்னு கேட்கறானே!''

- ஜோசப் காமராஜ்

மிகவும் சுவையான பஜியா, கோதுமை சார்ந்த சிற்றுண்டிகளுக்குப் பொருத்தமாக இருக்கும்.

டோஃபூ மசால் தோசை

தேவையானவை:

டோஃபூ _ 200 கிராம்
வெங்காயம் - 2
தக்காளி - 2
பச்சை மிளகாய் - 4
மஞ்சள் தூள் - 1 டீஸ்பூன்
உப்பு _ ருசிக்கு
எண்ணெய் _ தேவையான அளவு

செய்முறை:

டோஃபூவை பூப்போல துருவிக் கொள்ளவும். அடிகனமான வாணலியில் ஒரு ஸ்பூன் எண்ணெய் விட்டு, வெங்காயம், தக்காளி, பச்சை மிளகாய் வதக்கி, மஞ்சள் தூள், உப்பு சேர்த்து கலக்கவும். நன்றாக தளரக் கொதித்ததும், துருவிய டோஃபூ சேர்த்துக் கிளறவும். டோஃபூ மசாலா தயார்!

வழக்கமான முறையில், தோசை தயாரித்து, அதற்குள்ளே டோஃபூ மசாலாவைப் பரப்பி, மூடி சட்னி, சாம்பாருடன் பரிமாறலாம்.

டோஃபூ பைனாப்பிள் சலாட்

தேவையானவை:

டோஃபூ _ 200 கிராம்
பைனாப்பிள் _ 100 கிராம்
வெள்ளரிப் பிஞ்சு _ 250 கிராம்
பச்சைமிளகாய் _ 3
இஞ்சி _ சிறு துண்டு
மிளகுத் தூள் _ ருசிக்கு
எலுமிச்சை சாறு _ ஒரு கப்
உப்பு _ ருசிக்கு

செய்முறை: பைனாப்பிள், டோஃபூ, இஞ்சி, வெள்ளரிப்பிஞ்சு போன்றவற்றைப் பொடியாக நறுக்கிக் கொள்ளவும். அத்துடன் உப்பு மற்றும் மிளகுத்தூள் சேர்க்கவும். இறுதியில் எலுமிச்சை சாறு சேர்த்து நன்றாக கலந்து பரிமாறவும். சுவையான புரதமும், நார்ச்சத்துமிக்க சலாட் தயார்!

சோயா மில்க் டோஃபூ பாயஸம்

தேவையானவை:

சோயாபால் _ 800 மில்லி
சர்க்கரை _ 100 கிராம்
டோஃபூ _ 100 கிராம்
ஏலக்காய்த்தூள் _ சிறிது
குங்குமப்பூ அல்லது கேஸரி பவுடர் _ 1 சிட்டிகை
முந்திரி _ 6
உலர் திராட்சை - 8

செய்முறை:

சோயாபாலை நன்றாக கொதிக்க வைத்து, அரை லிட்டர் அளவுக்குச் சுண்ட வைக்கவும். இதனுடன், பொடியாக்கிய டோஃபூவை வறுத்துச் சேர்க்கவும்.

ஒரு கொதி வந்ததும், சர்க்கரை சேர்த்து கலக்கவும். இறக்குவதற்கு முன் ஏலத்தூள், கேஸரிப் பவுடர் சேர்க்கவும். முந்திரி, திராட்சையை நெய்யில் வறுத்து சேர்த்து, சூடாகவும், குளிரூட்டியும் பருகலாம். சுவை உத்திரவாதம்.

- ஆர். லலிதா

அப்பா... டப்பா!



''டாக்டர்! எனக்குத் தூக்கத்துல நடக்கற வியாதி இருக்கு டாக்டர்.''

''அதெல்லாம் இருக்கட்டும்; அதை ராத்திரி இரண்டு மணிக்கு தூக்கத்திலேயே நடந்து வந்து, வீட்டுக் கதவைத் தட்டிச் சொல்லணுமா?''

— தஞ்சை மகா



''நம்ம படத்துக்கு 'அப்பா'ன்னு பெயர் வச்சா பொருத்தமா இருக்கும்னு நினைக்கிறேன்!''

''வேண்டாங்க! படம் நல்லா இருந்தாலும் மோனைக்காக 'டப்பா'னு விமர்சனம் எழுதிடுவாங்க!''

— உ. ராஜாஜி



''பையன் டீ.வி. நாடகத்துல நடிக்கிறான். நல்லா வரணும்னு ஆசீர்வாதம் பண்ணுங்க!''

''மெகாராசனா இரு!''

— தெ. இராமன்



''மன்னா, பிச்சைக்கார வேஷம் தரித்து நகர்வலம் போனீர்களே, என்னவாயிற்று?''

''சரியான வசூல் போங்கள். தொடர்ந்து போவதாக உத்தேசம்!''

— வி. சகிதா முருகன்



மதுரை ஒத்தக்கடை கிராமத்தில் உள்ள 'யானை மலை' படத்தை வைத்திருப்பது அதிர்ஷ்டம் தரும் என இவ்வூர் மக்கள் நம்புவதால், வீடு, கடைகள் மற்றும் வியாபார ஸ்தலங்கள் அனைத்திலும் யானை மலை படத்தை வழிபடுகிறார்கள்.

"யானைமலையைக் கும்பிட ஆரம்பித்த பிறகு என்னோட தொழில் நன்றாக நடக்கிறது" என்று கூறுகிறார் முடி திருத்தும் குமார். இவரைப் போலவே பலரும் இதே ரீதியில் கருத்து தெரிவித்தனர்.

அதிர்ஷ்ட மலை!

"யானை மலை அடிவாரத்தில் உள்ள நரசிங்கம் கிராமத்தில் பெருமாள் கோவில் உள்ளது. சக்தி வாய்ந்த தெய்வம். இங்கு ஆண்டு தோறும் மாசி மாதத்தில் கஜேந்திர மோட்சத் திருவிழா சிறப்பாக நடைபெறும். இந்த மலையின் வடிவம் யானை ஒன்று அமர்ந்திருப்பது போன்ற தோற்றத்திலிருப்பதால் இம்மலையை நாங்கள் விநாயகரின் அம்சமாகவே வணங்கி வருகிறோம்" என்றார் ப்ரியம் ஸ்டுடியோ நடத்தும் கதிர்வேல்.

இம்மலையைச் சுற்றிலும் பல இடங்களில் கல் உடைக்கும் குவாரிகள் இருந்தாலும் இந்த யானை மலையில் மட்டும் கல் உடைப்பதில்லை.

சாமி மலையாச்சே!

படம், தகவல் :
ஏ.மது

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621.
Annual Subscription : India : Rs. 330/-; Overseas : Rs. 2000/- (Air Mail)
Half Yearly Subscription : India : Rs. 165/-; Overseas : Rs. 1000/- (Air Mail)


கர்ப்பத்திற்கு பிறகு,
ஸ்ட்ரெச் மார்க்குகள்
உங்களை இவ்வாறு
விளங்கச் செய்கிறது... ஸ்ட்ரெச்நில் கொண்டு
நீங்கள் அவைகளைத்
தவிர்த்தாலே தவிர
• ஸ்ட்ரெச்மார்க் என்றாலே, உங்கள் சருமத்தின் மீது விகாரமான, நிரந்தர தழும்புகள்.
• கர்ப்பத்தின் நான்காவது மாதத்திலிருந்து, பிரசவம் வரை, தினமும் இருமுறை ஸ்ட்ரெச்நில் தடவுங்கள்.
• அரிப்பை கட்டுப்படுத்தி, எலாஸ்டிசிடியை அதிகரிக்க, ஸ்ட்ரெச்நில்லில் ஆறு இயற்கை உட்பொருட்கள் உள்ளன.
• ஸ்ட்ரெச்நில் உங்களுக்கும் உங்கள் குழந்தைக்கும் பாதுகாப்பானது என்று மருத்துவக் குறிப்பீடுகள் தெரிவிக்கின்றன.
SKIN CLINIQ
STRETCH NIL
CLINICALLY PROVEN
STRETCH NIL
ஸ்ட்ரெச் மார்க்குகளைத் தவிர்ப்பதற்கான ஹெர்பல் லோஷன்
தாயாகப் போகிறவர்களின் சருமம் என்றும் இளமையுடன் விளங்க.
குஃபிக் பையோசயன்ஸஸ் லிமிடெட் வழங்கும் ஒரு தரம்வாய்ந்த தயாரிப்பு.
எச்சரிக்கை: ஒரு முறை ஸ்ட்ரெச் மார்க் வந்துவிட்டால், அதை குணப்படுத்த முடியாது.
CODE/523/01/18A/9-01 TAM




இலவச இணைப்பு
கல்கி
KALKI 13.1.2002
இப்படி ஒரு குடும்பத்தை இனி பார்க்க முடியுமா?

ஷேப்ர்ஸ் கொண்டு சரியான வடிவத்தின் சேலன்ஜை எடுங்கள்.

மேலும் உங்களுக்குக் கிடைக்கும் மேலான பாதுகாப்பை உணருங்கள்.

சரியான வடிவத்தைக் கொண்ட ஷேப்பர்ஸ், இடப்பக்கத்திலுள்ள நேப்கினைப் போல நீளமாகவும் அகலமாகவும் உள்ளது.

ஆனால், அதிக உறிஞ்சும் தன்மைக்கு இதன் இறுதி பாகம் அதிக அகலமாக உள்ளது.

சிறந்த வசதியை அளிக்க விசேஷமாக இறுக்கி அழுத்தப்பட்டுள்ளது.

சாதாரண நீள் சதுரம் வடிவில் நேப்கின் | ஷேப்பர்ஸ்

ரூ. 19.50 8 அடங்கிய பேக்கிற்கு

ஷேப்பர்ஸின் (எபிடி) அப்ஸார்ப் ப்ரொடெக்ஷன் டெக்னாலஜி சேனல்கள், ஈரத்தை உள்ளுக்கிழுத்து, சீராகப் பரப்பி, மேல்மட்டம் மற்றும் பக்கங்களை உலர்வாக வைக்கிறது.



CODE/522/01/17A/9-01 TAM

ரூ. 36/-க்கு 15 அடங்கிய பேக்கும் கிடைக்கிறது.

Shapers® – நம்பகத்தின் வடிவம்

வழங்கும் தரம் வாய்ந்த தயாரிப்பு.

பாலவாக்கத்தில் உள்ள கவுஹர் அஜீஸ் வீட்டுக்குள் நுழைந்ததும், இருபதுக்கும் மேற்பட்ட நாய்களும், பூனைகளும் செல்லமாகக் குரைத்துக் கொண்டும், வாலை ஆட்டிக் கொண்டும் நம்மைச் சுற்றி வளைத்துக் கொள்கின்றன. என்னதான் புன்னகை செய்து சமாளித்தாலும், கொஞ்சம் பயமாகத்தான் இருந்தது!

இவங்க குடும்பம் ஐந்தறிவு சமாசாரமானது!



'ஸ்பிரிங்கில்', 'ஜிஞ்சர்', 'ஷேடோ', 'காஸ்பர்', 'பக்தி', 'ஹேராலியோ' ஏகப்பட்ட செல்லப் பிராணிகள், பெட்ரூமிலும், சமையலறையிலும் சர்வசாதாரணமாகப் புழங்கிக் கொண்டிருக்க, வீட்டின் வெளிப்புறத்தில் குரங்குகள், ஆந்தை, முயல்கள் எல்லாம் சேர்ந்து மினி ஜூ போன்ற சூழ்நிலையை உருவாக்கியிருந்தது.

"இதெல்லாம் என்னங்க... ஒருசமயம் என்னிடம் எழுபது நாய்க்குட்டிகள் இருந்தன. இப்போது இருபது நாய்க்குட்டிகளும், பதினான்கு பூனைக்குட்டிகள் மட்டுமே உள்ளன" என்று சொல்லி அசத்துகிறார் கவுஹர் அஜீஸ். இவர் அகில இந்திய கால்நடை பாதுகாப்பு கமிஷனின் உறுப்பினர், பாரதிய பிராணி நல சங்கமான 'மித்ரா'வின் செயலாளர்!

ஏதாவது பிராணி அடிப்பட்டுக் கிடந்தால், உடனே அங்கே ஆஜராகி, அதற்கு மருத்துவ சிகிச்சை தந்து, தன்னுடைய பராமரிப்பில் வைத்துக் கொள்ளும் கவுஹர், ஆந்தை, கிளி போன்ற பறவைகளைப் பறக்க விட்டு

விடுகிறார்.

"எந்த இடத்தில் பிராணிகள் வாழ வேண்டும் என இயற்கை நிர்ணயிருத்திருக்கிறதோ, அங்குதான் அவை வாழ வேண்டும். நாய், பூனை முயல்களை மட்டும் வீட்டில் வைத்துக் கொள்வேன். தகுதியானவர்கள் யாராவது கேட்டால், வளர்க்கக் கொடுப்பேன்.

"மின்சாரம் தாக்கப்பட்டு கிடந்த குரங்கு ஒன்றை கொண்டு வந்தேன். வந்த நிமிடத்திலிருந்து என்னிடமிருந்த நாய்க்குட்டியுடன் பாசமாகப் பழக ஆரம்பித்துவிட்டது. அந்த நாய்க்குட்டிக்கு கால்கள் மட்டும் 'சாக்ஸ்' போட்டது மாதிரி, வெள்ளை வெளேரென்று அழகாக இருக்கும். குரங்கு போகிற இடமெல்லாம் நாய்க்குட்டியைத் தூக்கிக் கொண்டுப் போகும். நாய்க்குட்டியும் குரங்கு ஊட்டி விட்டால்தான் சாப்பிடும். சாதாரணமாகவே, குரங்குக்குத் துணி என்றால் கொள்ளை ஆசை. நானும் அதற்கு ஒரு 'டவல்' கொடுத்திருந்தேன். அந்த டவலை, அழகாக விரித்து, மடியில் போட்டுக் கொண்டு, நாயக்குட்டியைப் படுக்க வைத்துக் கொள்ளும். நம்பினால் நம்புங்கள், ராத்திரியெல்லாம் உட்கார்ந்துகொண்டே தூங்கும்! பாவம், ஒருநாள் அந்த நாய்க்குட்டி இறந்து விட்டது. அப்போது அந்த குரங்கு அழுத அழுகை, பட்ட வேதனை! வார்த்தையில் விவரிக்க முடியாது. அந்த நாய்க்குட்டி மாதிரியே வேறு ஒரு குட்டியை அந்தக் குரங்குக்குக் கொடுத்தேன். ஆனால் அந்தக் குரங்கு, தொடக்கூட இல்லை."

"'மங்களம் பாடவும்'னு ஓர் அன்பர் சீட்டு அனுப்பியிருக்கார். அவள் பாட மாட்டாள். தம்பூராவை மட்டுமே மீட்டுவாள் என்று தெரிவித்துக் கொள்கிறேன்!"

- புளியரை கணேசன்



"அண்ணாநகரில் ஒரு முறை ஐந்தடி நாகபாம்பு ஒரு வீட்டுக்குள் நுழைந்துவிட, கவுஹருக்குத் தகவல் வந்திருக்கிறது. அதை அடித்துக் கொல்ல முயற்சி செய்கிறார்கள் எனத் தெரிந்ததும், உடனே அருகிலிருந்த காவல் நிலையத்துக்கு ஃபோன் போட்டு, போலீஸை அந்த இடத்துக்குப் போகச் செய்து, பாம்புக்கு பந்தோபஸ்து ஏற்பாடு செய்துவிட்டாராம். அரைமணி நேரத்துக்குள் ஸ்பாட்டுக்கு விரைந்த கவுஹர், பாம்பைக் காப்பாற்றி, கிண்டி பாம்புப் பண்ணையில் சேர்ப்பித்திருக்கிறார்.

"எவ்வளவோ வி.ஐ.பிக்கு பாதுகாப்பு கொடுத்திருக்கிறோம். ஆனால் அதிலெல்லாம் கிடைக்காத மனநிறைவு இன்றைக்குக் கிடைத்தது. தேங்க்ஸ் மேடம்" என்றார்களாம் அந்தப் போலீஸ்காரர்கள்.

"கிண்டி பூங்காவில், 'ரம்பா' என்றொரு கரடிக் குட்டி இருக்கிறது. அது என்னைப் பார்த்தவுடன் குதித்துக்கொண்டு ஓடோடி வரும். அதை முதன்முதலில் வீதியில் பார்த்த போது, எனக்கு அழுகையே வந்துவிட்டது. முதுகெல்லாம் ரத்தக் காயமாகிச் சீழ் பிடித்திருந்தது. ஒரு பல்கூட இல்லை. தாயத்துக்காக உடல் உரோமத்தை எல்லாம் சொட்டை சொட்டையாகப் பிடுங்கியிருந்தார்கள். பற்களை, கல்லால் அடித்தே பிடுங்கியிருக்கிறார்கள். பாவம்... கரடியை வைத்துக் கொண்டு, பிழைப்பு நடத்திவிட்டு, சரியாகச் சாப்பாடு கூட போடவில்லை. அதன் தினசரி உணவு என்ன தெரியுமா? நாலு பொறை பிஸ்கட்!

"அந்த ஆள் இலேசில் கரடியை விடவில்லை. நானும் விடவில்லை. கோர்ட்டுக்குப் போய் ஜெயித்தோம். இப்போது ரம்பா பூங்காவில் ஆரோக்கியமாக உள்ளது. என்னைப் பார்த்தாலே அதற்குத் தனி குஷி வந்து விடும். கையைத் தடவிக் கொடுக்கும். சுற்றிச் சுற்றி வந்து நக்கும். அதன் முதுகைக் காட்டி நிற்கும். நான் செல்லமாக வருடித் தர வேண்டுமாம்... இதே மாதிரி நிறைய கேஸ்கள். சுப்ரீம் கோர்ட் வரைகூட போய் ஜெயித்திருக்கிறேன்" என்கிறார் கவுஹர்.

இவர் வளர்க்கும் நாய், பூனைகளை, போட்டிகளில் கலந்து கொள்ளச் செய்து, நிறைய பரிசுகளை வாங்க வைத்திருக்கிறாராம்.. வீடு நிறைய மெடல்களும், சர்டிபிகேட்களும் உள்ளன. அதையும் பெருமையோடு எடுத்துக் காட்டுகிறார். நல்ல அம்மா, நல்ல பிள்ளைகள்!

- ரஜினி ராஜேஷ்

படங்கள்: **யோகா**



புற்று நோய்க்கு தெய்வீக இயற்கை மூலிகை மருத்துவம்



நம உடலில உள்ள ஒவ்வொரு செல்களும் வளருகின்றன. ஒவ்வொரு நிமிடமும் பழைய செல்கள் அழிந்து புதிய செல்கள் உருவாகி கொண்டே இருக்கின்றன. இதற்கு இயற்கையாகவே ஒரு கட்டுப்பாடு உள்ளது. ஆனால் சில செல்கள் கட்டுப்பாடின்றி உடலில் எந்த இடத்திலும் பல்கிப் பெருக வளர ஆரம்பிக்கும். கட்டுப்பாடு இல்லாமல் வளர்ச்சியடையும் செல்கள் ஒரு கட்டியாக மாறுகிறது. இதைத்தான் புற்றுநோய் என்கிறோம். எல்லா ரக புற்று நோய்களுக்கும் சில வகை பழக்க வழக்கங்களே காரணமாக இருக்கின்றன. புகையிலை போடுவதால் வாயில் புற்று நோய், சிகரெட் பிடித்தல் காரணமாக நுரையீரல், தொண்டை, உணவுக் குழாய், மூத்திரைப் பையில் புற்று நோய், பொடி போடுவதால், மூக்கில் புற்று நோய், மது அருந்துவதால்காமாலை வந்தால் கல்லீரல், இரைப்பையில் புற்று நோய் அதிக குழந்தைகளை பெறுதல், பல ஆண்களுடன் தொடர்பு கொள்ளுதல் ஆகியவற்றை கர்ப்பப்பை புற்று நோய், ஏற்படுகின்றது. மேலும் நாம் உண்ணும் உணவு வகைகள் தயாரிப்பில் நிலங்களில் அதிகமாக இரசாயன உரங்கள், மருந்துகள் சேர்ப்பதாலும், சுகாதாரமற்ற சுற்றுபுற சூழ்நிலைகளாலும், அவ்வப்போது நாம் உபயோகிக்கும் இரசாயன மாத்திரைகளாலும் அதிகமான கோபம், பயம், மன உளச்சல், பரபரப்பு அடிக்கடி உணர்ச்சி வசப்படுதல் போன்றவற்றின் காரணமாக தோன்றும் நரம்புத் தளர்ச்சியாலும் புற்று நோய் வரலாம். ஒரு புற்று நோய் செல் பல்கி பெருகி புற்று நோய் கட்டியாக மாறுவதற்கு குறைந்தது 7 முதல் 10 ஆண்டுகள் ஆகும்.

புற்றுநோய் ஆரம்ப அறிகுறிகள் : ஒவ்வொரு உறுப்புக்கும் எந்தவிதமான நோய் வந்தாலும் ஒரே விதமான அறிகுறிகள் தான் தென்படுகின்றன. உதாரணமாக காச நோய், நிமோனியாக் காய்ச்சல் ஆகியன நுரையீரலைத்தாக்கும்போது இருமல், சளி, மூச்சு வாங்குதல், சளியில் இரத்தம் ஆகிய அறிகுறிகள் தென்படுகின்றன. நுரையீரலைப் புற்றுநோய் தாக்கும் போதும், இதே அறிகுறிகள்தான் இருக்கும். இதேபோன்று வயிற்றுப் புண்ணுக்கு இருக்கும் அறிகுறிகள்தான் இரைப்பையில் புற்றுநோய் வந்தால் இருக்கும். எனவே எந்த நோயின் அறிகுறிகளும் இரண்டு வாரத்திற்கு மேல்இருந்தால் உடனடி மருத்துவ ஆலோசனை அவசியம். எச்சில் துப்பும்போது ரத்தம் வந்தால் அலட்சியப்படுத்தக் கூடாது. ஏனெனில் புற்று நோய்க்கென தனிப்பட்ட அறிகுறிகள் கிடையாது. பொதுவான அறிகுறிகளுடன் புற்று நோய் இருக்க வாய்ப்புகள் அதிகம்.

புற்றுநோய்க்கு தெய்வீக மூலிகைகள் : வேப்பிலை, வில்வம், துளசி, மாவிலை, அருகம்புல், அத்தி, வெற்றிலை, தும்பை, கீழாநெல்லி, நித்திய கல்யாணி, முருங்கை, நெல்லி, கரிசலாங்கண்ணி, வல்லாரை ஆகியவைகளை பொடி செய்து பின் சமஅளவில் ஒரு பாட்டிலில் கலந்து வைத்துக் கொள்ளவும். பின் இதில் இருந்து இரண்டு ஸ்பூன் தூள் எடுத்து ஒரு டம்ளர் தண்ணீரில் கலந்து உணவுக்கு ஒரு மணி நேரம் முன்பாக காலை, பகல், இரவு ஆகிய மூன்று வேளையும் உட்கொள்ள வேண்டும். இம் மூலிகைகளினால் முதலில் புற்று செல்கள் பெருகி வளர்ச்சி அடைவது தடுக்கப்படுகின்றது. பின்னர் புற்று செல்கள் உருவாகாமலும், கட்டிகள் உடைந்து மெதுவாக வெளியேற்றப்படுகின்றது. இந்த தன்மை மேற்கூறிய மூலிகைகளுக்கு உண்டு என்பது மறுக்கப்படாத உண்மையாகும்.

புற்று நோய்களைத் (தவிர்க்கும்) தடுக்கும் உணவு வகைகள் : நோயாளிகளுக்கு பச்சை காய்கறிகள் நல்லது. மஞ்சள் நிறத்திலும், பச்சை நிறத்திலும் உள்ள காய்கறிகள் மற்றும் பழங்கள் புற்று நோயைத் தடுக்க கூடியவை. இவற்றில் வைட்டமின். A, C சத்திகள் அதிகம். வைட்டமின் A-வில் பீட்டாகரோட்டின் என்ற பொருள் உள்ளது. இது ஒரு ஆண்டி ஆக்சிடெண்ட் புற்றுநோயை தடுக்கும் குணம் இதற்குண்டு. **காரட், தக்காளி, மாம்பழம், பலாப்பழம், கொய்யா, ஆரஞ்சு, ஆப்பிள், திராட்சை, எலுமிச்சை, நெல்லிக்காய், முட்டைகோஸ், பீட்ரூட் போன்றவற்றில் மேற்சொன்ன சத்துக்கள் அதிகமுள்ளன.** இவற்றை அடிக்கடி உண்பவர்களுக்கு புற்றுநோய் வரவாய்ப்பில்லை. இதேபோல் நார்பொருள் நிறைந்த உணவுகளை சாப்பிட்டால் பெருங்குடல் தொடர்பான புற்றுநோய்கள் வருவது குறைகிறது. கோதுமை, கம்பு, சோளம், கேழ்வரகு, தேங்காய், நிலக்கடலை, அவரை, கத்திரிக்காய், வெள்ளரிக்காய், வெண்டைக்காய், பட்டாணி, வெங்காயம், பேரிச்சம்பழம், வாழைப்பழம் ஆகியவற்றில் நார்ச்சத்து அதிகம். மேலும் முருங்கை கீரை, பொன்னாங்கன்னி கீரை, மணத்தக்காளி கீரை, மஞ்சள், சீரகம், துளசி, கசகசா, வெள்ளைப்பூண்டு ஏலக்காய் ஆகியவற்றிலும் புற்று நோயைத் தடுக்கின்ற நோதிப் பொருட்கள் அடங்கியுள்ளன. ஆகவே இவைகளை அடிக்கடி நமது உணவுகளில் தவறாமல் பயன்படுத்துவது நல்லது.



தெய்வீக மூலிகை வைத்தியர்கள்

தலைமை முகவரி : Dr.M.குருபரன் & Dr.M.சபாபதி, Dr.M.சிவசக்தி, S/o Dr.C.K.மாணிக்கவாசகம்
P.B.No:30, No.2, திருநாத முதலி நகர், (காலேஜ் எதிரில்), திருப்பத்தூர் (N.A.A.) - 635 601 ✆ 04179-20469, 22769
சென்னை கிளை : 115, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, (பிரின்ஸ் மேனர் பக்கத்தில்) கெல்லீஸ், சென்னை - 10
இரு முகவரிகளிலும் ஆலோசனை நேரம் தினமும் காலை 10 to 1, மாலை 5 to 7 ✆ 6424285, 6427638

குறிப்பு : சென்னை, வேலூர், காஞ்சீபுரம், கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, பெங்களூர், ஓசூர், சேலம், ஈரோடு, கோவை, மதுரை, தஞ்சாவூர், திருச்சி, நாமக்கல், தர்மபுரி, திருப்பூர், உடுமலைபேட்டை, திண்டுக்கல், தூத்துக்குடி, திருநெல்வேலி, நாகர்கோயில், விருதுநகர், கரூர் போன்ற நகரங்களில் வைத்தியரை நேரில் சந்திக்க முகாம் - விவரம் தெரிந்து கொள்ள மேலே உள்ள முகவரிக்கு கடிதம் (அ) போன் மூலம் தொடர்பு கொள்ளவும்.

தகவல் : டாக்டர் அவர்களின் மூலிகைகள் பற்றிய 27 வருட அனுபவ ஆராய்ச்சிகள் அடங்கிய **'எளிய முறையில் பிணி அகற்றும் தெய்வீக மூலிகைகள்'** என்ற புத்தகத்தினை பதிவுத் தபாலில் பெற ரூ.70/-ம் இயற்கை உணவுகளின் பெருமைகள். அதிசய உண்மைகள் அடங்கிய **'என்றும் இளமை காக்கும் இயற்கை உணவுகள்'** என்ற புத்தகத்தினை பதிவுத் தபாலில் பெற ரூ.60/-ம் மூலிகை மகிமை பற்றிய ஆடியோ கேசட்டை பெற ரூ.60/-ம் தலைமை முகவரிக்கு D.D. அல்லது M.O. அனுப்பவும்.

& 8ந் தேதி - மும்பை : காலை 9 to இரவு 8 மணி வரை The South Indian Concerns Ltd., 401, Telang Road, Matunga, (CR), Ph : 4011589

8 & 19ந் தேதி - புதுடெல்லி : காலை 9 to இரவு 8 மணி வரை South Indian Hotel, 10211, Padam Singh Road, Ajmal Khan Road, Karol Bagh, : 5717126, 23651

கண்ணகி உருகிறாள்

திவ்யாவுக்கு எப்போதுமே எல்லாமே சுத்தமாகவும், அழகாகவும் இருக்க வேண்டும்.

ஆனால், மெகா சோம்பேறி.

யாராவது வந்து வேலை எல்லாம் செய்து கொடுத்தால் தேவலை என்று எண்ணுகிற வள்.

இன்றோ, முழுதாய் அவளிடம் மாற்றம் தெரிகிறது.

தனது உடன்பிறப்பான சோம்பலை உதிர்த்து அரபிக்கடலில் வீசி விட்டு, இடைத் தேர்தல் தொண்டனின் சுறுசுறுப்புடன் இயங்கிக் கொண்டிருக்கிறாள்!

இதனால், வியப்பில் விழி பிதுங்கிக் கொண்டிருந்தான் கணேஷ்.

ஒவ்வொரு இடமும் சுத்தமானது.

ஒவ்வொரு பொருளும் சுத்தமானது.

அதனதன் இடத்தில் அமர்த்தப்பட்டது.

வீடே வசீகரமாகிக் கொண்டிருந்தது.

ஓரிடத்தில் கால் நிற்காதவளாகி, ஓடி ஓடிச் சுத்தம் செய்தபடி இருக்கும் மனைவியைக் குறும்புப் பார்வை பார்த்துச் சிரித்தான்.

"என்ன, சிரிக்கிறாப்ல இருக்கு? அதுவும் என்னைக் கிண்டல் பண்ற மாதிரி...!" என்று கேட்டாள் திவ்யா.

"ஆமாம்... ஆமாம்..." என்று அழுத்தமாகவே கூறினான் கணேஷ்.

"உக்கும்!" என்று தோள் பட்டை நொறுங்க ஓர் இடி இடித்தவள், "இப்ப எதுக்காம் அப்படி?" என்று முகத்தில் சிவப்பேற்றிக் கேட்டாள்.

"ஒரு சோம்பேறி சுறுசுறுப்பாய் மாறினது போல் தெரியுதே, அதுக்காக! நேற்றைக்கு குருக்ஷேத்திர யுத்த களம் போல் இருந்த வீடு இன்றைக்கு கலாக்ஷேத்திரம் போல் கலையம்சத்தோடு மாறுதலை அடைஞ்சிட்டிருக்கே, அதுக்காக!" என்றான்.

குரல் நெடுகிலும் குறும்பின் அதிர்வுகள்!

"ஒரு சோம்பேறியோட மனைவி சோம்பேறியாத்தானே இருக்க முடியும். என்னிக்காச்சும் எனக்கொரு சின்ன ஹெல்ப் பண்ணியிருப்பீங்களா நீங்க? சரிஞ்சு கிடக்கிற லோட்டா ஒண்ணை நிமிர்த்தி வைச்ச அனுபவமாச்சும் உண்டா உங்களுக்கு? இதுலே என்னைச் சொல்றீங்களாக்கும் சோம்பேறின்னு" என்று பாப்கார்னாய்ப் பொரிந்து வெடித்தாள்.

இதற்கு அவன் சிரித்ததில், அவளது கோபம் எகிறலுக்கு ஆயத்தமானது.

அவனோ, அதைப் பற்றிப் பொருட்படுத்தாமல், இன்னும் கொஞ்சம் சப்தமாகச் சிரிப்பைத் தூக்கி வீசினான்.

முணுமுணுத்துக் கொண்டே, ஃப்ளவர் வாஸைத் துடைத்து மெருகேற்றி, பூக்களையும் இலைகளையும் அழகுபடச் செருகி வைத்தாள்.

"சூப்பர்!" என்று கண்ணைச் சிமிட்டிச் சிரித்தான்.

"ஆமா, கமெண்ட் அடிச்சிட்டு மட்டும் இருங்க. ஒரு ஹெல்ப்பும் பண்ணிடாதீங்க..." என்று பொரிந்தபடியே, திரைச் சீலைகளைக் கழற்றி வாஷிங்மிஷினுக்குள் போட்டாள்.

"வரப்போற கண்ணகிக்காக நீ ரொம்பத்தான் அலட்டிக்கிறே. அத்தோட என்னையும் அதட்டிக்கிறே!" என்றான் கணேஷ்.

"ஆங், பெரிய்ய டி. ராஜேந்தர்! எதுகை மோனையெல்லாம் தூள் பறக்குதே! இப்போ நான், நாளைக்கு நம்ம வீட்டுக்கு வரப் போற கண்ணகிக்காகத்தான் இத்தனை அலட்டலும் பண்றேன். வந்து ஒரு கை தரலாமில்லே?"

"ஒரு கையென்ன, என்னோட ரெண்டு கைகளையுமே கழற்றி, உன் கையிலே

தந்திடறேன். நான்கு கரங்களோடு நின்று, கண்ணகியின் வருகையைக் கௌரவப்படுத்த ஆவன செய்து கொள்ளேன்" என்றான்.

"திமிர்! திமிர்!"

"ஒரு திமிர் பிடிச்சவனுக்குத்தான் நீ மனைவியாய் இருக்கணும்னு உன் தலையிலே எழுதியிருக்கும் போது, நான் திமிர் கொண்டவனாத்தானே இருந்தாக வேண்டியிருக்கு."

"இருக்கும், இருக்கும். கண்ணகி வர்றதுக்குள்ளே செய்ய வேண்டிய வேலைங்க ஏகப்பட்டது கிடக்கு. உங்ககிட்டே மல்லு பண்ண எனக்கு நேரமில்லை. நான் போறேம்ப்பா..." என்றவள், விறுவிறுவென்று ஒட்டடை அடிக்கத் துவங்கினாள்.

சுவர் மூலைகளில் கூடு பரப்பியிருந்த சிலந்திகள், ஓட்டமெடுத்தன. அந்தப் பகுதிகள் பளிச்!

"நீயுமாச்சு; உன் கண்ணகி விஜயமுமாச்சு..." என்ற கணேஷ், ரிமோட்டை எடுத்து டிவிக்கு உயிர் கொடுத்தான்.

'நாளைக்கு கண்ணகி இங்கே வர்றப்ப, வீடு அலங்கோலத்தோட கிடந்துச்சுன்னா, இந்த வீட்ல உள்ளவங்க, வீடு எந்த லட்சணத்திலே கிடந்தாலும் கவலைப்பட மாட்டாங்க போலிருக்கு, அதனாலே நாமும் உடம்பு தேயாமல், ஒப்பேத்து வேலை பண்ணிட்டுப் போயிடலாம் போலிருக்கேன்னு நினைச்சிடுவா. அதான் வீட்டு வேலைக்கு வரப் போற கண்ணகி வர்றதுக்குள்ளே நம்ம வீட்டைப் 'பளிச்'னு ஆக்கி, வீடு எப்பவும் இப்படித்தான் 'சுத்தமா இருக்கணும்'கிறதை உணர்த்தணும். அதுக்குத்தான் இந்தப் பாடுபடறேன்...' என்று தன்னுள் கூறிக் கொண்டே மேலே படிந்திருந்த தூசியை உதறினாள் திவ்யா. ○



சாந்தி தந்த அந்த வார்த்தை!

சி.சு. செல்லப்பாவின் 'சுதந்தர தாகம்' நாவலுக்குக் கிடைத்திருக்கிறது கடந்த ஆண்டுக்கான சாகித்ய அகாடமி விருது.

"இந்த விருது அவர் உயிரோடிருக்கும்போது கிடைத்திருந்தால் அவருக்குப் பயன்பட்டதாக இருந்திருக்கும்" என்கிறார் செல்லப்பாவுக்கு நெருக்கமானவரான எழுத்தாளர் சுப்ரபாலன்.

பழுத்த காந்தியவாதியான செல்லப்பா, 'சுதந்தர தாகம்' நாவலை தமது சுயசரிதையாகத்தான் எழுதியிருக்கிறார். அந்த நாவலில் வரும் சிவராமன் பாத்திரம் வேறு யாருமல்ல. செல்லப்பாவேதான்.



நூற்றுபத்து சிறுகதைகள் எழுதியுள்ள செல்லப்பா, 'என் தொழில் எழுத்து' என்று கடைசி மூச்சு வரை இருந்தவர்.

புதுக்கவிதை இயக்கமாக வளர்ந்த சமயத்தில் தமது 'எழுத்து' பத்திரிகை மூலம், முதல் விதை தூவியவர் இவர்தான்.

தமது நூல்களைச் சொந்தச் செலவில் தயாரித்து, தானே சுமந்துகொண்டு பள்ளி கல்லூரிகளுக்குச் சென்று விற்று வந்திருக்கிறார் செல்லப்பா.

"சுதந்த தாகம்' நாவலை எழுதி முடித்த பின், எந்தப் பதிப்பாளரும் புத்தகம் போட முன் வராத நிலையில், அவரது நண்பர் சச்சிதானந்தமும் செல்லப்பாவின் 'எழுத்து' பிரசுரமும் இணைந்துதான் வெளியிட்டன.

சின்னமனூரில் பிறந்து வத்தலகுண்டில் வளர்ந்த இவர், தாம் வாழ்ந்த காலத்தில் கஷ்டங்களை மட்டுமே அனுபவித்தவர். திருவல்லிக்கேணியில் வசித்த போதும் துன்பங்களே அவருக்குத் துணையாக இருந்தன. வீடு முழுவதும் புத்தகங்கள் கூடவே வறுமையும்!

"சி.சு. செல்லப்பாவின் இறுதி யாத்திரையின்போது 'ஜெய் ஹிந்த்' என்று சொல்லி அவரது நண்பர்கள் வழியனுப்பி வைத்தார்கள். அந்த வார்த்தையிலேயே அந்தக் காந்தியவாதியின் ஆத்மா சாந்தியடைந்திருக்கும்" என்று சொல்லும் சுப்ரபாலன் "சாகித்ய அகடமிக்கு மேலுலகம் மீது அதிக நம்பிக்கையிருக்கிறது. அதனால்தான் பெரும்பாலான விருதுகளை, இறப்புக்குப் பின் தருகிறது என்று நினைக்கிறேன். எப்படியோ செல்லப்பாவுக்கு அளித்த விருதின் மூலம் சாகித்ய அகாடமி காலம் கடந்தாலும் பேசப்படும்" என்கிறார்.

- ஏக்ஜி


புத்தாண்டு மற்றும்
பொங்கல் நல்வாழ்த்துக்கள்....
AAB
அடையார்
ஆனந்த பவன்
ஸ்வீட்ஸ் & ஸ்நாக்ஸ் (A/C)
9,4th street, Parameswari Nagar, Adayar, Chennai 600 020.
© 4460202. Tel fax : 044 - 4460607.
✱அடையார் © 4912047 ✱புரசைவாக்கம் © 6421626 ✱ஜார்ஜ்டவுன் © 5388845
✱அண்ணாநகர் © 6206377 ✱வண்ணாரப்பேட்டை © 5964291 ✱தி.நகர் © 4328550
✱பாண்டிபஜார் ©8207270 ✱மகாராணி தியேட்டர் அருகில் 5955533 ✱ஆவடி © 6373402
SITA



● 'குழந்தை பிறந்தவுடன், அது அழ வேண்டும், இல்லையெனில் மற்றவர்கள் அழும்படி ஆகிவிடும்' என்று தமாஷாக-ஆனால் ஆழ்ந்த அர்த்தத்துடன் வாரியார் சுவாமிகள் சொல்லுவார். இது விஞ்ஞான ரீதியில் சரி. வெளி உலகில் பிரவேசித்தவுடன், காற்றை நன்றாக உள்ளே இழுத்து மூச்சு விடத் தொடங்கும் தருணம்தான் அக்குழந்தையுடைய வாழ்க்கைக்குப் பிள்ளையார் சுழி. அந்த கணத்தில் அது வீறிட்டு அழும். – அழவேண்டும்!





குவாகுவா




● குழந்தைக்குத் தேவையான அளவு தனக்குப் பால் சுரக்குமா என்று சந்தேகம் கொள்ளவே கூடாது. தனக்குப் போதுமான அளவு பால் சுரக்காது என்று ஒருபெண்மணி நினைக்கத் தொடங்கினாலே, பால் சுரப்பது பாதிப்புக்குள்ளாகிவிடும். 'நம் குழந்தைக்கு நம்மால் தேவையான அளவுக்குத் தாராளமாக பால் தர முடியும்' என்று பாசிடிவ்வாக நம்பிக்கை கொள்ள வேண்டும். அதுவே தாராளமாகப் பால் சுரப்பதற்குத் தூண்டு கோலாக அமையும். வீடுகளில், துயரமான சம்பவங்கள் ஏதும் நிகழ்ந்தால் கூட, அதனால் தாய்க்கு ஏற்படும் பாதிப்பு, பால் சுரப்பிலும் பிரதிபலிக்கும். எவ்வளவுக்கெவ்வளவு குழந்தைக்குப் பால் கொடுக்கிறோமோ, அவ்வளவுக்கவ்வளவு, பால் சுரக்கும் என்பதை மறந்து விட வேண்டாம்!

தாய்க்கு ஜுரம் போன்ற சாதாரண சுகவீனம் ஏற்பட்டால் தாய்ப் பால் கொடுப்பதை நிறுத்த வேண்டிய அவசியமில்லை. அதே சமயம், கண்டிப்பாகப் பால் கொடுக்கவே முடியாதபடி சீரியஸான உடல் நலக் குறைவு என்றால், குழந்தைக்குப் பால் தருவதைத் தவிர்த்துவிடுவதுடன், மார்பில் சேரும்பாலை வெளியேற்றி விடுவதும் நல்லது.


● சில சமயங்களில், பிறந்த குழந்தையின் தொப்புள் கொடி உதிர்வதற்கு முன்பு, குழந்தை கையை, காலை ஆட்டுவதாலோ, வேறு ஏதாவது காரணங்களாலோ, தொப்புளிலிருந்து இலேசாக ரத்தம் வரக் கூடும். இதில் பயப்பட ஒன்றுமில்லை. வெதுவெதுப்பான நீரில் தொப்புளைச் சுத்தம் செய்துவிட்டு, பாண்டேஜ் துணியோ அல்லது நன்கு காய்ந்த, சுத்தமான துணியோ மடித்து வைத்து விட்டால் போதுமானது. சீழ்பிடிக்கும் நிலை என்றால் டாக்டரிடம் கொண்டுபோய் டிரஸ்ஸிங் செய்யலாம்.

● குழந்தைகளுக்கு உடம்புக்கு வருவதற்கு மிக முக்கியமான காரணம், பால் புட்டிகளின் சுகாதாரமில்லாமைதான்! புட்டியின் உள்ளே இருக்கும் பால் பிசுக்கை முதலில் கொஞ்சம் வெந்நீர் ஊற்றிக் கழுவிவிட்டு, அதன்பின் சோப்புத் தண்ணீரில் பால் புட்டியைக் கழுவ வேண்டும். அதற்குப் பின், நீரில்









பால்புட்டியையும், அதன் மூடி, ரப்பரில் ஆன நிப்பிள் அனைத்தையும் போட்டு இருபது முதல் முப்பது நிமிடங்கள் கொதிக்க வைக்க வேண்டும். அந்தக் கொதி நீரை வடித்துவிட்டு, சிறிது நேரம் கழித்து, புட்டிக்குள்ளும், நிப்பிளிலும் கைவிரல் படாமல் ஜாக்கிரதையாக எடுத்து வைத்து விட வேண்டும். தேவையானபோது, பாலை ஊற்றிக் கொள்ளலாம்.

சில சமயங்களில், புட்டிகளில் கொஞ்சம் பால் மீந்து போகும். அடுத்த சில நிமிடங்

குறிப்புகள்



களில் குழந்தை அதைப் பருகிவிட்டால் சரி! இல்லையெனில் அடுத்தத் தடவை, அதையே கொடுக்காமல் இருப்பது உசிதம்.

இந்தச் சிரமங்களையெல்லாம் தவிர்க்க, தாய்ப் பாலையே கொடுத்துவிடலாம்! அதில், ஸ்டெரிலைசேஷன் பிரச்னை இல்லை. தேவையானபோது உடனடியாகக் கிடைக்கிறது. குழந்தைக்கு அது ஒரு முழுமையான உணவு.



• குழந்தைக்குத் தொண்ணூறு அல்லது நூறு நாள் ஆனவுடன், திட உணவை அறிமுகப் படுத்தலாம். காரணம், பிறந்த குழந்தை வளர்ந்து, சுமார் ஐந்து கிலோ எடை இருக்கும். அதற்கு முழுக்க முழுக்கப் பால் மட்டுமே போதுமானது இல்லை. இரும்புச் சத்து, தாது உப்புக்கள் இவையும் குழந்தைக்குத் தேவை. இந்தத் தேவையை திட உணவின் மூலமே பூர்த்தி செய்ய முடியும். இதுவரை முழுக்க முழுக்க பால் குடித்துக் கொண்டிருந்த ஒரு குழந்தைக்கு, திடீரென்று திட உணவு தர ஆரம்பித்தால், அது எளிதில் ஜீரணம் ஆகுமா என்கிற சந்தேகம் வரலாம். திரவ உணவு சாப்பிட்டுப் பழகிய குழந்தைக்கு முதலில் கஞ்சி போன்ற திட (semi solid) உணவைக் கூட பால், தண்ணீர் இவை சேர்த்து, நீர்க்கச் செய்து பால் போலத்தான் கொடுக்க வேண்டும். கெட்டியாகக் கொடுத்தால், குழந்தை அதை விழுங்க சிரமப்படும். ஜீரணக் கோளாறுகள் வரவும் வாய்ப்பு உண்டு. கஞ்சியில் சர்க்கரை சேர்க்க வேண்டும் என்ற கட்டாயமில்லை.

கேழ்வரகுக் கஞ்சி, அரிசிக்கஞ்சி என்று புதுப்புது உணவுகளை அறிமுகப் படுத்தலாம். ஆனால் ஒரு விஷயம். ஒரு புதிய உணவை அறிமுகப்படுத்துகிறீர்கள் என்றால், தொடர்ந்து சில நாட்களுக்கு அந்த உணவைக் கொடுத்து, பழக்கப்படுத்துங்கள். அந்த நாட்களில் வேறு ஏதாவது ஒரு புதிய உணவை அறிமுகப்படுத்தாதீர்கள். ஏதேனும் ஜீரணக் கோளாறு அல்லது ஒவ்வாமை ஏற்பட்டால் என்ன காரணம் என்று கண்டுபிடிக்க முடியாமல் குழம்பும்



Supplement

படி ஆகிவிடும். எந்த ஒரு புதிய உணவாலும் பிரச்னை என்றால், அதை நுணுக்கமாக கவனித்து, தொடர்ந்து அதைக் கொடுக்காமல் நிறுத்திவிடுங்கள். டாக்டரிடம் குழந்தையைக் கொண்டு போய்க் காட்டுங்கள்.

● இப்போது கடைகளில் மிக நன்றாக விற்பனையாகும் ஒரு ஐட்டம் குழந்தைகளுக்கான 'டயாபர்ஸ்'. இதனை வாங்கி ஜட்டி போலப் போட்டு விட்டால், சிறுநீர், மலம் என்று எல்லாம் குழந்தை அதிலேயே கழித்துவிடும். அதுவும் பயணங்களின் போது இதை வெகு சௌகரியமாக தாய்மார்கள் உணர்கிறார்கள். ஆனால், இவற்றையெல்லாம் பயணங்களிலும் பொது இடங்களுக்குப் போகிற போதும் மட்டும் போட்டு விடலாம். நாள் முழுக்க அணிவிக்க வேண்டிய அவசியம் இல்லை. வெகு நேரம், அதை அணிந்து கொண்டு சிறுநீரும், மலமும் கழிகிறபோது, அதிலேயே ஊறி, சுகாதாரக் கேட்டை ஏற்படுத்த வாய்ப்பு உண்டு. இதனால் தோலில் உறுத்தல் ஏற்பட்டு, குழந்தை அசௌகரியமாக உணரும். தோல் சிவந்து பொறிப்பொறியாக சிறு கொப்புளங்கள் ஏற்படும். ஜாக்கிரதை!

● சில குழந்தைகள் தினமும் மலம் கழிக்காது. இரண்டு தினங்களுக்கு ஒரு தடவை தான் போகும். ஆனால் குழந்தை ஒழுங்காகப் பால் குடித்து ஆக்டிவ்வாக இருந்து தவறாமல் இரண்டு நாட்களுக்கு ஒரு தடவை மலம் கழிக்கும் பட்சத்தில், பயப்படத்தேவையில்லை. பொதுவாக, மலச்சிக்கல் ஏற்பட்டால், உணவு சேரவில்லை என்று அறிந்து கொள்ளலாம். எனவே தாராளமாக பாலும் இடையே குழந்தைக்குத் தண்ணீரும் கொடுங்கள். கை வைத்தியமாக, கொஞ்சம் தண்ணீரில், உலர்ந்த திராட்சை நாலைந்து போட்டு, நன்கு கொதிக்க வைத்து, திராட்சையை நசுக்கி, வடிகட்டி, வெதுவெதுப்பான சூட்டில் குழந்தைக்குக் கொடுத்தால், நிவாரணம் கிடைக்கும். மலச்சிக்கலுக்கு சிலர் விளக்கெண்ணெய் கொடுக்கிறார்கள். அது வேண்டாம்!

● குழந்தையைக் குளிப்பாட்டுகிறபோது, காதுக்குள் தண்ணீர் போகாமல் எச்சரிக்கையாகப் பார்த்துக் கொள்ள வேண்டும். சிலபேர், இதற்காகக் காதில் பஞ்சு வைத்து, விடுவார்கள். இதுவும் சரியில்லை. பஞ்சில் ஊறிய தண்ணீர், காதுக்குள் செல்ல வாய்ப்பு இருக்கிறதல்லவா?

● ஒன்பது மாதங்களுக்குப் பின், குழந்தைக்கு, முறையாக டாய்லெட் பழக்கத்தைக் கற்றுத் தரலாம். குழந்தை டாய்லெட் போகிறபோது, அதை நம் கால்களுக்கு இடையில் அமர்த்திக் கொள்ளலாம்; இல்லையெனில் 'கம்மோடு' பயன்படுத்தலாம். அப்படிச் செய்கிறபோது, வாயால் ஒரு வித்தியாசமான ஓசையை எழுப்பும் பழக்கத்தை வைத்துக் கொண்டு, சில நாட்கள் தொடர்ந்து பழக்கினால், அதன்பின் காலிலோ, கம்மோடிலோ உட்கார்த்தி வைத்து, அந்த குறிப்பிட்ட ஓசையை ஏற்படுத்தினால், குழந்தை தானாகவே டாய்லெட் போக முயற்சி செய்யும். அதுபோலவே, குழந்தையை அவ்வப்போது பாத்ரூமுக்கு அழைத்துச் சென்று சிறுநீர் கழிக்கவும் சொல்லித் தரலாம்.

தகவல்கள் : டாக்டர் இந்திராணி ராஜா

தொகுப்பு : எஸ். சந்திரமௌலி

சிறப்புத் தள்ளுபடி 10%

BAPASI

பிரம்மாண்டமான

25–வது சென்னை

புத்தகக் கண்காட்சி

ஜனவரி – 5ம் தேதி முதல் 19 வரை

இடம் : காயிதே மில்லத் அரசினர் பெண்கள் கல்லூரி, சென்னை – 2

நேரம் :

வேலை நாட்களில் – மாலை 2.30 முதல் இரவு 8.30 வரை
7, 8, 9, 10, 11, 17, 18 தேதிகளில்

விடுமுறை நாட்களில் – காலை 11.30 முதல் இரவு 8.30 வரை
6, 12, 13, 14, 15, 16, 19 தேதிகளில்

நுழைவுக் கட்டணம் ரூ. 2.00 மட்டும்

தினமும் மாலை 6.00 முதல் 7.30 வரை – சிறப்புப் பேச்சாளர்கள்

தேதி	*தலைப்பு*	*பேச்சாளர்*
6.1.2002	பாதை மாறி - படிக்கும் பறவைகள்	ராதாகிருஷ்ணன் IPS
7.1.2002	தமிழர் சரித்திரம்	வலம்புரி ஜான்
8.1.2002	தமிழில் கிரேஸி கிண்டல்கள்	கிரேஸி மோகன்
9.1.2002	அரசியல், இலக்கிய, சினிமா - பார்வை	ஜெயகாந்தன்
10.1.2002	காலம் நமக்குத் தோழன்	லேனா தமிழ்வாணன்
11.1.2002	சிரிப்பேன், சிந்தித்து சிரிப்பேன்	தென்கச்சி சுவாமிநாதன்
12.1.2002	தமிழ் சினிமாவில் தமிழ்	நடிகர் சிவகுமார்
13.1.2002	எங்கேயோ கேட்ட ஒலி, ஒளி - அலைகள்	பால.இரமணி
14.1.2002	'வல்லவர்' குரலுக்கு மதிப்பு இருக்கும்	இறையன்பு IAS
15.1.2002	அன்பிற் சிறந்த தவமில்லை	தமிழருவி மணியன்
16.1.2002	முடிந்த பின்னாலும் பேச்சிருக்கும்	சுதாங்கன்
17.1.2002	'அம்மி குத்த சிற்பி எதற்கு'	அப்துல் ரகுமான்
18.1.2002	'இள'மை இதோ ! இதோ !	இளம்பிறை மணிமாறன்
19.1.2002	'கள'வழி நாற்பது	கா. காளிமுத்து (சபாநாயகர்)

Programmes Sponsored by Eagle Diaries, Chennai

அறுசுவை அரசின் சிற்றுண்டி உண்டு

THE BOOK SELLERS' AND PUBLISHERS' ASSOCIATION OF SOUTH INDIA, CHENNAI - 600 006.

TAMILNADU BOOK HOUSE, Chennai-5

தலம் தோறும் தமிழ்க் கடவுள்

9

சிக்கல் சிங்காரவேலன்

குருஜி ஏ.எஸ். ராகவன்

சிக்கல் என்றதுமே சிங்காரவடிவேலனைத்தான் நினைத்துக் கொள்கிறோம். ஆனால் இத் தலத்தின் மூலவர் இந்த சிங்காரவடிவேலர் அன்று... அவரது பெருமைமிகு தந்தையான சிவபெருமான்தான் திருவெண்ணெய்நாதர் (வடமொழியில் நவநீதேசுவரர்) என்று, பெயரிலும் அழகிலும் மகனோடு போட்டியிட்டபடி மூலவராக விளங்குகிறார். ஞானசம்பந்தரால் பாடப்பெற்ற இத்தலத்து அம்பிகையின் பெயர் வேலொண்கண்ணி! இருவரது திருப்பெயர்களுக்கும் சுவாரஸ்யமான காரணங்கள் உண்டு.

வசிஷ்ட முனிவர் இத் தலத்தில் சிவபெருமானை மிக அன்புடன் வழிபட்டு வந்தார். அவரது பக்தியை மதித்து காமதேனுவை அவருக்கு வழங்கினாராம் இறைவன். காமதேனுவின் பாலிலிருந்து எடுக்கப்பட்ட வெண்ணெயைக் கொண்டு லிங்கம் பிடித்து வழிபட்டாராம் வசிஷ்டர்! அவருடைய பக்தி யோகத்தினால் அந்த லிங்கம் உருகாமல் உறுதியாயிருந்தது. பூஜை முடிந்த பிறகு அதை எடுக்க முயன்றபோது, அகற்ற முடியாமல், சிக்கி நின்றது. அதனால்தான் தலத்துக்குச் 'சிக்கல்' என்றும் இறைவனுக்கு 'வெண்ணெய்ப்பிரான்' என்றும் பெயர் வந்ததாகச் சொல்வர்.

வசிஷ்டர் வழிபட்டதால் இவ்வூருக்கு 'வசிஷ்டாசிரமம்' என்றும் பெயர். மல்லிகை புஷ்பம் அபரிமிதமாகப் பூப்பதால் 'மல்லிகாரண்யம்' என்றும் அழைக்கப்படுகிறது. மல்லிகை இங்கே ஸ்தல விருக்ஷமாகவுமிருக்கிறது. 'கயை' என்ற தீர்த்தம் இருப்பதால் 'கயாசரஸ்' என்றும் ஒரு பெயர் உண்டு.


கோச் செங்கணான் என்ற சோழ மன்னன், சிவபெருமானுக்கு எடுப்பித்த எழுபது கோயில்களுள் இதுவும் ஒன்று.

அம்பிகைக்கு வேலொண் கண்ணி என்ற பெயர் வர தனிக் காரணம் தேவையில்லைதான். வையக முழுமையையும் இலக்காக்கி நோக்கும், அவள் விழிகளின கூர்மையும் சக்திவாய்ந்த பேரொளியும் அப்பெயரை நியாயப்படுத்த போதுமானதே. போதும் போதாததற்கு சிங்கார வேலவனுக்கு அவன் அன்னை சக்திவேலை வழங்கிய பெருநிகழ்ச்சியும் இங்கேதான் நடைபெற்றது.

பராசக்தியான அம்பிகை, தனது சக்தியையெல்லாம் திரட்டி ஞானமே வடிவான வேலாயுதமாக அதை உருமாற்றி, 'சூரனோடு போர் செய்து வெற்றி வாகை சூடி வா!' என்று வாழ்த்தி முருகனிடம் அளித்தாள்.

இந்த நிகழ்ச்சியை, திருப்புகழும் வேல் விருத்தமும் வர்ணிக்கின்றன :


பம்பர மேபோல ஆடிய
சங்கரி வேதான நாயகி
பங்கய சீபாத நூபுரி கரசூலி
பங்கமி லாநீலி மோடிப
யங்கரி மாகாளி
யோகினி
பண்டுசு ராபான
சூரனொ
டெதிர்போர்கண்
டெம்புதல் வாவாழி
வாழியெ



ஞும்படி வீறான வேல்தர
என்றுமு ளானேம நோகர வயலூரா.
- இது திருப்புகழ்.

சிங்காரி யாமளை பவாதிகார்த் திகை
கொற்றி
த்ரியம்பகி அளித்த செல்வச்
சிறுவன் அறு முகன்முருகன் நிருதர்கள்
குலாந்தகன்
செம்பொற் திருக்கை வேலே
- இது வேல்விருத்தம்.

சூர சம்ஹாரத்துக்குப் புறப்படும் வேளையில் தன் பெற்றோர்களை வணங்கி எழுந்த செல்வச் சிறுவன் ஆறுமுகனிடம் சக்திவேலைத் தந்தாள் தாயார். சிவபெருமானும் நீ போய் வானவர் சிறை தீர' போர் புரிந்து வெற்றி வாகை சூடிவா!" என்று



• நவநீதேசுவரர் கட்டுமலை

வாழ்த்தி அனுப்பினார்.

சூரன் சம்ஹரிக்கப்பட்டு நற்கதி அடைய காரணமாயமைந்த ஞான வேலே வழிபாட்டுக்குரியதாகி விட்டது.

தமிழகத்தில் மட்டுமின்றி உலகின் பல பகுதிகளிலும் தெய்வங்களின் கையிலுள்ள ஆயுதங்களை வணங்குவது வழக்கமாயிருந்து வருகிறது. ஆனால் வேல் வழிபாட்டில் தனிச்சிறப்பு ஒன்று இருக்கிறது.


சூரனை சம்ஹரித்த வேல், தீயவற்றை - எதிர்மறை சக்திகளை அழிக்கும் என்பது முதல் நம்பிக்கை. வாழ்வில் பயங்களைப் போக்கி, அனைத்து காரியங்களிலும் துணை நிற்கும் என்பது மற்றொரு நம்பிக்கை. அஞ்ஞானத்தை அகற்றி, மெய்ஞானத்தையும் தொடர்ந்து மோக்ஷத்தையும் அளிக்கும் என்பது இறுதியான முடிவு. இதனால் தான் 'வேலும் மயிலும் துணை', 'வேலுண்டு வினையில்லை' போன்ற வழக்குகள் உருவாகி தமிழில் தடம் பதித்துள்ளன.

கந்தரலங்காரத்தில்,

தேரணி யிட்டுப் புரமெரித்
தான்மகன் செங்கையில் வேற்
கூரணி யிட்ட வாகிக்
கிரௌஞ்சங் குலைந்தரக்கர்
நேரணி யிட்டு வளைந்த கடக
நெளிந்தது சூர்ப்
பேரணி கெட்டது தேவேந்த்ர
லோகம்
பிழைத்ததுவே

என்ற அடிகள் வருகின்றன.

'திரிபுரங்களை எரித்த சிவபெருமானின் மகன் முருகனின் திருக்கரத்திலுள்ள வேலின் கூரிய பாகம், ஒரு பெரும் படை வகுத்தது போல் அமைந்து அணுகுண்டு போல் ஆற்றல் பெற்று, கிரௌஞ்ச மலையைச் சீர்குலையச் செய்து, சீராக அணி வகுத்து நின்ற அசுரர் படை நெளிந்தும் வளைந்தும் நிலை குலைந்து விழச் செய்து, அதற்குப் பின் நின்ற சூரனுடைய பெரும் படைகளையும் சிதறடித்து, தேவலோகத்தைக் காப்பாற்றித் தந்தது... என்பது கந்தரலங்காரச் செய்யுளுக்குப் பொருள்.



• வேலொண்கண்ணி

ஒரே வீச்சில் ஒரே வேல் இத்தனையையும் செய்ய முடியும் என்பது ஏதோ இதிகாச/புராணத்தோடு நின்று விடுகிற தகவல் அல்ல. இந்த வேலின் சக்தியானது மனோ சக்தியின் உருவகம். அதைக் கட்டுப்படுத்தி, சரியான விசை தந்து, சரியான திசை நோக்கிச் செலுத்தும் ஆன்ம சக்தியின் அடையாளமும் அதே வேல்தான்.

மற்றுமொரு தத்துவார்த்தமான விளக்கம் உண்டு :

கருணாஞ்சனக்

கமல விழிப் பொற்பைம்புனக் கரும்பாகிய வள்ளிப் பிராட்டியின் கண்களைப் போல் நீண்டு, கூரியதாக ஒளிரும் வேலுக்குப் பஞ்ச கிருத்ய சக்திகள் இருக்கின்றன. இந்த விளக்கம், வள்ளியின் அங்கங்களை உரு வகப்படுத்திப் பாடியுள்ள 'வேல் வகுப்பைப்' புரிந்து வாசித்தால் கிடைக்கும்.

இந்திரனின் கால் விலங்கை முறித்தது வேல். நக்கீரரைக் குகையிலிருந்து விடுவித்தது. பேய்களின் பசி தணிக்க உணவளித்தது! தேவர்கள், முனிவர்கள். இந்திரன், பிரும்மா, திருமால், பூவுலகத்தோர் என்று அனைவர் துன்பமும் களைந்தது. சூரிய சந்திரர்களும் வடவாமுகாக்னியும் வெட்கிப் போகும் அளவுக்கு இந்த வேல் பேரொளிபொருந்தியது.

அடியவர்களுக்குக் கெடுதல் நினைப் போரின் மன அழுக்குகளை அடியோடு போக்கிவிடும்.

"திருப்புகழ் பாடிவரும் அன்பர்களின் மனத்தை வாட்டக்கூடிய காம, க்ரோத, லோப, மோக மதமாச்சார்யங்களை அறுத்து எறிந்து அவர்களை தர்ம வழியிலே நிலைத்திருக்கச் செய்யும்... தனியாக வழிநடக்கும் போது துணையாக நிற்கும்..."

என்று அருணகிரிநாதர் பட்டியலிட்டுக் கொண்டே போகிறார்.

நக்கீரரோ,

**வீரவேல் தாரைவேல் விண்ணோர்
சிறைமீட்ட
தீரவேல் செவ்வேள் திருக்கைவேல் -
வாரி
குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்புங்
குன்றுந்
தொளைத்தவே லுண்டே துணை**

என்று வேலின் பெருமை பாடுகிறார்.

இத்தனை பெருமைதாங்கிய வேலாயுதமானது 'அஸ்திர தேவர்' என்ற பெயருடன் முருகன் கோயிலில் தனிச் சன்னிதி பெற்று விளங்குவது தமிழ் நாட்டில் சகஜம்.

'அஸ்த்ர தேவாயுதா நமோ நம' என்று திருப்புகழில் வேலுக்குத் தனியாக வணக்கம் சொல்கிறார் அருணகிரிநாதர்.


இவ்வளவு மகிமை வாய்ந்த வேலை, பராசக்தியான அம்பிகை முருகனிடம் கொடுத்த காட்சியை நாம் நேரில் காணவில்லையல்லவா... அந்தக் குறையைத் தீர்க்கின்ற தலம் சிக்கல்! கந்த சஷ்டிக்கு முன் தினம் முருகன் அம்பிகையிடம் வேல் வாங்குவதை இங்கே விழாவாகவே நடத்துகிறார்கள்.

வேல் அளித்த வேலொண் கண்ணியையும் பெற்றுக் கொண்ட சிங்கார வேலனையும் காண நாகபட்டினத்திலிருந்து மேற்கே மூன்று மைல் தூரம் செல்ல வேண்டும். அழகுக்கு அழகு செய்யும் சிங்காரவேலன் உறையும் தலம் சிங்காரச் சிக்கல் என்றும் செல்வச் சிக்கல் என்றும் செல்லமாக அழைக்கப்படுகிறது!

பன்னிரண்டு படிகள் ஏறிச் செல்ல வேண்டும் கோவிலுக்குள். வெண்ணெய்ப் பிரானின் கோயில்தான் என்றாலும் இங்கே எனக்கு தனி முக்கியத்துவம் என்று பறை சாற்றுவது போல் முருகனின் பன்னிரு கரங்களை அடையாளப்படுத்தும் பன்னிரு படிகள். அத்தனை கரங்களாலும் நம்மைத் தாங்கி அழைத்துக் கொள்கிறான்.

***'வாங்கும் எனக்கு இரு கை; ஆனால்
அருளை
வழங்கும் உனக்குப் பன்னிருகை
வடிவேல, நீல மயிலேறும்
தணிகைவளர் முருகா!..'***

என்று ஊத்துக்காடு வேங்கடசுப்பையர் பாடி வைத்திருப்பது நினைவில் எட்டிப் பார்க்கிறது.



முதல் படிக் கருகே சுந்தர விநாயகர் -

• விமானங்களின் தோற்றம்

அருள்வாக்கு



பாப புண்யத்துக்குக் காரணம் என்ன? அவற்றைச் செய்யாமல் நிறுத்த இஷ்டமிருக்கிறது; ஆனால் முடியவில்லை. ஒரு மரத்தை தழைக்காமற் செய்ய வேண்டுமானால் கிளைகளை வெட்டினால் முடியாது; அடி மரத்தை வெட்ட வேண்டும். வீட்டுக் கூரையிலே திரும்பத் திரும்பக் கரையான் புற்று உண்டாகிறது என்றால் மேலெழுந்தவாரியாக அந்தக் கூட்டைப் பெயர்த்தால் போதுமா? போதாது. இன்னோரிடத்தில் புற்று முளைக்கத்தான் செய்யும். கரையான் வைக்கும் தாய்ப்பூச்சியைப் பிடித்து அழித்தால்தான் புற்று எங்கும் எழும்பாமலே போகும். அதுபோலப் பாபத்துக்கு மூல காரணத்தை அரிந்து அதையே அழிக்க வேண்டும். பாபத்துக்கு மூலம் என்ன? கெட்ட காரியத்தினுடைய பலம்தான் பாபம். கெட்ட காரியம்தான் பாப மூலம். கெட்ட காரியம் எதனால் செய்கிறோம்? நமக்கு ஒரு வஸ்து வேண்டும் என்ற ஆசையிருக்கிறது. அதை அடைவதற்குக் குறுக்கு வழிகளிற் போகிறோம். அது பாபம். இந்திரியங்கள் ஒன்றை அழகானதென்று அறிவதுதான் ஆசைக்கு காரணம்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர
சரஸ்வதி சங்கராச்சார்ய
ஸ்வாமிகள்

சிங்கார வேலனுக்குச் சற்றும் சளைக்காத அழகுடன் காணப்படுகிறார். படி ஏறிச் சென்று வெண்ணெய்ப் பிரானைக் கருவறையில் காண்கிறோம். உத்ஸவமூர்த்திகள் எழுந்தருளும் மண்டபத்தில் சிங்காரவேலரின் உத்ஸவ மூர்த்தம் - ஆறு முகங்களும் பன்னிரு கரங்களுமாக, வள்ளி - தேவயானையுடன் மயில் மேல் அமர்ந்த தோற்றம் - வர்ணனையிலடங்காத அழகுடன் வரவேற்கிறது. சலவைக் கல் மண்டபத்தில் பொன்மேனியனாக இந்தச் சிங்காரவேலன் நின்ற திருக்கோலத்தில் இரு தேவியருடன் விளங்குகிறான்.

நித்தியமும் ஆறுகால வழிபாடுகள் இங்கே முறைப்படி நடந்தாலும் கந்த சஷ்டி விழா மிகச் சிறப்பானது. கந்தசஷ்டிக்கு முந்தைய தினம் முருகப் பெருமான் வேக வேகமாகச் சென்று அன்னையிடம் வேல் பெற்றுத் திரும்பும் காட்சி கண்கொள்ளா காட்சியாக இருக்கும். ஓடிச் செல்கிற வேகத்தில் முகம் வியர்த்துப் போக, அந்த வியர்வை முத்துக்கள் முருகன் மூர்த்தத்தின் முகத்தில் துளிக்கும் அற்புதம் ஆண்டுதோறும் நடைபெற்று வருகிறது. அந்த அதிசயத்தைக் காண திரள் திரளாக அடியார்கள் வருவதும் நிகழ்கிறது.

ஆடிக்கிருத்திகை, கந்தசஷ்டி, திருக்கார்த்திகை, தைக் கிருத்திகை போன்ற சிறப்பு விழா தினங்களில் தங்க வாகனத்தில் சிங்கார வேலன் பவனி வருவான்.

பொங்காதரவோடும் அடங்கா மகிழ்வோடும்
பெருங்காதலோடும் ஐயன் தங்கமயிலினிடை துங்கவடிவினொடும்

வருகின்ற அழகை 'சிங்கார வேலவன் வந்தான்' என்ற பாடலில் பாபனாசம் சிவன் பாடியிருப்பதும் நினைவுக்கு வரும்.

அருணகிரிநாதர் இந்த முருகனை மிக உருக்கமாகப் பாடியிருக்கிறார். "உன் பாதத்தைச் சரணம் எனப் பற்றும் என் மேல் உன் விழி அருள் வைத்துக் குன்றாத வாழ்வை அருள்வாயே" என்று இறைஞ்சுகிறார்.

'புலவரை ரக்ஷிக்குந் தாருவே!' என்று முதலில் உரிமை கொண்டாடிவிட்டு,

'திக்கெட்டும் போயு லாவிய புகழாளா!' என்று பராவி.

அலர்தரு புட்பத் துண்டாகும் வாசனை
திசைதொறு முப்பத் தெண்காதம் வீசிய
அணிபொழி லுக்குச் சஞ்சார மாமணி யிசையாலே
அழகிய சிக்கற் சிங்கார வேலவ
சமரிடை மெத்தப் பொங்கார மாய்வரும்
அசுரரை வெட்டிச் சங்கார மாடிய பெருமாளே

என்று முடிக்கிறார்.

இதைத்தான் பாரதியாரும் முருகனின் 'இலக்கணமாகவே' வகுத்திருக்கிறார்:

வெற்றிவடிவேலன் அவனுடை வீரத்தினை
புகழ்வோம்
சுற்றி நில்லாதே போ, பகையே! துள்ளி வருகுது
வேல்.

(அடுத்த வாரம் எண்கண் வேலவன்...,


புத்தாண்டு
நல்வாழ்த்துக்கள்
பொங்கலை முன்னிட்டு
உயர்தர 916 KDM நகைகள்,
வெள்ளி சாமான்கள் பலவித
டிசைன்களில் நிறைந்துள்ளன.
தங்க நகைகளுக்கு
சேதாரம் இல்லை
பொங்கலை முன்னிட்டு அனைத்து
முன்னணி மில்களின் சர்ட்டிங், சூட்டிங்,
சேலைகள் மற்றும் ரெடிமேட் ஆடைகள்
குவிந்தவண்ணம் உள்ளன.
பட்டுக்கு
தனிப்பிரிவு
ஜெயச்சந்திரன்
கோல்டு ஹவுஸ்
ஜெயச்சந்திரன்
டெக்ஸ்டைல்ஸ்
தரம்! ரகம்!! பிரமாண்டம்!!!
25,27 ரங்கநாதன் தெரு, (மாம்பலம் ரயில் நிலையம் அருகில்),
தி.நகர், சென்னை–17 ✆4342879, 4322627.
ஞாயிறும்
விற்பனை உண்டு


அழகு மிளிரும் அடர்த்தியான கூந்தலுக்கு நம்பகமான ஒரே கூந்தல் தைலம்
குணா கூந்தல் தைலம்
குணா கூந்தல் தைலம் தொடர்ந்து உபயோகிப்பதால், முடி நீண்டு
அடர்த்தியாக வளர்வதுடன், முடி உதிர்தல், செம்பட்டை நிறம், பித்த நரை,
தலை அரிப்பு, பொடுகு மற்றும் சொறிந்தால் செதில் உதிர்வதையும்
தடுக்கிறது. சித்த மருத்துவ முறைப்படி தயாரிக்கப்பட்டது. எந்தவித பக்க
விளைவுகளையும் ஏற்படுத்தாது. ஆண்கள் பெண்கள் அனைவருக்கும் ஏற்றது.
FREE
அறிமுக சலுகை !
அகஸ்தியர் நீலிபிருங்காதி தைலம் அறிமுக
சலுகையாக, 100ml குணா கூந்தல் தைலம் 2 வாங்கி
Rs. 34/ மதிப்புள்ள 100ml அகஸ்தியர் நீலி
பிருங்காதி தைலத்தை இலவசமாக பெற்றிடுவீர்.
இச்சலுகை ஸ்டாக் உள்ளவரை மட்டுமே
இச்சலுகை இல்லாமலும் குணா கூந்தல் தைலம் கிடைக்கும்
இளமையோடு மிளிர, குணா கூந்தல் தைலம்
குளிர்ச்சிக்கு அகஸ்தியர் நீலிபிருங்காதி தைலம்
இப்பொழுது குணா 100ml
பாட்டில் விலை Rs.49.50
Mfrs:- Agasthiar Pharmaceuticals, Post Box No. 588, Salem-5



• முனியாண்டி பூசாரி



• முனியாண்டி சாமி





மல்லுக்கட்டும் ஜல்லிக்கட்டு!

அலங்காநல்லூரில் அமைந்துள்ள அருள்மிகு முனியாண்டி கோவில்தான் ஜல்லிக்கட்டை உலகப் பிரசித்திப் பெற்ற வீர விளையாட்டாக ஆக்கி வைத்த ஆலயம்.

"எங்க ஊரில் சுமார் நூற்று ஐம்பது வருடங்களுக்கு முன்பு தொடர் நோய்கள் ஏற்பட்டு, உயிரிழப்பும், பொருளிழப்பும் மக்களை வாட்டி வந்தன. ஊரேக் கூடி நின்று வேண்டியபோது, 'ஜல்லிக்கட்டு' என்னும் நிகழ்ச்சியைத் தொடர்ந்து நடத்த வேண்டும் என தெய்வவாக்குக் கிடைத்ததாம். அதன் பிறகு, ஜல்லிக்கட்டு நடத்தாத ஆண்டு வெள்ளச்சேதமோ, வறட்சியோ ஏற்படுவதும், நடத்தப்படும் ஆண்டு வளமையாகவும் இருந்தது. என்னுடைய இருபதாவது வயதில், என்னுடைய தலைமையில் மக்கள் கூடி, வருடந்தோறும் தவறாமல் ஜல்லிக்கட்டு விழா எடுக்க முடிவு செய்தோம். அதன்படியே, தொடர்ந்து எழுபத்தைந்து ஆண்டுகளாக ஜல்லிக்கட்டு நடக்கிறது. முனியாண்டியின் அருளும் கிடைத்து வருகிறது" என்றார் முனியாண்டி கோவில் பூசாரியான தொண்ணூற்று ஐந்து வயதான பெரியவர் முனியாண்டி.

காளையின் திமிலை பிடித்தபடி, காளைவாடி வாசலிலிருந்து, சுமார் ஐம்பது மீட்டர் தொலைவில் உள்ள மாரியம்மன் கோயில் வரை, பிடி விழாமல் செல்ல வேண்டும். மற்றபடி போட்டியில் கலந்து கொள்ள விதிமுறைகளோ, கட்டுப்பாடோ கிடையாது. காளையை அடக்குபவர்களுக்கு, காளையின் வலிமையைப் பொறுத்து, தங்கம், வெள்ளி, பரிசுப் பொருள் என குவியும். அய்யூர் அயோத்தி, பொதும்பு சேகர், முடுவார்பட்டி சஞ்சீவி, அலங்காநல்லூர் ஸ்ரீதர், துரைப்பாண்டி போன்றோர் எண்ணற்ற காளைகளை அடக்கி பல பரிசுகளை வென்றுள்ளனராம்.

எவ்வித இடையூறு ஏற்பட்டாலும், நிகழ்ச்சி நடைபெறும் நாளோ, நேரமோ தள்ளிப் போடப்படாமல், குறிப்பிட்ட நாளன்றே எழுபத்தைந்து வருடமாக ஜல்லிக்கட்டு நடப்பதும் விசேஷம்தான்!

படங்கள், பேட்டி: தடாதகை



ஸ்ரீ மஹா ப்ரத்யங்கிரா தேவி, ஸ்ரீ நீலசரஸ்வதி தேவி, ஸ்ரீ விரஜா கால பைரவர் திருக்கோவில்



அபராஜிதபுரி, சோழங்கநல்லூர்,
சென்னை - **600 119.**
போன்: **4501404**

கல்வி அபிவிருத்தி, வெளிநாடு பயணம் மற்றும் உத்யோக கார்ய வெற்றிக்காக வேண்டி **24.1.2002 தசமிதிதி முதல் 7.2.2002** தசமி வரை தொடர்ந்து 15 நாட்கள் நிறைவேறும்.

ஸ்ரீ நீலசரஸ்வதி மஹா பூஜை


'ஏகம் சத் விப்ரா பிருதாவதந்தி' என்ற வேத வாக்குக்கு ஏற்ப, பராசக்தியே சரஸ்வதியாக, ஆய கலைகள் அறுபத்தி நான்குக்கும் தலைவியாக, **மேதா, பிரக்ஞா, பிரயா, வித்யா, த்ருதி, ஸ்ம்ருதி, வித்யேஸ்வரீ வாகீஸ்வரீ** என்ற அஷ்ட வித்யா தேவிகளாக விளங்கி குழந்தைகள், மாணவ மாணவியருக்கு ஞாபக சக்தியை வழங்கி, கல்விகளிலும் வித்தைகளிலும் மேன்மையுற செய்கிறாள்.


சம்சார யாத்திரையை கடப்பதற்கு அருள்பவளும் கடல் பிரயாணங்கள், வெளிநாட்டு பயணம் இவற்றை சுகமாக்கி தருபவளும் லௌகீக வாழ்வில் காம உணர்வை அடக்கி, சிக்கல்களை கத்தரித்து, அகங்கார குணத்தை விலக்கி, முட்டாள் தனத்தை வெட்டி வீழ்த்தி ஆணவம் கன்மம் மலம் என்ற மூன்று தீய குணங்களை அழித்து சாந்த குணம் சாதுர்யபுத்தி இவற்றை வழங்கி நம்பினோரைக் காப்பாற்றும் மஹாசக்தியாக விளங்குபவள்தான் **ஸ்ரீ நீலசரஸ்வதி.** இவளை உபாசித்து வெற்றிக்கண்டவர் வியாச மகரிஷி. ஆதிசங்கரருக்கு 16 ஆண்டுகள் ஆயுள்பலம் கொடுத்து சனாதான மதத்தை ஸ்தாபிக்க செய்தவளும் இந்த **நீல சரஸ்வதிதான்.**


மூடனையும் வித்வானாக்கும் இவளது மூல மந்திரம் **"ஓம் ஹ்ரீம் ஸ்தீரிம் ஹீம்பட்"** தொடர்ந்து 15 நாட்கள் இம்மஹாவித்யா சக்திக்கு அபிஷேகம், படி பூஜை, புஷ்பாஞ்சலி மூலமந்திர ஜெபம் நிறைவேற்றுவதற்கு ஏற்பாடுகள் உள்ளன. அபிஷேக உபயம் ரூ. 1000- படி பூஜை உபயம் ரூ. 5000 புஷ்பஞ்சாலி ரூ. 600 உபயம் செய்யும் மாணவ மாணவியர் ஜாதகத்தை ஸ்ரீ நீலசரஸ்வதியின் கமலமலர் பாதங்களில் வைத்து சங்கல்ப்ப பூஜைகள் செய்து பிரசாதம் பெற்றுக் கொண்டு கல்வி, பரீக்ஷையில் நல்ல மதிப்பெண் பெறலாம்.

இந்த பூஜையில் கலந்து கொள்ள விரும்பும் மாணவ மாணவியரின் ஜாதக நகலுடன் பெயர் நட்சத்திரம், கோத்திரம், படிக்கும் கல்வி ஸ்தாபனத்தின் பெயர், எழுதப் போகும் பரீக்ஷையின் பெயர் முகவரி இவற்றை எழுதி உபயதொகைக்கான Draftஐ Sri Prathiyangira Ashram Trust என்ற பெயருக்கு எடுத்து பதிவு தபாலில் அனுப்பி, இந்த மஹாபூஜையில் கலந்து கொள்ளலாம். நீலசரஸ்வதி யந்திரம், படம், டாலர், ரக்ஷைகள் பிரசாதமாக அனுப்பப் பெறும்.


குறிப்பு: அன்னபூரணி, வராஹி, சரபேஸ்வரர், அனுமார், முருகன், ஐயப்பன், மஹாலக்ஷ்மி, நாகசக்தி சந்நிதிகள் பூர்த்தி செய்வதற்கு உபயதாரர்கள் தேவை.


வீடு
குன்னூர்... அழகான பண்ணை வீட்டில் ராஜா விளையாடிக் கொண்டிருந்தான்~
ராஜா, சாப்பிட வாயேண்டா! அப்படி என்னதான் இருக்கு இந்தத் தோட்டத்துல?
போம்மா, உனக்கு இயற்கையை ரசிக்கவே தெரியலை...
இந்தக் காட்டிலே தனியா இருக்கப் பிடிக்கலேயில்லைங்க.. குளிர் வேற... கோவையில் போயி செட்டிலாயிடலாங்க.
அதெல்லாம் முடியாது. இனிமே இதைப்பற்றிப் பேசாதே!
ஆறு மாதம் கழித்து~
என்ன ஆச்சு, ஏன் ஒரு மாதிரியா இருக்கீங்க?
இந்த வீட்டை வித்துடப் போறேன் மீனாட்சி..


ஐய்ய்யோ! எம்பா வீட்டை விக்கப் போறீங்க?
பிஸ்னஸ்ல நஷ்டமாயி டுச்சுடா! அதான் வீட்டை விலை பேசிட்டேன். நமக்கு வீட்டைவிட மானம்தான் பெரிசு!
ஊருக்குக் கிளம்பும் நேரத்தில்..
போப்பா நான் வரலை. நான் இங்கேயே இருந்துடப் போறேன். நீங்க போங்க..ஊ..ஊ..!
அந்தக் கோவை வீட்டிலேயும் தோட்டம், பறவை பட்டாம்பூச்சி எல்லாம் இருக்கு... அடம் பிடிக்காதே
ஊஹூம் நான் வரமாட்டேன்! அங்கே ராஜேஷ் இருப்பானா! ப்ரதா இருப்பாளா! நான் வரலை!
அடம்பிடித்த ராஜாவைச் சமாதானப்படுத்த வழிதெரியாமல் வலுக்கட்டாயமாக அழைத்துக்கொண்டு அவன் பெற்றோர் கோவைக்குப் பயணமானார்கள்..


இருபது வருடம் கழித்து...... ராஜா தன் மனைவியிடம் சொன்னான்—
நான், எங்கப்பா அம்மாவோட ஜமீன்தார் பண்ணை வீட்டிலே வாழ்ந்த மாதிரி, நான், நீ ராமு மூவரும் வாழணும்னு ஆசையா இருக்கு, இந்திரா.
கவலைப் படாதீங்க... கடுமையா உழைச்சு சம்பாதிச்சு அந்த வீட்டை வாங்கி விடலாம்!


சில வருடங்களில் ராஜா, அந்த ஜமீன்தார் பண்ணை வீட்டை விலைக்கு வாங்கினான்~
ரொம்ப சந்தோஷமா இருக்கு இந்திரா, பல வருஷக் கனவு நனவாயிடுச்சு!
வீடு ரொம்ப அழகா இருக்குங்க.. அடுத்த வாரமே இங்கே குடி வந்துடுவோங்க!


கோவை வீட்டைக் காலி செய்துவிட்டு பண்ணை வீட்டுக்குக் கிளம்பும் நேரத்தில் ராமுவைக் காணவில்லை-
அவன் ஃப்ரெண்ட்ஸ் வீட்டிலே கூட காணலீங்க...
புறப்படற சமயத்துலே எங்க போயிட்டான் இவன்?
கடைசியில் மொட்டை மாடியில் ஒரு மூலையில் உட்கார்ந்திருந்த ராமுவைக் கண்டுபிடித்தான் ராஜா....
என்னடா ராமு, இது அக்ரமம்... உன்னை எங்கெல்லாம் தேடறது!
நான் வரலைப்பா... என் ஃப்ரெண்ட்ஸை விட்டுட்டு வரமாட்டேன்.
அப்பாவுக்குப் பிள்ளை தப்பாம பிறந்திருக்கு!
கதை : சுந்தரி

ஆலப்பாக்கத்தில், அழகான வீட்டில், மனைவி ஆனந்தியுடன் தனிக்குடித்தனம் நடத்தி வரும் வையாபுரியிடம், 'கல்யாணத்துக்கு முன் - கல்யாணத்துக்குப் பின்' என சிறு குறிப்பு வரையச் சொன்ன போது...

"ராமகிருஷ்ணன்'ங்கிற என்னோட பேர்ல 'ராமர்' இருக்கிறதனாலேயோ என்னவோ, ராமர் 14 வருஷம் காட்டுக்குப் போன மாதிரி, நானும் சினிமாவுலே நடிக்கிறதுக்காக, சொந்த ஊரை விட்டுட்டு, பதினாலு வருஷத்துக்கு முன்னாடி சென்னைக்கு வந்தேன்.

"கல்யாணத்துக்கு முன்னாலே, எல்லாமே செல்ஃப் சர்வீஸ்தான். நானே வீட்டைப் பெருக்கி, துணி துவைச்சுன்னு அய்யா ரொம்ப பிஸி. ஒட்டல்ல பசிக்கு ஏத்த மாதிரி, புளி சாதம், தக்காளி சாதம்னு சமாளிச்சுப்பேன். ஆனா இப்ப அந்த மாதிரி இல்லை. வீட்டுலே 'ஸ்விட்ச் ஆன்' செஞ்சு விளக்கேத்த ஆனந்தி வந்தாச்சு. சுடச்சுட ருசியான சாப்பாடு கிடைக்குது.

"கல்யாணத்துக்கு முன்னாலே அசைவம்னா பாத்திக் கட்டி வெட்டுவேன். இப்ப தீவிர வெஜிடேரியனா மாறிட்டேன். இப்ப, வீட்டுலே சிகரெட் பிடிக்கிறதை நிறுத்திட்டேன். 'தம்' பிடிச்சு விட்ட ஒரே பழக்கம் இதுதான்!

'வரதட்சணை வாங்காமல், எளிமையா கல்யாணம் செஞ்சுக்கணும்'னு ஒரு கொள்கை வைச்சிருந்தேன். இந்தக் காரணத்துக்காகவே, என் கல்யாண விஷயத்துலே, அம்மாவைக் கலந்துக்காம நானே முடிவெடுத்தேன். டைரக்டர் சுரேஷோட அம்மா, ஆனந்தியோட ஃபோட்டோவைக் காண்பிச்சாங்க. நான்





வாழ்க்கையிலே பெண் பார்க்கப் போனது ஆனந்தியை மட்டும்தான். அப்படிப் பார்த்த ஒரே பொண்ணுக்கும் என்னைப் பிடிச்சுப் போனதனாலே, 'டக்'னு தாலி கட்டிட்டேன். ம்... எனக்கு அதிர்ஷ்டம் கம்மிங்க... இல்லேன்னா, இந்தச் சாக்குலேயாவது நாலைஞ்சு பொண்ணு பார்த்திருக்கலாம்..!"

"ஒரு தடவை கேஸ் சிலிண்டர் தீர்ந்து போய், 'புக்' செய்த சிலிண்டரும் வராமல் தவிச்சேன். வீட்டுல ஸ்டவ் இருந்தது. இவரைக் கூப்பிட்டு, பற்றவைக்கச் சொன்னது, ஏடாகூடமாப் போச்சு. அது பம்ப் ஸ்டவ்; 'பம்ப் அடிக்கிறேன் பேர்வழி'ன்னு ரொம்ப வேகமா, பலத்தைக் காட்டப் போய், அந்த பம்ப் கையோட வந்துடுச்சு. அதோட, ஸ்டவ்வில் இருந்த மண்ணெண்ணெய் எல்லாம் வேட்டியிலே கொட்டி, தரையிலே சிந்தி... அன்னிக்கு சமையலறையைச் சுத்தம் செய்ய எனக்கு இரண்டு மணி நேரமாச்சு! அந்தச் சம்பவத்துக்கு அப்புறம், அவரை நான்



விசிலடிக்குதே, குக்கா!

கிச்சன் பக்கமே கூப்பிடறதில்லே!" - **இது ஆனந்தி வையாபுரியின் ஆனந்த அனுபவம்!**

"என்னைப் பொறுத்தவரைக்கும் கல்யாணத்துக்கு முன்னாலே நான் செய்ததுதான் தனிக்குடித்தனம். இப்ப மனைவியோட, இரண்டு நாய்க்குட்டிகளோட, நிறைய செடி கொடிகளோட இருக்கறதனாலே, இது கூட்டுக் குடித்தனம்தான்! இன்னும் நாலு மாசத்துல எங்க வீட்டுக்கு இன்னொரு புது ஜீவன் வந்துடும்... (ஆனந்தி ஆறு மாத கர்ப்பம்!)

"அதென்ன மந்திரமோ மாயமோ தெரியலை. நான் ஏழெட்டு தடவை லைட்டரால சுட்டாக் கூட எரியாத அடுப்பு, அவங்க தொட்டா ஒரே ஸ்ட்ரோக்ல பத்திக்குது.

"குக்கர் இப்படி சீறி சீறி விசிலடிக்கும்னு எனக்குத் தெரியாது. பள்ளிக்கூட பி.டி. கிளாஸ் ஞாபகத்துல ட்ரில் பண்ண ஆரம்பிச்சுடறேன்."


– மடிப்பாக்கம் வெங்கட்

படங்கள் : யோகா

ஓவியர்: முகங்கள் பல!

கோயில் தேர்களில் அலங்காரத்துக்காக இரு பக்கமும் தொங்க விடப்படும் தொம்பையை மேடை அலங்காரத்துக்குக் கொண்டு வந்த ஓவியர் யாராவது உண்டென்றால் அது ரமணியாகத்தான் இருக்க முடியும். அதுபோல இன்னொரு புதுமை, கார்க் மரத்தின் பட்டையை வைத்து, ம்யூரல்களும், கொலாஜ்களும் செய்த முதல் ஓவியரும் ரமணிதான். (45 நாளில் 25 படைப்புக் களை உருவாக்கி, ஓவியக் காட்சி முடிவதற்கு முன்பே அத்தனையும் விற்றுப் போன சாதனையும் படைத் தவர்!)





கல்யாண மண்டபங் களில் வித்தியாசமான அலங்காரம், மேடை அலங்காரத்தில் புதுமை, மடித்துத் தூக் கிக் கொண்டு போய் விடுகிற ஸ்டேஜ் பின் னணிகள், நிறுவனங் களின் உள்ளமைப் புகள், பரத நாட் டியக் கலைஞர் களுக்கான நடன உடைகள் வடி வமைப்பு - ஒன்று பாக்கி யில்லை. ரமணியைத் திடீ ரென்று பாடகரா கவும் பார்க்க லாம். நாட்டியம் நன்றாக இருந் தது என்றால் உடனே ஞாயிற் றுக் கிழமை 'எக்ஸ் பிரஸி'ல் ரம ணியின் விமர்சனம் வரும். படிக்கலாம்.

சபாக்களில் ரமணியை வெகு எளிதில் அடையா ளம் கண்டுபிடித்து விடலாம். அத்தனை உயரம். நீண்ட கதர் ஜிப்பா, பைஜாமாவின் நிறமும், தைத்திருக்கும் விதமும் வித்தியாசமாகவே இருக்கும்.

கர்நாடக இசைக் கலைஞர்கள் சிலரையும், நடனமணிகளையும் ஐம்பது நாள் இரவு பகல் பாராமல் போர்ட்ரெயிட்டாக வடித்த ரமணியின் இந்தப் படைப்புக்கள் வின்யாசாவில் கலக்கின.

இந்த வருடம் அகடமி ஸ்டேஜும், நாரத கான சபா ஸ்டேஜும் ரமணியின் கைவண்ணம்தான்!

- எஸ்.வி.என்.



எச்சரிக்கை!

இந்தக் கட்டுரையைப் படித்துவிட்டு வேறு யாரைப் பற்றியும் நினைக்க வேண்டாம்.

அன்றுதான் முதன் முதலாக வழக்காடுவதற்காக கோர்ட்டுக்குச் செல்கிறான் அந்த இளைஞன். அவனது கட்சிக்காரரின் சாட்சியைக் கூண்டிலேற்றி விசாரிக்க வேண்டும். ஸீனியர் மிக கவனமாக அந்த இளைஞனிடம் "நடக்காத சில விஷயங்களைச் சாட்சி சொல்வார்; நீ அதற்கேற்றபடி கேள்விகளைப் போட வேண்டும்; அப்போதுதான் வெற்றி பெற முடியும்" என்கிறார். மிகவும் தயக்கத்துடன் கேட்டுக் கொண்டான் இளைஞன். ஸீனியராயிற்றே! எதுவும் சொல்ல முடியாது. அவர் சொல்படியே கோர்ட்டுக்குப் போய் சாட்சியை விசாரித்து வந்தாகி விட்டது. 'சபாஷ்!' என்றார் ஸீனியர். "ஸார்... நாளையிலிருந்து நான் நின்று கொள்கிறேன்" என்றான் இளைஞன். அதிர்ச்சியில் 'ஏன்!' என்றார் ஸீனியர். "இந்தத் தொழில் எனக்கு மனம் ஒப்பவில்லை" என்று கறுப்புக் கோட்டை கழற்றிக் கொடுத்து விட்டு வந்தவன்தான், அதற்கப்புறம் அந்தப் பக்கம்கூட எட்டிப் பார்க்கவில்லை. அந்த இளைஞன் இன்றைய பாண்டிச்சேரி முதல்வர் ரங்கசாமி!





"அந்தத் தொழில் எனக்குப் பிடிக்கவில்லை; அவ்வளவுதான். அதற்காக நான் யாரையும் குறை கூற விரும்பவில்லை" என்று சொல்லும் முதல்வர் ரங்கசாமி குடியிருப்பது தட்டாஞ்சாவடி தொகுதியில் உள்ள விநாயகர் கோயில் தெருவில். வீட்டின் முன்பு தெருவிலே அடைத்துக் கொண்டது போல சைக்கிள்கள், ஸ்கூட்டர்கள், மக்கள் கூட்டம். அத்தனை கூட்டத்துக்கு நடுவில்



இப்படியும்



நமக்குத் தெரிவது ஒரே ஒரு போலீஸ் தலை தான். மாடியில் தான் முதல்வர் அறை. கட்டில் கிடையாது; மெத்தை கிடையாது;



ஏ.ஸி கிடையாது. தரையில் மெலிதான விரிப்பு. இரண்டு சூட்கேஸ்கள்; போர்ட்டபிள் தொலைக்காட்சி பெட்டி. அவ்வளவுதான். நெற்றியில் விபூதிக் கீற்றுடன்தான் வெளியே வருகிறார். எல்லோரிடமும் நிதானமாகப் பேசி மனுக்களை வாங்குகிறார்.

1999ல் எம்.எல்.ஏ ஆக தேர்ந்தெடுப்பதற்கு முன்னரே கட்டிய வீடு. அதற்கப்புறம் அதற்கு சுண்ணாம்பு கூட அடிக்கவில்லை. இடையில் ஆறு வருட காலம் அமைச்சராக இருந்திருக்கிறார். 'கையை வைச்சா லட்ச ரூபாய்கூட ஆகலாம்' என்கிறார் முதல்வரின் உதவியாளர் ஒருவர். ரங்கசாமியின் ஆதர்ஸ லைவர் காமராஜ்தான். அவரது ஒவ்வொரு அசைவிலும் எளிமையின் பிரதிபலிப்பான காமராஜ் தெரிகிறார். முழங்கைக்கும் கீழிறங்கும் சட்டையின் கை! பால் வெள்ளை கதர்வேட்டி; சட்டை. முதல்வர் வீட்டில் சமையலே கிடையாது. அவரும், அவரது அம்மாவும்தான் அங்கே வாசம் செய்பவர்கள். அம்மாவுக்கு மகள் வீட்டி விருந்து சாப்பாடு வர, முதல்வருக்கு சாப்பாடு, நண்பர்கள் வீடு மற்றும் அக்கம் பக்கத்திலிருந்து வருகிறது. மதிய சாப்பாடு நான்கு மணிக்கும் இரவு சாப்பாடு நள்ளிரவைத் தாண்டிய பிறகுதான் என்கிறார்கள் உதவியாளர்கள்.



"நெசவாளர் குடியிருப்பில் சாலை போடுவதில் அதிகாரிகளுக்குள் கருத்து வேறுபாடு, அதை நேரில் போய்ச் சரி



ஒரு முதல்வர்!

செய்யணும்" - என்று முதல்வர் சொல்ல கூடவே அவரது காரில் நாமும் தொற்றிக் கொள்ள, முன்புறம் பைலட் வண்டி கிடையாது; சைரன் கிடையாது; ஏன் முதல்வருடன் பாதுகாப்பு அதிகாரியும் இல்லை. போகும் வழியில் முதல்வர் காலையில் வழக்கமாக வந்து உட்காரும் பேப்பர் கடையும், டீ கடையும் வருகின்றன. கடைக்காரர் கையைக் காட்டி "இன்று ஏன் வரவில்லை?" என்று கேட்கிறார்! ஒரு குறுகலான பாலத்தில் வேலை நடக்க, எதிரில் எக்குத்தப்பாக வேன் ஒன்று வர முதல்வரின் கார் நின்று விடுகிறது. தெருவில் போய் வருபவர்கள் எல்லாம் முதல்வர் கார் முன்னேற முடியவில்லையே என்று பதற்றப்பட உள்ளிருந்த நமக்கும் டென்ஷன் ஏறுகிறது. ஆனால் முதல்வரோ பதற்றப்படாமல் இருக்கிறார். வேன் டிரைவரை நோக்கி ஆவேசக் குரல்கள் பறக்கின்றன.

"தமிழ்நாட்டில் சாதாரண ஆளும்கட்சி வட்டச் செயலாளர் கார் இப்படி தடைப்பட்டால்கூட டிரைவர் பாடு அம்போதான்; லைசென்ஸ் ரத்து செய்யும் வரை போய்விடும்" என்று கூட இருக்கும் நண்பர் சொல்கிறார். 'அது சரி; நானே இவரது லைசென்ஸை கேன்சல் செய்கிறேன் என்று வைத்துக் கொள்ளுங்கள்; மறுபடி அவன் யாரையாவது பிடித்துக்கொண்டு என்னை வந்துதானே தொந்தரவு செய்வான். எதற்கு அந்த அலைச்சல்...?" முதல்வர் கேட்டு முடிப்பதற்குள் வழி கிளியர் ஆகி விடுகிறது.

நெசவாளர் காலனி ஒரு நெருக்கடியான ஏரியா. குறுக்கும் நெடுக்கும் சாக்கடைகள். வேட்டியை மடித்துக் கட்டிக்கொண்டு, விறுவிறுவென்று செல்கிறார் முதல்வர். வீட்டுக்கு வீடு கும்பிடாத கரங்கள் இல்லை. "எப்படி நான்கு முறை இந்தத் தொகுதியில் ஜெயிக்க முடிந்தது?" தொகுதி வாக்காளர் சுப்பிரமணியம் "இதோ பார்க்கிறீர்களே, இந்த அளவு மக்களோடு மக்களாக கலந்த பிறகு, வெற்றி தேவதைக்கு என்ன தயக்கம்?" என்று எதிர்க்கேள்வி கேட்கிறார்.

'இலவச வேட்டி சேலை எனக்கு இந்த வருடம் கிடைக்கவில்லை?' என்று ஒரு பெண்மணி முறையிட "போன வருடம் வாங்கியிருந்தால் இந்த வருடம் கண்டிப்பாக கிடைக்குமே'' என்கிறார் முதல்வர். "போன வருடமும் கிடைக்கலை'' என்று பெண்மணி சொன்

வேலூர் நகரச் சிறப்பிதழ்!

தொழில் நகரம், தோலாடை நகரம், குருக்ஷேத்திரப் போர் நடந்த பூமி, ஒட்டுமொத்த சென்னைக்கும் பால் வழங்கும் ஊர், தமிழகத்தின் தனிப்பெரும் சிறையை சிறை வைத்திருக்கும் ஊர் என்றெல்லாம் தோண்டத் தோண்ட புதையலாய் விரிந்து கொண்டிருக்கும் உங்கள் வேலூரைப் பற்றிய நீங்கள் அறிந்த அத்தனை விவரங்களையும், அஞ்சலட்டையில் எழுதி அனுப்புங்கள்! எஞ்சிய விவரங்களைக் கண்டுபிடித்துத் தரவேண்டியது எங்கள் வேலை.



நடப்புப் பிரச்னைகள், கிடப்பில் போடப்பட்ட திட்டங்கள், தொடரும் சர்ச்சை என்று எதையும் விட வேண்டாம்!

ரெடி ஸ்டார்ட்!

கடைசித் தேதி : 31.01.2002

னவுடன் ''அப்போ நீங்க வசதியா இருக்கீங்க'' என்று சொல்லிச் சிரிக்கிறார். இதே கோரிக்கையுடன் மடக்கும் பெண்களிடம் "பொறுங்க. புதுசா கணக்கெடுக்கப் போறோம். அப்புறம் பார்க்கலாம்'' என்கிறார் கொஞ்சம் சிரிப்பு கலந்த கண்டிப்போடு. இப்போது, தட்டாஞ்சாவடி தொகுதி மக்களின் ஒரு கவலை, முதல்வரால் அவரது தொகுதிக்கு மட்டும் தனியாக நேரம் ஒதுக்க முடியவில்லையே என்பதுதான். முதல்வரால் யாரையும் தவிர்க்க முடியாது. இத்தனை வருட காலம் அப்படிப் பழகியாகி விட்டது "நேரமில்லை... அப்புறம் வாருங்கள்" என்று யாரிடமும் நாங்கள் சொல்ல முடியாது'' என்கிறார்கள் உதவியாளர்கள்.

முதல்வரின் கீழிருக்கும் அமைச்சர்கள், அதிகாரிகள்கூட லேட்டஸ்ட் குவாலிஸ் வண்டியை உபயோகிக்கும் போது அவரோ அதே அம்பாஸிடர்தான். முதல்வரின் அறை எப்போதும் கலகலப்பாக இருக்கிறது. பாண்டிச்சேரி துறைமுக அபிவிருத்திக்காக மலேசியக் குழு ஒன்று முதல்வருடன் பேச்சுவார்த்தை நடத்த, சுற்றிலும் பத்திரிகையாளர்கள், கட்சிக்காரர்கள். ''இங்கு எல்லாம் டிரான்பரன்ஸிதான். அவர் கோப்பு பார்க்கும் நேரம் இரவு பத்து மணிக்கு மேல்தான்'' என்கிறார்கள். அலுவலக உதவியாளர்கள் 'பதவிக்குண்டான சில ரகசியங்களைக் காக்க முடியவில்லையே' என்றும் சொல்கிறார்கள். இரவு பன்னிரண்டு மணிக்கு வீட்டுக்குத் திரும்பினால் அப்போதும் ஒரு நண்பர் படை காத்திருக்கிறது. அவர்களுடன் காலாற நடந்து அரட்டை. சில நாட்களில் மோட்டார் பைக்கை எடுத்துக் கொண்டு கிளம்பி விடுவாராம்.

''இன்றைய அரசியலில் பணமே பிரதானமாயிற்றே? எப்படிச் சமாளிக்கிறீர்கள்?'' என்று கேட்டோம். "சிறு வயதிலிருந்தே என்னுடைய தேவைகள் - மிக மிகக் குறைவானவை - நிறைவு செய்யப்பட்டு வருகின்றன. பள்ளி செல்லும் போது சைக்கிள், கல்லூரி செல்லும்போது ஸ்கூட்டர் என்று பெற்றோர் வாங்கிக் கொடுத்து விட்டார்கள். நான் அரசியலில் முழு நேரமாக நுழைந்து தேர்தலில் போட்டியிடத் துவங்கியதும், என் பெயரிலிருந்த நிலங்களை விற்றும், கடன் வாங்கியும் செலவழித்து வருகிறேன். என்னால் சுயமாக பணம் புரட்ட முடியாத நிலை வரும்போதும், அரசியலில் நிலைத்து நிற்க பணம் அவசியம் என்கிற நிலை வரும்போதும், நான் எடுக்கும் முடிவு அரசியலை விட்டு விலகுவதாகத்தான் இருக்கும்'' என்று சலனமில்லாமல் சொல்கிறார் ரங்கசாமி. முதல்வரின் வாழ்க்கையைப் பார்க்கும்போது, அவர் பேச்சு வெறும் வாய்ச் சொல் வீரம் அல்ல என்பது புரிகிறது.

– ப்ரியன்

படங்கள்: ராஜன்

ஏ. அம்புஜம்!

''அவளுக்கு 'ஆந்த்ராக்ஸ் அம்புஜம்'னு பேர் வைச்சிருக்கோம்...''

''ஏன்?!''

''எதையுமே 'பொடி' வைச்சுத்தான் பேசுவா...''

– ஜி. வெங்கட்ராமன்



மலைக்க வைக்கும் தம்பதி!



மலைகள் பேசுமா? சிரிக்குமா? சினம் பொங்கச் சீறுமா? சிலிர்த்தெழுந்து ஆர்ப்பரித்து அடங்குமா? 'எல்லாம் செய்யும்' என்கின்றனர் ஜெ.ரமணன் - ஆர். விருந்தா தம்பதி. கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக மலைகளைத் தேடிச் சென்று அவற்றின் எழிலார்ந்த வடிவங்களை, கேமிராவுக்குள் சிறைப்பிடித்து வருகிறார் ஜெ. ரமணன்.


தொழில்ரீதியாக கட்டடக் கலை நிபுணராக இருந்தாலும், மலைகள் சார்ந்த புகைப்படக் கலைஞராகப் பிரபலம். சென்னை, தூய கப்ரியேல் உயர்நிலைப் பள்ளியில் ஸ்கௌட் பாயாக இருந்தபோது தொற்றிக் கொண்டது மலையேறும் ஆசை! உத்தரகாசியில் இருக்கும் நேரு மலையேற்றப் பயிற்சிப் பள்ளியில் அடிப்படை மலையேறும் பயிற்சி மற்றும் அதில் சிறப்புப் பயிற்சி போன்றவற்றில் தேர்ச்சி பெற்ற போது ரமணனுக்கு வயது இருபத்தி நான்கு. அதன் பின்னர், மலை ஏறுவதையே முக்கிய நோக்கமாகக் கொண்டு, இதுவரை பன்னிரண்டு முறை இமயமலைப் பிரதேசத்து நெடிதுயர்ந்த சிகரங்களின் மீது ஏறி இறங்கியுள்ளார்.

இதில் சிறப்பு என்னவெனில், கணவன் - மனைவி இருவருமே மலையேறுவதில் மங்காத மோகங்கொண்டவர்கள். அவர்













தமது வாழ்க்கைத் துணையை அடையாளம் கண்டது கூட மலையேற்றப் பயிற்சியின் போதுதான்!

அப்பொழுது அனைத்து மாநிலங்களி லிருந்தும் மலையேறும் பயிற்சிக்காக பெண் கள் பிரிவு தேர்வு செய்யப்பட்டு உத்தரகாசி வந்து சேர்ந்ததில், திருச்சியிலிருந்து வந்திருந்த விருந்தா மட்டுமே தமிழ்ப் பெண். இவர் களுக்குப் பயிற்சியாளராகப் போயிருந்தவர் தமிழ்நாட்டுக்காரரான ஜெ. ரமணன். இருவருக்கும் இடையே அன்பு நட்பாக மலர்ந்து, அதுவே காதலாக கனிந்துருகிப் போனதாம்.

''என்னுடைய முயற்சிகளுக்கு, ஊக் கப் பரிசாக கடவு ளாகவே தந்த அன் பளிப்புதான் என் மனைவி'' என்கிறார் ரமணன்.

''மலையுச்சிகளில் கொள்ளை அழகுடன் பூக்கள் பூத்துக் குலுங்கும். பறிப்பாருமின்றி, தொடுப்பாரு மின்றி, சூடுவாருமின்றி அப் பூக்கள் யாருக் காக பூத்துக் கிடக்கின்றன? எல்லாம் இறை வனுக்கே எனத் தோன்றும்!'' என்கிறார் விருந்தா சிலிர்ப்புடன்.

இமய மலைப் பகுதிகளில் கோடையில் அதிகாலை மூன்று மணிக்கெல்லாம் சூரியக் கதிர்கள் எட்டிப் பார்த்து விடுமாம். அது போல் அஸ்தமனமாக இரவு ஏழு மணி ஆகு மாம்.

மலையேற்றத்தின் போது ஆயிரம் அடி உயரத்துக்கு ஒரு கேம்ப் என பிரித்துக் கொள் வார்களாம். ஒவ்வொரு ஆயிரம் அடியிலிருந் தும் மேல் நோக்கிச் சென்று ஆங்காங்கு இரும்புக் கம்பியை மலை மீது ஊன்றி அடித்து விடுவார்களாம். இணைப்புச் சாலையாக கயிறு கட்டி அக் கயிறை 'ஜூம்மார்க்' எனப்படும் மூன்று வட்டச் சுற்றுக் கயிறுடன் பொருத்திக்







கொள்கிறார்கள். மலையேற்றத்தின் போது கைகள் தவறி விட்டாலோ, தடுமாறி விட்டாலோ அவர்கள் கீழ்நோக்கி திரும்பி வந்து விடாதபடி ஜூம்மார்ர்க் இணைப்பு வளையம் அந்தரத்தில் அந்நபரை அப்படியே நிற்க வைத்து விடுமாம். பின்னர் நிதானம் பெற்று அவர்கள் மீண்டும் மலையேறும் முயற்சியில் ஈடுபடலாம்.

சரி, விபத்து என்பது எப்பொழுதுமே ஏற்படாதா? அபூர்வமாய் நேர்ந்து போவதும் உண்டாம்.

''கங்கோத்ரியிலிருந்து பார்த்தால் தெரிவது சுதர்ஸன பர்வதம். பனி படர்ந்த மலைச் சிகரம். இருபத்து இரண்டாயிரம் அடி உயரம். எட்டு பேர் கொண்ட மலை யேற்றக் குழு ஒன்று கயிறு மூலமாக மலை யேறிக் கொண்டு இருந்தது. அதில் நானும் ஒருவன். பத்தொன்பதாயிரம் அடி உயரத் தைத் தொட முயன்ற போது மேலிருந்து பயங்கரமாய் வலுவான பனிப் பாறைகள் அப்படியே சரிந்து விழுந்து எங்கள் மீது மோதின. இரும்புக் கம்பிகள் பெயர்ந்து, கயிறுகள் அறுந்து விழ, நல்ல அடி! ஆளுக் கொரு மூலையில் போய் விழுந்தோம். பனிப் பிளவுகளுக்கிடையே சிக்கிக் கொண்டாலும் மிகவும் சிரமப்பட்டு வெளியேறி மீண்டு வந்தோம். ஆனால் மூன்று பேர், எங்களால் மீட்கப்பட முடியாத பகுதிக்குள் புதைந்து போய் போராடிக் கொண்டிருந்தார்கள். கீழிருந்த முகாமுக்குச் சென்று தகவல் சொல்லி ஹெலிகாப்டர் மூலமாக அம் மூவரையும் ராணுவ வீரர்கள் உதவியுடன் உயிருடன் மீட்டோம்.''

ரமணனுடன் பேசும்போது பல அரிய தகவல்கள் கிடைக்கின்றன.

பனி மலைகளில் இரவு தங்க நேரிடும் போது நைலான் துணி உறைக்குள் புகுந்து கொள்வார்களாம். அந்த நைலான் துணி உறைக்குள் பறவைகளின் சிறகுகள் அடர்த்தி யாகத் திணித்து தைக்கப்பட்டிருக்குமாம். கடுங்குளிரிலும் இந்தப் படுக்கை உள்ளே வெது வெதுப்பாக இருக்குமாம்.

''இமாச்சலத்தில் அனுமான் டிப்பா பகுதியில் மலையேறிக் கொண்டிருந்த சம யம். பனிமலைத் தொடர் அது. அங்கு பசு ஒன்றின் மண்டை ஓடு மட்டும் கிடந்தது. வழி தவறி மேய்ச்சலுக்கு வந்த பசு குளிர்த் தாளாமல் இறந்து போவதுண்டாம். மிச்சமாகிப் போன இந்த மண்டை ஓடு என் மனத்தில் வலியை ஏற்படுத்தியது. அப் பகுதியில் இப்படி இறந்து போகும் பசுக் களை எல்லாம் 'லக்கி கௌ' என்றே அழைக் கின்றனர்'' என்று தகவல் சொல்கிறார் பிருந்தா.

''மலைகளின் ஆழ்ந்த நிசப்தத்தில் இறைவனின் பூரணத்துவத்தைத் தரிசிக்க லாம். அது மட்டுமல்ல. மலையேற்றப் பயிற்சி யால் விட்டுக் கொடுக்கும் மனோபாவம், மனோதைரியம், மனிதநேயம் போன்றவை வளரும். இவை இளையதலைமுறைக்கு நிறையவே தேவை. அதைத் தூண்டி விட எனது புகைப்படக் கண்காட்சிகள் பெரிதும் உதவுகின்றன'' என்கிறார் ரமணன்.

இந்த ஆண்டு 'மலைகளின் ஆண்டாக' அறிவிக்கப்பட்டிருப்பதையொட்டி, சென் னையிலும் இவரது புகைப்படக் கண்காட்சி நடத்தப்படுகிறது.

இந்திரா காந்தி பிரதமராக இருந்த போது, சிறப்பு கவனம் செலுத்தி இந்தியாவின் கலை, பண்பாடு, கலாசாரப் பதிவுகளுக்காக ஒரு புத்தகம் தயாரித்து வெளியிட்டிருந்தார். 'ரீ டிஸ்கவரிங் இந்தியா' என்ற அப் புத்தகத்தில் இந்திய மலைகளைப் பற்றிய பகுதியில் ஜெ. ரமணன் எடுத்த எட்டுப் படங்கள் இடம் பெற்றிருக்கின்றன.

— ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு

படங்கள் : ரமணன்

கச்சி மூதூர் அர்ச்சகர்கள் க்ஷேமநல ட்ரஸ்ட்

பதிவு அலுவலகம் : ஸ்ரீ காமகோடி சங்கர மடம், காஞ்சிபுரம்.
நிர்வாக அலுவலகம் : 16, இரண்டாவது மெயின் ரோடு, கோட்டூர்புரம், சென்னை - 600 085.
போன்: 4471936 / 4472540 E.Mail : prb@vsnl.com Website : http://pesonal.vsnl.com/knaw_trust



வேண்டுகோள்

- ஸ்ரீ காஞ்சி மாமுனிவர் 1986ல் இந்த ❶டிரஸ்டை ஸ்தாபிக்க அருள்பாலித்தார்.
  ❶தமிழ்நாட்டில் பழமையான கிராமக் கோவில்களில் பூஜை செய்யும், மாத வருமானம் ரூ.1000/-க்கும் குறைவாக உள்ள, அர்ச்சகர்களுக்கு மாத பண உதவி செய்வதற்காக.
- ❷பேருளாளரின் ஆக்ஞைப்படி இந்த நற்பணிக்கு நன்கொடை அளிக்க ❷வேண்டுகிறோம் - ரூ.4,000/-க்கு மேல் மாத மொத்த வருமானம் பெறுபவர்கள் தங்களது ஒரு மாத மொத்த வருமானத்தை *தங்கள் வாழ்நாளில் ஒரு முறையேனும்* நன்கொடையாக கொடுத்துதவ வேண்டும். மற்றவர்கள் தங்களால் இயன்றளவு கொடுக்கலாம்.
- நன்கொடைகளை க்ராஸ் செய்த காசோலை / டிமாண்ட் டிராப்டாக ***"KACHCHI MOODOOR ARCHAKAS WELFARE TRUST"*** என்ற பெயரில் சென்னையில் ஏதாவதொரு வங்கிக் கிளையில் பெருமாறு நிர்வாக அலுவலகத்திற்கு அனுப்பலாம்.
- தற்சமயம் இந்த டிரஸ்ட் 294 தேர்ந்தெடுக்கப்பட்ட அர்ச்சகர்களுக்கு❸ மாத உதவித் தொகையாக ரூ. 375/- வங்கிகள் மூலமாக வழங்கி வருகிறது. (❸பட்டாச்சாரியார்கள் - 65, பூசாரிகள் - 117, சிவாச்சாரியார்கள் - 112) குழுக் காப்பீடும், விபத்துக் காப்பீடும் தகுதியின்படி செய்து வருகிறது. ஒவ்வொரு வருடமும் மாத உதவித் தொகையை உயர்த்துவதாலும், அர்ச்சகர்களின் எண்ணிக்கை உயர்வதாலும், முதலீடுகளின் பேரில் வட்டி விகிதம் குறைந்து வருவதாலும், மூலதனத்தை அதிகரிக்க வேண்டிய நிர்ப்பந்தம் அவசியமாகிறது. ஸ்ரீ காஞ்சி மஹானின் அருளாக்ஞையின்படி தங்களுடைய நன்கொடைகளை அனுப்பித் தரவேண்டி கேட்டுக் கொள்கிறோம்.

என். கிருஷ்ணசாமி ரெட்டி
(ஓய்வு பெற்ற நீதிபதி - சென்னை உயர்நீதிமன்றம்)
பொறுப்புக் குழுவின் சேர்மன்.

பின் குறிப்பு:

நன்கொடைகளுக்கு வருமான வரிசட்டப்பிரிவு 80 G-யின் கீழ் வரிவிலக்குண்டு. வெளிநாட்டு நன்கொடைகளை ஏற்க FCRA-ன் கீழ் (எண்: 075820173) பதிவு செய்யப்பட்டுள்ளது. வருமானவரி சட்டம் 10(23C) V-ன் கீழ் இந்த அறக்கட்டளை அங்கீகரிக்கப்பட்டு மத்திய அரசு கெசெட்டில் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

மூலிகை கேலரி

துளசி



நம்மோடு, நமக்காக, நம்மைச் சுற்றி, நன்மையே தரும்... இயற்கை என்னும் இளையகன்னி தாவரமாக வளர்ந்து நின்று நம்மைப் போஷிக்கிறாள்.

"வேர்பார், தழை பார் மிஞ்சினக் கால்.
மெல்ல மெல்ல பற்ப செந்தூரம் பாரே"

என்பது சித்தர் மொழி. எந்த நோய் ஏற்பட்டாலும், சாதாரண மூலிகை கொண்டு மருத்துவம் பார்க்க வேண்டும். அது தேவையான பயனளிக்காதபோது மட்டுமே, வீரிய மருந்துகளை, படிப்படியாக நாட வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

உடல்பிணி தீரமட்டுமில்லாமல், அழகு கிடைக்க, இளமை நீடிக்க, யோகம் வர, ஞானம் பெற என்றெல்லாம் உயர் மூலிகைகள் உண்டு. அவற்றைப் பயன்படுத்தி சிவமாகவில்லையென்றாலும், சவமாவதைத் தள்ளிப் போடலாமே!

"துளசியின் மருத்துவப் பயன் சொல்லி மாளாது. அதனால் துளசி கலந்த நீர் சாப்பிடுங்கள்" என்று நேர் வழி சொல்லிக் கொடுத்தால், அது பயன் தருமோ, இல்லையோ என்ற அச்சம் நம் முன்னோர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. ஸ்ரீவிஷ்ணுவுக்குப் பிரியம் என்று சொல்லி, துளசி பூஜை, தீர்த்தம், வழிபாடு என்று தெய்வீக மூலிகையாக்கி நன்மை கொண்டாடிவிட்டனர்.

கருந்துளசி, செந்துளசி, நற்றுளசி, நாய் துளசி, முள் துளசி, நிலத்துளசி என பல வகை உண்டு என்றாலும், கிருஷ்ணதுளசி எனப்படும் கருந்துளசியே அதிக மருத்துவப் பயனுடையது.

கருந்துளசி இலை, கிளை, தண்டு கரும் பச்சை நிறத்திலும், கதிர்கள் சிவப்பு கலந்த நீல நிறத்திலும் இருக்கும். காரமும் மணமும் அதிகம்.

சுத்தமான செம்பு பாத்திரத்தில் ஒரு தம்ளர் தண்ணீரில் துளசியைக் கிள்ளிப் போட்டு ஐந்தாறு மணி நேரம் ஊற வைத்து, அந்த நீரை தினமும் பருகி வந்தால், எந்த வியாதியும் வராது. இருக்கும் வியாதியும் விருட்டென விடை பெறும். பெருமாள் கோயிலில் துளசி தீர்த்தத்தைப் பிரசாதமாகத் தருவது இந்த அடிப்படையில்தான்.

ஐந்தாறு துளசி இலைகளுடன், சிறு துண்டு இஞ்சியைச் சேர்த்து நன்றாய் மென்று விழுங்குங்கள். உடனே ஆற வைத்த வெந்நீர் குடித்து விட்டால், காரம் இறங்கி விடும். அப்புறம் பாருங்கள்.. சளித் தொந்தரவாவது ஒன்றாவது.

துளசி இலையை இடித்து, அந்தச் சாறுடன், சிறிதளவு பச்சைக் கற்பூரம் கலந்து பல்வலி உள்ள இடத்தில் பூசிவர, வலி குறையும்.

சிறு குழந்தைகளைப் படுத்தி எடுக்கும் கக்குவான் இருமலுக்கு, துளசிப் பூ வைத்தியம் நம்பகமானது. துளசிப் பூவுடன், வசம்பு, திப்பிலி இரண்டையும் சம அளவு எடுத்து, வெயிலில் உலர்த்தி பொடி செய்து வஸ்திரகாயம் செய்து கொள் ளவும். ஒரு டீஸ்பூன் துளசிப் பொடியை, தேவையான அளவு தேனில் கலந்து தந் தால், சளி எளிதில் பிரியும். இருமல் கட்டுப்படும்.

வயிற்றில் பூச்சி இருப் பது பெருந்தொல்லை. ஒரு பிடி துளசி எடுத்து விரட்டுங் கள் பூச்சிகளை! இரண்டு



தம்ளர் நீரில் துளசியுடன் அரை டீஸ்பூன் மிளகுப் பொடி போட்டு, அரைத் தம்ளராக வற்றக் காய்ச்சி, அந்நீரைப் பருகி வந்தால், கிருமித் தொல்லை இருக் காது.

தலைவலி தலையாய வலி தான். துளசியுடன் ஒரு துண்டு சுக்கு, இரண்டு இலவங்கம் வைத்து நன்றாக அரைத்து, நெற்றியில் பற்று போட்டால், உடனே தலைவலி தணியும். தாய்ப்பாலில் உரைத்துப் போடுவது இன்னும் விசேஷம். பட்டென்று நிற்கும்!

இருதய வலிக்காரர்களுக்கு துளசி சிபாரிசு செய்யப் படுகிறது. ஒரு பிடி துளசியுடன், தேன் சாப்பிட்டுவர, நல்ல குணம் தெரியும்.

வண்டு, குளவி, தேனீ, தேள் போன்ற விஷக்கடிக்கு, துளசி மிகவும் பயன்தரும். துளசிச்சாறுடன், எலுமிச்சம் பழச் சாறு கலந்து பற்றுப்போட, கடித்த தடிப்பு மாறும். துளசிச் சாறை உள்ளுக்கும் தர, விஷ முறிவு ஏற்படும்.

துளசி, ஓம இலை இரண்டையும் கலந்து, 'ரஸம்' போல தயாரித்து, அருந்தி வந்தால், மெழுகு போல மேனியில் பள பளப்பு ஏறும்.

மருதாணி, டீத்தூள் அரை டீஸ்பூன், நெல்லிச்சாறு ஒரு ஸ்பூன், கடுக்காய்த்தூள் கால் டீஸ்பூன், துளசிச்சாறு இரண்டு ஸ்பூன் கலந்து, தலையில் தடவி, குளித்தால், 'பேன், பொடுகு தொல்லை இனிமேல் இல்லை' என் றாகும். அதுமட்டுமில்லை! அருமையான ஸ்கேல்ப் கன்டிஷனராகவும் பயன்படும்.

இரண்டு வசம்பைச் சுட்டு, பொடித்துக் கொள்ளவும். கருந் துளசியை விழுதாக அரைக்கவும். இரண்டையும் சேர்த்து இரும்பு வாணலியில் நல்லெண்ணெய்விட்டு கொதிக்க வைத்து, இரண்டு நாள் சென்றபின் வடிகட்டி, தலைக்குத் தேய்த்துக் குளிக்க, ஈறு, பேன் தொல்லை அறவே இருக்காது.

ஒரு பிடி கஸகஸா, ஒரு பிடி பயத்தம் பருப்பு, ஒரு பிடி துளசி, இரண்டு வேப்பங்கொழுந்து எல்லாவற்றையும் தயிரில் ஊற வைத்து அரைக்கவும். அந்த விழுதை 'ஃபேஸ் பேக்' ஆக பயன் படுத்தி வந்தால், முகம் அன்றலர்ந்த ரோஜா போல புதுப் பொலிவு காட் டும். கரும்புள்ளிகள் காணாமல் போகும்.

துளசி இலை ஒரு கைப்பிடி, வில்வ இலை ஒரு கைப்பிடி என எடுத்து, இரண் டையும் அரைத்து, உடம்பில் பூசிக் குளித்தால், சரும நோய் கள் அண்டாது. வியர்க்குரு, அரிப்பு, சொறி, படை போன் றவை அகலும். சருமமும் காஷ்மீர் பட்டுபோல பளபள வென்று மின்னும்.

ராஜம் முரளி

கடந்த பன்னிரண்டு மாதங்களில், பன்னிரண்டு இளைஞர் திருவிழாக்களை வெற்றியுடன் நடத்தி முடித்த பெருமையில் திளைத்துக் கொண்டிருக்கும் கல்கியை வாழ்த்திப் பாராட்ட வார்த்தை இல்லை. ஒவ்வொரு தலைப்பும் அருமை. அதற்கு தாங்கள் தேர்ந்தெடுத்த பிரபலங்கள் அருமையிலும் அருமை.

மேற்கு மாம்பலம், லட்சுமி வாசன்


சிறுவர்களின் உழைப்பைச் சேமித்து தீப்பெட்டி வடிவம் பெற்றதைக் கனகச்சிதமாய், மூன்று வரிக் கவிதையாக அமைத்த விதம் வெகு அருமை.

தேனி, எஸ்.எம். பாலசுப்ரமணியன்

வட்டமேஜை

இவ்வார கல்கியில் வெளிவந்த மூன்று சிறுகதைகளுமே வெகு யதார்த்தம். அதிலும் தமிழினியனின் 'அவ்வப்போது தெரியும் அழகு' சிறுகதை பேருந்தில் பயணப்பட்டு வந்த உணர்வை பிரதிபலித்தது. கற்பனை போலவே இல்லை.

நெய்வேலி, க. சுந்தர்



ஜோதிடருக்கு சிலை வைத்த பகுத்தறிவு பற்றிய கார்ட்டூன் அமர்க்களம். கட்டாயம் இதற்காக உங்களுக்கும்கூட ஒரு சிலை வைக்கலாம்.

அரவக்குறிஞ்சிப் பட்டி, எம். அசோக் ராஜா

ஆட்சியாளர்களின் வாஸ்து வெறியில் புனித ஜார்ஜ் கோட்டை இடிபடாது இருக்க வேண்டும்.

தஞ்சாவூர், வளர்மதி ஆசைத்தம்பி

அதுக்கும் ஒரு சிலையா?

கோவில்களில் பல சந்நிதிகள் இருப்பதன் அவசியத்தையும், மனம் அலைபாய்ந்தாலும், மொத்தத்தில் நம்மை அறியாமலேயே தெய்வ நினைவாகவே ஈடுபட்டுள்ள தன் மகத்துவத்தையும் காஞ்சி மகா ஸ்வாமிகள் விளக்கிய விதம் அருமை.

சிதம்பரம், ஸ்ரீவித்யா காளிதாஸ்

புத்தாண்டு சிறப்பிதழ் - அறிவிப்பிலும் உம்ம குறும்பைக் காட்டி விட்டீரே!

விழுப்புரம், வை.வெங்கடேசன்

'தனக்கு வந்தது மட்டுமே வலி, மற்றவர் தவிப்பதெல்லாம் வெறும் கிலி' என்ற மனப்பான்மையுடன் செயல்படும் அமெரிக்காவின் பச்சை சுயநலப் போக்கை மிகவும் நன்றாகவே தோலுரித்துக் காட்டியது தலையங்கம்!

ஆதமங்கலம் புதூர், கே. சண்முகம்

மகளிருக்கு விலை உயர்ந்த துப்பட்டா ரகங்கள் இருப்பதை உணர்த்திய கட்டுரையில், ஆடவருக்கு 'சீப்' ஆக வாங்கிக் கொள்ள வேண்டியதுதான் என முடித்திருந்த உமது பஞ்ச், ஆஹா!

சென்னை, ஸ்ரீமகேஷ்

சிவதரிசனமே நித்திய சந்தோஷம்! சந்தோஷமே வாழ்வு!

அருள்நிதி தரும் திருஅண்ணாமலையில் தை மாத பௌர்ணமி கிரிவலத்தில் அன்னதானம் செய்ய அழைக்கிறோம்!

பேரன்புடையீர்! வணக்கம். தங்களின் எல்லா விருப்பங்களும் நிறைவேறவும், மங்கலம் உண்டாகவும் புத்தாண்டில் அருள்மிகு ஸ்ரீ அருணாசலேஸ்வரர் அருள்புரிய வேண்டுகிறோம்.

ஆன்மீக அன்னதான அறக்கட்டளையின் நான்காம் ஆண்டில் தொடர்ந்து அன்னதான சேவை!

● எந்நாட்டவர்க்கும் இறைவனாகிய தென்னாடுடைய சிவபெருமான் தானே தன் திருவடி பதித்து அருட்கரம் நீட்டி திருவருள் புரிந்துவரும் திருஅண்ணாமலையில் பௌர்ணமி அன்று சந்திர பகவான் பதினாறு கலைகளுடன் பரிபூர்ணமாகப் பிரகாசிக்கிறான். அந்த அபூர்வ சக்திவாய்ந்த கிரணங்களைத் தங்களின் உடலில் ஏற்று கிரிவலம் வரும் இறை அடியார்களுக்கும், பக்தர்களுக்கும் மேலும் அங்குள்ள ஆதரவற்ற முதியோர்கள், உடல் ஊனமுற்றோர்கள், கண்பார்வையற்றோர்கள் ஆகிய அனைவருக்கும் பௌர்ணமி அன்று இரவு அன்னதானம் சிறப்பான முறையில் செய்யப்படுகிறது. இந்தப் புனித அன்னதான இறைபணியில் பங்குகொண்டு தாங்களும், தங்கள் சந்ததியினரும் எல்லாம்வல்ல ஸ்ரீ உண்ணாமுலை சமேத அண்ணாமலையாரின் அரும்பெரும் தெய்வீக அருளையும் பெற இது ஒரு சிறந்த வாய்ப்பாகும்.

தாங்கள் எதை நினைத்து அன்னதானம் செய்ய விரும்புகிறீர்கள் என்பதை தெரிவித்தால் அதன்படி நாங்கள் பௌர்ணமி அன்று அன்னதானம் செய்து பிரசாதத்துடன் ஸ்ரீ அருணாசலேஸ்வரர், ஸ்ரீ உண்ணாமுலையம்மன் படத்தையும் தங்களுக்கு அனுப்பி வைக்கிறோம்.


❖ பிறந்தநாள் ❖ திருமணநாள் ❖ முன்னோர்கள் திதி நாள் ❖ வாழ்க்கையில் உயர்வு ❖ தொழிலில் முன்னேற்றம் பெற ❖ நிரந்தர வேலை பெற ❖ கல்யாண பாக்கியம் பெற, நல்ல வரன் அமைய ❖ புத்திர/பிள்ளை பாக்கியம் பெற ❖ கணவன் - மனைவி இடையே ஒற்றுமை நிலவ ❖ கஷ்டங்களும், கடன்களும் எதிர்ப்பு இடையூறுகளும் நீங்க ❖ புதிய முயற்சிகளில் முன்னேற்றமும் வெற்றியும் உண்டாக ❖ புதிதாக தொழில் தொடங்க ❖ புதிதாக வீடு/ மனை பெற ❖ வாகன யோகம் பெற ❖ நல்ல சிந்தனை பெற ❖ சிந்தனை வளம் பெருக ❖ உடல் ஆரோக்கியம் பெற ❖ நீண்ட ஆயுள் பெற ❖ தெய்வசக்தியுடன் திகழ ❖ குடும்ப ஒற்றுமை பெற ❖ உலக ஒற்றுமை பெற ❖ சமுதாய ஒற்றுமை பெற ❖ தேச ஒற்றுமைபெற ❖ எல்லா உயிர்களும் இன்புற்று வாழவும்.

- தாங்கள் அளிக்கும் நன்கொடை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்ளப்படும்.
- ரூ.500/- அனுப்பும் ஆன்மீக அன்பர்களுக்கு, ஆன்மீகம் மாத இதழ் ஒரு ஆண்டிற்கு அனுப்பி வைக்கப்படும்.
- ரூ.1000/- அனுப்பும் ஆன்மீக அன்பர்களுக்கு, ஆன்மீகம் மாத இதழ் இரண்டு ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.
- ரூ.5000/- அனுப்பும் ஆன்மீக அன்பர்களுக்கு, ஆன்மீகம் மாத இதழ் பத்து ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.

அன்னதானத்திற்கு நன்கொடையாக ரூ.500, ரூ.1000, ரூ.5000 அனுப்பும் ஆன்மீக அன்பர்களுக்கு காசியில் பூஜிக்கப்பட்ட ஸ்ரீ அன்னபூரணி அன்னையின் விக்கிரகமும், ஸ்ரீ அருணாசலேஸ்வரரின் வண்ணப்படமும், சிறிய அளவில் சிவபுராண புத்தகமும் அனுப்பி வைக்கப்படும்.

★ ரூ.5000/- அனுப்பும் ஆன்மீக அன்பர்கள் சார்பாக, ஒவ்வொருமாதமும் பௌர்ணமி அன்று திருஅண்ணாமலையில் அன்னதானம் செய்து தொடர்ந்து பத்து ஆண்டுகளுக்கு பிரசாதமும் 'ஆன்மீகம்' மாத இதழும் தங்களுக்கு அனுப்பி வைக்கப்படும். மேலும் தாங்கள் விரும்பும்போது சந்ததியரின் முகவரிக்கும் மாற்றம் செய்து தருகிறோம். ஆன்மீக அன்பர்கள் ஒவ்வொருவரின் பூஜை அறையும் புனிதம் பெற வேண்டும் என்ற இறை சிந்தனையோடு ரூ.5000 செலுத்துபவர்களுக்கு 1024 பக்கங்களுடன் கூடிய பெரிய அளவில் உள்ள ஸ்ரீமத் பகவத்கீதை புத்தகத்தை (தமிழில்) அனுப்பி வைக்கிறோம்.

● நன்கொடை அனுப்பும் சிவநேசச்செல்வர்கள் (Aanmeeka Annadhana Charitable Trust Chennai - 4) என்ற பெயரில் Cheque /D.D/ M.O. மூலம் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அன்னதான திருப்பணிகளை நலம்தரும் இறைபணி சேவைகளாக 'ஆன்மீக அன்னதான அறக்கட்டளை' ஆற்றிவர தங்களது ஒத்துழைப்பை என்றும் பேரன்புடன் வேண்டுகிறோம்.



ஸ்ரீ அருணாசலேஸ்வரர்

நன்கொடைகளுக்கு 80 G பிரிவின்படி வரிவிலக்கு உண்டு.


Cheque / D.D / M.O அனுப்ப வேண்டிய முகவரி :

ஆன்மீக அன்னதான அறக்கட்டளை

AANMEEKA ANNADHANA CHARITABLE TRUST (Regd.)

68, Nadu Street, (Opp. Sri Kapaleeswarar Temple) Mylapore, Chennai - 600 004.

Tel : 4959302 Fax : (044) 4616311 E - Mail: siva siva @vsnl.net



ஸ்ரீ உண்ணாமுலையம்மன்

சிவாய நம என்று சிந்தித்திருப்போர்க்கு அபாயம் ஒரு நாளும் இல்லை!

புதிய பகுதி

சுவடுகள் 1

பலரை அறிமுகப்படுத்தி, சிறப்புச் செய்து, வளர உதவியவர் திருப்பூர் கிருஷ்ணன். இந்தப் பத்திரிகையாளர் / எழுத்தாளர், தீபம் நா. பார்த்தசாரதி, ஏ.என்.எஸ், ஐராவதம் மகாதேவன் என்று மூன்று முதுபெரும் ஆசிரியர்களால் உருவாக்கப்பட்டு, கி. கஸ்தூரிரங்கன், இராம திரு சம்பந்தம் காலம் வரை 'தினமணி'யில், இணைய இதழ்களில் ஆசிரியர் பொறுப்பேற்ற அனுபவம் கொண்டவர். தமக்கேற்பட்ட சுவையான அனுபவங்களை, பல எழுத்தாளர்களுடன் கொண்ட இனிய நினைவுகளை, மனத்துக்குள் மூங்கிக் கிடக்கும் மௌனங்களை இந்தத் தொடரில் பதிவு செய்கிறார்.

இங்கு வந்த நாடோடி

புலவர் கீரன் சொற்பொழிவுகள் தமிழகமெங்கும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்த காலம். குரலை ஏற்றியும் இறக்கியும் பாத்திரத்துக்குத் தகுந்தாற்போல் பேசி ஆன்மிக சொற்பொழிவுகளை அவர் நிகழ்த்திக் கொண்டிருந்தார். 'புலவர் கீரன் பேசுகிறார்' என்று போட்டால் போதும். கூட்டம் அலை மோதும்.

இந்தக் காலகட்டத்தில் அவரது வில்லி பாரதச் சொற்பொழிவு, நான்கு தொகுதிகளாக ஒலிப்பேழையாக்கப்பட்டது. தொகுதிகள் விமர்சனத்திற்காக என்னிடம் வந்து சேர்ந்தன.

முழுவதையும் கேட்டேன். கேட்கும் போதே குறிப்பு எடுத்துக் கொண்டேன். அந்த ஒலிப்பேழை அவரது சாதனையின் அடையாளம் என்பதில் சந்தேகமில்லை. நடிப்புத் திறனைக் குரலில் சிறப்பாக வெளிப்படுத்தியிருந்தார். கூடவே அவரது கற்பனையில் உதித்த பல நயமான வாக்கியங்களை ஆங்காங்கே சொல்லிக் கொண்டு போனார். கீரனின் பாரதம் கேட்பது ஒரு சுகம்.

'ஆளோடு ஆள் தோளோடு தோள் வாளோடு வாள் மோதும் மோதுப் போர் அல்ல துரியோதனன் நிகழ்த்தியது. அது சூதுப் போர்', என்று ஒரு வாக்கியம். இந்த வாக்கியம் எழில் நிறைந்தது என்பதில் சந்தேகமில்லை. ஆனாலும் இதை எத்தனை முறை கேட்பது? அந்த ஒலிப்பேழைத் தொகுதியில் இந்த வாக்கியம் பல்வேறு இடங்களில் பத்துப் பன்னிரண்டு தடவை இடம்பெற்றிருந்தது. இது சற்று அலுப்பைத் தந்தது.


ஒலிப்பேழையை மனமாரப் பாராட்டிய நான், இந்த வாக்கியத்தைப் பற்றிக் குறிப்பிட்டு, பலமுறை இவ்விதம் ஒரே வாக்கியத்தைச் சொல்வது 'கூறியது கூறல்' என்னும் குற்றத்தின் பாற்படும்' என்று எழுதியிருந்தேன்.

விமர்சனம் வெளிவந்து நாலைந்து நாள் கடந்திருக்கும். சென்னையில் அயோத்யா மண்டபத்தில் கீரனின் சொற்பொழிவு. அது முடியும் தருவாயில் அந்தப் பக்கம் போன நான், கொஞ்சம் கேட்கலாமே என்று உள்ளே நுழைந்



• நாடோடி

• கீரன்



தேன். அந்தப் பகுதியிலேயே குடியிருந்த முதுபெரும் எழுத்தாளர் நாடோடி, முன்வரிசையில் அமர்ந்திருந்தார். என்னை அழைத்துத் தம் பக்கத்தில் உட்கார வைத்துக் கொண்டார். கொஞ்ச நேரத்தில் கூட்டம் முடிந்தது. எனக்குக் கிரனை நேரடி அறிமுகம் கிடையாது. நீங்களும் தமிழ் படித்தவர். அவருக்குத் தமிழ் படித்தவர்களைக் கண்டால்




பிடிக்கும். வாருமய்யா. அறிமுகப்படுத்துகிறேன்' என்று அழைத்துப் போனார் நாடோடி. என் பெயரைச் சொன்ன மறுகணம் கிரன் முகத்தில் கடுகடுப்பு. நெற்றிக் கண்ணைத் திறக்காத குறைதான்.

'நீங்கள் எழுதிய விமர்சனத்தைப் படித்தேன். கூறியது கூறல் என்னும் குற்றம் என்று நீங்கள் எப்படிக் கூறலாம்? அப்படிக் கூறியதுதான் குற்றம். இங்கே பாருங்கள். என் சொற்பொழிவுக்கு ரிக்ஷாக்காரர்கள், ஆட்டோ டிரைவர்கள், மூட்டை தூக்குபவர்கள் என்று எப்படிப்பட்ட மக்களெல்லாம் வருகிறார்கள்? இவர்களுக்கும் சேர்த்தல்லவா நான் சொற்பொழிவு செய்கிறேன்? உங்களுக்கும் நாடோடி போன்றவர்களுக்கும் மட்டும் தானா என் சொற்பொழிவு?''

அவர் கோபத்தில் பொரிந்த வார்த்தைகளைக் கேட்டுத் திகைத்துப் போய் நான் பேசாமல் இருந்தேன். நாடோடிக்கும் அதிர்ச்சிதான். ஏனடா அறிமுகப்படுத்தினோம் என்றாகி விட்டது அவருக்கு. கிரன் தொடர்ந்தார் :

"ரிக்ஷாக்காரர்களுக்கும் ஆட்டோக்காரர்களுக்கும் புரிய வேண்டுமானால் சில வாக்கியங்களை மறுபடி மறுபடி சொல்லத்தான் வேண்டியிருக்கிறது. அதைக் குற்றம் என்று சொல்வதும் பிரபல பத்திரிகையில் அவ்விதம் எழுதுவதும் தகாது."

அவரது ஆற்றலைப் புகழ்ந்து எழுதிய பாராட்டு வரிகளை எல்லாம் மொத்தமாக நிராகரித்து விட்டு, நான் சொன்ன ஒரே ஒரு குறையை மட்டும் உயர்த்திப் பிடித்து அவர் பேசியது எனக்குச் சங்கடத்தையும் வருத்தத்



"மாநகராட்சி நிர்வாகம் மோசம்தான்னு மேயரே ஒத்துக்கிட்டாரா! எப்படி?"

"வாக்கிங் போகும்போது மேன்ஹோலுக்குள்ளே விழுந்துட்ட அன்றுதான்!"

— உ. ராஜாஜி



"கண்டக்டர்! ஸ்டாப் இல்லாத இடங்கள்லே கூட அடிக்கடி விசில் அடிக்கிறீங்களே.. ஏன்?"

"டிரைவரை அப்பப்ப தூக்கத்துலேர்ந்து எழுப்ப!"

— தஞ்சை தாமு

"என்னங்க! ஊர்லேயிருந்து எங்க அம்மா, அப்பா வர்றாங்களாம்!"

"தெரியும்டி! காலையில பேப்பர்லே பார்த்துட்டேன்!"

"அட, நிஜமாவா?"

"ஆமா, ராசி பலன்ல என் ராசிக்கு 'தண்டச் செலவுகள்'னு போட்டிருந்தாங்க!"

— ஆர். குட்டி பிரசன்னா



தையும் தந்தது.

சரியான நேரத்தில் என உதவிக்கு வந்தார் நாடோடி.

"இதுபோன்ற மேடைச் சொற்பொழிவில் நீங்கள் அப்படிச் சொல்லலாம். ஆனால் பதிவு செய்யப்படும் ஒலிப்பேழைச் சொற்பொழிவில் நீங்கள் அவ்விதம் சொல்லத் தேவையில்லை. அவர் எழுதியது சரிதான்" என்றார் நாடோடி.

"ஏன்? ஒலிப்பேழைகளை ரிக்ஷாக்காரர்கள் வாங்கிக் கேட்க மாட்டார்களோ?" சீறினார் கிரன். நாடோடி அமைதியாக பதில் சொன்னார்.

"கேட்பார்கள். அப்படிக் கேட்கிற போது அதில் ரீ வைண்டிங் என்ற வசதி இருப்பது அவர்களுக்குத் தெரியவரும். புரியாத வாக்கியத்தை ரீ வைண்ட் செய்து மறுபடி மறுபடி கேட்டுப் புரிந்து கொள்வார்கள்."

நாடோடியின் விளக்கத்தைக் கேட்டு கிரனுக்கு பிரமிப்புத் தட்டியது. திடீரென்று அவர் அமைதியானார். "ஆமாம். நான்தான் தவறு செய்து விட்டேன். என் சொற்பொழிவுகளை ஒலிப்பேழையாக்கும் போது நான் இன்னும் கவனமாகச் செயல்பட வேண்டும்" என்று சொன்னவர் அன்போடு என் கைகளைப் பிடித்துக் கொண்டார். "நான் கோபித்துக் கொண்டதை நீங்கள் தப்பாக நினைத்துக் கொள்ளக் கூடாது. எனக்கு இந்தக் கோணத்தில் நினைத்துப் பார்க்கத் தோன்றவில்லையே!" என்று வருந்தி மனப்பூர்வமாக மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்.

கிரனின் கோபம் உடனடியாக மாறியதும், என் இள வயதையும் பொருட்படுத்தாமல் என்னிடம் அவர் தன் செயலுக்கு மன்னிப்புக் கேட்டதும் என்னை நெகிழச் செய்தன. சிரமப்பட்டு எழுந்து நின்று, இன்னொருவர் தோளில் சாய்ந்து கொண்டு, அவர் இரு கரம் கூப்பி எனக்கு விடை கொடுத்தார். அவர் வெளிப்படையாக எதையும் உடனுக்குடனே பேசி விடும் குழந்தை போன்ற சுபாவமுடையவர் என்பதையும் உண்மையான பெரிய மனிதர் என்பதையும் அன்று புரிந்து கொண்டேன்.

மனத்தில் ஊனமே இல்லாதவர்களைச் சந்திக்கும் போது ஏற்படும் ஆனந்தம் அன்று எனக்கு ஏற்பட்டது. ○

ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ்®

அறிமுகப்படுத்தும்

கல்யாண சீர்பலகாரங்கள்



எல்லா சீர்பலகாரங்களையும் வகைக்கு ஒன்றாக வைத்து அதற்காகவே வடிவமைக்கப்பட்ட அழகிய சீர்பலகார பெட்டிகளில் வழங்குகிறோம்.

பரிசளிக்க, சீர்வரிசைக்கு புதுமையானவை.

ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ்®

பாண்டி பஜார், சென்னை. போன் : **4312345**
காந்தி நகர் முதல் மெயின் ரோடு, அடையார், சென்னை. போன் : **4413805**
அண்ணாநகர், சென்னை. போன் : **6192345**

DIMENSIONS

24



அழகுக்கு விஷயம் தெரிந்து விட்டதாக சரவணன் கவலையாகச் சொன்னதும் வீரையனுக்குச் சிரிப்பு வந்து விட்டது...

"என்னண்ணே?"

"ஒண்ணுமில்லடா... எனக்கு ஒரு சின்ன வேலையிருக்கு... நீங்க பேசிக்கிட்டிருங்க" என்று சொல்லி விட்டுக் கிளம்பினான் வீரையன்.

'இன்னும் மூணு நாள்' என்றது அவன் மனது... மூன்று நாட்களில் லீலா வெளியூர் போகிறாள். முதல் நாள் போய் மறுநாள் மதியம்தான் வருவாள் என்கிற விஷயத்தை கிருஷ்ணவேணி இவனுக்குத் தெரிவித்திருந்தாள், கீழே போட்டிருந்த ஒரு துண்டுச் சீட்டு மூலம்.

கிளம்பி விட வேண்டியதுதான். தனக்கு ஒத்து வராத இந்த ஊரிலிருந்து, வேறு ஒரு தோதான இடத்துக்குப் போய் விட வேண்டியதுதான்.

அம்சவேணி! அவளைப் போன்ற ஒரு பெண்ணிடமிருந்து என்னென்ன வேண்டுமோ... பெற்றாகிவிட்டது. இனி காசோடும், நகையோடும் அவள் வரட்டும், பார்க்கலாம்.

காதல்... சரவணன் மாதிரி விடலைத்தனமான சிந்தனைகள் வீரையனிடமில்லை. அவனது தேவைகள் விரிவானவை... நிறையப் பணம்... நிறைய வேணிகள். எதற்காக ஒருத்தியைக் கட்டிக் கொண்டு அழவேண்டும்?

மனத்தின் ஒரு ஓரத்தில் இந்தப் பசங்களோடு ஜாலியாகத்திரிந்தது இனிமேல் முடியாதே என்று தோன்றியது. உடனே அந்த நினைப்பை உதறினான். இதெல்லாம் வாழ்க்கையில் சின்ன விஷயம்.. முன்னாடி ஊரை விட்டுட்டு ஓடலையா! பிறகு பம்பாயை விட்டு இங்கே வரலியா. இதெல்லாம் பார்த்தால பிழைக்க முடியாது என்று எண்ணிக் கொண்டான். அவ்வப்போது தலைகாட்டும் இப்படியான 'சென்டிமெண்ட்'டுகளை உடனடியாக ஒதுக்கி விடுவது அவனுக்குப் பழகிப் போன ஒன்றுதான்.



அது ஒரு வெள்ளிக் கிழமை.

பூவரசம் பூ

பாஸ்கர் சக்தி

எல்லோரும் ஊர் அடங்கிய பின்புதான் ஓடிப் போவார்கள். ஆனால் அம்சவேணி சாயங்கால மாகக் கிளம்பினாள். கையில் எதுவுமில்லை. கடைக்குக் காபிப்பொடி வாங்கப் போவதாகச் சொல்லிவிட்டுப் போனாள். விறு விறுவென்று நடந்து பஸ் நிற்கிற இடம் வந்து பஸ் ஏறிப் போய் விட்டாள். முதல் நாள் இரவே அவள் வீட்டுக்குப் பின்புறம் பிளாஸ்டிக் கவரில் சுற்றிப் போட்டிருந்த நகைகளையும் பணத்தையும்



வீரையன் எடுத்துக் கொண்டு விட்டான். அவன் மதியமே பஸ் ஏறிச் சென்று டவுனில் காத்திருப்பதாகத் திட்டம். எல்லாம் கச்சித மாக நிறைவேறியது. சர்பத் குடித்தபடி நின்றிருந்த வீரையன் இவளைப் பார்த்து கையாட்டினான். இவளுக்குப பயமாயிருந்தது... வீரையன் சைகை செய்த பஸ்ஸில் இவள் ஏறி, முன்பக்கக் கம்பியில் கவிழ்ந்து தலைவலிக்கிற மாதிரி படுத்துக் கொண்டுவிட்டாள். பக்கத்தில் 'கர்ச்சீப்'பால் இடம் போட்டிருந்தாள்.

சரியாக பஸ் கிளம்பி ஸ்டாண்டை விட்டு வெளியே வருகையில் வீரையன் ஓடிவந்து ஏறிக் கொண்டான். இவளருகில் வந்து அமர்ந்தான். பஸ் வேகம் பிடித்தது. வீரையன் இவளைத் தொட்டான். "அவ்வளவுதான் இனி பயமில்லை... நிமிர்ந்த உக்காரு." அவள் நிமிர்ந்து அமர்ந்தாள். காற்று சில்லென்று முகத்தில் வீசியது. சுதந்திரக் காற்று. வீரையன் கையிலிருந்த பையைக் காண்பித்தான். "உனக்குத் துணிமணிகள் எல்லாம் புதுசு. நானே கடையில வாங்கினேன்."

"நிறைய செலவாச்சா?"

"ஆகட்டுமே... பொண்டாட்டிக்குப் புருஷன் வாங்கித் தர்றதுல செலவுக் கணக்குப் பாப்பாங்களா! நான் அப்படி ஆளு கிடையாது அம்சா!"

அம்சவேணி அப்படியே மகிழ்ந்து போனாள். அவனது தோளில் சாய்ந்து கொண்டாள். வீரையன் கரம் அவளது உள்ளங்கையைப் பற்றியது...

"ஏங்க... நாம நல்லபடியா குடும்பம் நடத்தி பொழைச்சிருவோமா?"

"ஏன்? உனக்கு இதிலென்ன சந்தேகம்?"

"இல்லை... அம்மாவை விட்டுட்டு... எல்லாத்தையும் விட்டுட்டு உங்ககூட வந்திட்டேன்."

"சரி."

"அம்மா பாவம்.. அது வச்சிருந்த நகை, பணம் எல்லாத்தையும் எடுத்திட்டு வந்தாச்சு. ரொம்ப வருத்தப்படுவாங்க."

"கவலைப்படாதே... எனக்குப் போனதுமே நல்ல வேலை கிடைச்சிடும். எல்லாத்தியும் திருப்பிக் கொடுத்திடலாம்."

"ம்...!" என்றாள் ஆச்சரியமாக. "என் தங்கச்சிக வேறே பாவம். அதுகளுக்கும் கல்யாணமாகணும்."

"என்ன அம்சா! எனக்கு ஒரு நல்ல வேலை கிடைக்கட்டும். நாமளே மாப்பிள்ளை பார்த்து உன் தங்கச்சிகளுக்கும் கல்யாணங்கட்டி வச்சிருவோம்."

அம்சவேணி நெகிழ்ந்து போனாள். "நிஜமாவா சொல்றீங்க?"

"ஆமா...பின்னே...நான் அதெல்லாம் பொறுப்பா செய்வேன் அம்சவேணி."

அவள் அவனது கரத்தினை மேலும் இறுகப் பற்றினாள். கண்கள் கசிய அவனது தோளில் தலை சாய்த்துக் கொண்டாள்.

வெள்ளி இரவு ஏழு மணிக்குத்தான் அழகுவுக்கும், கிருஷ்ணவேணிக்கும் அம்சவேணியைப் பற்றி பயம் தோன்றியது. அது வரைக்கும் அவள் இதோ வந்துவிடுவாள் என்று தான் நினைத்தார்கள். 'அவள் எங்காவது போய்விடக் கூடும்' எனும் சிந்தனையே அவர்களுக்குத் தோன்றவில்லை... அதில் ஆச்சர்யமொன்றுமில்லை.

ஏழுமணியாகியும் வராததால் அழகு கிளம்பிச் சென்றான். தெருத் தெருவாகத் தேடினான். சின்னப்பட்டி கிராமத்தில் பதினைந்து நிமிடத்துக்கு மேல் தேடுவதற்கு விஸ்தீரணமில்லை. முப்பதாவது நிமிடமே 'எதுக்கு இந்தப் பையன் அங்கிட்டும் இங்கிட்டும் அலையறான்?' என்று யோசிக்க ஆரம்பித்து விட்டனர்.

விஷயம் லேசாகக் கசியத் துவங்கியது. விடியும்போது கிருஷ்ணவேணியும், நீலவேணியும் பயத்தில் அழத்துவங்கி விட்டனர். இரவெல்லாம் தூங்கவில்லை. அழகு நேராக காலை நாலுமணிக்கெல்லாம் போய் சரவணனின் வீட்டுக் கதவைத் தட்டினான்.

கதவைத் திறந்தவர் சிவராமன். விஷயம் கேட்டதும் சங்கடத்துடன் உட்கார்ந்து விட்டார்.

"எங்க போயிருப்பா.. வீட்ல ஏதும் சண்டையா?"

"இல்லீங்க."

"சொந்தக்காரங்க வீட்ல தேடிப்பாப்போம். பணம் ஏதும் வேணுமா!"

"ஆமாங்க. வீட்ல பணம் இல்லை."

"பணம் இல்லையா... வைச்சிருந்த பணம் ஏதாச்சும் குறையுதா?" என்றார் சிவராமன் சந்தேகமாக.

"பணமெல்லாம் அம்மா பீரோக்குள்ள தாங்க வைச்சிருக்கும்."

பணம் எடுத்துக் கொடுத்தார் சிவராமன். பிறகு சரவணனை அழைத்தார். "அழகு கூடப் போயி ஒத்தாசையா இரு" என்றவர்..

"ஒண்ணும் பயப்படாத தம்பி. விடியட்டும். துப்புரவாத் தேடிப் பாத்துரலாம்" என்றார்.

விடிந்தது. மதியத்தின்போதே வீரையன் ஊரில் இல்லை என்பதும் தெளிவாகிவிட்டது. மதியத்துக்குமேல் லீலா வந்தாள். அவளை எப்படி எதிர்கொள்ளப் போகிறோம் என்ற பயத்தில் இவர்களனைவரும் நடுங்கிக் கொண்டு இருந்தனர்.

"சரவணா அம்மாகிட்ட நீதான் பக்குவமா சொல்லணும்" என்றான் அழகு. "எனக்குப் பேசவே பயமாருக்கு" என்றான்.

லீலா உள்ளே நுழைந்ததும் விசித்திரமான சூழ்நிலையை உணர்ந்தாள். சரவணனுக்கும் தயக்கமாகத்தானிருந்தது. இருந்தாலும் வேறு வழியில்லை. ஒருவழியாக சொல்லி விட்டான்.

"என்னது? ஓடிப்போயிட்டாளா! யார் கூட?" என்றாள். குரலில் அவ்வளவு தெளிவை யாருமே எதிர்பார்க்கவில்லை..

"வீரையன் கூட."

"அவங்கூடயா?" அவள் குரலில் வருத்தம் தென்பட்டது. சிறிது நேரம் எதையோ யோசித்தவள். விடுவிடுவென்று உள்ளே சென்றாள். பீரோவைத் திறந்து பார்த்தாள். அவளது கண்கள் கலங்கின. வெளியே வந்தாள்.கிருஷ்ணவேணியும், தங்கையும் அவளருகில் வர அணைத்துக் கொண்டாள்.


"குருவி சேக்கற மாதிரி சேர்த்து வச்சிருந்தண்டி.... உங்க மூணுபேருக்கும் கொஞ்சம் கொஞ்சமா சேர்த்து வச்சிருந்தேன். எல்லாத்தையும் வாரிக்கிட்டுப் போயிட்டா. அழகு பணம், நகையைப் பூராவும் கொண்டுட்டுப் போயிருக்காடா" லீலாவின் கண்கள் கலங்கியிருந்தனவே தவிர அவள் குரலில் தெளிவு மிகுந்திருந்தது.

உடைந்து அழப் போகிறாள், எல்லாவற்றையும் தூக்கியெறிந்து கத்தி ஊரைக் கூட்டப் போகிறாள் என்று பயந்திருந்த இவர்களுக்கு லீலாவின் செயல் மிகவும்

"இது என்ன? பாலம் கட்டறதுக்கு கொடுத்த 'டெண்டர்'லே கடைசியில் வக்கீல் செலவுன்னு ஐந்து லட்ச ரூபாய் காட்டியிருக்கீங்க?"

"ஆமா..ஆட்சி மாறினதும் கோர்ட், கேஸ்னு வருமே! அதுக்காக தான்!"

— சம்பத் குமாரி



ஆச்சர்யமாக இருந்தது.

"என்னம்மா செய்றது?" என்றான் அழகு.

அப்போது சிவராமன் உள்ளே வந்தார். லீலா அவரைப் பார்த்ததும் எழுந்து நின்றாள்.

"உக்காருங்க... என்ன தம்பி...ஏதாச்சும் தெரிஞ்சதா?" அழகு தயங்கியபடி சொன்னான், "பணத்தையும், நகையையும் எடுத்துக்கிட்டு ஓடி இருக்குங்க.. வீரையனையும் காணோம்.. அவன்கூடத்தான் போயிருக்கணும்."

"அவன்கூடயா?" சிவராமனின் முகம் மாறியது... "என்னம்மா.. போலீஸ்ல கம்ப்ளெயின்ட் கொடுத்திரலாமா?"

"வேணாங்க..." என்றாள் லீலா... "எனக்கு ஒரே ஒரு உதவி பண்ணுங்க."

"என்ன... சொல்லும்மா என்ன வேண்ணாலும் செய்றோம்."

லீலா தீர்மானமாகச் சொன்னாள், "இவ ஓடினது கூட எனக்குத் தப்பா தெரியல்லங்க... ஆனா வீரையன் நல்லவன் மாதிரி தெரியலை."

"கரெக்ட்... நானும் அதான் நினைச்சேன்" என்றார் சிவராமன்.

"போலீஸ் எல்லாம் வேணாம்... அழகு, சரவணன் அப்புறம் சரவணன் கூட்டாளிக எல்லாரும் நாலு பக்கமும் போய் தேடட்டும். எப்படியாச்சும் அவங்களைக் கூட்டி வந்துடுங்க... கல்யாணம் பண்ணி வச்சிருவோம்" என்றாள் லீலா.

"அம்மா" என்றாள் கிருஷ்ணவேணி, நம்ப முடியாமல்.

"என்னம்மா சொல்ற? கல்யாணம் பண்ணி வைக்கவா?"

லீலா உறுதியான குரலில் சொன்னாள். "ஆமா... வேற வழி... அவளுக்கு இந்நேரம் கல்யாணம் பண்ணி வச்சிருக்கணும். நம்ம இயலாமை... ஓடிட்டா... இனி என்ன பண்றது.. ஓடினவ சும்மா ஓடலை... உங்களுக்கும் சேர்த்து நான் பண்ணி வச்சிருந்த நகையைக் கொண்டுட்டு ஓடிட்டா... அழகு... என்னடா அம்மா இப்படிப் பேசறாளேன்னு நினைக்காத... அவளை எங்கே பாத்தாலும் சரி... வீட்டுக்கு கூப்பிடு... அவ பிடிவாதமா வர லேன்னு அடம் பிடிச்சா... பாதி நகையை யாவது வாங்கிட்டு வந்துரு. அவ அவன் கூடவே இருக்கட்டும்."

"என்னம்மா இப்படிச் சொல்ற?" என்றாள் கிருஷ்ணவேணி.

"பின்ன... எனக்கு எல்லாப் பிள்ளையும் முக்கியம்டி... உங்க ரெண்டு பேரையும் கரை சேர்க்க வேணாமா?"

"அவங்க சொல்றது சரிதான். நடந்தது நடந்திருச்சு.. ஏய் சரவணா, உன் கூட்டாளிகளைக் கூப்பிடு... எல்லார் செலவுக்கும் பணம் வாங்கிக்க.. ஆளுக்கு ஒரு பக்கமாப் போயி தேடுங்க... உடனே கிளம்புங்க."

சரவணனும், அழகுவும் கிளம்பினார்கள்.

"வீட்டுக்கு வாங்க... பணம் தர்றேன். வாங்கிட்டுக் கிளம்புங்க" என்று நடந்தார் சிவராமன்.

அழகு அம்மாவிடம் போனான்... "அம்மா ஒண்ணும் மனசு உடைஞ்சிராத... நாங்க இருக்கோம்..."

லீலா அவனைப் பரிவுடன் பார்த்தாள். "கவலைப்படாம போய்ட்டு வாடா... அந்த நாய் ஓடினா என்ன... நீங்க மூணுபேரும் இருக்கீங்கள்ல."

அழகுவும் சரவணனும் வீட்டை அடைந்தனர். சிவராமன் உள்ளே பணம் எடுக்கப் போனார். பெருமாயிப் பாட்டி சரவணனிடம் புலம்பினாள்.

"ம்... நடந்து போச்சா... பூவரச வீட்டுல குடி வச்சா அந்தக் குடும்பம் விளங்குமா? பண்ணிருச்சே... வேலையைக் காமிச்சிருச்சே... ஒருத்தியை ஓட வச்சிருச்சே..."

"பாட்டி... சும்மாயிரு. நீவேற எதையாவது உளறாதே."

"உனக்கு அப்படிதான் தெரியும். பாத்தேல்ல... இனி அந்தப் பொம்பளை நிம்மதியா இருப்பாளா?" உள்ளிருந்து சிவராமன் பணத்துடன் வந்தார். கிழவி அவரிடம் சொன்னாள், "எலேய்... என்னாச்சு பாத்தேல்ல.. பேசாம அந்தப் பொம்பளைய வீட்டைக் காலி பண்ணச் சொல்லிரு... இல்லாட்டி என்னவாவது கெட்டது நடந்து போகும்டா.."

சிவராமன் முறைத்தார், "பேசாம இரும்மா... எல்லாம் தெரியும். சமய சந்தர்ப்பமில்லாம எதையாவது உளறிக்கிட்டு." மேற்கொண்டு கிழவி ஏதோ புலம்ப அவர் பணத்தை சரவணனிடம் கொடுத்தார்.

"இன்னியிலயிருந்து ஒரு மூணு நாள்... நல்லாத் தேடுங்க... அப்புறமா வாங்க.. ஏதாவது பிரச்னைன்னா.. போஸ்ட் ஆபீசுக்கு போன் பண்ணி தகவல் சொல்லுங்க என்னா!"

"சரி" என்றான் சரவணன்.

சரவணனும், அழகுவும் ஒன்றாகவும், மணி, சுந்தர், பாலா தனித்தனியாகவும் வீரையன் – அம்சவேணியைத் தேடிக் கிளம்பினார்கள்.

அழகுவும், சரவணனும் அருகருகே அமர்ந்து இருந்தனர். பஸ் போய்க் கொண்டிருந்தது. சரவணனுக்குத் தர்மசங்கடமாக இருந்தது. கிருஷ்ணவேணி பற்றி அவன் ஏதும் கேட்டுவிடக் கூடாதே என்றிருந்தது. பஸ் கிளம்பி வெகு நேரம் கழித்து அழகு தான் முதலில் பேசினான்.

இனி காண முடியுமா?

இப்போதெல்லாம் 'ஒரு குடும்பம், ஒரு குழந்தை' என்ற விஷயம் ஒரு ஃபேஷனாகி



விட்டது. இருபத்தைந்து வருடம் கழித்து, இப்படி மூன்று குழந்தைகள் கொண்ட ஒரு குடும்பத்தை, நகர்ப்புறத்தில் காண முடியுமா? சந்தேகம்தான்!

அட்டையில் : ரமணி, பூர்ணா, ஸ்வேதா, சித்து, வர்ஷா

வண்ணப்படம் : யோகா

'வீட்ல உங்க பாட்டி பூவரசவீடுன்னு என்னமோ சொல்லிச்சே."

"அது என்னத்தையாவது உளறும்" என்று சமாளித்தான் சரவணன்.

"இல்லை சரவணா... எனக்கு அது பத்தின விஷயம் தெரியும்" என்று அழகு சொன்னான். "கொஞ்ச நாள் முன்னாடி... ரெண்டு மாசமாவது இருக்கும். வீரையன் எங்கிட்ட வந்தான்... வந்து எனக்கொரு உதவி பண்ணுன்னு கேட்டான்."

"என்ன கேட்டான்?" என்றான் சரவணன் ஆச்சர்யமாக.

"பூவரச வீடு பத்தி உங்க பாட்டி சொன்னதா நீ சொன்ன எல்லா விஷயத்தையும் எங்கிட்ட சொன்னான்... எங்க வீட்ல எல்லாரையும் எங்காவது வெளியூர் அனுப்பச் சொன்னான்..."

"வெளியூர் அனுப்பிட்டு!"

"அவனும், நானுமா பூவரச வீட்ல, அந்த ரூமைத் தோண்டி சிலையை எடுத்துக்கலாம்னு ஐடியா சொன்னான். எனக்குக் கோபம் வந்து அவனைத் திட்டிட்டேன். அவன் எவ்வளவோ ஆசை காட்டினான். அந்தச் சிலையை எடுத்துட்டா பம்பாய்ல கொண்டு போய் நிறைய பணத்துக்கு விக்கலாம்... உனக்கு அதில பாதி தர்றேன்னான். நான் ஒத்துக்கலை... ரொம்ப வற்புறுத்தினான். நான் 'இதுக்கு மேல பேசினா சிவராமன் சார்கிட்ட சொல்லிடுவேன்'னு சொன்னேன். அதுக்குக் 'குள்ளப் பயலே, உன்னை வைச்சுக்கிறேன்டா'ன்னு சொல்லிட்டுக் கோபமாப் போயிட்டான்."

"அப்படியா?" என்றான் சரவணன். அம்சவேணியைக் கூட்டிப் போனது போக இப்போது இப்படியொரு உபரித் தகவல்.. வீரையன் மீதான சரணனின் அபிமானம் இப்போது காணாமல் போயிருந்தது.

"அன்னைக்கே எங்கிட்டயும் துருவித் துருவி அந்தச் சிலை கீழதான் இருக்கான்னு கேட்டுக்கிட்டிருந்தான்" எனறான் சரவணன்.

"அவன் நல்லவன் கிடையாது" என்றான் அழகு...

"ம்..." என்றான் சரவணன்.

"ஆனா நீ நல்லவன் சரவணா."

"என்ன அழகு திடீர்னு இப்படிச் சொல்ற?"

"ஆமா..." என்ற அழகு தயக்கத்துடன் கேட்டான்.

"நீ கிருஷ்ணவேணியை இழுத்துக்கிட்டு ஓடிட மாட்டியே சரவணா?"

(தொடரும்)



அமரர் கல்கி நினைவு நாள்

12.01.2002 சனிக்கிழமை

நேரம் : மாலை 6.00 மணி

'வாழ்க சுதந்திரம்! வாழ்க நிரந்தரம்'

(அமரர் கல்கி எழுதிய தலையங்கங்கள் தொகுப்பு)

நூலை வெளியிட்டு, தலைமையுரை நிகழ்த்துகிறார்
அகில இந்திய வானொலியின் முன்னாள் நிலைய
இயக்குனர் திரு. திருவேங்கடம்

முதல் பிரதி பெறுபவர் :
சென்னை ஆன்லைன் திரு. ரங்கராஜன்

இதனைத் தொடர்ந்து உடையாளூர் திரு. கல்யாணராமன் வழங்கும்
நாமசங்கீர்த்தனம் நடைபெறும்.

இடம் : ஆஸ்திக சமாஜம் அரங்கம், வினஸ் காலனி,
ஆழ்வார்பேட்டை, சென்னை -18.

கல்கி கிருஷ்ணமூர்த்தி நினைவு அறக்கட்டளை

அன்புடன் அழைக்கிறது.

அனைவரும் வருக!



ஹோமியோ - சித்தா - ஆயுர்வேத முக்கூட்டு மருத்துவத்தால் குழந்தை பெறலாம்!

இனி பிள்ளை வரம் வேண்டி எங்கும் அலைய வேண்டாம்

குழந்தை இல்லாத தம்பதிகள் பிள்ளைவரம் வேண்டி இனி எங்கேயும் அலைய வேண்டாம். குழந்தை பெறாமைக்கு குறைபாடு கணவனிடம் இருந்தாலும் சரி, மனைவியிடம் இருந்தாலும் சரி. ஹோமியோ-சித்தா-ஆயுர்வேத முக்கூட்டு மருத்துவத்தின் மூலம் ஆண் மலட்டுத் தன்மையும், பெண் மலட்டுத் தன்மையும் அறவே நீக்கி குழந்தை பிறக்கச் செய்கிறார்கள் டாக்டர் **ஏ.அர்ஜுனா, டாக்டர் வி.ஏ.ஆண்டாள்.** இவர்கள் 'நவீன வைத்தியாலயா' என்ற பெயரில் ஆஸ்பத்திரி நடத்தி வருகிறார்கள். திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசியில் பிராமணர் தெருவிலும், சென்னையில் வடபழனி 100 அடி சாலையிலும் வெற்றிகரமாக சிகிச்சை நிலையங்கள் நடத்தி வருகிறார்கள்.

குழந்தைப் பெற்றுக் கொள்ள சிகிச்சைக்கு வரும் தம்பதிகளை டாக்டர் **ஏ.அர்ஜுனா** முதலில் கணவனின் உயிரணு உற்பத்தியை விந்து பரிசோதனையின் மூலம் குறைபாடுகளைக் கண்டறிகிறார். பிறகு, மனைவியின் குறைபாடுகளை சில பரிசோதனைகளின் மூலம் தெரிந்து கொண்டு ஆண் மலட்டுத் தன்மை, பெண் மலட்டுத்தன்மை நீங்கி குழந்தை பெற முக்கூட்டு மருத்துவ சிகிச்சையளிக்கிறார்.

''சென்னை கோடம்பாக்கத்தில் சம்பத் என்ற நபர் என்னிடம் சிகிச்சைக்கு வரும்போது அவரது விந்து பரிசோதனையில் டோட்டல் கவுண்ட் 70 மில்லியனும், மொட்டிலிட்டி 70%ம் இருந்தது. 2 மாத சிகிச்சைக்குப்பின் விந்து பரிசோதனையில் டோட்டல் கவுண்ட் 142 மில்லியனும், மொட்டிலிட்டி 80% உயர்ந்துள்ளது.

இது முக்கூட்டு மருத்துவத்தில் ஒரு சாதனையாகும்.

சென்னை வண்ணாரப்பேட்டையில் மனோகரன் என்பவருக்கு 6 மாத முக்கூட்டு சிகிச்சையில் உயிரணு உற்பத்தி ஆகியுள்ளது.

காஞ்சீபுரத்தில் கணேசன் என்பவருக்கு சில மாத சிகிச்சையில் உயிரணு உற்பத்தி ஆகியுள்ளது.

சென்னை நம்மாழ்வார் பேட்டையிலுள்ள ரவிக்குமார் என்பவருக்கு உயிரணு உற்பத்தியாகியுள்ளது.

வேலூரில் சுப்ரமணியன் என்பவருக்கு உயிரணு நார்மல் ரிசல்ட் உண்டாகியிருக்கிறது.

இப்படி பல தம்பதியர் முக்கூட்டு மருத்துவத்தால் பலன் அடைந்திருக்கிறார்கள்.



• திருவண்ணாமலை மாவட்டத்தில் உயிரணு உற்பத்தி ஆகியும், கருக்குழாய் அடைப்பு நீங்கியும் குழந்தை பெற்ற ரங்கநாதன் - கீதா தம்பதியர். டாக்டர் A. அர்ஜுனா - டாக்டர் ஆண்டாள் அர்ஜுனாவுடன் உள்ளார்கள்.

சென்னை புதுப்பேட்டையில் ஒரு முஸ்லீம் தம்பதியருக்கு எங்களது சிகிச்சையால் ஆண் குழந்தை ஒன்றும் பெண் குழந்தை ஒன்றும் பெற்று நலமுடன் இருக்கிறார்கள்.

திருவாரூரைச் சேர்ந்த அறிவழகனுக்கு அறவே உயிரணு இல்லை. அவர் 7 மாதம் தொடர்ந்து முக்கூட்டு மருந்து சாப்பிட்டு உயிரணு உற்பத்தி ஆகியுள்ளது.

உயிரணு குறைவாக இருந்த கேரள மாநிலம் பாலக்காட்டைச் சேர்ந்த சேது மாதவனுக்கு 16.6.2000ல் கவுண்ட் 20 மில்லியன், மொட்டிலிட்டி 50% இருந்தது. 13.7.2001ல் கவுண்ட் 60 மில்லியன், மொட்டிலிட்டி 50% முன்னேற்றம் கண்டது.

மகாராஷ்டிர மாநிலம் நியூபாம்பே வாஷி பகுதியைச் சேர்ந்த ஜெயராமனுக்கு உயிரணு குறைவாக இருந்தது. 28.12.2000ல் இருந்த கவுண்ட் 45 மில்லியன், மொட்டிலிட்டி 50% ஒரே மாதத்திற்குள் 26.1.2001ல் கவுண்ட் 92 மில்லியன், மொட்டிலிட்டி30% என்று உயர்ந்தது.

ஆண் மலட்டுத் தன்மைக்கான காரணங்கள்:

ஆண்களுக்கு இளம் வயதிலேயே

புட்டாளம்மை வந்திருந்தாலும், அம்மை வந்திருந்தாலும், மஞ்சள் காமாலை, டைபாய்டு ஜுரத்தால் பாதிக்கப்பட்டிருந்தாலும், விதைகளில் அடிபட்டிருந்தாலும், வெப்பம் அதிகமுள்ள இடங்களில் வேலை செய்வதாலும், தன்னைவிட வயது முதிர்ந்த பெண்களிடம் தாம்பத்திய உறவு கொண்டாலும் அவர்களால் புத்திர பாக்கியம் அடைய முடியாத நிலை உள்ளது. அவர்களுக்கு முக்கூட்டு மருந்து சிகிச்சையால் உயிரணு உற்பத்தி செய்து புத்திர பாக்கியம் அடையச் செய்கிறோம்.

பெண் மலட்டுத் தன்மைக்கான காரணங்கள்:

பெண்களில் கருப்பை ஓவரி வளர்ச்சியே இல்லாமல் இருப்பவர்களுக்கு வளர்ச்சியடைச் செய்கிறோம். வீட்டு விலக்கு ஒழுங்கில்லாதவர்களுக்கு ஒழுங்கு படுத்துகிறோம். சிலருக்கு வீட்டு விலக்கின்போது வரும் சூதக வயிற்றுவலியால் கருத்தரிக்க வாய்ப்பில்லாமல் போகும். இந்தக் குறையை முக்கூட்டு மருந்துகளால் நீக்கி கருத்தரிக்கச் செய்கிறோம்.

சில பெண்களுக்கு கருமுட்டை உற்பத்தி இருக்காது. இத்தகையவர்களை ஸ்கேன் மூலம் பரிசோதிக்கச் செய்து, கருமுட்டை உற்பத்தி நிலையை அறிந்து கருமுட்டை உண்டாக்கி கருவுறச் செய்கிறோம். பெண்களிடமுள்ள பிரதான பெரிய பிரச்னை, கருக்குழாயில் சதை அடைப்பு ஏற்படுவது. அதை முக்கூட்டு மருந்துகளால் கரைத்து அடைப்பை நீக்கி கருத்தரிக்க செய்கிறோம்.

திருமணமாகி நான்கு வருடங்களாக குழந்தை இல்லாதிருந்த சென்னை குரோம்பேட்டையைச் சேர்ந்த ராஜா-அலமேலு தம்பதியருக்கு முக்கூட்டு மருத்துவ சிகிச்சையளித்ததில் அவர்களுக்கு 6.3.2001ல் ஆண் குழந்தை பிறந்துள்ளது.

சென்னை சாந்தோமைச் சேர்ந்த சுப்புலட்சுமி என்ற ஸ்டாஃப் நர்ஸுக்கு முக்கூட்டு சிகிச்சையினால் சமீபத்தில் குழந்தை பிறந்துள்ளது.

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி அவலூர் பேட்டையில் சுந்தரமூர்த்தி தம்பதியருக்கு ஆண் குழந்தை பிறந்துள்ளது.

சென்னை வடபழனி கங்கையம்மன் கோவில் தெருவைச் சேர்ந்த எங்களிடம் சிகிச்சை பெற்ற ஒரு முஸ்லிம் பெண்மணி தற்போது குழந்தை பெற்றுள்ளார்.

மதுரையில் லேபர் ஆபிஸர் ஒருவருக்கு 23 ஆண்டு காலம் குழந்தை இல்லாதிருந்தது. எங்களிடம் சிகிச்சை பெற்றதில் ஜூன் மாதம் 2000ல் பெண் குழந்தை பிறந்துள்ளது.

மதுரையில் 65 வயதுள்ள ஓய்வு பெற்ற போலீஸ் டி.எஸ்.டி. ஒருவருக்கு எங்களது சிகிச்சையால் பெண் குழந்தை பிறக்கச் செய்துள்ளோம்.


இப்படி எங்கள் சிகிச்சையில் பல ஊர்களில் மாதா, மாதம் குழந்தைகள் பிறந்து கொண்டிருக்கின்றன.

எங்கள் மருத்துவமனையில், தமிழ்நாட்டில் எல்லா மாவட்டங்களிலிருந்தும், இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலிருந்து வந்தும்; அயல் நாடுகளில் அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், கனடா, சுவிட்சர்லாந்து, நியூசிலாந்து, சவுதி அரேபியா, துபாய், குவைத், பக்ரைன், ரியாத், ஓமன், இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், ஜெர்மனி போன்ற வெளிநாடுகளில் இருந்து வந்தும் சிகிச்சை பெற்று பயனடைந்து வருகிறார்கள்.

எங்களிடம் சிகிச்சை பெற்று கர்ப்பமடைந்தவர்கள் கர்ப்பமடைந்த பின் 6 மாதம் வரை ஆங்கில மருத்துவர்களிடம் சென்று ஆங்கில மருந்துகளைச் சாப்பிட்டால் கருச்சிதைவு ஏற்படவும் வாய்ப்புண்டு.

ஒரு ஜாதி மருந்துகளால் உருவாகும் கரு, வேறொரு ஜாதி மருந்தினால் பாதிக்கப்பட வாய்ப்புண்டு. அதனால் பிரசவம் ஆகும் வரை உஷாராக இருக்க வேண்டும். அப்போதுதான் சுகப்பிரசவம் ஏற்படும் என்றார்'' டாக்டர் அர்ஜுனா. சுகப்பிரசவத்திற்கு மருந்து உண்டு என்கிறார் அவர்.

நீங்களும் குறைந்த செலவில் புத்திர பாக்கியம் அடைய டாக்டர் ஏ. அர்ஜுனா, அவரது மனைவி டாக்டர். வி.ஏ.ஆண்டாள் அவர்களை அணுகவும்.



• டாக்டர் அர்ஜுனா, டாக்டர் V.A. ஆண்டாள் அர்ஜுனா

நவீன வைத்தியாலயா ஹோமியோபதி - சித்தா - ஆயுர்வேத மலடு நீக்கும் ஆஸ்பத்திரி

சென்னையில் சனி, ஞாயிறு, திங்கள் ஆகிய தினங்களில் டாக்டரைச் சந்திக்குமிடம்: எண் 65 நெற்குன்றம் பாதை, (டி.எஸ். கவுரி சங்கர் கல்யாண மண்டபம் எதிரில்) 100 அடி ரிங் ரோடு, வடபழனி, சென்னை - 600 026. போன் : 4833464 எஸ்டிடி.044

செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி ஆகிய தினங்களில் டாக்டரைச் சந்திக்குமிடம் -

வீடு : நெ. 30, பிராமணர் தெரு, ஈஸ்வரன் கோயில் அருகில், வந்தவாசி.

திருவண்ணாமலை மாவட்டம் - 604 408

போன்: 25208, 26180 எஸ்டிடி. 04183

ADVT

"கிருஷ்ணன் கோவில் எல்லாம் எழுந்து வாங்க" என்ற படி விசிலடித்து, பேருந்தை நிறுத்துகிறார் நடத்துனர். அடுத்த வினாடி "கொய்யா... கொய்யா... டஜன் பத்து ரூபாய் கொய்யா கொய்யா" என்ற குரல்கள் பேருந்தை முற்றுகை யிட்டன. கொய்யாப் பழங்கள் நிரம்பிய பாலீதீன் பைகளைத் தாங்கிய கரங்கள் பேருந்தின் சாளரங்கள் வழியே உள்ளே நீள்கின்றன. மதுரையிலிருந்து ஸ்ரீவில்லிபுத்தூர், ராஜ பாளையம், தென்காசி, குற்றாலம் போகிற எல்லாப் பேருந்துகளும் இந்த ஊரில் இரண்டு நிமிடமாவது நிறுத்தப்படுகின்றன. காரணம் இந்தக் கனிதான். 'கிருஷ்ணன் கோவில் கொய்யாப் பழம்' என்றால் தென் மாவட்டங்களில் அத்தனைப் பிரபலம். பல நூற்றாண்டு பழைமையான பெருமாள் கோவில் இந்தச் சின்ன ஊருக்கு ஆன்மிகச் சிறப்பு என்றால், 'அருள்மிகு கலசலிங்கம் பொறியியல் கல்லூரி' கல்விச் சிறப்புக்கு கட்டியம் கூறுகிறது.



சர்வதேச ஐ.எஸ்.ஓ. 9002 தரச் சான்றிதழ் பெற்ற இந்தியப் பொறியியல் கல்லூரிகளை விரல் விட்டு எண்ணி விடலாம். அவற்றில் கலசலிங்கம் கல்லூரியும் ஒன்று. இந்த கல்லூரியின் வைரம் எம்.வினோத் குமாரைத் தேடித் தான், கிருஷ்ணன் கோவிலில் இறங்கினோம்.

எழில் மிகு மலைகளின் பின்னணியோடு பரந்து விரிந்த கல்லூரி வளாகம். அது ஒரு கல்விக் கூடம் என்கிற உணர்வை ஏற்படுத்தும் விதமாக இருபதுக்கும் அதிகமான கட்டிடங்கள் ஒழுங்கமைப்போடு காட்சி தருகின்றன. கண்கவர் பூங்காவும், பார்க்கிற திசையெல்லாம் பரந்து கிடக்கிற பசுமையும் நம் மன நிலையை சந்தோஷப் படுத்தினாலும் உள்ளுக்குள் உதைப்பு. கல்லூரி நிர்வாகத்துக்கோ, சம்பந்தப்பட்ட மாணவருக்கோ முன்கூட்டியே தெரியப்படுத்தாமல் திடீரென்று வந்து இறங்கிவிட்டோமே! மாணவர் வினோத்குமார் புத்தாண்டு விடுப்பில் போயிருந்தால்... சந்தேகம் மண்டையைக் குடைய கல்லூரி அலுவலகத்துக்குள் நுழைகிறோம்.



• எரியாத பத்து ரூபாய்

சூ சூ தேனீ!

முதல்வர் சி. தங்கராஜ் நம்மை வரவேற்று நமது சந்தேகத்தைப் போக்குகிறார் "வினோத், பெயருக்கேற்ப ரொம்பவே மாறுபட்ட மாணவர். இளங்கலை பொறியியல் பட்டப்படிப்பில்



• தீவிரவாத எதிர்ப்பு நாடகத்தில்

மின்னியல் மற்றும் மின்னணுவியல் படித்து வரும் இவர், இதுவரை ஒரு வகுப்பைக்கூட கட் அடித்ததில்லை. கல்லூரியிலேயே நூறு விழுக்காடு வருகைப் பதிவு வைத்திருக்கும் ஒரே மாணவர் இவர்தான். கடந்த மூன்று ஆண்டு களில் இவர் ஒரு நாள் கூட விடுப்பு எடுத்த தில்லை. இதற்காகவே கல்லூரி நிர்வாகம் இவருக்கு ஒவ்வொரு ஆண்டும் சிறப்புப் பரிசு வழங்கிறது. இவரைத் தேடி விடுமுறை நாட் களில்கூட நீங்கள் கல்லூரிக்கு வரலாம்." என்றவர் கல்லூரி ஆய்வுக் கூடத்துக்குப் போனால் நீங்கள் வினோத்தைச் சந்திக்கலாம் என்று அனுப்பி வைத்தார்.

முதல்வர் அறையிலிருந்து நம்மை ஆய்வுக் கூடத்துக்கு அழைத்துப் போனவர் வினோத் பயிலும் துறையின் ஒருங்கிணைப் பாளரான ஜெயலெட்சுமி. "வினோத், பல வகையிலும் கல்லூரிக்குப் பெருமை சேர்த்துக் கொண்டிருக்கும் சுறுசுறு தேனீ. பல்கலைக் கழகத் தேர்வுகளில் எந்தப் பாடத்திலும் பின் தங்கி விடாமல் என்பது விழுக் காடு மதிப்பெண்களோடு தேறியிருப்பவர். படிப் பிலும் ஒழுக்கத்திலும் மட்டும்தான் என்றில்லை. எல்லாத் துறை மாண வர்களோடும், பேரா சிரியர்களோடும் நட் பாகப் பழகுவார். அனை வரது உணர்வுகளையும் புரிந்து கொள்வதிலும், அதை மதிப்பதிலும் கூட முதல் மாணவர்" என்று அவர் சொல்லிக் கொண்டே வந்ததில் ஆய்வுக் கூடம் வந்து விட்டது. அங்கே சக மாணவரோடு சுறுசுறுப் பாய் ஆய்வில் ஈடுபட்டிருந்த வினோத்தின் தோளைத் தொட்டுத் திருப்பி, 'கல்கியிலிருந்து வருகிறோம்' என்றதும் அவர் முகத்தில் ஆயிரம் வாட்ஸ் மின்சார வெளிச்சம்.

"மாவட்ட அளவில் நடைபெறப் போகும் ஒரு அறிவியல் கண்காட்சியில் எனது கண்டு

கல்லூரி வைரம்

கல்கி-60



• நண்பர்கள் சூழ வினோத்

பிடிப்பு பங்கு பெறவிருக்கிறது. அதைத்தான் பரிசோதித்துக் கொண்டிருகிறோம்'' என்றவர் தொடர்ந்தார். ''எங்கள் கல்லூரியில் நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை அறிவியல் கண்காட்சி நடத்துகிறார்கள். கடந்த முறை நடத்தப்பட்ட கண்காட்சியில் நான் வைத்த கண்டுபிடிப்பு தான் இது. இதைப் பற்றி 'தினமலர்' தனது மதுரைப் பதிப்பில் செய்தி வெளியிட்டது. இப்போது பாருங்கள்'' என்றபடி, ஒரு பத்து ரூபாய் நோட்டை ஒரு இடுக்கியில் பிடித்து திரவம் நிரப்பப்பட்டிருந்த ஒரு குவளைக்குள் நனைத்து எடுத்து, அருகில் எரிந்து கொண்டிருந்த விளக்கில் காட்ட, நோட்டு பக்கென்று பற்றிக் கொண்டு திகுதிகுவென எரிந்தது. ஆச்சர்யம் ஜுுவாலைகள் முழுவதுமாக எரிந்து முடிந்தபிறகு பத்து ரூபாய் எந்த பாதிப்பும் இல்லாமல் அப்படியே இருந்தது. 'என்ன திரவம் அது?' என்றால் 'அதுதான் எனது கண்டுபிடிப்பு' என்று அதன் கலவை ரகசியத்தை உடைக்க நாசூக்காக மறுத்துவிட்டார்.

வினோத்தின் கோர்ஸ் ப்ராஜெக்ட் கூட ஒரு நல்ல கண்டுபிடிப்பு. தற்போது தொலைக்காட்சி மற்றும் வானொலியில் பெட்டிகளுக்கு மட்டும்தான் ரிமோட் கருவியைப் பயன்படுத்தி கட்டுப்படுத்துகிறோம். வினோத் கண்டு பிடித்திருக்கும் ரிமோட் ஒரே நேரத்தில் பத்து கருவிகளின் மின்சாரத்தையும் அது சார்ந்த இயக்கத்தையும் கட்டுப்படுத்தும் வல்லமை படைத்தது. முப்பது மீட்டர் தூரத்திலிருந்து கட்டுப்படுத்த கூடிய இந்த ரிமோட் கருவி தொழிற்சாலைகளில் அதிகம் பயன்படுத்த ஏதுவானதாம். வினோத்தின் சாதனை தொடர்கிறது. கல்லூரிகளுக்கு இடையே தேசிய அளவில் நடத்தப்படும் தொழில்நுட்பக் கருத்தரங்கில், தமிழ் நாட்டிலிருந்து கலந்து கொண்ட ஆறு கல்லூரிகளில் கலசலிங்கமும் ஒன்று. நாட்டின் பல பாகங்களில் இருந்தும் வரும் மாணவர்கள், தங்கள் கண்டுபிடிப்புகளை எழுத்து வடிவில் இங்கே சமர்ப்பிப்பது வழக்கம். மரபுசாரா மின்சக்தியை அடிப்படையாகக் கொண்டு வினோத் சமர்ப்பித்த ஆய்வறிக்கைக்கு முதல் பரிசு கிடைத்திருக்கிறது.

''நடக்கும்போது கிடைக்கும் பாத அழுத்தத்தைக் கொண்டு மின்சாரம் தயாரித்தல், அரிசி உமியை எரித்து கிடைக்கும் வெப்பம் மூலமும் மின்சாரம் தயாரித்தல் ஆகியவை பற்றி விளக்கமான ஆய்வைச் சமர்ப்பித்திருந்தேன். இந்த இரண்டு மூல ஆதாரங்களுமே இன்று வீணாகிக் கொண்டிருக்கின்றன'' என்கிறார் வினோத்.

சொந்த ஊரான கோவில்பட்டியிலிருந்து வந்து, கல்லூரி விடுதியில் தங்கிப் படித்து வரும் வினோத்துக்கு, பட்டாகச் சிறுவர்களின் வாழ்க்கை பெரிய உறுத்தலாக இருக்கிறது. ''சிவகாசிக்கு அடுத்தபடியாக கோவில்பட்டியில்தான் தீக்குச்சியும், பட்டாசும் தயாரிக்கிறார்கள். இந்த குழந்தைகளுக்காக எந்த அரசும் நீண்ட கால திட்டமென்று எதுவும் போடவில்லை. குழந்தைத் தொழிலாளர் சட்டத்தில் நிறைய திருத்தங்கள் தேவை'' என்று ஆழமாகப் பேசிக் கொண்டே போகிறார்.

கல்லூரி விழாக்களில் நாடகம் போடுவது, நிகழ்ச்சிகளை ஒருங்கிணைப்பது என்று சகலகலா மாணவராக இருக்கும் வினோத், கல்லூரியில் தமக்குக் கிடைக்கும் ஊக்கம் பற்றி நிறைய பேசினார். 'கட் ஆஃப் மதிப்பெண்ணாக 270 வாங்கும் மாணவருக்கு நன்கொடை மட்டுமல்ல, கல்விக் கட்டணமும் வசூலிக்காத கல்லூரி எங்களுடையது. இரவு பகல் இருபத்து நான்கு மணி நேரமும் ஆய்வுக் கூடத்தைப் பயன்படுத்திக் கொள்ள அனுமதிக்கும் நிர்வாகம் என்று சொல்லிக் கொண்டே போகலாம்..''

- ஜெயந்தன்

பாதுகாப்பான கு



இந்தக் காலத்தில் நவீன வீடுகளில் சிமெண்ட் தரை வெகு அரிதாகவே காணப்படுகின்றது. பெரும்பாலும் மொஸைக் அல்லது கிரானைட் பரப்புதான். இவை மிகவும் வழுக்கும்படியாக இல்லாமல் பார்த்துத் தேர்ந்தெடுங்கள். தரைப் பகுதியில் கொஞ்சம் தண்ணீர் சிந்தினால்கூட வழுக்கி விழுந்து அடிப்பட்டுக் கொள்ளும் வாய்ப்பு மிக அதிகம். பக்கத்திலேயே ஏதாவது கூரான பொருள்கள் இருந்தால் இன்னும் ஆபத்து. எனவே தரைப்பகுதியில் சிந்திய (கொட்டிய) தண்ணீரை உடனுக்குடன் துடைத்துவிடவும். சொல்லப்போனால் தண்ணீர் சிந்தினால் டக்கென்று இனம் காண முடியாது என்கிற அளவுக்கு நிறம் கொண்ட மொஸைக் கற்களுக்கு 'நோ' சொல்லி விடுங்கள்.

●●

சிலர் அறைக்குள் கம்பளம் விரித்திருப்பார்கள். பார்வைக்கு வெகு அம்சம்தான். ஆனால் அந்தக் கம்பளத்தின் முனைகள் மடியாமல் இருக்கட்டும். இல்லையென்றால் 'ரத்தினக் கம்பள ராஜ வரவேற்பு' என்று தலை நிமிர்ந்து வருபவர்கள் எதிர்ப்பாராத விதத்தில் மண்ணைக் (கம்பளத்தை) கவ்வ வேண்டி வரும்.

●●

மிதியடிகள் கீழ்ப்புறம் வழுக்கிக் கொண்டு செல்லாமல், தரையோடு உறுதியாகப் பொருந்த வேண்டும். நார்மதியடி என்றால் அவற்றின் இழைகள் வெளியே நீட்டிக் கொண்டு நம்மை காலை வாரி விடாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

●●


அளவுக்கதிகமாக மின்சாரம் பாயும்போது வேறெந்த அபாயமும் ஏற்படக் கூடாது என்பதற்காக வேண்டுமென்றே பலவீனமானதாக இருக்கும்படி பொருத்தப்பட்டிருப்பதுதான் ப்யூஸ். எனவே மின் இணைப்பில் ப்யூஸ் போயிருந்தால் அதன் தாங்கு சக்தியைவிட அதிகமானதாகக் கொண்ட ப்யூஸை அதில் தற்காலிகமாகக் கூட பொருத்த வேண்டாம்.

●●

குளியலறையைப் பொருத்தவரை 'ஈரக் கையுடன் ஸ்விட்சைத் தொடக் கூடாது' என்பதைத் தவிரவும் பல முன்னெச்சரிக்கைகள் தேவைப்படுகின்றன. குளியலறையில் உள்ள மின்சார ஹீட்டர்கள் குழந்தைகளின் கைக்கு எட்டாத உயரத்தில் இருக்கட்டும். துணிமணிகள் எதுவும் ஹீட்டரைத் தொட்ட நிலையில் இருக்க வேண்டாம்.

●●


நீங்கள் வெந்நீரில் குளிப்பவரா? அதோடு ட்ரான்ஸிஸ்டர் அல்லது ஒலிநாடாவைப் பின்னணியில் ஒலிக்கவிட்டுக் கொண்டே குளிக்கும் இசைப்பிரியரா? அப்படியானால் இதைக் கேளுங்கள். மிகச்சூடான வெந்நீரால் உண்டாகும் ஆவி மேற்படி கருவிகளின் உள்ளே புகுந்து குளிர்ந்து



மீண்டும் நீராக மாறும். இதனால் ஷார்ட் சர்க்யூட் ஏற்பட்டு, அதைத் தொடும்போது ஷாக் அடிக்கலாம்.

●●

குளியலறையின் தரைப்பகுதியை வாரம் ஒரு முறையாவது ப்ளீச்சிங் பவுடர் போட்டுக் கழுவுவது அவசியம். இல்லையென்றால் அழுக்கும் பாசியும் படரும் என்பதோடு வழுக்கி விழுந்த அவமானமும் வேதனையும் கிடைக்கும்.




●●

"இடி மின்னலோடு மழை பெய்தால் நான் டீவி ஸ்விட்சை உடனே ஆஃப் செய்துடுவேன்" என்பவரா நீங்கள்? சந்தோஷம். ஆனால் அது போதாது. அப்போது டீவி

ம்பத்துக்கு...

ஆண்டனாவின் ப்ளக்கைக் கழற்றி வைப்பது மிக அவசியம்.

சிலர் இரண்டு பின்கள் கொண்ட ப்ளக்கைப் பயன் படுத்துகிறார்கள். மின் இணைப்புக்கு இது போதும்தான். ஆனால் மூன்று பின்கள் கொண்ட ப்ளக்குதான் பாதுகாப்பானது. 'எர்த்'துக்கும் ஒரு தொடர்பு இருப்பதால், லேசான மின் கசிவு இருந்தால் மூன்றுபின் ப்ளக் பாதுகாக்கும்.



●●

வீட்டிலேயே இஸ்திரி செய்துகொள்பவர் என்றால் துணிகளைத் தேய்த்தபிறகு இஸ்திரிப் பெட்டியை எங்காவது உயரத்திலோ மூலையிலோ சூடு ஆறும்வரை நிமிர்த்தி வைக்கவும். அதேபோல சூடு அறியபிறகு ஒயரை ஒழுங்காகச் சுற்றி வைப்பதும் அவசியம். 'ஹீட்டிங் எலமெண்டை' வருடத்துக்கு ஒருமுறை கட்டாயம் மாற்ற வேண்டும்.

●●

கொசுத் தொல்லைக்காக 'மேட்' பயன்படுத்துபவர்கள் என்றால் அதற்கான கருவியை ஆன் செய்த நிலையிலேயே மேட்டை மாற்றக்கூடாது. படுக்கையில் புரளும்போது உடல் படும்படியான தொலைவில் மெஷினை வைக்கக்கூடாது.

கொசுவர்த்திச் சுருள் பயன்படுத்துகிறீர்களா? எல்லா ஜன்னல்களையும் மூடிக்கொண்டு தூங்காதீர்கள். விரல் இடுக்கு அளவாவது திறந்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் புகை நிரம்பி மூச்சடைக்கலாம்.

●●

வீடு முழுவதும் காற்றோட்டமாக இருப்பது பலவிதங்களில் நல்லது. நிரம்பிய பரண்கள், சின்னச் சின்ன இருண்ட குகைகள் கொண்ட வீடுகள் என்றால் எலிகள் சுதந்திரமாகத் திரியும் என்பதோடு ஏதாவது எலி செத்துப்போனால் அதைக் கண்டுபிடிப்பதே பெரும்பாடாகப் போய் விடும்.

●●

சமையலறையில் கனமான சாமான்களை கீழ்த்தட்டுகளிலும், எடை குறைந்தவற்றை மேல்வரிசையிலும் வைக்க வேண்டும். காஸ் ஸ்டவ்வுக்கு மேற்புறத்தில் அலமாரி வேண்டாம். அங்குள்ள சாமான்களை எட்டியெடுக்கும்போது தீப்பற்றிக் கொள்ளலாம்.

●●

ஓரிரு நிமிடங்கள்தான் வேறு வேலையை கவனிக்கப் போகிறீர்கள் என்றாலும் அரிவாள் மனையை பாதுகாப்பான இடத்தில் வைத்துவிட்டுச் செல்ல மறக்க வேண்டாம். கத்தி கூராக இருக்கிறதா என்பதற்கு சாணை தீட்டும்போது, கத்தியின் கைப்பிடி உறுதியாக இருக்கிறதா என்பதையும் அவ்வப்போது சோதித்து வைத்துக் கொள்ளுங்கள். கத்தியிலும் கைப்பிடியிலும் தண்ணீர் தங்கக் கூடாது. துருபிடிப்பதோடு கை நழுவி விபத்தை உண்டாக்கும் வாய்ப்பு உண்டு.

●●

ஐ.எஸ்.ஐ. முத்திரையில்லாத பிரஷர் குக்கரை வாங்கும் அசட்டுத்தனத்தைச் செய்திருக்க மாட்டீர்கள்தான். ஆனால் அதன் காஸ்கெட், மூடி, கைப்பிடி போன்ற எல்லா பாகங்களும் நல்ல நிலையில் இருக்கிறதா என்பதை அவ்வப்போது மறக்காமல் சரி பார்த்துக் கொள்ளுங்கள்.

●●

பயன்படுத்தாத ப்ளக் துவாரங்களை டேப் போட்டு மூடி விடுவதுதான் நல்லது. குழந்தைகள் கையைவிட்டுக் கொள்ளாமல் இருக்கும்.

●●

சூடான பாத்திரங்களை, கீழே இறக்க துணிகளையும் பேப்பர்களையும் பயன்படுத்தாதீர்கள். சீக்கிரமாக வெப்பம் கைக்குப் பரவும் என்பதோடு தீப்பற்றிக் கொள்ளும் அபாயமும் உண்டு.

●●

எரிவாயு கசிகிறது என்ற சந்தேகம் ஏற்பட்டால் ஜன்னல்களைத் திறந்து வைப்பதுடன் ஒருபோதும் தீக்குச்சியைப் பற்ற வைக்காதீர்கள். மெழுகுவத்தி, ஊதுவத்தி போன்ற எது எரிந்தாலும் அணைத்து விடுங்கள். அந்த அறையில் உள்ள எந்த மின்சார ஸ்விட்சையும் இயக்க வேண்டாம் (ஆஃப் செய்வதும் தவறு. ஏனென்றால் ஸ்விட்சை இயக்கும்போது உண்டாகும் மின்பொறியே போதும், எரி வாயுவைப் பற்ற வைப்பதற்கு.)

●●

தண்ணீர், தூசி ஆகியவை ரப்பர் ட்யூபின்மீது பட வேண்டாம் என்பதற்காக சிலர் காஸ் ட்யூபின்மீது உலோகத்தினாலான ட்யூப்களைப் பொருத்துவதுண்டு. இது அபாயம். ரப்பர் ட்யூபில் விரிசல் ஏற்பட்டால், எரிவாயு கசிந்து நம் கவனத்துக்கு உடனே வந்துவிடும். உலோக ட்யூப் என்றால் இது தடைப்படும்.

●●

மாடிப்படிகளை ஒட்டி ஓர் இரும்பு கைப்பிடி இருக்கட்டும். மாடிப்பகுதிக்கு போதிய வெளிச்சம் மிக அவசியம். சிலர் மாடிப்படிகளில் கோணிகள், நாளிதழ்கள் ஆகியவற்றைப் போட்டு வைப்பார்கள். பெரும் அபாயத்தை உண்டு பண்ணக்கூடிய பழக்கமிது.

●●

சமையலறையில் வெந்நீர் போட்டுக் கொண்டு அந்தப் பாத்திரத்தை இரண்டு

கைகளாலும் பிடித்துக் கொண்டு குளிய லறைக்குச் செல்வது தவறு. உறுதியான பிடி உள்ள பக்கெட்டை இதற்குப் பயன்படுத்து வதே சரியான முறை.

●●

இனிப்புகள், மிக்சர் போன்ற பாக்கெட்டு களைப் பிரிக்கும்போது 'ஸ்டேப்லர் பின்'களை மறக்காமல் கவனத்துடன் நீக்கி விடுங்கள். தொண்டையில் சிக்கிக் கொண்டால் அவ்வளவுதான்.

●●

குழந்தைக்கு விளையாட்டுப் பொருளைக் கொடுக்கும்போது அதில் எந்தப் பகுதியும் பிரிந்து தனியே வராது என்பதை உறுதி செய்துகொள்ளுங்கள். கிலுகிலுப்பை ஏற் படுத்தும் ஒலி குழந்தைக்குப் பிடிக்கும்தான். ஆனால் அது விரிசல் கண்டால் அதன் உள்ளே இருக்கும் சிறுமணிகள் குழந்தையின் வாய்க்குள்ளே சென்று விடலாமே. கவனம் தேவை.

●●

குழந்தைகள் நன்கு விவரம் தெரிந்தவர் களாக வளரும்வரை கவிங்கம், நாணயங்கள், ஆணி போன்றவற்றைக் கண்ணிலேயே காட்ட வேண்டாம்.

●●

கேட்கும்போது சிரிப்பு வரலாம். ஆனால் பேண்ட் ஜிப் போடும்போது கவனம் தேவை. கவனக்குறைவால் அறுவை சிகிச்சைவரை சென்றவர்கள (முக்கியமாக இளம் சிறு வர்கள்) உண்டு.

●●

குழந்தைகள் இருக்கும் வீட்டில் மொட்டை மாடிக் கதவை பூட்டி வைப்பது நல்லது.

●●

வாசல் கதவு திறந்து மூடும்போதெல்லாம் பெரிதாகக் கதவு ஒலியெழுப்பினால் ஓரளவு எண்ணெயோ க்ரீஸோ மட்டுமே போடுங் கள். கதவு ஒவ்வொரு முறை திறக்கப்படும் போதும் கொஞ்சம் சப்தம் எழுப்புவது நல்லதுதான்.

●●

லாஃப்டில் ஏதாவது பொருளை வைக்கும் போதோ எடுக்கும்போதோ உளுத்துப்போன ஏணி வேண்டாமே.

●●

குடையைத் திறக்கும்போது, முக்கியமாக எளிதில் திறந்து கொடுக்காத குடையைத் திறக்க முயற்சிக்கும்போது, மிக கவனமாக இருங்கள்.

●●

வீட்டில் உள்ள இரு சக்கரவண்டிகளில் ஸ்டாண்ட் அசைந்து கொடுக்காமல் உறுதி யாக இருக்கட்டும். இல்லாவிட்டால் அதைத் தொடுபவர்களின் மீது விழுந்து தொலைக்கும்.

●●

உங்களுக்குத் தேவைப்படாமலே போகக் கடவது - என்றாலும் ஒரு முதலுதவிப் பெட் டியை வைத்துக் கொள்ளுங்கள். தீப்புண் மற்றும் வெட்டுக்காயங்களுக்கான மருந்து கள், பஞ்சு, டெட்டால், போரிக்பவுடர், பாண்ட் எய்ட் போன்றவை அதில் கட் டாயம் இருக்கட்டும்.

- ஜி.எஸ்.எஸ்.



"காற்றினிலே வரும் கீதம்...." இசைக் குரலின் சுகம். இசைத்தட்டு மேலும் கீழுமாய் மெல்ல அசைந்து சுழல்வதைப் பார்ப்பது சுகம். கண்ணைப் பறிக்கும் நீலம், பச்சை, ரோஜா வண்ண 'லேபில்'களுடன் கூடிய மைக்கா இசைத் தட்டுகளின் கனம் ஒரு சுகம். அவற்றின் மொறமொறக்கும் காகித உறைகளின் வாசத்தில் ஒரு சுகம். கிராமஃபோன் வேகம் குறையவும் அதைத் திருப்பி முடுக்கி விடுவதும் கூடச் சுகம்தான்.

எதிலும் அதிசயம். எதிலும் அனுபவிப்பு. எதைப் பற்றியும் துடிப்பு. எதைப் பற்றியும் கேள்வி. அது வேறு காலம். வேறு பருவம்.

பாடகியாகலாம் என்று கனவு கண்ட சிறுமிப் பருவம். "நம்ம ரஞ்சி பாட்டுப் படிக்கணுங்கா!" வழக்கம்போல் உள்ளறைக் கதவின் பின்னால் நின்று, முன்முற்றத்தில் சாய்ந்திருக்கும் தாத்தாவிடம் ரஞ்சி சார்பில்

இக்கரையில்

விண்ணப்பம் போடும் பெரியம்மா. தாத்தாவிடம் எல்லாருக்கும் பயம் கலந்த மரியாதை. ராஜாஜி தலைமையில் வேதாரண்யத்தில் உப்பெடுத்த சுதந்திரப் போராட்ட வீரர் தாத்தா. போராட்ட காலத்தில் பலமுறை சிறைக்குப் போனவர்.

"இவா பாட்டுப் படிக்கணுங்கே... ம்ம்ம்ம்... சிவகனி?" ஆழ்ந்த குரலில் பெரியம்மாவிடம் திருப்பிக் கேட்பார் தாத்தா. 'வேண்டாம்' என்று அர்த்தம்.

சுப்புலக்ஷ்மி, பட்டம்மாள், தியாகராஜ பாகவதர், சின்னப்பா என்று கிராமஃபோன் தட்டுக்களைக் குவித்து வைத்திருக்கும் தாத்தா. 'என் ஜீவப்ரியே ஷ்யாமளா...' என்று பாகவதருடன் உருகும்


காஞ்சனா தாமோதரன்

தாத்தா. ஆனால், ரஞ்சி பாட்டு படிக்க அனுமதியாத தாத்தா. சங்கீதத்துக்கும்கூட மனத்துள் ஏதேதோ வரையறைகள் வைத்திருந்த மனிதர். இது ரஞ்சிக்குக் கொஞ்சம் புரிந்தது அவள் வளர்ந்த பிறகுதான்.

ஆனால், அவள் பாட்டுப் படிக்கத்தான் செய்தாள். அரைகுறையாக. பள்ளிக்கூடத்து உமாவின் உபயம். பதிலுக்கு ரஞ்சி உமாவுக்குக் கணக்குப் பாடம் சொல்லித் தர வேண்டும். பள்ளி முடிந்த பிறகு, பஞ்சாயத்து போர்டு வேலிக்குள் திருட்டுக் கொடுக்காப்புளி பறிக்கும்போது, உமா பாடுவாள். அவள் பாட்டுப் புத்தகத்திலிருந்து ஸ்வர வரிசைகள், கீதம், கீர்த்தனம் என்று ரஞ்சி தன் புத்தகத்தில் எழுதிக் கொள்வாள். உமாவோடு சேர்ந்து பாடுவாள். தாழ்ந்த மாமரக் கிளையில் சாய்ந்து படுத்துக் கொண்டு, ஆசுவாசமாய்.

பல வருடங்கள் கழித்து, அயல் தேசத்து வாசியாய், கல்யாண்ஜியின் கவிதை வரிகளைப் படித்துச் சிலிர்த்தது இந்த மாமரக் கிளைப் பாட்டு வகுப்பையும் நினைத்துத்தான்:

"கிளையில் சாய்ந்த
என் உடம்பு அமிழ்ந்து அமிழ்ந்து



15

அசைவதை உணர்ந்தேன்.
காற்றை இப்படியும்
அறியலாம் போல!" காற்றையும் இசையையும் அறியத் தொடங்கிய அந்த நாட்கள். பிறகு, கிராமத்துக்கு மின்சார இணைப்பு வந்தது. வீட்டுக்கு வானொலி வந்தது. கூடவே இசை உலகமும். இந்திய, இலங்கை, ஐரோப்பிய, அமெரிக்க இசை என்று மெல்ல விரிந்த உலகம்.

ஆனாலும், மாமரக்கிளை ஸ்வர வரிசைப் பாடங்கள் மறக்கவில்லை. சுற்றுக் குடிசைகளில், இராச்சோறு பொங்க அம்மி தட்டிக் கொண்டு... தீமூட்டிக் குழலால் விட்டுவிட்டு அடுப்பு ஊதிக் கொண்டு... இரண்டாவது வரும்படிக்காக பீடி சுற்றிக் கொண்டு... நான் முழுக்கக் குனிந்து நாற்று நட்ட குறுக்கு வலியையும் மீறிப் பெண்கள் ஒலிக்கும் மண்ணின் பாடல்களும் மறக்கவே இல்லை. மறக்காதவை இன்னும் நிறையவே. பின் கட்டு முற்றத்தின் மேலே இரும்பு வலைச்சட்டத்தில் படர்ந்து வாச நிழல் வீசும் முல்லைக் கொடி. வெண்கலப் பல்லாங்குழித் தட்டில்சேர்ந்து கலகலக்கும் புளியமுத்துக்களும் அத்தையின் சிரிப்பும். பிள்ளைகளுக்குச் சீதாப்பழம் பிய்த்துக் கொடுத்தபடி அம்மாவும் அத்தையும் பேசும் ஊர்க்கதைகள். உடைமர விறகு வாசனையும் கைமணச் சமையலுமாய் அடுப்பங்கரையிலிருந்தே கதைகளுக்குப் பெரியம்மா

சேர்க்கும் உப்பு உறைப்பு.

பாட்டியுடன் சேர்ந்து புளி குத்திக் கொண்டே, வடித்த காதில் பாம்படங்கள் ஆட, பேச்சி சொல்லும் பேய்க்கதைகள், புளியந்தோப்பில் மோகினி. ஒற்றைப் பனைமரத்தில் முனி. ''நட்டப் பகல்ல அங்ஙன இங்ஙன நிக்காத, தாயீ. பிசாசு உலாத்துற நேரம் பாத்தியா!''

இரவில், ஆழமான வெண்கல வட்டிலில் சோற்றை உருண்டை பிடித்துக் கொடுத்தபடி பாட்டியும் கதை சொல்வார்கள். நடு நடுவே பால் உறியில் ஏறப் பார்க்கும் கள்ளப் பூனையைப் பழமொழி போட்டு விரட்டுவார்கள். அரிக்கேன் விளக்கின் ஒளியில் ஒவ்வொரு கதையும் பெரிய நிழலாக விரியும். எல்லாம் புரியாது. ஆனால், பாட்டி இழுத்து இழுத்துக் கதை சொல்லுவதே தனி அழகாயிருக்கும்.

சோற்றுருண்டையில் பாட்டியின் கை ருசிக்கும். கண்ணுக்குத் தெரியாத முல்லை வாசம் மாமரக்காற்றில் மிதந்து வரும். உலகம் ரகசியமும் ருசியும் மணமுமாய்த் தெரியும். ரஞ்சிக்காகக் காத்திருக்கும் கேள்விகளும் பதில்களும் நிறைந்த உலகம்.

இந்த உலகம் பின்கட்டில் மட்டும்தான். முன்கட்டில் தாத்தாவின் ஆட்சி. அப்பாவும் பெரியப்பாவும் கூடத் தாத்தாவிடம், ''கூப்டியளா, ஐயா?'' என்று தாழ்ந்த குரலில்தான் பேசுவார்கள். உடல்மொழியிலும் அடக்கமும் பணிவும் தெரியும்.

தாத்தா சொல்வதை அப்பா கேட்காதது ஒரே ஒரு விஷயத்தில். இரட்டைக் காளை வண்டி கட்டித் திருச்செந்தூர்க் கோவிலுக்குப் போனால், அப்பா கோவிலுக்கு வெளியே நின்று விடுவார்கள். அதுதான் அவர்கள் நம்பிக்கை. அவளும் மற்றவர்களும் கோவிலின் சந்தனக் கசகசப்பிலிருந்து மீண்டு, கடற் காற்றின் உப்புக் குளிர்ச்சிக்கு வருவார்கள். மணல் பிட்டுப் பிரசாத இனிப்பு நாக்கில் கரையும். அப்பா அதற்குள் கடற்கரையில் நாழிக்கிணறு வரை மூன்று நான்கு தரம் நடந்து திரும்பியிருப்பார்கள். பெரியம்மா மகனும் அப்பாவோடு ஒட்டிக் கொண்டிருப்பான்.

பெரியம்மா மகனை அவளுக்குச் சில சமயங்களில் பிடிக்காது. அப்பாவிடம் அவன் ஒட்டிக் கொள்ளும் சமயம் மாதிரி. அவன் மட்டும்தான் சைக்கிள்விடலாம் என்று தாத்தா சொன்ன சமயம் மாதிரி. பெரியம்மாவின் வழக்கமான, ''ரஞ்சியும் சைக்கிள் விடணுங்கா. நம்ம வேலிப் படலுக்குள்ளய ஒட்டிப் பழகுதேங்கா. தெருவுக்குப் போவ மாட்டா.'' ''இவா சைக்கிள் விடணுங்கே... ம்ம்ம்ம்.. சிவகனி?'' தாத்தாவின் வழக்கமான பதில்.

அவளை அப்போது தேற்றியது பெரியம்மாதான். சாமான் அறையின் அரையிருட்டில் ஒளிந்து அழுது கொண்டிருந்த ரஞ்சியை, ''நீ பெரிய கலெக்டரம்மா ஆயி ப்ளெசர் கார் விடுவியாம்: ஒன்றையணா சைக்கிள் எதுக்கப்பூ.. அழாதபூ.. என் தங்கக் கட்டில்லா!'' என்று அணைத்துக் கொண்டார்கள். சாமான் அறை விட்டத்தில் தொங்கும் வாழைத்தாரும், வெண்கல அரிசிப் பானைக்குள் பழுத்துக் கொண்டிருக்கும் மாங்காயும் சீதாப்பழமும், மூலையில் சார்த்தியிருக்கும் நுங்குக் குலையும், கலயத்தில் சுண்ணாம்பு மேகம் தெளிந்து கொண்டிருக்கும் மாலைப் பதநீரும், முல்லை - மஞ்சள் - குங்கும - விபூதி - ஈர மசாலா 'பெரியம்மா வாசமும்' சேர்ந்து ஒரு கதம்ப மணமாய் உறைந்த கணம்.

பெரியம்மா வித்தியாசமானவர்கள். ''சிவகனி சிவகனிதான்,'' என்று பாட்டி சொல்லக் கேட்டிருக்கிறாள். பின் தோட்டத்தில் எப்போதும் ஊர்ப் பெண்கள் கூட்டம்

> ''நான் ரிட்டயர் ஆயிட்டேனேன்னு நினைச்சு என்னை கை விட்டுடாதே கபாலி. விலைவாசி இருக்கிற நிலைமைல நீயும் மாசா மாசம் பென்ஷன் கொடுத்து என் குடும்பத்தைக் காப்பாத்தணும்.''
> - ம. ஜெயலட்சுமி மணி


கூடியிருக்கும். பெரியம்மாவிடம் குடும்பக் கவலை பற்றிப் பேசிப் போக. ரஞ்சி பக்கத்திலிருந்து கவனிப்பாள். எதுவும் தேவைப்பட்டால், ''மதினி'', என்று அப்பாவும் அத்தையும் போகிறது பெரியம்மாவிடம். பாட்டிக்கு அது இயல்பாய்த் தெரிந்த மாதிரி இருந்தது. அம்மாகூட ரஞ்சியை வளர்க்கும் பொறுப்பைப் பெரியம்மாவிடம் விட்டுக் கொடுத்ததாய்த் தெரியும். சிறியவளான தங்கையைத் தனக்காக அம்மா வைத்துக் கொண்டிருக்கலாம். பெரியம்மா பிள்ளையாக இருப்பதில் ரஞ்சிக்குச் சந்தோஷம்தான்.

வாராந்திர எண்ணெய்க் குளியல் முடிந்திருந்தது. நார்க்கட்டிலில் படுக்க வைத்து, சிகைக்காய் மணக்கும் தலைமுடிக்குச் சாம்பிராணிப் புகை போடும் பட

லம். கட்டில் நார்ப்பின்னலின் துவாரங்கள் வழியே வெதுவெதுவென்று உடல் முழுவதும் வாசப் புகை, மூன்று காலெடுத்துச் சிறு சடை பின்னி, ஒரு சின்ன மருக்கொழுந்துக் கதம்பச் சரத்தைச் செருகினார்கள் பெரியம்மா. விரிந்து கிடந்த மிச்சத் தலைமுடி கட்டிலின் விளிம்பில் வழிந்து தரையைத் தொட்டது. சுகமாய்த் தூக்கம் வர ஆரம்பித்தது.

பெரியம்மா மகன் ஓடி வந்தான். கையிலிருந்த செய்தித்தாளை மேலும் கீழுமாய் ஆட்டினான். மூச்சிரைத்தது. பேச முடியவில்லை. செய்தித்தாளைச் சுட்டு விரலால் அழுத்திக் காண்பித்தான். பள்ளி இறுதியாண்டுத் தேர்வு முடிவுகள். ரஞ்சி எழுந்து உட்கார்ந்து பார்த்தாள். தமிழ்நாட்டில் இரண்டாவது இடம் : 030507. மூச்சு நின்றது. அவளது எண்.

முன்கட்டுக்குச் செய்தி போயிற்று. பின் கட்டுப் பெண்கள் எல்லாரும் கதவு பின்னால் ஒதுங்கி நின்றார்கள். "ரஞ்சி காலேஜுக்குப்



போணுங்கா..."

"இவா காலேஜுக்குப் போணுங்கே... ம்ம்ம்... சிவகனி?" அப்பாவும் பெரியப்பாவும் தாத்தா பின்னால் ஒடுங்கி நின்றார்கள்.

"ரெண்டாவது ரேங்கு வாங்கிருக்கா. காலேஜுக்குப் போட்டு(ம்)..." பெரியம்மா விடவில்லை. ரஞ்சி பெரியம்மா பக்கத்தில் நின்றாள். நெஞ்சு அடித்துக் கொண்டது. மனம் கடவுளை வேண்டிக் கொண்டது.

"எட்டாங் கிளாசோட நிறுத்திப்புட்டு, மாப்ள பாத்திருக்கணும். ஊருக்குள்ளயே ஐஸ்கூல் வந்துற்று, படிக்கணுங்கான்னு நீ சொன்னதக் கேட்டது தப்பால்லா போச்சி. காலேஜுக்குப் போனா இவள எவன் கட்டுவான்?"

தாத்தா சொன்னது அன்றைய யதார்த்தம்தான். ஆனால், ரஞ்சிக்குள் ஏதோ சுருண்டு பொசுங்கியது. 'கட்ட எவனாவது வேணும். அது ஒண்ணுதானா?'

தாத்தா தொடர்ந்தார் : "பொம்புளைக எல்லாருமாச் சேர்ந்து இந்தப் பச்சப் புள்ளை மனசைக் கலைச்சுபுட்டிய. அளவுக்கு மீறி ஆசைப்பட வச்சிட்டிய..."

"பாரத மாதாவுக்குச் சுதந்திரம் வாங்க ஜெயிலுக்குக் கூடப் போவாங்க. அப்புறம்..." தாத்தா பற்றி நினைத்ததை முடிக்கவில்லை. அப்படி நினைப்பதே கூடத் தேசத் துரோகமாய்த் தெரிந்தது. இயலாமையும் கோபமும் அவளது பதினாறு வயது மனத்தில் பொங்கின. விம்மி வந்த அழுகை தொண்டைக் குழியில் அடக்கமானது.

"ரஞ்சி, எங்க போற?" தடுத்து நிறுத்த முயன்ற பெரியம்மாவின் கையை மெல்ல விலக்கினாள்.

அவள் 'பெரியவ'ளான பிறகு போகாத அந்த முன்கட்டு முற்றத்தில், தாத்தா எதிரே போய் நின்றாள். நம்ப முடியாத ஆச்சரியத்துடன் நிமிர்ந்த அவர் கண்களை நேராய்ச் சந்தித்தாள்.

"என்று தணியும் இந்தச் சுதந்திர தாகம். என்று மடியும் எங்கள் அடிமையின் மோகம்..." அவளது அழுத்தமான குரலில் கமாஸ் ராகம் முற்றமெங்கும் அதிர்ந்து சிதறியது. அவள் கண்ணீரும்.

தாத்தாவின் பின் நின்றிருந்த அப்பா அவள் பக்கம் வந்து நின்று மௌனமாய்த் தாத்தாவைப் பார்த்தார்கள்.

ரஞ்சி நிகழ்காலத்துக்கு மீண்டாள். கையிலிருந்த தேநீர் ஆறிப் போயிருந்தது. உடல் முறுக்கின இரும்புக் கம்பி போல் இறுகி, கண்ணில் நீர் கோத்திருந்தது. இருபத்தாறு வருடங்களுக்குப் பின்னும் சில உணர்வுகள் பழையதாகுவது இல்லை.

பெரியம்மா. பாட்டி. அம்மா. அத்தை. பேச்சி. பெரியம்மா மகன். அன்றைய பின்கட்டு உறவுகள். எவ்வளவு அன்பாய். இதமாய். ஆதரவாய். உறுதியாய். தைரியமாய். அவள் இன்றைய அவளாய் இருப்பதற்கான வேர்களாய். 'இந்தப் புது நூற்றாண்டில் செல்லுபடியாகப் போவது உன்னுடையது மாதிரி மனிதம் உள்ள நிர்வாகப் போக்குதான்' ஏ.ஜே. சொன்னது ஞாபகத்துக்கு வந்தது.


நிறுவனத் தலைவர் பதவி பொருந்துமா, அது அவளுக்கு உண்மையிலேயே வேண்டுமா என்பது பற்றி அப்புறம் யோசிக்கலாம். அது அவ்வளவு முக்கியமாகத் தெரியாதது அவளுக்குக் கொஞ்சம் ஆச்சரியமாயிருந்தது. அனுகாவிடம் இன்றாவது அவளும் க்ரிஸ்ஸும் ஆற அமர உட்கார்ந்து பேச வேண்டும். ரஞ்சி வீட்டுக்குக் கிளம்பினாள்.

(தொடரும்)

காதல் போய்... குடும்பம் வந்தது!

ரஜினியின் புதிய பட அறிவிப்புக்கு இருக்கும் அதே மவுசு, மணிரத்னத்துக்கும் உண்டு. இனக்கலவரம், தீவிரவாதம் என்று எதைத் தொட்டாலும் காதலை மையமாக வைத்தே கதை சொல்லிப் பழக்கப்பட்ட மணி இந்தமுறை குடும்பப் படம் என்கிறார்.

ரொமாண்டிக் தோற்றம் தான் இவர்களின் பலம் என்று சொல்லத்தக்க மாதவன், சிம்ரன் இருவரையும், துணிந்து மூன்று பிள்ளை குட்டிகளுக்குப் பெற்றோராக்கி கிட்ட திட்ட படத்தையே முடித்து விட்டார். 'அசோகா' படத்தில் இளம் கலிங்க இளவரசனாக கண் கலங்க வைத்த, படத் தயாரிப்பாளர் பாலாஜியின் பேரன் சூரஜ், நட்சத்திரத் தம்பதி சீதா -





பார்த்திபனின் மகன் கீர்த்தனா, அப்புறம் சேத்தன் என்றொரு வண்டு! ஆக இந்த மூன்று பேரும்தான் அந்த சூப்பர் வாண்டுகள். 'அழகி'க்குப் பிறகு நந்திதாதாஸ் நடிக்க ஒப்புக் கொண்டிருக்கும் இந்தப் படத்திற்கு 'கன்னத்தில் முத்தமிட்டால்' என்று தலைப்பு சூட்டியிருக்கிறார்கள். படம் வந்த பிறகு தான் தெரியும், உள்ளம் கள்வெறி கொள்ளுமா, என்று!

- விஷுவல் தாசன்

வீட்டின் அழகு **கதவில்** தெரியும் !

Now Flat Buyers insist on

MAYURAM

TIMBER DOORS



because



Contact:

MAYURAM TIMBER & GENERAL TRADING CORPN.

H.O.: 83, G.S.T.Road, Chennai - 45. ☎:236 8297/238 1281.

Showroom: 13, Rameswaram Road, T.Nagar, Chennai - 600 017. ☎: 434 5207

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / Chief PMG-141 / 2001 *
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 37 * Registered as a Newspaper in Srilanka
Supplement to the Kalki issue Dated 13.1.2002

ARTHRITIS / மூட்டுவலி

I have taken treatment at Adyar Nature Cure Center for left shoulder pain (Osteo Arthritis) when my shoulder joint movement was restricted to 30%.After treatment I was very much relived and my shoulder movement is almost 90%

Dr. C.S. SARAVANAN Ph.D., FICS.
Research Officer, Govt. of Tamil Nadu.
இவரது துணைவியாரும் ஒரு ஆங்கில மருத்துவர்

1. OSTEO ARTHRITIS
2. RHEUMATOID ARTHRITIS
3. ANKYLOSING SPONDYLITIS
4. GOUT

1. கை, கால்களில் மூட்டு வீக்கமும், வலியும்.
2. கை, கால் விரல் மூட்டுகளில் வீக்கமும் வலியும்.
3. கழுத்து வலி (Cervical Spondylitis)
4. நடுமுதுகின் கீழ்பகுதியில் வலி (Lumbar vertebra and Sacral Joint area)
5. இடுப்பு எலும்பும் (Pelvis Bone) தொடை எலும்பு தலையும் (Femural Head) சேருமிடம்.
6. குதிகால் இணைப்புகளில் வலி.
7. குதிகால்களில். எலும்பு வளர்ந்து நடக்க முடியாமல் வலி. (Calcaneal Spur)

முதலியவை பல ஆண்டுகளாக இருந்தாலும் ஆங்கில மருத்துவருடைய ஆலோசனையின்படி வித்தியாசமான இயற்கை வைத்திய முறையில், பக்கவிளைவுகள் இல்லாமல் நலம்பெற செய்கின்றோம்.

மேலும் நகரங்களில் நாம் சுவாசிக்கும் காற்று மிகவும் மாசுபட்டு இருப்பதால், தினமும் பிராணவாயு (Oxygen) தரப்படுகிறது. சென்னை, பம்பாய், டெல்லி மற்றும் வெளிநாட்டில் இருந்தும், தாங்கமுடியாத மூட்டுவலியுடனும், வீக்கத்துடனும் தசை பிடிப்புடன் நடக்க முடியாமல் சிரமப்பட்டவர்களும், காலையில் படுக்கையை விட்டு எழுந்திருக்க முடியாமல் சிரமப்பட்டவர்களும், எங்களிடம் நல்ல விதமாக சிகிச்சை பெற்று மகிழ்ச்சியுடன் சென்று இருக்கின்றார்கள். மற்ற விபரங்களுக்கு நேரில் வந்து பார்த்தால்தான் நாங்கள் கொடுக்கும் சிகிச்சையின் தன்மை புரியும்.

அடையார் நேச்சர் கியூர் சென்டர்
ADYAR NATURE CURE CENTER

No. 6, SECOND CROSS STREET, KASTURBHA NAGAR, ADYAR, CHENNAI - 600 020.
Phone:4413399, 4402470. Tele Fax: 044-4916650 (காந்திநகர் பஸ்டெப்போ எதிரில்)

ஆர்த்ரிடிஸ் பற்றியும் - மற்றும் அதற்கு ஏற்ற உணவுப் பழக்கம் பற்றியும் தெரிந்து கொள்ள விரும்புபவர்கள் நேரில் வந்து குறிப்பு புத்தகங்களை இலவசமாக பெற்றுக் கொள்ளலாம். நேரில் வர இயலாதவர்கள் ரூ. 3/-க்கு தபால் தலை அனுப்பி, புத்தகங்களை பெற்றுக் கொள்ளலாம்.

குறிப்பு: வெளியூரில் இருந்து வருபவர்களுக்கு, குறைந்த செலவில் தங்க, சாதா மற்றும் ஏர்கண்டிஷன் ரூம்கள் வாடகைக்கு எங்கள் ஆஸ்பத்திரியில் கிடைக்கும். இதற்கு முன் பதிவு செய்து கொள்ள வேண்டும். சைவ உணவு வசதி மட்டும் உண்டு. வியாதியஸ்தர்களுக்கு தேவைப்பட்ட மாற்று உணவுகளும் வழங்கப்படும் என்பதையும் அறியவும்.